
www.padippakam.com




# இதழாய் ஓர் எழுத்தியக்கம்

## புதிய இந்தியா

உழவர் குடிசையிலிருந்து
புதிய இந்தியா எழுந்து வரட்டும்.
மீனவர், சக்கிலியர், தோட்டிகள்
குடிசைகளிலிருந்து,
பலசரக்குக் கடைகள்,
பலகாரக்கடைகள்,
தொழிற்சாலைகள்,
கடைவீதிகள், சந்தைகள்
இங்கிருந்தெல்லாம்
புதிய இந்தியா எழுந்து வரட்டும்.

– விவேகானந்தர்

## சாதி ஒழியாமலா?

சாத்தியமே இல்லை.
ஒன்று செய்யலாம்:
உடலுழைப்பை அனைவருக்கும்
உறுதிப்படுத்தலாம்.
சாதிப் பணியை
சுழற்சிக்குள்ளாக்கலாம்.
அதாவது,
தோட்டி வேலையைப்
பார்ப்பானுக்கும்
பார்ப்பான் வேலையைத்
தோட்டிக்கும்.
இதுவன்றி புதிய இந்தியா
எழுந்து வராது.

– திருமதி சரண்

படிப்பகம்

www.padippakam.com

# கே.ஆர். நாராயணன் – வீரியம் பேசாமல் காரியம் பார்த்தவர்



ரெய்சினா குன்றிலுள்ள மாளிகையில் முதலில் குடியமர்ந்த உன்னதக் கிறிஸ்த வரும் உயர்ந்த மனிதருமான இர்வின் பிரவுவைத் தொடர்ந்து, இரண்டாவதாகக் குடியமர்ந்ததில் தான் மிகவும் சிறுத்துப் போனதாகப் புழுங்கியவர் வில்லிங்டன் பிரபு. தன் அடையாளங்களாக, சிலவற்றுக் குத் தன் பெயரை இட்டுச் சென்றாலும், 'அவர் மகாத்மா காந்தியை சிறையிலடைத்தவர்' என்பதைத் தவிர, முற்றாக மறக்கப்பட்ட வைஸ்ராய்களில் ஒருவராகவே முடிந்து போனவர்.

நல்ல வேளையாக, இந்தியக் குடியரசுத் தலைவர்களில் அவரளவு தாழ்ந்து போனவர்கள் யாருமில்லை. அவரவரும் தங்கள் அடையாளங்களைத் தெறிப்பாகவே பதித்துச் சென்றுள் ளார்கள். அவர்களில் சிலர் தன்முனைப்புள்ள பிரதமர்களோடு வெகுவாக ஒத்துப் போவதுண்டு. விமர்சகர்கள் அவர்களை அடங்கிப் போகிறவர்கள் அல்லது ரப்பர் ஸ்டாம்ப்புகள் என்று அழைத்தார்கள். மற்றும் சிலர் அடங்க மறுப்பவர்கள். அவர்கள் வீரியம் பேசுபவர்களாய் அறியப்பட்டார்கள்.

கே.ஆர். நாராயணன் இவ்விருவருக்கும் நடுப்பட்டவர். வீரியம் பேசாமல் காரியம் பார்ப்பதில் குறியாயிருந்த வெகு சிலரில் ஒருவர். அடங்கிப்போனவர் எனும் பெயரெடுக்காமலேயே பிரதமர்களோடு நல்லுறவு பேணியவர். ஒரு வகையில் இந்தி யாவில் 'செப்பனிடும் குடியரசுத்தலைமை'யை இனங்காட்டி யவர் அவர் என்பது அவருக்குப் பொருத்தமான அடையாளமா யிருக்கும்.

பிகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொணர்வதற்கான வாஜ்பேயி அமைச்சரவையின் பரிந்துரையை நாராயணன் கையெழுத்திடாமல் திருப்பியனுப்பியபோது, நடுப்போக்கிலான அவரது செப்பனிடும் தலைமைப்பண்பு மிகவும் வெளிப்படை யாகத் தெரிய வந்தது. அந்தப் பரிந்துரை அவருக்கு இரண்டாம் முறையாக அனுப்பப்பட்டு, அமைச்சரவை நெருக்குதலுக்குட் பட்டுக் கையெழுத்திட வேண்டிய நிலையில், அவர் தன் ஒவ்வாமையை விளக்கி அதில் ஒரு பத்தி எழுதினார். முதல் பார்வையிலேயே பரிந்துரையில் கையெழுத்திட்டிருந்தால் அவர் ஒரு ரப்பர் ஸ்டாம்ப்பாக அறியப்பட்டிருப்பார். தன் மறுப்பையே வலியுறுத்திக் கொண்டிருந்தால் அது அடங்காமையாகப் பிதுங்கி யிருக்கும். ஆனால் அவருடையதோ செப்பனிடும் வழியாயிருந்தது.

'ஏன் தலித்துகளில் வெகு சிலரே நீதிபதிகளாயிருக்க நேர்கிறது' என்று இந்த நாட்டையே யோசிக்கத் தூண்டியவர் நாராயணன். ஆளும் கட்சித் தலைவர்கள் அரசியல் சட்ட மறு ஆய்வு பற்றிப் பேசத் தொடங்கியபோது, 'அரசியல் சட்டம் தோற்றுப்போனதா, அல்லது அதை நடைமுறைப்படுத்துகிறவர்கள் தோற்றுப் போனார்களா?' என்று கேள்வி எழுப்பினவர்.

ஒரு அலுமினியத் தொழிற்சாலைக்கெதிரான கிளர்ச்சியில் ஒரிஸ்ஸா பழங்குடி மக்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூடு அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியபோது, அதை விசாரிக்கும்படி ஆளு நருக்கும் முதலமைச்சருக்கும் கடிதம் எழுதினார். இந்த விஷயம் பழங்குடியினருக்குத் தெரிய வந்தபோது, அவர்களில் ஒருவர் ''நாம் பீதியடையத் தேவையில்லை. இந்தியக் குடியரசுத் தலைவர் நம்மோடுள்ளார்,'' என்று கூட்டத்தில் முழங்கினார். அதைப்போலவே, ஒருமுறை சமூக விரோதிகள் ஓர் ஒரியப் பெண் மீது திராவகத்தை ஊற்றி அவள் முகத்தைச் சிதைத்த போது, அவர் ரூ. 25,000 அனுப்பி அவளுக்கு முறையாகவும் இலவசமாகவும் சிகிச்சை அளிப்பதை உறுதிசெய்யுமாறு அந்த மாநில முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

மீண்டும் ஒருமுறை, அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புரையில் 'செப்பனிடும் குடியரசுத் தலைமையை' இந்த நாடு அவரிடம் கண்டு மகிழ்ந்தது. கார்கில் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்தது தானே என பில் கிளிண்டன் உரிமை கொண்டாடியபோது, கிளிண்டன் கவர்ச்சியில் கட்டுண்டு கிடந்த இந்த நாட்டில் அவர் பேச்சுக்கெதிராக சிறு முணுமுணுப்புகூட எழவில்லை. அந்த நிலைமையில் இந்தியக் குடியரசை மூன்றாம் உலகத்தளத்தில் தூக்கி நிறுத்தும் பொறுப்பை நாராயணனே ஏற்றார்.

கிளிண்டனுக்கு அளிக்கப்பட்ட விருந்தில் நாராயணன் சற்று வெளிப்படையாகப் பேசத்தீர்மானித்தார். தான் எப்போதோ படித்ததிலிருந்து ஒரு சம்பவத்தை அப்போது நினைவு கூர்ந்தார். மகாத்மா காந்தி சில அமெரிக்கர்களைப் பார்த்து ஏழைகளுக்குப் பணக்காரர்கள் பிச்சையிடுவதைப்போல அவர்கள் ஒன்றும் இந்தியர்களுக்கு டாலர்களை வழங்க வேண்டாம். மாறாக தங்கள் புதிய வேளாண்மைத் தொழில் நுட்பத்தை இந்தியர்களோடு பகிர்ந்து கொள்ளட்டும் என்று சொன்னதை அங்கே நினைவு கூர்ந்தார். பில் கிளிண்டன் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் விதத்தில் அந்த மேற்கோளைத் தேடிக்கண்டு பிடிக்கும்படி தன் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஒற்றை அச்சில் சுழலும் இந்த உலகில் இந்திய வெளியுறவுக் கொள்கையைச் சமநிலைப்படுத்திய பெருமை நாராயணனையே சேரும். அந்த வகையில் அவருடைய சீனப் பயணம் சுட்டிக் காட்டப்படுவதுண்டு. நாராயணன் பெய்ஜிங் சென்றிருந்த போது, சீனாவைக் கட்டுப்படுத்த முயலும் அமெரிக்க வலையில் இந்தியா உள்ளிழுக்கப்படுவதாக சீனத் தலைவர்கள் கவலை யடைந்திருந்தனர். நாராயணன் அவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையில், முதலில் பாகிஸ்தானோடான சீன உறவிலிருந்து பயங்கரவாதத்தைக் கழற்றிவிட்டார். ''முதலில் இருநாடு களுக்குமிடையே தொடர்ந்து பரிமாறிக்கொள்ளப்படும் எல்லைப் பிரச்சினைகள் பற்றிப் பேசினார். பிறகு சீனாவும் எதிர்கொள்ள நேர்ந்துள்ள பயங்கரவாதம் பற்றி பேசினார். அதன் பிறகு பாகிஸ்தானோடான உறவுகள் பற்றிப் பேசினார். 'இது ஒரு ராஜதந்திர வித்தகம்' என்று அப்போதைய வெளியுறவுச் செயலர் லலித் மான்சிங்கே வியந்தார்,'' என அவரது பயணக் குழு வினரில் ஒருவர் சொன்னார்.

அந்தப் பயணத்தின் முடிவில் சீனத் தலைவர்களை நாராயணன் வெகுவாகக் கவர்ந்து விட்டார். அதன் வெளிப்பாடாக, சீனத் தலைவர் ஜியாங்ஜெமின் நாராயணனிடம் தன் குழந்தைப் பருவத்தைப்பற்றி, தன் தாயாருடன் சாக்கிய முனியின் கோயிலுக்குச் சென்றதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

ராஜதந்திரக் கலை பயின்றவர் என்பதால் அவருக்கு அது இயல்பாக வாய்த்திருக்கக்கூடும். ஆனால் நாராயணன் அதற்கொரு விவேகம் மிக்க அறிவுப் பரிமாணத்தை வழங்கியவர். பிரான்சு நாட்டின் முன்னாள் பிரதமர் லியோனல் ஜோஸ்பின் ஒரு முறை நாராயணனைச் சந்தித்தபோது, ''நான் சந்தித்தது ஒரு குடியரசின் தலைவரை மட்டுமல்ல; மிகப்பெரிய அறிவாளி யையும் கூட,'' என்று சொல்லி வியந்தார். நாராயணன் செல்லுமிடங்களிலெல்லாம் கல்வியாளர்களைச் சந்திப்பதிலும் அவர்களோடு வினா-விடை கருத்துப் பரிமாற்றங்களை மேற் கொள்வதிலும் வேட்கை கொண்டவர்.

1999இல் வாஜ்பேயி அரசு ஒற்றை வாக்கில் கவிழ்ந்த போது அவருடைய கோடாமைக்கு அது சோதனைக்களமாக அமைந்தது. உண்மையில் அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று அவசரமாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடாமல் அரசமைப்பதற்கான எல்லாசாத்தியப்பாடுகளையும் ஆய்ந்தறிந்து, பின்னரே பாராளு மன்றத்தைக் கலைக்கும்படி அமைச்சரவையை அறிவுறுத் தினார். பாராளுமன்றத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் சுபாஷ் காஷியப் ஒருமுறை சொன்னாற்போல், ''அமைச்சர வையின் ஆலோசனையும் வழிகாட்டலும் குடியரசுத்தலைவரை இயக்குவது போலவே, குடியரசுத் தலைவரின் அறிவுரையும் அமைச்சரவையை நெறிப்படுத்தும்.''

நாராயணன் தன் செப்பனிடும் தலைமை மூலம் அதைச் சச்சிதமாக நிரூபித்துக் காட்டியவர்.

நன்றி: *The Week, July 28, 2002*, தமிழில் சாரம்: மூசா.

www.padippakam.com

கவிதாசரண்

இதழாய் ஓர் எழுத்தியக்கம்

ஆகஸ்ட் - செப்டம்பர், 2002

ஆசிரியர்
**கவிதாசரண்**

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 16 |
| 12 இதழ்களின் நன்கொடை | ரூ. 200 |
| 30 இதழ்களின் நன்கொடை | ரூ. 500 |
| 60 இதழ்களின் நன்கொடை | ரூ. 1000 |
| வெளிநாடு தனி இதழ் | $ 2 |

தொடர்பு முகவரி:
**கவிதாசரண்**
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை - 600 019.
தொலைபேசி: 044-573 44 99

**KAVITHAASARAN**
31, T.K.S. Nagar, Chennai-600 019.
Tamil nadu, India.
Phone: 044-573 44 99

E-mail: kavithaasaran@yahoo.com

Website
htt://www.geocities.com/kavithaasaran/

ஓவியங்கள்
மருது, உலகு/பெருவை,பரம்ஜோதி

# அடுக்குகள்

## 1

சினிமா என் ஞாபக அடுக்கில் விரிக்கும் முதல் காட்சி அது. மூன்றாம் ரிச்சர்ட் மன்னன் படத்தில், முடி சூட்டு விழாவின் இறுதிக் கட்ட நிகழ்ச்சி. ஷேக்ஸ்பியரின் அந்த நாடகத்தைப் படிக்கும்முன் 60களில் பார்த்த ஆங்கிலப் படம் அது.

மன்னனாவதற்கு முன் அவன் மிகவும் பணிவுள்ளவனாக, பிறரிடம் நல்லெண்ணத்தை யாசிக்கிறவனாக, நைச்சியக்காரனாக, நயந்து, பயந்து, குழைந்து, வால் குழைத்து, பல்லிளித்து, தன் அடைதலுக்காக வரைமுறையற்று மலினப்படத் தயாரிக்கப்பட்டவனாகவே நமக்கு அறிமுகமாகிறான்.

எதிர்பார்த்தபடி அவன் மன்னனாகும் நோக்கம் நிறைவேறுகிறது. கார்டினல் அவனை அரியணை ஏற்றி, மகுடம் சூட்டி, மன்னனாக்கி ஆசீர்வதிக்கிறார். விழா முடிவில் அவர்தன் பரிவாரங்களோடு அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு அரங்கை விட்டு வெளியேறத் திரும்பும் போது அது நடக்கிறது; கணத்தில் ஒரு மின் தாக்குதலைப்போல ஓங்கி அவர் இடுப்பில் உதைக்கிறான் அவன் - சற்று முன் அவரால் மன்னனாக்கப்பட்டவன். அதிர்ந்து போய்த் திரும்புகிறார் அவர். அங்கே இரண்டு கண்கள் அவரை மண்டியிடக் கட்டளை இடுகின்றன. ராஜ நாகம் ஒன்று தன் நஞ்சு முழுவதையும் திரட்டிக் கண்வழியே பீய்ச்சினாற் போன்று அடித்து வீழ்த்துகிற அந்தப்பார்வை!

கார்டினல் மண்டியிட்டு அவன் கையை முத்தமிடுகிறார். அவர் வருகைக்காக நின்று திரும்பிய அத்தனை பேரும் விக்கித்தவர்களாய் தரையோடு தரையாகத் தாழ்ந்து மண்டியிட்டு வணங்குகிறார்கள்.

அந்தப் பார்வையை எப்போது நினைத்தாலும் என் உடம்பெங்கும் ஒரு சில்லிப்பு ஓடும். இது வெறும் சினிமாக்காட்சிதான் என்பது இதுவரை எனக்கொரு ஆறுதலாயிருந்தது. ஆனால் இன்று அப்படியொரு ஆதிக்கப்பார்வை ஒட்டுமொத்த இந்தியாவின் மீதும் கவிந்திருப்பதாக ஒரு நடுக்கம் ஏற்படுகிறது. குறிப்பாக தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். அதை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. கோட்சே புரிந்த கொலையிலிருந்து இன்னும் குருதி ஒழுகிக் கொண்டிருக்கும் குஜராத் படுகொலை வரை தன் வரலாற்றை இரத்தத்தால் மட்டுமே எழுதிக் கொண்டிருக்கும் ஒரு இயக்கம், இந்திய அரசியல் களத்தில் இரண்டு முறை தடைசெய்யப்பட்ட இயக்கம், இன்று ஆட்சியதிகாரத்தின் ஊற்றுக்கண்ணாகவே அரங்கேறி ஆடுகிறது. அதன் சில்லிட வைக்கும் அச்சுறுத்தலில், எரியும் விளக்கின் நிறத்துக்கேற்ப எல்லாப் பொருள்களும் பொய் நிறம் பூசிக் கொள்வதே போல் இந்தியச் சாரம் தன்னொளி குலைந்து தடுமாறிக் கொண்டிருக்கிறது. பன்மைச் சமூக வாழ்வில் பழகி நடந்த வழித்தடங்கள் யாவும் திசைக் குருடுகளாகி இருள்கின்றன.

ஆர்.எஸ்.எஸ். என்னும் ஆக்டொபஸ் தனது 27 கொலைக் கரங்களால் வேற்றுமையில் ஒற்றுமையை சுவாசிக்கும் இந்தியக் குரல்வளையை நெரித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கொலைக் கரங்களில் ஒன்றுதான் பா.ஜ.க. என்னும் அரசியல் அங்கம். விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங்தள் போன்றவை வேறு வேறு துறைகள் சார்ந்த கொலைக்கரங்கள். ஆர்.எஸ்.எஸ்.ஸின் செயல்பாடுகள் சனாதன தர்மம் போற்றாத சொந்தமக்களுக்கெதிரான அக்கிரமங்கள் என்று குற்றம் சாட்டும் நிலைமைமாறி, இனி இதுதான் நடைமுறை என்று அங்கீகாரம் தேடும் அரசியல் முயற்சிதான் இன்று குஜராத்தில் நடத்தத் துடிக்கும் தேர்தல்.

குஜராத்தை சோதனைக் களமாக்கி நடத்தப்படும் எல்லா அக்கிரமங்களுக்கும் ஒட்டுமொத்த ஆதரவும், ஆசீர்வாதமும், ஊக்குவிப்பும் வழங்கிக்கொண்டிருப்பவர் லால்கிஷன் சந்த் அத்வானி. ஆர்.எஸ்.எஸ். ஸை ஒரு நபராக்ச் சித்தரிக்க இப்போது அவரைவிடத் தகுதிபடைத்தவர் யாரும் இருக்கமுடியாது. மூன்றாம் ரிச்சர்ட் மன்னனின் அந்தப் பார்வையை அத்வானியிடம் தேடுவதிலும் யாருக்கும் எந்தச் சிரமமும் இருக்காது. 1977 இல் ஜனதா அரசின் அமைச்சராக அவர்காட்டிய பணிவும் தன்னடக்கமும் இன்னும் கண்ணில் நிற்கின்றன. இன்று துணைப் பிரதமராக அவர் முகம் காட்டும் அகந்தையும் ஆணவமும் கண்ணைக் காயப்படுத்துகின்றன. ''அவர் இன்னும் துணைப்பிரதமர்தான். தன்னைப் பிரதமராகவே நினைத்துக் கொள்ள வேண்டாம்'' என்று அதற்குள்ளாகவே விமர்சனம் கிளம்பும் அளவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அவரிடம் அதிகார மமதையும் ஆதிக்க தோரணையும் கழிவறைச்சுவரின் கரிக் கோடுகளாய் நெளியத் தொடங்கியாயிற்று. இந்தியாவே அவர் கோட்டுப் பைக்குள்ளிருக்கும் குண்டி துடைக்கும் காகிதம் என்பதான சர்வ அலட்சியம். (குண்டி துடைக்கும் வரை அது கோட்டுப் பைக்குள் இருக்கலாம் தானே?) எதுவும் தனக்கு நிகரில்லை என்பதாக, எதையும் தன்னால் துச்சப்படுத்த முடியும் என்பதான சுடுமூஞ்சித்தனம். அவரது மீசையின் இரு பக்கமும் அரை பங்காகச் சிரைத்துக் கொள்ளாதது ஒன்றுதான் பாக்கி, தன்னை ஹிட்லர் என பிரகடனப் படுத்திக் கொள்ள.

ஹிட்லருக்கும் அத்வானிக்கும் உள்ள ஒற்றுமைகள் ஒன்றும் தற்செயலானதல்ல. ஜெர்மானியப் பேரரசை நிறுவ முயன்ற ஹிட்லர் உண்மையில் ஜெர்மானியன் அல்ல. மாறாக ஆஸ்திரியாக்காரன். அதாவது ஜெர்மனியில் அவன் ஒரு வந்தேறி. அதுபோலவே அத்வானியும் ஒரு வந்தேறிதான். பாகிஸ்தானிலிருந்து ஓடி வந்தவர். இந்த வந்தேறியைத் தலைவராக ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் இன்னமும் பா.ஜ.க. வில் கணிசமாக உண்டு. அவரை சகித்து கொள்ள முடியாதபோது இரகசியமாக போஸ்டர்கூட ஒட்டுவார்கள். அவர் ஒரு இந்துவே அல்ல. இந்தியும் அவருடைய மொழி அல்ல. அவருக்குள்ள ஒரே தகுதி அவர் ஒரு மெய்யான பாரத புத்திரன். அதாவது அந்தக் காலத்துப் பாரதம் என்பது இன்றைய பாகிஸ்தானுக்கு அப்பாற் பட்டதல்ல. அதனால்தான் இந்த வந்தேறி ஆர்.எஸ்.எஸ்.ஸின் அகண்ட பாரதக் கனவின் இலட்சிய நாயகனாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு விட்டார். அத்வானி போன்ற அந்நியர்கள் எப்படி இந்து ராஷ்டிரத்தலைவர்களாக முடிகிறது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். அது ஒன்றும் பிரம்ம சூத்திரம் இல்லை. தன்னடையாளத்தை அழித்துக் கொண்டு அதிகார வர்க்கத்தோடு ஐக்கியப்படுகிற, அதற்கு விசுவாசமாய்ச் சேவை செய்கிற எந்தச் சாதிமானும் தலைவனாகப் பயன் படுத்திக்கொள்ளப் படுவான் என்பதே விதி. பார்ப்பனர்களில் கடும் பிச்சைக்காரர் களும் உண்டு. ஆனால் அவர்கள் பட்டினி கிடந்தாவது தங்களை அதிகார வர்க்கத்தோடும் வேத கோத்திரங்க ளோடுமே ஐக்கியப்படுத்திக் கொள்வார்கள். அதுவே அவர்கள் உயரத்துக்கான சூத்திரம்.

அத்வானியின் தலைமையும் அப்படிப் பட்டதுதான். மதிமுகவைத் தடை செய்ய யோசித்து வருகிறோம் என்று ஜெயலலிதா சொன்னால் உடனே 'அந்தக் கோரிக்கை வந்தால் நாங்கள் பரிசீலிப்போம்' என்கிறாரே அத்வானி, அதுதான் அவரது அதிகார வர்க்க ஐக்கியம். பாஜகவையும் வாஜ்பேயியையும் தன்னைவிட யாரும் அதிகமாய்க் கொண்டாடிவிடக்கூடாது என்று கங்கனம் கட்டிக் கொண்டு தன்னையும் தன் கட்சியையும் கூட்டிக்கொடுத்தவர் வைகோ. இன்று அவர் சிறையில் தான் இருக்கிறார் என்பது அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்ளக் கூடிய மறதியாகி வருகிறது. அவர் பாஜகவின் ஆலோசனை பேரில்தான் சிறையில் அடைக்கப்பட்டார் என்று யாரேனும் சொல்ல முயன்றால் அதைக் குப்பை என்று ஒதுக்குவதன் மூலம் நீங்கள் ஒன்றும் கொம்பு முளைத்த அரசியல் வித்தகர் ஆகிவிடப் போவதில்லை, தெரியுமா? அத்வானி என்றைக்கு ரதயாத்திரை தொடங்கினாரோ அன்றைக்குத் தொடங்கியது இந்தியாவின் இரத்தம் சிந்தும் யாத்திரை. அது இப்போது குஜராத்தில் வந்து அவிழ்த்துப் போட்டு ஆடிக்கொண்டிருக்கிறது.

ஹிட்லரின் எழுச்சி அவன் வீழ்ச்சியோடு மட்டும் முடிந்து விடவில்லை. எண்ணற்ற அழிவுகள், சிதைவுகள், துயரங்கள் என்பதோடு அமெரிக்கா என்றொரு சர்வதேசக் குற்ற வாளியையும் ஈன்று விட்டுத்தான் முடிந்துள்ளது. அதைப் போலவே அத்வானியின் எழுச்சி இந்துத்துவத்தின் வீழ்ச்சியாக மட்டும் இருக்கப் போவதில்லை. கூடவே இந்தியச் சிதறல்களாகவும் முடியும் என்பதற்கு சர்வ தேசக் குற்றவாளியே சாட்சியாவான்.

## 2

காமராசர் நூற்றாண்டு விழாவாம். அவரு செத்தே நூறு வருஷம் ஆயிட்டாப்ல இருக்கு. தமிழ நாடு அவ்வளவு வேகமா அவரை விட்டு விலகி வந்துடுச்சு.

..ம்..

நீங்க காமராசரைப் பார்த்திருக்கீங்களா?

இரண்டு தடவை.

எப்பப்ப?

சிறுவயசில் சிற்றூரில் காமராசரும் கக்கனும் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுத்துக்கட்டிப் பாடற சிறுவனா மேடை ஏத்தினாங்க.

பாடுனீங்களா? பாராட்டுனாரா?

ஞாபகமில்லை.

அப்புறம்?

திமுகவும் அதிமுகவும் ஒரே குட்டையில் ஊறின மட்டைகள்னு சொன்னாரே.

ஆமாம்!

அன்றைக்குப் பிற்பகல்.

அட. அது எப்படி அவ்வளவு சரியா சொல்றீங்க?

அது ஒரு வாழ்த்து மாதிரி. அதனால தான்.

•

அன்று பிற்பகல் முருக தனுஷ்கோடி அவர்களும் நானும் பெருந்தலைவரைப் பார்க்கக்கிளம்பினோம். முருக தனுஷ்கோடி அவர்கள் நவசக்தி நாளிதழின் ஆசிரியர் என்பதோடு நான் பணியாற்றிய பள்ளியின் முன்னாள் தளாளருங்கூட. என் மீது அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தவர். எனது குணங்குறைகள் எப்படியிருப்பினும் நல்ல தேர்ச்சியை ஈட்டித்தருகிற ஆசிரியர் என்று என்மேல் கூடுதல் ஈர்ப்பு. அப்போது நான் ஜேக்டீ அமைப்பின் அங்கமான சென்னை மாநகரத் தனியார் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்தேன். அமைப்புகளின் போராட்ட காலம் அது. அப்போது பெருந்தலைவர் திராவிடக்கட்சிகளைப் பற்றிக் கருத்து சொல்வதைத் தவிர்த்து வந்த நேரம்.

தனிப்பட்ட முறையில் எனக்குப் பெரியவரைப் பார்க்க வேண்டுமென்று ஆசை இருந்தது. அவர் ஆட்சிக் காலம் தமிழ் நாட்டின் பொற்காலம் என்று சொல்லிக்கொள்ள காங்கிரஸ்காரர்களுக்குக் காரணங்கள் இருந்தன. தமிழகத்தில் மூன்று கிலோ மீட்டர் ஆரத்தில் பள்ளியில்லாத ஊரே இல்லை என்று சொல்லும் படி ஆயிரக்கணக்கில் பள்ளிகளைத் திறந்தவர்-வெகு மக்களுக்கான பொதுப் பள்ளிகள் அவை. படிக்கும் வேளையில் பிள்ளைகள் பசியாறிக்கொள்ள மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தவர். இதன் காரணமாக அடிமனதில் அவர் என் தலைவராக அமர்ந்திருந்தார்.

நாங்கள் திருமலைப் பிள்ளைத் தெருவில் இறங்கி வீட்டை அடைந்த போது வைரவன் எதிர்ப்பட்டார். ''பெரியவர் எழுந்திட்டாரா, பாரு,'' என்றார் முருக தனுஷ்கோடி. அவர் சென்று எட்டிப் பார்த்து விட்டு எங்களைப் போகச் சொன்னார்.



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் உள்ளே சென்றோம். தலைவர் அப்போதுதான் படுத்திருந்தவர் எழுந்து அமர்ந்திருந்தார். அப்படியொரு அசட்டையான சந்தர்ப்பத்தில் நாங்கள் அனுமதிக்கப்பட்டது எனக்கு அதிக பட்சமாகப்பட்டது. அவரோடு ஒரு சிட்டுக் குருவி கூட இல்லை என்று எனக்குள் ஒரு வலி கிசுகிசுத்தது. அந்த அறை ஒற்றைச் சுவாசமாய் அடங்கியிருந்ததன் ஒரு விம்மலாக, சற்றே ஒடுங்கினாற் போல் தெரிந்த அந்தப் பேருரு கட்டில் முழுதும் நீண்டு படுத்து, தன் மெல்லிய குரட்டை ஒலியைக் கூடத் துறந்து கிடந்தாற்போல் மனக்கண்ணில் ஒரு காட்சி தோன்றி மறைந்தது. சூரியனைக் கிரகணம் பற்றிக்கொண்டது. கிரகணம் விடும் போது பொழுதிருக்க வேண்டுமே என்பதாக மனம் கனத்தது.

அறையில் நுழைந்த அந்தக் கணத்தின் மனவோட்டம் அது. அவர் முழு உருவமும் என்கண்ணை நிறைக்கும்படி பார்வை விரிந்து கொடுத்தது.

நான் வணக்கம் தெரிவித்தேன். பதிலுக்கு வணங்கி முன்னால் அமரச் சொன்னார். நான் அமர்ந்தது நாற்காலியா, முக்காலியா என்று இப்போது நினைவில்லை. என் அமர்வு ஒரு முக்காலிக்குள் அடங்கு வதாகவே இருந்திருக்க வேண்டும். அது தான் இந்த நினைவின்மைக்குக் காரணம் என இப்போது உணர்கிறேன்.

முருக தனுஷ்கோடி கோர்வையில்லாத சொற்களால் என்னை அறிமுகப் படுத்தினார். கெட்டிக்கார ஆசிரியர் என்று அப்போது கூட சொல்லத் தவற வில்லை. பெரியவர் பார்வை என்மேல் சற்றுப் பொருந்தி நின்ற போது, ''கட்சிக் காரர் இல்ல. ஆனா உங்க சீடர்'' என்றார். எவ்வளவு கொட்டினாலும் செவிகள் வகைப்படுத்தி உள்வாங்கிக் கொள்ளும் போல் தோன்றியது.

அறிமுகம் முடிந்ததும், இனி தனக்குச் சம்பந்தம் இல்லை என்பதுபோல தனுஷ்கோடி அவர்கள் அறையை நோட்டம் விடத் தொடங்கினார்.

ஆசிரியர் பிரச்சினைகள், கோரிக்கைகள், அரசின் எதிர்வினை, பிற கட்சிகளின் புரிதல்கள், ஒருங்கிணைவுகள் என ஒவ்வொன்றையும் சொன்னேன். கேட்டுக் கொண்டார். திமுக, அதிமுக பற்றி பேச்சு வந்த போது கல்விக்கப்பாலும் பேச்சு நீண்டது. நான் பேசும்போது இடை யிடையே இரண்டொரு சொற்களோடும் சொற்களின்றியும் அவர் கேட்டுக் கொண்டிருந்த பாங்கு என்னைக் கொஞ்சம் அதிகம் பேச வைத்திருக்கக்கூடும். ஆனால் அவர் தேவைகள்தாம் என் பேச்சின் எல்லை என்பதாக ஒரு ஆளுமை அங்கே இயங்கிக் கொண்டிருந்தது. பேச்சினூடே அழுத்தமாக என்னுள் ஓர் எண்ணம் இழையோடியது. அதாவது, பெருந்தலைவர் பேசும் போதும் பேசக் கேட்கும்போதும் மட்டுமே மண்ணில் பொருந்தி நிற்கிறார். மற்றபோது மௌனவெளியில் மெல்ல கரைகிறார். அல்லது மிதக்கிறார். அவரைப்பிணைத்திருந்தஎல்லாக்கட்டுகளும்அவிழ்ந்து விட்டன. ஆனாலும் அவற்றை அவர் உதறிக்கொண்டு விடுபடவில்லை என்பது தான் இப்போது அவருடைய பிடிப்பு என்பதாக அந்த எண்ணம் ஓடியது.

நாங்கள் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தோம். நடந்துகொண்டே,'' அப்புறம் என்ன?'' என்றார் முருகதனுஷ்கோடி.

''ஒரு காபி குடிக்கலாங்க,'' என்றேன்.

''சரி, அதுக்கப்புறம்?'' என்றார்.

''ரொம்பப் பேசிட்டனா?''

''நான் கவனிக்கல.''

''என்னங்க!''

''பெரியவர் கேட்டுக்கிறாரான்னு கவனிச்சிக்கிட்டிருந்தேன்ல. அது தான்.''

அது ஒரு வகை சந்தோஷ வெளிப்பாடு அவருக்கு.

அடுத்த நாள் காலை 11 மணியளவில் பள்ளிக்குத் தொலைபேசி வந்தது. நான் ஓய்வாய் இருக்கிறேனா என்று உறுதிப்படுத்திக் கொண்டு முருக தனுஷ்கோடி அவர்கள் தான் என்னை அழைத்தார்.

''பேப்பர் வாசிச்சிங்களா?'' என்று கேட்டார்.

''பெருந்தலைவர் பேச்சைப் படிச்சிட்டேங்க.''

''அவரு மௌனம் உடைஞ்சிருச்சு பாத்திங்களா. அதுல உங்களுக்கும் கொஞ்சம் பங்கிருக்கு.''

''அப்படியா?''

''என்ன அப்படியா? இனிமே பெரியவரை நீங்க சந்திச்ச நாளை சுலபமா மனசில வச்சிக்கலாம். சரிதானே?''

எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

முதல் நாள் நாங்கள் பார்த்துவிட்டு வந்த பிறகு, பெருந்தலைவர் வில்லிவாக்கத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். அதில் ஆசிரியர்களின் பிரச்சினை தீர்க்கப்படாதது பற்றியும் திராவிடக் கட்சிகளின் பொறுப்பின்மை பற்றியும் பேசியிருந்தார். அதாவது தனக்குத்தானே விதித்துக் கொண்ட 6 மாத மௌனத்தைக் கலைத்து விட்டு 'திமுக, அதிமுக ரெண்டும் ஒரே குட்டையில் ஊறின மட்டைதான்னேன்' என்ற புகழ்பெற்ற தன் முதல் விமர்சனத்தை அந்தக் கூட்டத்தில் வைத்திருந்தார்.

காங்கிரசை வீழ்த்தி திமுக முதல்முறையாக வென்றபோது பக்தவத்சலம் தமிழ் நாட்டில் விஷக்கிருமி பரவிவிட்டது என்று சொன்னார். காழ்ப்பில் விளைந்த கடுமையான விமர்சனமாக அது கருதப்பட்டது. ஆனால் போதிய அவகாசம் கொடுத்த பின் பெருந்தலைவரும் அதன் தொடர் விமர்சனமாக இரண்டு கட்சிகளுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்று சொல்லிவிட்டார்.

தமிழ்த் தேசியவாதிகளுக்கு பக்தவத்சலத்தின் மேல் கடுங்கோபம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தி தமிழ் மாணவர்களைக் கொன்று குவித்ததாகக் குற்றச்சாட்டு. பெருந்தலைவர் மீது கூட தமிழ்நாடு பெயர் வைக்கக் கோரி உண்ணா விரதமிருந்த சங்கரலிங்கனாரைச் சாகவிட்டு விட்டதாகக் குற்றச்சாட்டு உண்டு.

அவர்கள் குற்றவாளிகள் என்றே வைத்துக்கொள்ளலாம். அவர்களால் சில தனிநபர்கள்தாம் கொலையுண்டார்கள். ஆனால் 'தமிழ் தமிழ்' என்று முழங்கி ஆட்சியைப் பிடித்தவர்களால் தமிழினமே அல்லவா கொல்லப்படுகிறது! காமராசர் கொண்டு வந்த தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தையும் சேர்த்தேதான். சும்மா கூட 'தமிழன்' என்று சொல்லிக் கொள்ள முடியாத நிலை இன்று தமிழ்நாட்டில்

## 3

'வல்லினம்' என்றொரு காலாண்டிதழ் புதுவையிலிருந்து வெளிவரத் தொடங்கி யுள்ளது. முதல் இதழே நேர்த்தியாக அமைந்து உள்ளது. அச்சும் அமைப்பும் அழகு. அதன் நோக்கமும் அழகாய் இருக்கவேண்டும் என்று நினைக்கத் தோன்றியது. எழுத்துப் பிழைகள் சகித்துக்கொள்ளும்படியாகக் குறைவு தான் என்றாலும், இதழின் அத்தனை கச்சிதமான புறநேர்த்தியில் அவை ஒழுக்கக் குறைவான விஷயம் போல உறுத்தின.



படிப்பகம்

www.padippakam.com

இதழாசிரியர் எனக்கொரு கடிதம் எழுதி யிருந்தார். ''பெரியாரை சிந்தனையாளர் என்று சொல்ல முடியாது என்று கூறி யிருக்கிற ரவிக்குமாரின் கருத்திற்குத் தங்களின் எதிர் வினையைப் பதிவு செய்ய வல்லினம் விரும்புகிறது. அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்' என்பது அதன் வாசகம்.

அனுப்பி வைக்கவில்லை.

ஒரு கோழிச்சண்டை இரைச்சல் மிகுந்த நாய்ச்சண்டையாக உருப்பெருக்கப் பட்டிருக்கிறது. ரவிக்குமார், தான் ஒரு தலித் அல்லது தலித் சிந்தனையாளர் என்னும் கவசத்தை மாட்டிக்கொண்டு ஒருவகையான அகந்தை மிக்க சுய விளம்பரச் சவடால்களோடு, தனக்குத் தோதுப்படும் எல்லா எல்லைகளையும் தொட்டுவிட முயல்கிறார். தன்னை மீறி இங்கே எவரும் தலித்தியம் பேசிவிட முடியாது என்னும் தோரணையில் தலித்தியத் தளத்தை ஒரு பகை வட்டத்துக்குள் சொருகி விடத் துடிக்கிறார். தலித் அல்லாதவர்கள் தலித் விடுதலை பற்றிப் பேசத் தகுதியற்றவர்கள் என்று எல்லா நட்பு சக்திகளையும் பகை முத்திரை குத்திக் கழித்துக் கட்டிவிடத் திட்டமிடுகிறார். பார்ப்பனர் x பார்ப்பனர் அல்லாதார் என்று பிரிக்கப்பட்டிருந்த சமூகம் தற்போது தலித் x தலித் அல்லாதார் என்று தலித்தை அடிப்படை அலகாக்கும் போக்கு உருவாகியிருக்கிறது. இதனைத் தலித்துகளின் ஒட்டுமொத்த விடுதலைக்கான முன்னெடுப்பாக உறுதிப்படுத்த வேண்டிய தருணத்தில், தலித்துகளைத் தனிமைப்படுத்தி அவர்களுக்கெதிராக தலித் அல்லாதோர் அழித்தொழிப்பு சக்தியாகத் திரள்வதற்கான சாத்தியங்களை தனது தான்தோன்றித் தனமான பகை முழக்கங்களால் ரவிக்குமார் வளர்த்தெடுக்கிறார். பெரியாரைத் தலித் விரோதியாக முத்திரை குத்தும் தனது பொறுப்பற்ற குருட்டுத்தனத்தால் தான் எட்டிய உச்சமெல்லாம் பெரியாரின் தோள் ஏறிக் கண்டறிந்ததுதான் என்பதை மறந்து விடும் கயமைக்குச் செழுமை சேர்க்கிறார். அவர் அறிவு நாணயமோ, வாக்கு சுத்தமோ, நம்பகத்தன்மையோ இல்லாதவர் என்பதை தன்னைத்தானே மறுத்துக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரூபித்துக் கொண்டு வருகிறார். பொய் பேசுவதை ஒரு அறிவுத்துறையாக வளர்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு தலித்தாய் இருந்து கொண்டு நடைமுறை வாழ்வில் தலித் இளைஞர்களை - படைப்பாளிகளைப் பாராட்டுவதையோ, ஊக்குவிப்பதையோ, திருத்துவதையோ, குறைந்தபட்சம் பொருட்படுத்துவதையோ கூட முற்றாகத் தவிர்ப்பது மட்டுமல்லாமல் தன்னை அவர்களிடமிருந்து அந்நியப்படுத்திக் கொள்வதிலேயே குறியாய் இருக்கிறார். தலித்தியம் அவருக்கொன்றும் ஆன்மா அல்ல; விற்றுப் பேர் வாங்கக் கிடைத்த ஒரு சரக்கு. எல்லாரும் புதுக்கணுக்களோடு வளரக் கூடியவர்கள். ஆனால் இவரோ எப்போதும் அதிர்ச்சி மதிப்பீடுகளை உருவாக்கிக்கொண்டு எதிர்த்திசையில் வழுக்கக் கூடியவர்.

இவை ஒவ்வொன்றும் கவிதாசரண் கருத்து மட்டுமல்ல, வெகு நாட்களுக்கு முன்பே அவருக்கெதிராகப் பொதுமைப்பட்டுப்போன கருத்து. இதை ஏன் யாரும் சொல்ல முன் வரவில்லை என்றால், அனாவசியமாக தன்னை தலித் விரோதி என்று அவர் முத்திரை குத்திவிடக்கூடாதே என்னும் அறம் சார்ந்த அச்சத்தால்தான். அவருக்கு அவர்தான் அறம் என்றாகும்போது வெளிப்படையாகப் பேசிவிடுவதே விவேகம். அவருக்கெதிரான ஒவ்வொரு கருத்தையும் என்னால் ஆதாரங்களோடு நிரூபிக்க முடியும்.

'நிறப்பிரிகை ரவிக்குமார் என்று அறியப்பட்ட நிலை மாறி காலச்சுவடு ரவிக்குமார் என்று அறியப்படுகிறீர்களே' என்று வல்லினம் வைத்த கேள்விக்கு 'அது அ.மார்க்ஸ் தன்னைப் பார்ப்பனக் கைக்கூலியாகச் சித்திரிக்கும் அவதூறு' என்று நூற்றியெட்டு தர்க்கங்களை அடுக்கியவர், இன்று அதே காலச்சுவடுவின் ஆசிரியர்களில் ஒருவர். ஒரு இரண்டு மாத இடைவெளியில் அவர் அடைந்த மாற்றம் அல்லது தன்மறுப்பு. காலச்சுவடுவில் ரவிக்குமார் காணும் ஜனநாயகம், தரம், சீரியஸ்னஸ் ஆகியவற்றோடு மேலும் ஒரு முக்கியத் தகுதி உண்டு. இந்தப் பத்தாண்டுகளில் அது ஒரு தலித் கவிதையைக் கூட அதன் 'கவிச்சை'யோடு வெளியிட்டதில்லை. அதுதான் ரவிக் குமாருக்குத் தேவையான தரம்.

இரண்டாண்டுகளுக்கு முன் 'தலித் பிரச்சினையில் மார்க்சுக்கிருந்த அர்ப்பணிப்பை' காலச்சுவடு நேர்காணலில் குறை கூறத் துணியாத ரவிக்குமார் வல்லினத்தில் 'மார்க்ஸ் ஒரு தலித் விரோதி என்பதை (அவரே) வெளிப்படுத்திக் கொள்வார்' என்கிறார். அதுதான் ரவிக்குமாரின் வளர்ச்சியும் நட்பு சக்திகளை அவர் வென்றெடுக்கும் வழிமுறையும்.

''அம்பேத்கர் கூறியது போல தலித்கள் இந்துக்கள் என்பதுதான் சரி. இதுதான் நடைமுறையில் சாத்தியம்'' என்பது காலச்சுவடு நேர்காணலில் அவர் கூறிய கருத்து. 'இந்த சாத்தியம் அறிந்தவரும், தலித்கள் இந்துக்கள் என்பதுதான் சரி என்று ஏற்றுக்கொண்டவருமான அம்பேத்கர் ஏன் பௌத்தம் தழுவினார்? இது அம்பேத்கருக்கு நீங்கள் செய்யும் அவமரியாதையாகப் படவில்லையா?' என்று தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டபோது நான் கேட்டேன். ''அது தவறுதலாகப் போட்டு விட்டார்கள்'' என்றார். ''திருத்தம் கொடுக்கலாமே, தெளிவுபடுத்தலாமே'' என்றேன். ஆனால் செய்யவில்லை. ஒருமுறை 'இந்தியாடுடே' இவரை 'விடுதலை சிறுத்தைகள்' அமைப்பின் அரசியல் ஆலோசகர் என்று போட்டுவிட்டது. அதற்கு அடுத்த இதழிலேயே 'தப்பு. பியுசில் தலைவர்' என்று திருத்தம் வந்தது. இதுதான் ரவிக்குமாரின் அம்பேத்கர் பற்றும், தலித்தியப் பற்றுணர்வும். அறிவு நாணயம் என்பது இக்கட்டான சந்தர்ப்பத்தில் சுண்டிப் பார்க்கச் சம்மதிக்காத கள்ள நாணயம் அல்ல.

'சொந்த சாதிக்குத் துரோகம் செய்பவர்கள்தான் தலித்திற்கு ஆதரவாளராக இருக்க முடியும்' என்னும் அவரது அபத்தச் சொல்லாடலைக் கூட நான் இன்னும் விமர்சிக்கத் தொடங்கவில்லை. ரவிக்குமார் என்னும் வங்கி ஊழியர், வங்கியில் செயல்படும் SC/ST யூனியனில் ஓர் உறுப்பினரே அல்ல. இவர் பொது உணவு விடுதிகளில் புலால் உண்பதில்லை. ஏனெனில் மாட்டுக் கறியைப் போட்டு ஏமாற்றி விடுவார்கள் என்பதால். இவற்றையெல்லாம் அவர் சொந்த சாதிக்குத் துரோகம் செய்யும் புனிதக் காரியங்களாகப் பட்டியலிட்டு நான் அற்பப்படுத்த விரும்பவில்லை.

'புனிதம், உன்னதம் என்றெல்லாம் ஒன்றும் இல்லை என்றாலும் அந்தச் சொற்களைத்தான் நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது' என்பதுதான் ரவிக்குமாரின் இப்போதைய புனித அரசியல். அதனை நாமும் எதற்கு இழுக்கிக் கொள்ள வேண்டும்?

'வல்லினம்' நேர் காணலில், 'கவிதாசரணை அவன், இவன் என்று பேசியவர்' என்று மார்க்சைக் குற்றம் சொல்லியிருக்கிறார். அதற்காக நான் நன்றி சொல்ல வேண்டும். இனிமேல் ரவிக்குமாரும் என்னை 'அவன் இவன்' என்று சொல்லி மகிழலாம். இவ்வளவு வயதுக்குப் பிறகு இந்த மகிழ்ச்சியைக்கூடக் கொடுக்க முடியவில்லை எனில் என் பிறவிக்குத்தான் என்ன பயன்?

•



படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்கள்

கவிதாசரண் விழாவிற்கு வர முடியாத குறையை கட்டுரைப் பதிவு தீர்த்து வைத்தது. குறிப்பாக கவிதாசரணின் ஏற்புரையை அவசியம் பேசியாக வேண்டும். அ. மார்க்ஸின் மீது கவிதாசரண் கொண்டிருந்த ஈடுபாடு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது. நடந்து முடிந்த இதழ்களில் அ.மா.விற்கும் கவிதா சரணிற்கும் நடந்து முடிந்த விசயங்களை வாசகர்கள் அறிவார்கள். இப்போதைய இருபக்கத் திறந்த மனமும் வாசகர்களுக்கு மகிழ்ச்சியானது. ஆனாலும் முந்தைய பிரச்சனைகளில் முடிவுகளையோ-தவறுகளையோ (ஏதேனுமிருந்தால்) யார் பக்கம் சார்ந்து நிற்கும் என்ற கேள்வியும் அப்படியேதானிருக்கிறது. இதை எதற்கு இப்போது பேச என்று எனக்குக் கூட தோன்றுகிறது தான். என்றாலும் மீண்டும் மீண்டும் இது போன்றே ஆகிவரக் கூடாதே.

உண்மையில் அ.மா.வின் உழைப்பின் திசைகண்டு வேதனையடைந்துகொண்டிருந்தவர் கவிதாசரண் என்றே நானும் எண்ணுகிறேன். தலித்தியம் குறித்த தற்போதைய பார்வையின் முக்கியத்துவத்தையும் விட தலித்தியத்தின் பகடி வேலைகள் கவலைப்படவைக்கின்றன. அதிலும் அவைகள் அ. மார்க்ஸையே குறிவைத்துச் செயல்படுவது. வேதனைப்படவைக்கிறது. இதிலும் தன்னையறியாமலேயே தன்னைச் சிக்க வைத்துக் கொள்கிறார் அ.மார்க்ஸ் என்றும் கூட எண்ணத் தோன்றுகிறது.

'யாருமே விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல - தலித் எழுத்தாளர்களும் சரி' என்ற சிவகாமி I.A.S. அவர்களின் கூற்றை பல தலித்வாதிகள் 'சிந்தித்துப்' பார்ப்பது நல்லது.

'கவிதாசரண்' ஒரு முன்னுதாரணம் என்பதை யாரும் மறைத்துவிட முடியாது. அரசியல்ரீதியான வேறுபாடுகளை அங்கீகரிக்க மறுப்பவர்கள் கூட அவரது 'மொழிமழை'யைக் கவனிக்காமல் விட முடியாது. நனைந்தே தீர வேண்டிய கட்டாயத்தை அவரது மொழியை வாசிப்பவர் அனைவரும் உணர்வர்.

கவிதாசரண் எழுத்தியக்கம் ஓர் தனித்த இயக்கம். கவிதாசரண் குறித்து தொ. பரமசிவன் என்ன சொல்லியிருக்கலாம் என்பதையும் அறியத் தோன்றுகிறது.

'போபால் பிரகடனம்' - பெருங்குரலை எழுப்பி முடிந்த நேரத்தில் அ.மா.வின் சில எச்சரிக்கைகள் வந்திருக்கின்றன. அதிலேயே மிக விசேசமான எச்சரிக்கையாக அவர் முனிம்மாவைப் பற்றிக் கூறுவது கவனம் கொள்ளத்தக்கது. முனிம்மாவின் சவடாலோ அல்லது கூடாரத்து உரிமைக்காரர்களின் சவாலோ தலித்தியத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ள தலித்துகளை என்ன பாடுபடுத்தப் போகிறதோ தெரியவில்லை.

சுயநேர்மையோடு வந்தவர்களை, 'சனநாயகம்'' காட்டி ஆசைப்படுத்தி விட்ட தலித் அறிவாளர்களுக்கு வரலாற்றில் புள்ளியைத் தரவே தலித்துகள் விரும்புவார்கள்.

பார்ப்பனர்களின் ஊடுருவல்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும் C.I.D. வேலையை அ.மா. கவிதாசரணுக்கு தந்திருக்கிறார். பார்ப்பனியத்தோடு உல்டா தலித்தியவாதிகள் அல்லது 'டம்பதலித்தியம்' பற்றிய அம்பலப்படுத்தலையும் கவிதாசரண் செய்ய வேண்டும்.

மற்றபடி, மல்டி கலர் அட்டை எல்லாம் ஆபத்து என்பதற்கெல்லாம் பயப்பட்டு விட வேண்டாம். சாதிக்கக் கூடியவைகளை சாதித்தே தீர வேண்டும்.

*சிவகங்கை குருசாமி மயில்வாகனன்*

•

கவிதாசரண் ஜூன்-ஜூலை இதழை உறையிலிருந்து எடுத்த போது உடல் சிலிர்த்தது.

உழைப்பு, உழைப்பு, உழைப்பு. உங்கள் உழைப்பு ஒரு நிகரற்ற செய்தியாகும். அதன் அற்புதம், அதன் அழகு, அதன் கலை, அதன் வீரியம்-எல்லாம் ஓர் உழைப்பின் விளைவுகளாய் உறுதியாய் மிளிருகிறது. நண்பர்களிடம் கவிதாசரண் வந்துள்ளது என்ற செய்தியை சொன்ன போது, உணர்ச்சி வயப்பட்டதாய் உந்திச் சொல்ல வைத்தது. உங்கள் உழைப்பு உணர்வாய் எதிரொலித்ததுதான். பதர்களுக்கு மெருகூட்டிக் கொண்டு வரும் பல இதழ்கள் போன்றல்லதானே கவிதாசரண்! பக்கங்கள் முழுவதும் வீரிய விதைகள்தானே விதைக்கப்பட்டிருக்கும்! ஐயமற்ற முடிவு அது. இதழை அப்படியே உற்றுப் பார்க்கிறேன். உங்களை நினைக்கிறேன். உங்கள் உழைப்பு, கண்கள் மெல்ல ஈரமாகிறது.

உழைப்பு மனித குலத்தை உருவாக்கியது. கவிதாசரணின் உழைப்பு மானுட மீட்சியை ஏற்படுத்தும். இதழ் வடிவம் மாற்றம் பெற்றது தேவைதான். அட்டையில் விவேகானந்தரின் கூற்று பொருத்தமாக உள்ளது. தன் உடலையும், தன் உடமைகளையும் மறந்துவிடாத, அதற்காகவே வாழுகின்ற தேசபக்தர்கள் நாட்டில் பெரும் பகுதி. வளரும் இளைஞர்களில் பலரும் அந்த நிறத்தில்தான் வளருகின்றார்கள். கல்விச்சூழலும் சரணடல் தொழிலை ஒப்பனையோடு கற்றுத் தருகிறது. மனிதத் தன்மைக்கு எதிரான கோட்பாடுகளை, சூத்திரங்களை, நவீன கல்வி என்ற வேடத்தில், பிழைப்பை வாழ்வு என்று பொருள்படுத்தி, அதற்கேற்ற வடிவத்தில் நெறிமுறைப்படுத்துகிறது. கேட்பாரற்று கேடில் விழுந்தது கல்வி. இப்படி எந்தத் திசையில் திரும்பினாலும் மனிதத்துவத்திற்கு எதிரான அம்சங்கள் அரவணைப்போடு கொலுவீற்றிருக்கின்றன. சோகம் படிந்த மனசில் சுடர்விடும்கோப வீச்சின் வடிவமாக கவிதாசரண் கம்பீரமாக வெளிப்படுகிறது.

தலித்-பெண்-குழந்தை-இவர்கள் எவ்வித குற்றச்சாட்டுக்குமுரியவர்கள் அல்லர் என்பது எமது தீர்மானகரமான எண்ணமாகும். தங்களின் எழுத்துகளையும் அவ்வாறே கருதமுடிகிறது.

கட்டுரைகள் யாவும் கூர்மையாக வந்துள்ளன. புதிய மாதவி கவிதைகள், புதுவை ஞானம் தமிழாக்கக் கவிதைகள் குறிப்பிடும்படியாக உள்ளன. மற்ற கவிதைகளும் நன்றுதான்.

நூல் மதிப்புரைகள் அனைத்தும் நன்றாகவே வந்துள்ளன. நல்ல நூல்களை அறிமுகம் செய்துள்ளது.

'இரண்டு கொடிகள்' என்ற மொழிபெயர்க்கப்பட்ட இத்தாலிய சிறுகதை நன்றாகவே லதா ராமகிருஷ்ணன் தமிழில் தந்துள்ளார். இன்றைய சூழலில் ஒரு குறியீட்டுத் தன்மையோடு உள்ளது. இதன் மூலப்படைப்பு மிகுந்த கவித்துவமாக அமைந்திருக்கும். நல்ல மொழி பெயர்ப்பு. தமிழில் இத்தகைய கலைத் தன்மைகளோடு படைப்புகள் அமைவதை நவீன கலை படைப்பாளர்கள் ஏற்பதில்லை. அவர்கள் தோற்றுவித்துக் கொண்ட வடிவத்தில் அமைந்தால்தான் ஒப்புக்கொள்கிறார்கள். கலைத்தன்மையின் வளர்ச்சியும் வெளிப்பாடும் எத்தகைய கட்டுக்குள்ளும் இருந்து விடுவதில்லை. மரம் என்று நாம் வரைகின்ற வடிவத்தில் மட்டுமே மரங்கள் இருந்துவிடுவதில்லை. அதன் தழைப்பு, வீரியம் இவற்றை முன்னிட்டு அதன் வடிவம் செழிப்பு அடைகிறது.

பில் கிளிண்டன் தாமே சென்று குளிரூட்டியை சரியான வேகத்துக்கு மாற்றிவைத்த தன்மை, நம் நாட்டில் அதுவே ''வரைவுதிட்டமாக (Project)'' நடைமுறைக்கு வரும்.



படிப்பகம்

www.padippakam.com

பெருமாள் முருகனின், கருப்பனார் கிணறு- சிறுகதை-வித்தியாசமான போக்கோடு அமைந்துள்ளது.

போர் பற்றி எழுத வரும் போது 'ஸ்கட்' தலைக்கு மேலே தீப்பிழம்பைக் கக்கிக் கொண்டு செல்லும்போது, அபாய சங்கின் அலறல் கேட்டு அங்கெங்கே கட்டடத்துக்குள் பதுங்கிய பதட்டம் நிறைந்த கால கட்டத்தில் அங்கு தவித்த பொழுது எழுதிய வரிகளை நினைவு கூர்கின்றேன்.

''போர் என்ற பேச்சும்
படை என்ற மூச்சும்
அகலக் கூடாதோ?
அமைதி என்ற பேச்சும்
அன்பு என்ற மூச்சும்
நிகழக்கூடாதா?''

போரின் முடிவில் மரணங்களே வெல்லும். போரின் குரூரத்தன்மையை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும். அது இல்லாது போக்கும் நெறிகளை உருவாக்க வேண்டும்.

***பிச்சிலிக்காடு வை.வைத்திலிங்கம்***

•

தாங்கள் ஏற்புரையில் குறிப்பிட்ட, ''எனக்கு இந்தக் கை சுளுக்கிக் கொண்டிருக்கிறது. தூக்க முடியவில்லை வேலை செய்ய முடிவில்லை. ஆனாலும் இந்தக்கை எனக்கு அவசியம். இதை நான் இழந்துவிட முடியாது. இழந்து விட்டு ஊனப்பட முடியாது... சிறு சிறு மாச்சரியங்களைப் பெரிது படுத்தாமல் வளர்ந்திருக்கிறோம் என்று மகிழ்ச்சியாய் இருக்கிறது'' என்கிற என் உணர்வுகளை அப்படியே பிரதிபலித்து ஏற்புரை சொல்லி யிருக்கின்றீர்கள். உங்கள் வெற்றி-நம் வெற்றியே இந்தப் பிணைப்பில்தான் வளருகிறது. இதழுக்காக இத்துடன் ரூ.500/- (அய்நூறு காசோலை) இணைத் துள்ளேன்

***கீழ் அலங்கம் இரா.இரத்தினகிரி***

•

## போபால் பிரகடனம் - இன்னொரு பக்கம்

**க**விதாசரன் இதழில் 'போபால் பிரகடனம்அறிமுக உரையுடன்' குறித்தான என் பதிவுகள் மிக சுருக்கமாக.

இட்லரின் பாசிசக் கொள்கையை விடமிகக்கொடிய மனுதர்மத்தை உயர்த்திப் பிடிக்கும் இந்து மத தீவிர பாதுகாவலனாக விளங்கும் காங்கிரசு கட்சியினர் கூட்டிய போபால் மாநாட்டில் உருவாக்கப் பட்டது. 'போபால் பிரகடனம்' மத்திய பிரதேச அரசு தயாரித்த அல்லது அரசின் திட்டமல்ல. போபால் மாநாட்டில் பங்கேற் றவர்களின் அறிக்கையே ஆகும்.

Bhopal Document-இல் நில உச்சவரம்பு மற்றும் தலித்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் நிலங்களை தலித் பெண்கள் பெயர்களில் பதிவு செய்வது, தீண்டாமை, சமூக இழிவுகள் குறித்தும் பேசப்பட்டாலும் அது Bhopal Declaration ஆக மாறும்போது பல விவரங்களை விட்டு விட்டு வாய் மூடிக்கொண்டது.

கறுப்பின மக்களின் அரசியல் விழிப்புணர்வு, அமெரிக்க அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. உலகமயமாக்கலை முழுமையாக ஆதரிக் கின்றது. அதற்கு ஏற்றார்போல தலித்களை தயாரிக்கின்றது. தலித் விவசாயிகளுக்கு புதிய நவீன ரக விதைகளை, பணப்பயிர் களை இலவசமாக அறிமுகப் படுத்துகிறது. பன்னாட்டு நிறுவனங்களில் அல்லது தனியார்துறையில் இடஒதுக்கீடு குறித்தும் சொல்லும் பிரகடனம், ஒதுக்கீடு மூலம் (மொத்தம் 21 கோடி தலித்களில்) 2½ கோடி தலித்கள்தான் பயன்பெறுகிறார்கள். மற்ற 18½ கோடி தலித்களின் எதிர்காலம் குறித்து விளக்கமில்லை. சாதியை வளர்க்கும். ஒதுக்கீட்டுக் கொள்கைக் குள்ளேயே மீண்டும் தலித்துகளை அடக்குகிறது.

போபால் பிரகடனம் குறித்து வழக்கம்போல அதிகம் பேசும் NGOக்கள், 1966ஆம் ஆண்டு தலைவர் இளைய பெருமாள் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, தீண்டாமை, பொரு ளாதாரம் மற்றும் கல்வித் திட்டம் குறித்து ஒரு அறிக்கை தயாரிக்க ஏற்பாடு செய்தது அன்றைய மைய அரசு (காங்கிரசு அரசுதான்). 1969 ஆம் ஆண்டு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டும் இன்றும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் கிடப்பதை இந்த நேரத்தில் பேசுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

போபால் பிரகடனத்தில் நிலப் பகிர்வு குறித்து சரியான விளக்க மில்லை. இளையபெருமாள் அறிக்கையில் தலித் குடும்பத்திற்கு '5 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும். அது தரிசு நிலம், புஞ்சை நிலம் என பிரித்தும் அவை கோயில் நிலங்களில் மற்றும் புறம்போக்கு நிலங்களிலிருந்தும் வழங்கப்பட வேண்டும்' எனக் குறிப்புள்ளது.

தலித்களின் மீதான கவனக் குவிப்பு என்றால் அது தீண்டாமை, சாதி ஒழிப்பு, சமூக இழிவு குறித்தும் கவன மிருக்க வேண்டும். போபால் பிரகடனத்தில் இது குறித்து இல்லை.

'பார்ப்பனியமும் முதலாளியமும்' நமது எதிரிகள் என பிரகடனப்படுத்திய அறிவர் அம்பேத்கர் அவர்களின் வழி காட்டலில் இந்த போபால் பிரகடனம் அமையவில்லை. அரசியலை இந்து மயமாக்கு. இந்து மதத்தை இராணுவ மயமாக்கு என்ற சூழலில், அறிவர் அம்பேத்கர், தலித் முன்னேற்றத்திற்கு வகுத்த திட்டங்கள் சிலவற்றை மனதில் கொண்டு போபால் பிரகடனத்தை விவாதிக்கலாம்.

1. மதமாற்றம்
2. தனி வாக்காளர் தொகுதி (Separate Electorate)
3. தனி வாழுமிடங்கள்
4. தனிச் சமூகமாய் கருதுதல்
5. கல்வி - வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு
6. பெயர் மாற்றம் (Harijan)
7. தீண்டாமை ஒழிப்புக்கு அரசியல மைப்புச் சட்டம்
8. தலித் நலம் கவனிக்க தனி சுதந்திரமான அமைப்பு

தமிழகச் சூழலில் 'போபால் பிரகடனம்' உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்படுகிறது.

தமிழக தலித் விடுதலை அரசியல் என்பது ஒரு நூறாண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்டது. 1890இல் திராவிட சங்கத்தை அயோத்திதாசர் நிறுவினார். பறையர்களின் முதல் அமைப்பு அதுவே. அதற்கு முன்

1819 - சென்னை மாகாண தாழ்த்தப் பட்டோர் குறித்தான அரசின் முதல் ஆய்வு.

1829 - ஒழுங்குமுறை சட்டம் பறையர்களும் வழக்கு மன்றம் செல்லலாம் என அனுமதியளிக்கப்படுகிறது.

1859 - மாவட்ட காவல் சட்டத் திருத்தம். தலையாரி, வெட்டி யான், காவல்காரன் போன் றோர்அரசுகாவலர்பட்டியலில் அங்கீகாரம்.

1881 - இலண்டன் மக்களவையில் விவாதம். புறம்போக்கு நிலங் களை பறையர்களுக்கு வழங்க வேண்டும்.

1919 - முதல் தீண்டாமை எதிர்ப்பு மாநாடு. உணவு விடுதி, முடிதிருத்தகம் போன்ற இடங்களில் தீண்டாதார் அனுமதி.



படிப்பகம்

www.padippakam.com

1920 - கோவில் நுழைவு அறப் போர்

1928 - தாழ்த்தப்பட்டோருக்குத் தனிப் பள்ளிகள்

1890 ஆம் ஆண்டு 'திராவிட சங்கத்தை' பண்டிதர் அயோத்திதாசர் நிறுவினார். இதன் முதல் மாநாடு 1891 ஆம் ஆண்டு டிசம்பர் 1 திகதி நீலகிரியில் அயோத்திதாசர் தலைமையில் நடை பெற்றது. அம் மாநாட்டின் தீர்மானங்கள்.

1. பொதுக் கிணறுகளில், குழாய் களில் குடிதண்ணீர் எடுப்பதற்கு எந்தவித தடைகள் இல்லாமல் ஒடுக்கப்பட்டோர் அனுமதிக் கப்பட வேண்டும்.
2. ஒடுக்கப்பட்டோரை 'பறையன்' என்று அழைத்தாலோ, ஏளனப் படுத்தினாலோ கடுமையாக தண்டிப்பதற்குரிய சட்டத்தை அரசு நிறைவேற்ற வேண்டும்.
3. ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம் கருதி குறைந்த கட்டணத்தில் அவர் களுக்கென தனியான பள்ளிகள் துவங்க வேண்டும்.
4. மெட்ரிகுலேசன் தேர்ச்சி பெற்ற மூன்று ஒடுக்கப்பட்ட மாணவர் களுக்கு பட்டப்படிப்பு உபகாரச் சம்பளம் வழங்க வேண்டும்.
5. மெட்ரிக்குலேசன் தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் அரசு வேலை தர வேண்டும்.
6. உயர் சாதியர் பணியாற்றும் அலுவல கங்களிலும், நீதிமன்றங்களிலும் நுழைவதற்கும், உட்காருவதற்கும் அனமதிக்க வேண்டும்.
7. நன்னடத்தை உள்ளவர்களை கிராம முன்சீப், மணியகாரராக நியமனம் செய்ய வேண்டும்.
8. புறம்போக்கு நிலங்களைப் பகிர்ந் தளிக்க வேண்டும்.

1891 ஆம் ஆண்டு தாத்தா இரட்டைமலை சீனிவாசன் தனது 32 வயதில் 'பறையர் மகாசன சபை' துவக்கினார். (அறிவர் அம்பேத்கர் பிறக்கிறார்). 1893 டிசம்பர் 23 திகதி சென்னை வெசிலியன் கல்லூரியில் பெரிய மாநாடு நடத்தினார். கல்விக்கான தடை, நிலம் பெறுவதற் கான தடை பற்றி 3412 பறையர்கள் கைநாட்டு கையொப்பமிட்டு, நீண்ட மனுவை பறையர் மகாசன சபை பிரிட்டன் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தது.

நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆன பின்னும் 1998 டிசம்பர் 6இல் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக முன்னுரிமை கோரிக்கை பேரணியின் கொள்கையாக

1. 5 செண்ட் மனை பட்டா
2. பஞ்சமி நில மீட்பு
3. 5 ஏக்கர் நிலம்
4. பொதுச் சொத்துகளில் குத்தகை ஒதுக்கீடு
5. வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் அமுல்படுத்த வேண்டும்

ஆகியவை முன் வைக்கப்பட்டன.

போபால் பிரகடனம் குறித்து குரல் கொடுக்கிறவர்கள் நமது வரலாற்றையும் திரும்பிப் பார்த்து ஓர் ஆய்வினை மேற் கொண்டு உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கப்பட்ட பிரகடனத்தை நம் திராவிட (இயக்கம்) கட்சிகள் அங்கீகரிக்குமா?

*அலங்கநல்லூர் பாரி. செழியன்*

•

## ஜெயந்தனின் மகாத்மா கட்டுரை பற்றிய ஒரு விமர்சனம்

அண்மையில் கவிதாசரண், ஏப்ரல்-மே, 2002 இதழில் நண்பர் ஜெயந்தன் எழுதிய 'மகாத்மா' கட்டுரை யையும், திருநெல்வேலியில் பிறந்து இப்போது அமெரிக்காவில் வசித்து வரும் டாக்டர் வேலு அண்ணாமலை அவர்கள் எழுதிய 'சார்ஜெண்ட் மேஜர் எம்.கே.காந்தி' என்ற நூலையும் படிக்க நேர்ந்தது. இந்நூல் 'தலித் இலக்கிய மன்றம், பெங்களூர்' என்ற அமைப்பு வெளியிட்டதாகும். ஜெயந்தன் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும். ஏனெனில் காந்தியார் பற்றிய சில உண்மையான தகவல்களை இந்நூலில் ஆதாரத்துடன் காணலாம்.

இப்போது ஜெயந்தனின் கட்டுரைக்கு வருவோம். மெட்ராஸ் என்ற பெயரை மாற்றி சென்னையாக்கி ஆண்டுகள் ஆகியும் இன்னமும் அவருக்கு MADRAS என்றே முகவரி யிட்டு கடிதங்கள் வருகின்றனவாம். ஜெயந்தன் வருத்தப்பட்டுக் கொள்கிறார்.

தஞ்சாவூர் டேன்ஜூர் ஆனது பற்றியும் தரங்கம்பாடி ட்ராங்குபார் ஆனது பற்றியும் எடுத்துக்கூறி இந்தச் சிதைப்புகளையெல்லாம் செய்தவர்கள் வெள்ளையர்களே என்று வெறுப்பு ஏற்றுகிறார்.

ஜெயந்தன் ஒன்றை மறந்து விட்டார். சமஸ்கிருத மொழியைப் பரப்ப முயன்ற வந்தெட்டி ஆரியப் பார்ப்பனர்கள் ஏற்கனவே தனித்தமிழில் இருந்த அநேக ஊர்ப்பெயர்களை மாயூரம், ரிஷிவந்தியம் என்றெல்லாம் மாற்றியதைப் பற்றி என்ன கூறுகிறார் என்று தெரிய வில்லை.

ஜெயந்தன் கூறுகிறார் - ஆங்கிலே யர்கள் அதிகார வெறிபிடித்து, தமிழ் நீச பாஷைதானே என்று புறக்கணித்தனர் என்று. ஆங்கிலேயர்கள் மற்ற மொழிகளை நீச பாஷை என்று நினைப்பதும் இல்லை; பேசுவதும் இல்லை. இந்த நீச பாஷை சமாச்சாரம் எல்லாம் பார்ப்பனர் களுக்குத்தான் கை வந்த கலை.

மேலும் கான்ஸ்டான்டின் நோபிள், பெஸ்கி என்ற பாதிரியாரும் (வீரமா முனிவர்), G.U. போப், கால்டுவெல் போன்ற மேதைகளும் தமிழைக் கற்று, தமிழுக்குச் சேவை செய்திருக்கிறார்கள் என்பதை மறக்க முடியுமா?

ஆங்கிலேயர்களுக்குத் தமிழ்ப் பெயர்களை மாற்றி ஆங்கிலேயப் பெயர் களை வைக்க வேண்டும் என்ற நோக்கமோ, திட்டமோ கிடையாது. உச்சரிப்புச் சிக்கலினால் சில ஊர்ப்பெயர்கள் மாற்றப்பட்டன. பிறகு பழையபடியே கொண்டு வரப்பட்டன.

விருதுநகருக்குப் பழைய பெயர் விருதுப்பட்டி. ரெயில்வே ஸ்டேஷன் கோடில் (VPT) (விருதுபட்டியின் தமிழ் சுருக்கம்) பிறகு விருதுநகர் மக்கள் கேட்டுக் கொண்டபடி ஸ்டேஷன் பெயரை 'விருதுநகர்' என்றே மாற்றி னார்கள். இதை சீர்தூக்கிப் பார்க்கையில் ஆங்கிலேயர் மீது கண்மூடித்தனமாக வெறுப்பைப் பார்ப்பனர்கள் ஏற்றி இருக்கிறார்கள்.

காந்தியைப் பற்றி ஜெயந்தன் கூறுகிறார், 'காந்தி நிச்சயமாக இருபதாம் நூற்றாண்டின் முதல் மனிதர்தான். அவர் ஆகிருதி ஐந்து கண்டங்களையும் தழுவியது' என்று, ஜெயந்தனின் தலைக்கு மேல் சுழன்று கொண்டிருக்கும் மின் விசிறியையும், மின்விளக்கு களையும், டெலிபோனையும், ரெயில் வண்டித் தொடரையும் சௌகரியமாக மறந்து விட்டார். இவைகள் காந்தி யாரால் வெறுக்கப்பட்ட சாதனங்கள். இவைகள் வேத காலத்து வர்ணாச்சிரம நாகரிகத்தை ஒழித்து விடும் என்று நம்பியிருக்கலாம்.

ஓ இந்தியனே! நீ என்ன ஜாதி? முதலில் உன் வர்ணாசிரமத்தைச் சொல்லிவிட்டு புண்ணிய பாரத பூமியில் உன் காலை எடுத்து வை.

மகாத்மா காந்திக்கு ஜே!

*சென்னை-42 பெர்னாட்ஷாதாசன்*

•



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# அப்துல் கலாமும் ஆர்.எஸ்.எஸ்.ஸும்

கவிதா சரண்

அப்துல் கலாம் என்னும் அறிவியல் வித்தகர் இந்தியக் குடியரசின் அடுத்த தலைவராகிறார். சின்னச் சின்ன விஷயங்களையும் fantastic ஆகக் கண்டு குதூகலிப்பவர். உன்னதச் சிறகுகள் முளைத்த கனவுப் பறவையாகவே இன்னமும் தன் மனவெளியில் பறந்து மகிழ்கிறவர். அவருடைய அறிவியல் கனவுகள் அமெரிக்காவின் நட்சத்திரப் போர்த்திட்டங்களையும் விஞ்சக்கூடிய வலிமைமிக்கதாய் இருக்கக்கூடும். ஆனால் உடுக்கக் கந்தையும் உறிஞ்சக் கூழுமில்லாத காந்தி தேசத்தில் அவை கனவுகளாகவே முடங்கி நம்மைக் காக்கட்டும். கலாமின் எளிமையோ அவரைவிடவும் வலிமை மிக்கது. தனது தேவைகள் தன் கைப்பெட்டியளவே என அவரை வழி நடத்துகிற எளிமை அது. அவரில் அவரது அறிவும், 'அவுல் பக்கீர் ஜைனுல் ஆபுதீன் அப்துல் கலாம்' என்னும் நீளப் பெயரும்தான் மிகுந்த ஓசையுள்ளவை. ஆயினும் அவரை அரங்கேற்றிய அரசியலானது தற்செயலாகவோ அல்லது முன்கூட்டித்திரளும் திட்டமிடலாகவோ விரிந்த பரிணாமங்களைக் கொண்டிருப்பதாகவும், அவரும் அந்தச் சூழலுக்குத் தகைந்து போகிறவராகவும் தோன்றுகிறது. அதுபற்றி நாம் கொஞ்சம் யோசிக்க உகந்த நேரம் இது.

அப்துல் கலாம் உலகறிந்த விஞ்ஞானி; உயர்வகை படிப்பாளி; கடும் உழைப்பாளி; ஈடிணையில்லாத நாட்டுப் பற்றாளர்; ஒரு படித்தான குவிமனங்கொண்டவர். இந்தியாவின் இளைய உள்ளங்களில் நம்பிக்கை விதைகளையும் உற்சாக நாற்றுகளையும் ஊன்றி வளர்க்கும் தீராத கனவுக்காரர். வயதுக்கும் வரம்புக்கும் உட்படாத வீச்சும் வீரியமும் கொண்டவர்.

இந்தியாவின் முதன்மைக் குடிமகனாய்ப் பதவி வகிக்க இவ்வளவு சிறப்புகளும் ஒருங்கிணைவது இப்போதாகத்தான் இருக்கும். ஆனால் வாழ்வியல் மதிப்பீடுகளை சராசரி அலகுகளால் நிர்ணயிக்கும் ஒரு சமூக மனிதனின் பார்வையில் இவையெல்லாம் ஆடம்பரத் தகுதிகள். அவனது கணிப்பில் பதவியோடு மனிதன் பொருந்திப் போவது என்னும் வெகு தட்டையான தகுதியொன்றே போதுமானதாயிருக்கும். அந்தப் பொருத்தப்பாட்டில் முட்டாள்கள்கூட முழுமை பெறுவதுண்டு; மேதாவிகள்கூட சறுக்கி விழுவதுண்டு.

வரலாற்றின் புதிய பக்கங்கள் கலாமுக்காகக் காத்திருக்கட்டும்.

**இன்று அரசியலில் எல்லாத் திட்டமிடல்களும் தற்செயல்கள் போலவே கைகூடிச் சூழ்வது பற்றி நாம் கொஞ்சம் கவலையோடு பரிசீலிக்க வேண்டியுள்ளது. இங்கிதம் என்னும் பெயரில் விடுபடும் விஷயங்களில் எப்படியெல்லாம் நஞ்சூறுகிறது என்று யோசிக்கும்போது திகைப்பாய் இருக்கிறது. அமர்த்திய அடுப்பின் வெதுவெதுப்பான சாம்பலில் சுகமாய்த் தூங்கும் பூனைகளை எடுத்து மடியில்கட்டிக் கொண்டாற்போல் காந்துகிறது.**

இந்தக் கட்டத்தில்தான் ஒரு தீர்வாகவோ அல்லது பிரச்சினையாகவோ அப்துல்கலாம் எதிர்ப்படுகிறார். அவரை ஒரு எளிய கேள்வியோடு எதிர் கொள்ளலாம் நாம். அதாவது இனி அவர் தன் ஆசிரியத்தனத்தை என்ன செய்யப் போகிறார்? கேள்வி மிகவும் வெகுளித்தனமாகவோ அல்லது விடலைத்தனமாகவோ ஒலிக்கக்கூடும். ஆனால் அவருடையதை வெறும் ஆசிரியத்தனமாக எளிமைப்படுத்துவதிலிருந்து அழுத்தமான ஆச்சாரியத்தனமாக அர்த்தப்படுத்தினால் அதுவே அவருடைய ஆள்மைப் பண்பாகிவிடும். அப்போது நமக்கது கனக்கும் பொருளாகிவிடும். தகவல் பிழைகளையோ, தவறான புரிதல்களையோ மனிதர்கள் திருத்திக் கொள்வதுண்டு. ஆனால் மனித ஆள்மை என்பது சுடுமண் போல; திருத்தத்துக்கோ, மறுசீரமைப்புக்கோ இலேசில் மசிவதில்லை.

சாலையோரத்து மோடி வித்தைக்காரன் தன் பார்வையாளர்களிடம், ''ஜோரா கை தட்டுங்க,'' என்றால் அப்படியே தட்டுவார்கள். சோதிடக்காரன் தன் வாடிக்கையாளர்களைப் பார்த்து ''சொன்னது உறைச்சுதா?'' என்றால் தட்சிணை வைத்து ''இன்னொரு தடவை சொல்லுங்க'' என்று கேட்டுக் கொள்வார்கள். அதெல்லாம் ஒரு வசியம் போல. அப்துல் கலாமிடமும் அப்படியொரு வசியம் உண்டு. அவரது உரையாடலின் ஒவ்வொரு சென்டிமீட்டரிலும், ''சொல்றது விளங்குதா?'' என்றோ, ஒவ்வொரு மீட்டரிலும், ''எங்கே திருப்பிச் சொல்லுங்கள், தனி நபரைவிடத் தேசம் பெரியது,'' என்றோ உருவேற்றிக் கொண்டிருந்தால், பழகிப்போன ஒரு கட்டத்தில் ஊடக ரசனைகள் அவற்றை நையாண்டி பண்ணக்கூடும் என்றாலும், நையாண்டி ஒரு விடலைத்தனம்தானே தவிர, விஷயம் அதற்கு மேலாகவும் ஊடுருவக் கூடியது. கலாமின் ஆச்சாரியத்தனத்தில் தங்களுக்கான ஒற்றைத்துவத்தைக் கண்டடைந்த அங்கீகாரமாகவும்தான் ஜெய்கோபால் கரோடியா கல்விக்குழுமங்கள், ''ஓ, பாரத புத்ர, தேசம் உனக்கு சலாம் வைக்கிறது,'' என்று, ஸ்வஸ்திக் விளிம்பு கட்டிய ஆங்கில விளம்பரங்களைத் தமிழ் செய்தித்தாள்களில் வெளியிட்டு மகிழ்கின்றன.

ஒவ்வொரு முழக்கத்துக்கும் ஒரு காலமும் தேவையும் அர்த்தமும் நோக்கமும் இருந்து வருகின்றன. தொழிலாளர்கள் தெருவுக்கு வந்து 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று முழங்கினால், அவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கோருகிறார்கள் என்று பொருள். (அதுவும் உலக மயமாக்கலுக்கு முற்பட்ட வரலாறாக ஒடுங்கிப் போனது ஒரு சோகம்). பேசுகிற இடங்களிலெல்லாம் ''தனி நபரைவிடத் தேசம் பெரியது,'' என்று கூட்டுமுழக்கம் எழுப்புவதென்பது போர்க்காலச் சூழலுக்குப் பொருத்தமானதாயிருக்கலாம். அப்போதுதான் மக்களை அணி திரட்டுவதும், நெருக்கடிகளை எதிர்கொள்ள வைப்பதும், தேசப் பாதுகாப்பை முன்நிறுத்தித் தனி நபர்களை தங்கள் இனம், மொழி, மதம் போன்ற வேற்றுமைகளுக்கப்பால் ஒற்றைத் தேசமாக வார்த்தெடுப்பதும் தேவையாகின்றன. இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அப்படித்தான் மக்கள் தன்னெழுச்சி கொள்கிறார்கள். அந்த ஒருமையுணர்வு என்றேனும்



படிப்பகம்

www.padippakam.com

வற்றிவிடக்கூடும் எனில் அது அரசியல்வாதிகளும் ஆளும் வர்க்கமும் போர்ச்சூழலிலும்கூட மக்களைக் கொள்ளை யடிக்கத் துணியும் போதுதான். கார்கில்போரில் அப்படியொரு அவமானம் தெகல்கா ஊழல், சவப்பெட்டி ஊழல் என்னும் பெயர்களில் வெளிப்பட்டது.

இன்றைய சூழலில் குஜராத் படுகொலையை மூடிமறைக்கும் கவசமாகத்தான் போர்க்கூவல் ஒலிபெருக்கப்பட்டது என்பதை உலக நாடுகளைப் போலவே சமநோக்குள்ள இந்தியக் குடி மக்களும் நன்கறிவார்கள். குஜராத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கெதிரான இந்தியப் போர் என்பது இஸ்லாத்துக் கெதிரான இந்துத்துவப் போராகிவிடும் இன்னொரு அபாயமும் உணரப்பட்டிருக்கிறது. வெறிக் கூச்சல்களினூடே இந்திய அணுகுண்டு இந்து வல்லாண்மையின் வெற்றிச் சின்னமாகச் சிலிர்ப்பூட்டிக்கொள்ளும் இன்னுமொரு சின்னத் தனமும் ஆசனவாய் ரத்தக் கசிவுபோல நாற்றப்படுகிறது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் அப்துல்காலாமின் ஆசிரியத்தனம் குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பாளராக அவரைத் தெரிவு செய்வதற்கு எவ்வகையில் நியாயம் செய்திருக்கிறது என்று யோசிக்க வைக்கிறது. கலாமின் ஆசிரியத்தனம் என்பதாக நாம் அடையாளப்படுத்துவ தெல்லாம் நம் கருத்துகளைக் கோர்ப்பதற்கான சிறு ஊசித்துவாரம் போலத்தான் - ஏதோ விக்கிரமாதித்தன் கதையில் வருமே, ஒரு மயிரிழையை வைத்துத் கொண்டு அதற்குச் சொந்தகாரியான அரசிளங்குமரியின் முழு உருவத்தையும் படமாகத் தீட்டி அவளைக்கண்டுபிடித்து விடுவதாக - அதுபோன்றதொரு நுண்ணிய மயிரிழைத் தடயம்தான்.

அவரைப் பகுப்பாய்வு செய்யும் இப்படியொரு பார்வையேகூட ஆத்திரமூட்டக் கூடிய, ஆதாரமற்ற, விஷமத்தனமான, அதீதக் கற்பனையான, அற்பத்தனமான உள்நோக்கம் கொண்ட முயற்சி என்று யாரேனும் உரக்கக் கத்தலாம். கத்துகிறவர்கள் உண்மையறிந்தவர்களாக இருந்தால் நாம் அற்பப்படுவதையே கூட கௌரவமாகக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் ஒட்டுமொத்த இந்திய அறியாமையின் பேசத் தெரிந்த பிரதிநிதிகள் மட்டுமல்ல, தங்கள் அறியாமைக்குக் கலாமின் அறிவியலாற்றலைக் கவசமாக்கிப் பெருமைப்பட்டுக் கொள்கிற பிள்ளைப் பூச்சிகளும்கூட.

இதனை இரண்டு வழிகளில் உறுதிப்படுத்தலாம். முதலாவதாக, நமது விஞ்ஞானி நச்சுக் கழிவாகிப் போன சமூகம் தன்னைப் பாதித்ததற்கான அளவீடுகளற்றவராய் அதன் நடுவே நின்றுகொண்டு சுகந்தத்தை சுவாசிக்க உற்சாகம் காட்டுகிறவராய் இருக்கிறார். கல்வியும் மருத்து வமும் வணிகப் பொருள்களாகிவிட்ட ஒரு தேசத்தில், வளரும் நாடு என்று பெயர் பண்ணிக் கொண்டு சோறு போடவும் வேலை கொடுக்கவும் வக்கற்றுப்போன ஒரு அரசில், பொது வாழ்வும் அரசு எந்திரங்களும் குப்பையும் குப்பைமேடுகளுமாகி விட்ட ஒரு காலகட்டத்தில், வழிகாட்டவும் உதாரணமா யிருக்கவும் அரசியல் தலைமையற்றுப்போன மக்கள் திரளில், அரசும் அதிகார வர்க்கமும் தங்கள் அராஜகங்களையும் அழிச்சாட்டியங்களையும் மூடி மறைத்து மக்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்கிற ஒரு புழுக்கச் சூழலில், கலாம் போன்றவர்கள் எழுப்பும் 'தனி நபரைவிடத் தேசம் பெரியது', 'வலிமையே வலிமையே மதிக்கும்' என்பன போன்ற வன்முழக்கங்கள் என்னதான் அரசியலற்றதாகவும், இளைய தலைமுறைக்கான ஊட்டச் சத்துகளாகவும், உன்னதக் கற்பிதங்களின் நன்னெறிச் சாரமாகவும் அவதானிக்கப் பட்டாலும், அவை தவறான முன்னறிவிப்புகளையும் மறைவான திட்டமிடல்களை யும் உற்பத்தி செய்யக் கூடிய தாய் இருக்கும். இதற்கு மாறாக போர்த் தளவாடங்களைப் பெருக்குவதற்காக ஆய்ந் தறியப்பட்ட அறிவியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, இதய நோயாளிகள், ஊன முற்றோர், செவித்திறன் குறை யுடையோர், பேச்சிழந்தோர் போன்ற துயரப் பிறவிகளுக்காக அவர் உருவாக்கத் திட்டமிட்டி ருந்த நலம் தரும் கருவிகளைப் படைத்தளிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தால் மானுடம் மீட்க வந்த மாந்த நேயக்காரராக அவர் உயர்ந் திருக்கலாம்.



இரண்டாவதாக, கலாம் இது வரைதன்னை ஒரு விஞ்ஞானியாக மட்டுமே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். நுண்துறை வல்லுநர்கள் தங்கள் திறன்களைத் துல்லியப்படுத்தும் ஓர்மைப் பாய்ச்சலில் மனிதம் பேணுவதற்கான சமச்சீர் வளர்ச்சியைக் கண்டடைவதில் கோட்டை விடக்கூடியவர்கள். தங்கள் ஆய்வுப் புலமையையும் புத்தாக்கப்பெருமைகளையும் உலகறிய வெளிச்சப்படுத்துவதிலேயே வெறியாய் இயங்கு பவர்கள்; அவற்றை நியாயப்படுத்துவதிலேயே குறியாய் இருப்பவர்கள். மானுடத்தின் மீதான அவற்றின் நன்மை தீமை களுக்கு அவர்கள் பொறுப்பேற்பதில்லை. ஆகவே அவர்களை நன்னெறிக் கவலைகள் பற்றுவதில்லை. பற்றுவதாகப் பாவிப் பதெல்லாம் அந்தந்தக் கணங்களைக் கடந்து செல்வதற்கான பாசாங்குகளன்றி வேறில்லை. அணுகுண்டு செய்வதில் அமெரிக்கா முந்திக்கொள்ள வேண்டும் என்று ஐசனோவரை வற்புறுத்தி வெற்றிகண்ட ஐன்ஸ்டீனுக்கும் அதுதான் அறம். ''பாகிஸ்தான் அணு ஆயுதம் வைத்திருக்கும்போது இந்தியா கையைக் கட்டிக்கொண்டு தவம் செய்ய முடியாது'' என்னும் உணர்ச்சி முழக்கத்தோடு போக்ரானில் அணுவெடி சோதனை நடத்தத் தூண்டிய கலாமுக்கும் அதுதான் அறம். ஆனால் பாகிஸ்தான் அணுகுண்டு வைத்திருக்கும் உண்மையை இந்தியா தன் குண்டை முதலில் வெடித்தே கண்டுகொண்டது என்பதை கலாம் எவ்வளவு வசதியாக மறைத்துவிட்டார்! அறிவியல் பாய்ச்சல் பொய்யைக் கூடப் போர் அறமாக்கும் போலும்.

***இன்று இந்தியாவுக்கு வேண்டிய முழக் கங்கள் 'தனி நபர் இல்லையேல் தேசம் இல்லை', 'ஒடுக்கப்பட்டோர் எழுச்சியே தேசத்தின் மறுமலச்சி', பன்மைத்துவமே இந்திய வல்லமை' போன்றவையே.***

இவற்றைக் கலாமைப்போலக் கூவிக்கூவிப் போதிக்கா விட்டாலும், தன்னை அவ்வுணர்வுகளால் நிறைத்துக் கொண்டு செயல்பட்ட குடியரசுத் தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் கே. ஆர். நாராயணன் மட்டுமே என்று உறுதியாகச் சொல்லலாம். குடியரசுத் தலைவர் பதவியை ஓய்வுகால உல்லாசப் பயணத்திற்காகவும், அரசுச் செலவில் ஆடம்பர அமெரிக்க மருத்துவம் பெறுவதற்காகவும், சொந்தப் பரிவாரங்களோடு கோயில் குளங்களுக்குச் சென்று பூரண



படிப்பகம்

www.padippakam.com

கும்ப மரியாதை பெற்றுக் கொள்வதற்காகவுமே பெரும்பான்மையினர் பயன்படுத்தி வந்துள்ளனர். இவற்றை அனுபவிப்பதற்குத்தான் அந்த 'ரப்பர் ஸ்டாம்ப்' பதவி என்று நம்பி வந்துள்ளனர். கே.ஆர்.நாராயணன் இந்தப் பட்டியலுக்கு அப்பாற்பட்டவராய் இருந்தவர். சுதந்திர இந்தியாவில் பழுதியாடி மட்கிக் கொண்டிருக்கும் அரசியல் சட்ட விதிகளை உயிர்ப்பித்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தனக்குண்டு என்பதைத் தன் வரம்பிடப்பட்ட அதிகார வட்டத்திற்குள் நின்றே மெய்ப்பித்துக் காட்ட முயன்றவர்.

அரசியல் சட்டத்தில் நூறுவகை குறைகள் உண்டு. அரசியல் சட்ட வரைவுக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிய அம்பேத்கரே ''அதைக் கொளுத்தும் முதல் ஆளாக நான் இருப்பேன்'' என்று சொன்னதுண்டு. அதற்குக் காரணம் தாழ்நிலையில் வைக்கப்பட்டிருந்த மக்களுக்குத் தன்னால் முழுமையாக நியாயம்பெற்றுத் தர முடியவில்லையே என்னும் ஆற்றாமைதான். ஆனால் இந்த 52 ஆண்டுகளில் அரசியல் சட்டம் வழங்கும் குறைந்தபட்ச உரிமைகளைக்கூட அவர்கள் அடைவதற்கு வகை செய்யாமல், ஆட்சி-அதிகாரம்-ஆதிக்கம் என்னும் முக்கூட்டுச் சதியாளர்கள் அரசியல் சட்டத்தாள்களைக் கிழித்துத் தங்கள் மலக்குண்டிகளைத் துடைத்துக் கொண்டிருக்கிறார்களே. அந்த அவமதிப்பைத் தடுத்து நிறுத்தவும், தன்னாலியன்ற அளவில் அதனை அர்த்தமுள்ள ஆவணமாக்கவும் முயன்றவர் கே.ஆர்.நாராயணன்.

அரசியல் சட்ட மறு ஆய்வுக்குழு, ஊறு விளைவிக்கும் உள்நோக்கத்துடன் அமைக்கப்பட்டபோது, உள்ளதும் போய்விடக் கூடாதே என்னும் பதற்றத்தோடு மைய அரசின் நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கினார். ஆட்சியாளர்கள் விருப்பப்படி அந்தக் குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட்ட - வெகுமக்கள் பங்களிப்பை முடமாக்கிவிட முயன்ற-தேர்தல் சீர்திருத்தம் அவரது சமரசமற்ற எதிர்நிலைப்பாட்டால் கைவிடப்பட்டது. புறக்கணிக்க முடியாத அவரது இருப்பின் காரணமாகவே சோனியா காந்தி பிரதமராவதைத் தடுப்பதற்கெனக் கொண்டுவரப்பட இருந்த பரிந்துரை பரிசீலனைக்கு வராமலே கிடப்பில் போடப்பட்டது. 'அடிப்படையில் நேரு குடும்பத்தின்மேல் நேசமுள்ள காங்கிரஸ் மனோபாவமுள்ள அவர் சோனியா பிரதமராவதற்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார்' என்று குறைசொல்லப்பட்டாலும், அதையும் அவர் விதிப்படிதான் செய்ய முயன்றார். அனைத்துக்கும் மேலாக சமூக நீதிபற்றிக் கவலைப்பட்ட ஒரே குடியரசுத் தலைவராக இவரை மட்டுமே குறிப்பட முடிகிறது (பிரதமர்களில் வி.பி.சிங் இந்த ரகம். அதனால்தான் ''வி.பி.சிங் அரசியல் கேன்சர் மாதிரி. கொஞ்சம் இருந்தால்கூட ஆபத்துதான்'' என்கிறார் துக்ளக் சோ. கே.ஆர்.நாராயணனும் இப்படித்தான் நினைக்கப்படுவார் அல்லது புதைக்கப்படுவார் என்பதற்கு இது ஒரு முன்னோடி வாசகம்). அரசின் செயலகத்துறை, நீதித்துறை, காவல்துறை, அயலகத்துறை அனைத்திலும் சமூக நீதியை நிலை நாட்டுவதற்கான ஒரு நடைமுறை அம்சமாக இட ஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் அவர்.வலி அறிந்தவனுக்கும் வதைபடுகிறவனுக்கும் தானே வாழ்வின் நியாயம் தெரியும். அவருக்குத் தெரிந்தது. அந்த நியாயம் உணரப்பட்டிருந்தால் இதுவரை குறைந்தபட்சம் இரண்டு குடியரசுத் தலைவர்களாவது ஒடுக்கப்பட்ட இனத்திலிருந்து வந்திருக்க வேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியார் துறைக்கு விற்று, இட ஒதுக்கீட்டுக் கொள்கையையே ஓசையின்றித் துடைத்துவிட முயலும் ஒரு காலகட்டத்தில், அரசின் சகல விதமான கட்டுமானங்களையும், கடன் உதவிகளையும், பாதுகாப்பையும், சலுகைகளையும் பயன்படுத்திக் கொள்ளும் தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு சட்டமாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் கே.ஆர். நாராயணன்.

இந்தியாவைப் புத்துயிர்ப்பிக்க முயன்ற இச்சிறப்புகளுக்காகவே அவர் இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைவர் பதவியில் தொடர வகை செய்திருக்க வேண்டும். விதிப்படி அது சாத்தியமில்லை என்றாலும் விதி திருத்தப்பட்டிருக்க வேண்டும். மரபு தடையாயிருந்தாலும் புதுமரபு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். உண்மையில் ஒருவர் இருமுறை பதவியில் தொடரலாம் என்பதற்கு முதல் குடியரசுத் தலைவரே மரபாகிறார். இருமுறை தொடர அரசியல் சட்டமும் தடையாயில்லை. ஆனாலும் ராஷ்ட்ரீய சுயம் சேவக்கான வாஜ்பேயி, ராஜேந்திர பிரசாத்துக்குப் பின் தற்செயலாய் உருவாகியுள்ள மரபைக் காக்கப் போவதாகச் சொல்லி கே. ஆர். நாராயணனைக் களத்திலிருந்து அகற்றிவிட்டார். இன்றைய ஆட்சியின் தீய நோக்கங்களுக்கு அச்சுறுத்தலாயிருந்தார் என்பது மட்டுமே கவனங்கொள்ளப்பட்டு, மக்கள் நலன்களுக்கு அரணாய்ச் செயல்பட்டார் என்பது மறைக்கப்பட்டுவிட்டது. அதாவது,

***அரசியல் சட்டத்தை அர்த்தத்தோடு பின்பற்றியதற்காகவும், சூழலோடு அதை மறுவாசிப்பு செய்ததற்காகவுமே அவர் நிராகரிக்கப்பட்டார். அப்துல் கலாம் அந்த இடத்துக்குக் கொணரப்பட்டார். அதாவது, கலாம் அப்படியெல்லாம் அர்த்தப்படுத்தவோ மறுவாசிப்பு செய்யவோ மாட்டார் அல்லது கூடாது என்பது அவர்கள் எதிர்பார்ப்பு.***

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராக முகவரியற்ற ஒருவரை அமர்த்தி, அமெரிக்கா தன் விருப்பத்திற்கேற்ப அவரை வடிவமைத்துக் கொள்வதுபோல் இந்தியக் குடியரசுத் தலைவரும் ஆளுங்கட்சியால் வடிவமைக்கப்படுகிறார். அப்துல் கலாம் விஷயத்திலும் அதுதான் உண்மை. இல்லையென்றால், தன்னைச் சேர்ந்த 25 கோடி மக்களுக்குத் தன் பதவிக்காலத்திலாவது அரசியல் சட்டம் வழங்கும் உரிமைகள் கிடைக்க வேண்டாமா என்று கரிசனப்பட்ட ஒருவர் - 52 ஆண்டுகால இந்தியக் குடியரசில் தலித்துகள் இருமுறையாவது, அதாவது 10 ஆண்டுகளாவது பதவி வகிக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் எளிய கணக்குப்படி - எல்லாருடைய ஆதரவோடும் இரண்டாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க மாட்டாரா?

வேண்டுமானால் அப்துல்கலாம் அவ்வளவு எளிய 'ரப்பர் ஸ்டாம்ப்'பாக இருந்துவிட மாட்டார் என்று அடித்துச் சொல்லலாம். ரப்பர் ஸ்டாம்ப்புகள் குறித்த இடத்தில் குத்தப்படும் ஜடத்துவமானவை. ஆனால் 'இந்து' தேச அனுகுண்டை வெடித்தால்தான் ஆயிற்று என்று முன்னோடித் திட்டம் தந்த மகத்தான விஞ்ஞானி கலாம் அவர்கள் இந்து தேசியவாதிகளே எழுச்சி கொள்ளும் படியாய், ரப்பர் ஸ்டாம்ப் குத்தும் இடங்களையே குறித்துக் கொடுப்பவராகப் புகழ் பெறலாம். குஜராத்தில் நரேந்திர மோடி தன் கௌரவ ரத யாத்திரையை ஒத்தி வைத்திருப்பதன் நோக்கம், கூடிய விரைவில் கலாம் தலைமையிலேயே அதை நடத்திக்கொள்ளலாம் என்பதாக இருக்கும். கலாமோடு ஒப்பிடும்போது இந்த அரசியல்வாதிகள் தங்களுக்குப் பிடித்த மாதிரி அவருக்குச்



படிப்பகம்

www.padippakam.com

சிகையலங்காரம் செய்துவிடத்தான் தகுந்தவர்கள் என்றாலும், அவர்களது எதிர்பார்ப்பாகத்தான் கலாம் தன்னைக் கடைந்து கொண்டிருக்கிறார்.

தமிழ்த் தேசியம் போற்றும் இதழாளர் ஒருவர் அப்துல் கலாம் என்னும் அசலான தமிழர் குடியரசுத் தலைவராவது பற்றித் தன் பூரிப்பை வெளிப்படுத்தியிருந்தார். தமிழ் அடையாளம் தேடும் ஒவ்வொருவனுக்கும் அந்தப்பூரிப்பு ஊறிக்கொண்டு தான் இருக்கும். அந்த இதழாளர் அத்தோடு நின்றுவிடவில்லை. கே. ஆர். நாராயணன் மீண்டும் வரமுடியாமல்போனதற்காகத் தன் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தார். அதற்கு அவர் சொன்ன காரணம், நாராயணன் எப்போதும் தன்னைக் கேரளக் காரராகவே காட்டிக் கொள்வதில் குறியாய் இருப்பாராம். டில்லியில் மிகுந்து காணும் இந்த உணர்வுதான் முல்லைப் பெரியார் அணைமட்டம் உயராமைக்குக் காரணம் என்றும் குறிப் பிட்டிருந்தார். இந்த அசிங்கத்துக்குப் பெயர்தான் தமிழ்த் தேசியம். இந்துத் தேசியத்துக்குச் சற்றும் இளைப்பில்லாத தேசியம் அது. காரியம் ஆகாத போது, கொடுத்த கையூட்டைத் திருப்பிக்கேட்ட 'குற்றத்துக்காக'-இரண்டு தலித்துகளை ஒருவருக் கொருவர் ஊட்டிக்கொண்டு பீதின்ன வைத்த தமிழ்ச் சாதி யானை எண்ணி அதிர்ச்சியடையாத, அவமானங் கொள்ளாத, அவனவனும் அந்தந்தப் படி நிலையிலேயே இருந்துகொண்டு 'தமிழால் ஒன்றுபடுவோம்' என்று முழங்கும் தப்பிலித் தனமான தமிழ்த் தேசியம் அது. எல்லாத் தேசியங்களின் தலைக் குள்ளும் முட்டாள்தனமே கெட்டிப்பட்டிருக்கும் என்பதற்கு இன்னொரு சான்றாதாரம் போல. தமிழ்த் தேசியப் போர்வையில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சாதிமேலாண்மை யானது நாராயணன் முன்னெடுக்க முயன்ற சமத்துவச் செயல்பாடுகளைக் கண்டு கொள்ளாமல் விடுவதில் பெருமை கொள்கிறது. இதன்மூலம் அந்தத் தமிழ்த்தேசியவாதி என்ன சொல்ல வருகிறார்? ''ஆகவே கே.ஆர். நாராயணனைப் போல் கலாம் தன்னைத் தமிழனாகக் காட்டிக் கொள்ளக் கூடாது; முல்லைப் பெரியார் அணை உயர்த்தப்படுவதற்கோ, உடன் படிக்கைப்படி காவிரி நீரைத் தமிழகம் பெறுவதற்கோ, சேது சமுத்திரத் திட்ட நிறைவேற்றத்துக்கோ, குறைந்தபட்சம் இலட்சத் தீவில் தமிழக மீனவர்கள் தங்கள் வலைகளை உலர்த்திக் கொள்ளும் உரிமையைப் பெறுவதற்கோகூட கலாம் எந்தவிதத் திலும் உதவிடக் கூடாது,'' என்பதாகவா? அல்ல, அல்ல. ஆனால்துரதிர்ஷ்டவசமாக அது அப்படித்தான் ஆகிவிடப்போகிறது.

சென்னையைச் சேர்ந்த தனியார் தொலைக்காட்சியினர் அப்துல் கலாமிடம் அவர் பிறந்த இராமேஸ்வரம் பற்றித் தமிழில் நாலு வார்த்தை பேசச் சொல்லிக்கேட்டபோது, அவர் அருகில் இருந்த, பிரதமரின் கைத்தடியும், இந்தியப் பெரு வணிகக் குழுமங்களோடு கொண்டுள்ள வரம்பு மீறிய தொடர்பு களில் கொழிக்கிறவருமான பிரமோத் மகாஜன், ''அவர் தேசிய வேட்பாளர். தமிழில் பேச முடியாது,'' என்று தடுத்து விட்டார். இதற்குக் கலாமின் எதிர்வினை தமிழில் பேசுவதைத் தவிர்த்து விட்டதுதான். இந்த மகாஜன் ஏற்கனவே கலாமைப் பார்த்து, ''இப்போது நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். குடியரசுத் தலைவரான பிறகு நீங்கள் சொல்வதை நான் கேட்கிறேன்,'' என்று சொன்னவர்தான். சிரித்துக்கொண்டே சொன்னால் அது நகைச் சுவை; அதிகாரத்துடன் கூறினால்தான் அது பிரச்சினை என்று இதில் ஏதேனும் இராஜதந்திரம் இருக்கிறதா என்ன? மேலும் கூட, சுரணையுள்ளவர்களுக்கு உறைக்கும் படியாக, 'கலாமின் சைவ உணவுப்பழக்கம், மாணவர் விடுதியில் புலால் உணவுக்கான கூடுதல் கட்டணம் செலுத்த முடியாத வறுமையால் பெறப்பட்டதுதான்' என வக்கணையாக விளக்கம் தந்தவரும் இதே மகாஜன்தான். இவைபோன்ற மிகையாடல்கள் கலாமையும் அவரது புற ஒழுகலாறுகளையும் அதிகாரப்பிறவிகள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதற் கோர் உரைகல்.

> ***'நீங்கள் எவ்வளவு பெரிய மேதையாயிருப் பினும் எங்கள் அக மதிப்பீட்டில் வெறும் இராமேஸ்வரக் கடல் மணலில் காய்ந்த கருவாடுதான்' என்று இனம் பிரித்துக் காட்டும் இங்கிதமற்ற இங்கிதம் அது.***

இவற்றினூடாக, அப்துல் கலாமிடம் தொழிற்படும் சில அனுசரிப்புப்படிமங்களும் இன்றைய அவருக்கான உருவாக்க மாகின்றன.

அப்துல் கலாம் அரசியல் அறியாதவர் என்பது இடதுசாரிகளின் கண்டுபிடிப்பு. பாராளுமன்ற ஜனநாயத்தின் பட்டியாடுகள் ஆன பிறகு கம்யூனிச அரசியலைக் கந்தர கூளமாக்கிக் கொண்டி ருப்பவர்களின் அபத்த மதிப்பீடாகத்தான் இதைக் கருத வேண்டும்.

> ***இந்தியாவில் ஒரு மனிதன் பொருட், படுத்தக் கூடியவனாய்த் தலையெடுப் பதற்கு வில்லங்கமில்லாத அரசியல் ஒன்றுண்டு. அது பார்ப்பனர்களையும் பார்ப்பன சம்பத்துகளையும் போற்றித் துதிக்கும் அரசியல்தான். அப்துல் கலாமிடம் இந்த அரசியல் எவ்விதப் பிரயாசையு மின்றி வெகு இயல்பாய்ப் பொருந்தி வந்திருக்கிறது.***

அந்தப் பொருத்தப்பாடு அதற்குரிய பலனை அளித் திருக்கிறது. அதாவது, இந்து தேசத்தில் ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் தகுந்த உதாரணமாக ஆர்.எஸ்.எஸ். இவரை அடையாளம் கண்டிருக்கிறது.

கர்நாடக சங்கீதத்திலும், தியாகையர் கிருதிகளிலும், ருத்ர வீணை போன்ற இசைக்கருவிகளிலும் இவருக்கிருக்கும் அபார ஈர்ப்பும் புலமையும் அந்த அரசியலை ஆராதனைக் குரியதாக்குவதோடு, இசை யரசி எம்.எஸ். சுப்புலட்சுமியின் காலைத் தொட்டு வணங்கவும் செய்கிறது. இதன் இன்னொரு வியாபகமாக காஞ்சி சங்கராச் சாரியின்காலடியில் தாழ்ந்தமர்ந்து ஆசி பெறுவதையும் அவருக்குச் சாத்தியமாக்கியிருக்கிறது. அதன் உடன்போக்கு வினையாக, 'மனரீதியிலான நெருக்கத் தைப்' பெற்ற சங்கராச்சாரி, ''அவர் முதலில் விஞ்ஞானி. பிறகு இந்தியர். இறுதியாய்த்தான் முஸ்லிம். அவர் குடியரசுத் தலைவர் ஆவதால் மிகப்பெரிய அரசியல் விழிப்பு ஏற்படும்'' என்று அவரைப் பாராட்ட வைத் திருக்கிறது. அவர் சொல்லும் அரசியல் விழிப்பு என்பது கலாமைப்பற்றி ஆர்.எஸ்.எஸ்.





படிப்பகம்

www.padippakam.com

ஸின் கணிப்பை முன்னெடுப்பதாகவே இருக்கக்கூடும். கலாமும் ''என்னை எப்போதும் இந்தியனாகத்தான் கருதுகிறேன்'' என்னும் ஒப்புதல் வாக்குமூலமாகவே நாமம் தரிக்கிறார்.

கூடவே நாம் இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். வடநாட்டில் போல் அல்லாமல் தென்னாட்டில் பொதுவாக முஸ்லிம் அடையாளம் என்பது ஒரு சடங்கு சாத்திரத்துக்குத்தான். திடீரென்று பெருகிவரும் ஆர்.எஸ். எஸ்.ஸின் கோர வளர்ச்சிதான் அடையாளச்சிக்கலை இங்கு உருவாக்கிவிட்டது. அப்படியும்கூட அரசியல் சுழலில் சிக்காத கிராமத்துப் பாமர மக்களுக்கு இஸ்லாம் இன்னும் ஒரு சகோதரத்தனம்தான். கலாம் அப்படியொரு குடியிலிருந்தும் நிலத்திலிருந்தும் வந்தவர் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் தன் இலக்கை நோக்கிப் பிறரோடு அவர் பொருந்தி நடந்ததை விகாரமின்றிப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் காலமும் சூழலும் அவர் மேல் ஏன் அடையாளம் பதிக்கவில்லை என்னும் கேள்விக்கு, அவர் விஞ்ஞானியான பிறகு சமூக மனிதனாயிருக்க நேரும் சந்தர்ப்பங்கள் அவர்மேல் தாக்கம் பெறவில்லை என்பதாகத்தான் நாம் பதிவு செய்ய வேண்டும்.

வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்டபின், செய்தியாளர்களைச் சந்தித்தபோது கீதையிலிருந்து மேற்கொள் காட்டுவதாக அவர் சொன்ன வாசகம்:

*எது நடந்ததோ அது நல்லதாகவே நடந்தது*

*எது நடக்கிறதோ அது நல்லதாகவே நடக்கிறது*

*எது நடக்குமோ அது நல்லதாகவே நடக்கும்.*

இதில் அவரிடமுள்ள தன்னுணர்வும் சமூகம் பற்றிய பிரக்ஞையின்மையுமே வெளிப்படுகின்றன. இதை உண்மையில் குஜராத் படுகொலை நாயகன் நரேந்திரமோடி சொல்லியிருக்க வேண்டும். ஆனால் கலாம் சொல்கிறார். அதைவிடவும் முக்கியமாக, தனக்கான அந்த மாபெரும் தருணத்தில் தன் வைராக்கியத்தை வளர்த்த திருக்குறளிலிருந்தோ, தான் சார்ந்த மத நூலிலிருந்தோ அல்லாமல் கீதை என்னும் கொலை நூலில் இருந்தே மேற்கொள் பிறக்கிறது என்பது அவரிடம் பொருந்தியுள்ள அரசியல் நிலைப்பாட்டுக்குச் சான்றாகிறது. எனினும் 'தனி நபரைவிடத் தேசம் பெரியது' என்று சொல்லிக் கொண்டிருக்கும் அவரிடம், தேசம் இரத்த விளாறாகிக் கிடக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அவருக்கான தனி நபர் தோத்திரமாகவே கீதை பிறக்கிறது என்பது கலாமுக்குள் உறையவைக்கப்பட்டிருக்கும் இன்னொரு உண்மை.

அவர் தன் சக விஞ்ஞானிகளிடையே 'கலாம் ஐயர்' என்று அறியப்பட்டவர். அதற்குக் காரணம் அவர் பார்ப்பனர்களால் சூழப்பட்டிருந்ததும் பார்ப்பனர்களின் உணவுப்பழக்கத்தைத் தனதாக்கிக் கொண்டதுமாக இருக்கலாம். கூடவே அவர் தன்னை முஸ்லிமாக முற்படுத்தாமையும், நமாஸ் செய்தல், நோன்பு வைத்தல் போன்றவற்றைத் தவிர்த்தமையும், குறைந்தபட்சம் தன் உற்றார் உறவினர் பற்றிப் பேசுவதை விலக்கியமையும்கூட 'கலாம் ஐயர்' ஆனதற்கான காரணங்களாகின்றன.

''எங்கள் ஒவ்வொரு அசைவையும் ஆர்.எஸ்.எஸ்.ஸே தீர்மானிக்கிறது'' என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்வதில் கூட்டணி அரசு நடத்தும் பா.ஜ.க.வுக்குத் துளியேனும் தயக்கம் இருக்கக்கூடும் என்றாலும், அதுதான் உண்மை. அப்துல்கலாம் குடியரசுத் தலைவர் பதவிக்குக் கடைசியாக அரங்கேற்றப்பட்டவர் என்றாலும், இந்தியாவை அணு ஆயுதத் தேசமாக மாற்றியவரைத் தேர்ந்தெடுப்பதில் தனக்கு மறுப்பேதும் இல்லை என்பதை ஆர்.எஸ்.எஸ். வெகு காலத்துக்கு முன்பே சொல்லிவிட்டது. ''இந்திய மயமாக்குதல் என்பது இந்து மயமாக்குதல் என்றுதான் பொருள். அதற்காக முஸ்லிம்களும் கிறித்தவர்களும் இந்துக்களாகிவிட வேண்டும் என்பதல்ல. அவரவரும் அவரவர் இடத்தில் இருந்து கொள்ளலாம். ஆனால் அப்துல்கலாமின் இலட்சியக் கனவை அவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆர்.எஸ்.எஸ்.ஸை இயக்குவது அந்தக் கனவுதான்,'' என்பது 'பாஞ்ச ஜன்யா' இதழின் தருண் விஜய் 2000 இல் எழுதிய வாசகம். பா.ஜ.க. சித்தாந்திகளுக்கு 'அப்துல்கலாம் இந்து ஆன்மாவுள்ள ஒரு இஸ்லாமியர்'. அது உண்மைதான்என்பதற்குத் தன் வேட்புப் பத்திரத்தைத் தாக்கல் செய்த மறுநாள் செய்தி ஊடகங்களுக்கு அவர் அளித்த பேட்டியே சாட்சி.

''இந்தியா போன்ற நாடுகள் அணு ஆயுதம் தயாரிப்பதும் வைத்திருப்பதும் அவசியம்தான். ஏனெனில் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக சரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் இந்தியா பல்வேறு நாடுகளின் படையெடுப்புக்கு ஆட்பட்டிருப்பது தெரியும். அப்போது எதிரிகள் துப்பாக்கி வைத்திருந்த நேரத்தில் நாம் கத்தியை மட்டுமே வைத்திருந்தோம். இப்போது பாகிஸ்தான் அணு ஆயுதம் வைத்திருக்கும்போது நாம் கையைக் கட்டிக் கொண்டு தவம் செய்ய முடியாது,'' என்பது அவர் பிரகடனம்.

இதற்கு இன்னொரு மறு வாசிப்பும் உண்டு.

''மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உச்சத்தை எட்டிவிட்ட நாகரிகம் இந்து நாகரிகம். தொன்மையான பல நாகரிகங்கள் அழிந்த பின்னும் அழியாமல் இளமையோடு இருக்கும் நாகரிகம் இது. இதை அழிப்பதற்கு செங்கிஸ்கான் முதல் பாகிஸ்தான் வரை இடைவிடாத படையெடுப்புகள் நடக்கின்றன. ஏற்கனவே வடக்கிலும் வடமேற்கிலும் பல நிலப் பகுதிகள் மத ஆக்கிரமிப்பால் கைநழுவிப் போய்விட்டன. இன்று ஒற்றைப் பசுவை ஓநாய்க்கூட்டம் சூழ்ந்தாற்போல இந்திய தேசத்தை இஸ்லாமிய பயங்கரவாதம் சூழ்ந்து கொண்டு விழுங்கிவிடப் பார்க்கிறது. இந்தத் தாக்குதலை முறியடித்து இந்து நாகரிகத்தைப் பாதுகாத்தே ஆக வேண்டும். அதற்காகத்தான் அணுகுண்டு.''

அப்துல் கலாமின் இலட்சிய முழக்கத்தை 'இந்துக்' குடிமகன் இப்படித்தான் மறு வாசிப்பு செய்கிறான்.

இந்தப் புரிதலுக்கு கே.ஆர். நாராயணன் உதவியாய் இல்லை என்பது உண்மை.

> ***''இந்து நாகரிகம் தொன்மையும் உயிர்ப்பும் உள்ளதாகவே இருக்கட்டும். அதனால் பெறப்பட்டதென்ன? 25 கோடி தலித் மக்களையும் 18 கோடி மதச் சிறு பான்மையினரையும் அரவணைத்துக் கொள்ள முயலாத ஒரு நாகரிகம் உண்மையில் அவர்கள் மேல் ஏற்றிய கொடிய பழியும் சுமையுமல்லவா? இந்து நாகரிகத்தை இந்தப் பழியிலிருந்து மீட்க அரசியல் சட்டம் வழி செய்யுமானால் அதை நடைமுறைப்படுத்துவதே இந்தியத் தலைமகனின் முதற் கடமை''***

என்று செயல்பட முனைந்தமைக்காக அருவருக்கத்தக்க வகையில் அவமதிக்கப்பட்டவராய் வெளியேறுகிறார் கே. ஆர். நாராயணன். அப்துல்கலாமுக்கு என்றைக்கேனும் இது உறைக்கக்கூடும்.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் இலட்சியக்கனவோடு பொருந்திப் போகும்வரை கலாமுக்கு எல்லாமே ஏறுமுகம்தான். ஆனால் கொஞ்சம் சறுக்கினால், அவர் வெறும் 'அப்துல் கலாம்' என்னும் பெயராக மட்டுமே எஞ்சுவார். அவரது சாதனைகள் அனைத்தும் அவருக்குச் சொந்தமில்லாததாக்கப்படும். அவர் ஒரு விஞ்ஞானியே அல்ல; வெறும் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர் மட்டுமே என்று பிடகடனப்படுத்தப்படுவார். அவர் ஒரு தேசிய அவமானமாகக் கூடப் பார்க்கப்படுவார்.

அப்போது அப்துல் கலாம் தன்னை அறிவார். ஒரு தமிழனாய், ஒரு முஸ்லிமாய், தன்னையும் சேர்த்துத்தான் இந்தத் தேசம் என்பதாய் அறிவார். அந்த அறிதல் ஒரு பின்னடைவல்ல; மகத்தான இந்தியாவைக் கட்டி எழுப்ப அதுமட்டுமே உன்னதம் என்று முழங்க அறிவார்ந்த சகோதரர்கள் ஆயிர மாயிரமாய் அவரைச் சூழுவர். அவர்களோடு நானும்...

*நன்றி : htt//www.geocities.com/kavithaasaran/ (இது டாக்டர் அப்துல்கலாமுக்கு 7.7.2002இல் E-mail செய்யப்பட்டது)*

●



படிப்பகம்

www.padippakam.com

## இப்படி எழுதுகிறேன்..........

இலக்கியத்தின் நோக்கம், 'பொதுமனிதனை உருவாக்குதல்' என்பதை வீர்யமான சொல்லாடலாக முன் வைத்தவர்கள் இடதுசாரிகள்தான். 'கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே' என முழங்கியதின் பின்னணியால் அந்த விபத்து நடந்தது. ஆனால் கொஞ்சம் நிதானமாக யோசித்தால், மதவாதிகளுக்கும் அந்த நோக்கம் இருந்தது புலப்படலாம். மதவாத அடிப்படைகள் உதாரணர்களாக மனிதர்களை ஆக்கவிரும்பியதன் நீட்சியே, சர்வதேசமனித பிம்பம். ஆனால் இடதுசாரிகளின் பயணம் எதிர்த்திசைப்பயணம். அந்தப்பயணம் நவீனத்துவத்தின் நுழைவால் தடைப்பட்டது. பின்-நவீனத்துவமோ எத்திசைப் பயணங்களும் 'பொதுமனிதனை உருவாக்கும் நோக்கம் கொண்டன அல்ல' என்பதை உரத்து முழங்குகிறது.

சர்வதேச அரசியலுக்கும் இலக்கியத்திற்குமான இந்தக் கதி, இந்தியாவிற்கும் தமிழுக்கும் வேறானதாக இருக்க முடியாது. என்றாலும் தமிழின் இலக்கிய வாசகன், பொதுமனிதன்-பொது இலக்கியம்' என்னும் பொன்னகரக் கனவுகளிலிருந்து விழித்த பாடில்லை. தமிழ் இலக்கியப் பரப்பில் அந்தப் பொன்னகரக் கனவை கோரக்கனவாக மாற்றிய நிகழ்வு தலித் இலக்கியத்தின்



பூமணி, இமையம் ஆகியோரது நாவல்களையும், கே.ஏ. குணசேகரனின் நாடகங்கள், பாடல்கள் ஆகியனவற்றையும் படித்து, பார்த்து, கேட்ட நிலையில் அவைகளின் கதையாடல் பரப்பிற்குள் நிகழ்ந்துள்ளனவற்றை இப்படிப் பட்டியலிடலாம்.

1. முரண்களைப் பேசி எச்சரித்தல்.
2. நிலையை விவரித்து ஆயத்தப்படுத்தல்.
3. பெருமைகளை எடுத்துக் கூறி நிறுவுதல்.
4. சான்றுகளை அடுக்கி நியாயப்படுத்தல்.
5. வரலாற்றைக் கூறிப் பழிவாங்கத் துடித்தல்.
6. நிகழ்கால இருப்பிலும் நியாயம் இல்லை என வாதிடுதல்.

# பொதுவாசகனை நோக்கிய தலித் இலக்கியம்

*அ. ராமசாமி*

வரவுதான். இந்திய/தமிழ்ச் சமூகம், 'விலக்குதலையும் விலகுதலையும், அடித்தளமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது, 'பொதுமை இலக்கியம்' மட்டும் எப்படி சாத்தியமாகும்' என்ற கேள்வியோடு தலித் இலக்கியம் நுழைந்தது.

தலித் இலக்கியத்தின் நுழைவு, அதுவரை பொதுவான வார்த்தைகளெனக் கருதப்பட்ட 'படைப்பாளி' 'வாசகன்' என்பனவற்றையும் மறுத்தது. தலித் படைப்பாளி, பிறபடைப்பாளி என வேறுபடுத்தப்பட்டு, அவர்கள் எழுதிய தலித் படைப்புகளின் நிலைப்பாடுகள் கேள்விக்குள்ளாக்கப் பட்டன. தலித் அல்லாத ஒருவரின் தலித் படைப்பு, தலித் படைப்பாக ஏற்றுக்கொள்ளப்படுவதில் இருந்த சிக்கல்கள் எல்லாம் பேசப்பட்டன. அத்தகைய முயற்சிகள் தலித்துகளுக்குக் கிடைக்கும் அங்கீகாரத்தைப் பங்கு போடும் முயற்சி என்ற சந்தேகங்களும் நியாயமாக எழுந்தன. இந்தச் சொல்லாடல்களுக்கிடையே 'தலித் வாசகன்-தலித் இலக்கியதிற்கான வாசகன்' என்ற சொற்களும் விவாதங்களும் கவனப்படாமல் போனதும் நிகழ்ந்தது. இங்கே அதனை,

*தலித் இலக்கியம் தலித் படைப்பாளிகளால் எழுதப்படுவதுபோல, தலித்வாசகர்களுக்காக எழுதப்படுவதா...? பொதுநிலை வாசகர்களையும் கணக்கில் கொண்டதா...?*

என்ற கேள்வியாக முன்வைத்துக் கொண்டு பதில்களைத் தேடலாம். இதுவரை தமிழில் தலித் படைப்புகளைத் தந்துள்ள சுப்பையா, ராஜ்குமார், மதிவண்ணன், மதியழகன், கோடாங்கி ஆகியோரின் கவிதைத் தொகுதிகளையும், உஞ்சைராசன், பாப்லோ அறிவுக்குயில், அறிவழகன், சோ. தர்மன், பாமா, அபிமானி ஆகியோரின் சிறுகதைகளையும், பாமா, சிவகாமி,

7. நிலையைப் படம் படித்து இரக்கம் உண்டாக்குதல்.

இந்நிகழ்வுகளைக் கவனிக்கும்பொழுது, வெளியையும், கதாமாந்தர்களையும் தேர்வு செய்வதில் பொதுவாசகனின் இருப்பும், இயங்கும் நிலையும் ஒதுக்கப்படுவதைக் காண முடிகிறது. தலித் இலக்கியம் தலித்வாசகனை/வாசகியை மட்டுமே நோக்கியதாக இருப்பதில் விளைவுகள் எதிர்பார்க்கின்றனவாக இல்லாமல் போக வாய்ப்புகள் உண்டு. அதனை உணரும் தலித்படைப்பாளிகள் பொதுவாசகனை உள்ளடக்கிய-நோக்கிய-படைப்புகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஏனெனில் மாற்றங்கள் ஒருபக்கத் தன்மையதாக மட்டும் இருந்தால் போதாது,

***பொதுவாக இலக்கியம், வாசகனிடத்தில் உண்டாக்குகிற குற்ற உணர்வில் தான் ஆழமான தாக்கங்களை உண்டாக்குகிறது. இந்நிலையில் பொதுவாசகனை நோக்கிய தலித் இலக்கியம் தனது அழகியலின் எல்லைகளை விரித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.***

ஒரு தலித் படைப்பு, பொதுவெளிகளையும், பொது மனிதர்களையும் தனது எல்லைப்பரப்பிற்குள் கொண்டு வரும் பொழுது, அப்பொதுமனிதர்களின் மூலமாகப் பொது வாசகனிடம் குற்ற உணர்வை உண்டாக்குகிற வேலையைச் சுலபமாக்கிக் கொள்ளும். அதன் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

1. தலித் அல்லாத மற்றவர்களின் செயல்பாடுகள் மனிதத் தன்மையற்றவை; அவர்கள் நாகரிக சமுதாயத்து மனிதர்கள் அல்ல என உணர்த்த முடியும்.

2. உன்னுடைய தரம் ஒன்றும் உசத்தியானது அல்ல.

3. அதிகாரம்-ஒடுக்குதல் - என்பதில் வேறுபாடுகள் இல்லை எனக் காட்டலாம்.

4. இயல்பான உணர்வுகள் பொதுவானவை எனப் பேசலாம்.

5. நடைமுறைகள் - யதார்த்தங்கள் - எவ்வளவு கொரூரமானவை எனச் சித்தரிக்கலாம்.

6. ஒதுக்குவதிலும் ஒதுங்குவதிலும் செயல்படும் மனஉணர்வுகள் எவையெனச் சொல்லலாம்.

இப்படியான விரிந்த எல்லைகளுக்குள் நுழையும் தலித் அல்லாத வாசகன், வாசிப்பினூடாகத் தனது பிறநிலை (Otherness)யை உணரும்பொழுது குற்ற மனம் உடையவனாக ஆக்கப்படுவதைத் தவிர்த்து விட முடியாது.

தலித் இயக்கத்தின் விரிந்த எல்லைகளுடன் கூடிய அழகியலின் பின்னணியில் சிவகாமியின் 'ஆனந்தாயி' நாவலும் இமையத்தின் 'கோவேறு கழுதைகளும்' பூமணியின் 'வெக்கை'யும் முக்கியமான தலித் படைப்புகளாக வாய்ப்புகளுண்டு. இந்நாவல்களின் படைப்புவெளிக்குள் தலித் அல்லாதவர்களின் இயக்கங்களே கூடுதலானவை என்றாலும் அவை எழுப்பும் உணர்வுகள் அவர்கள் சார்ந்தன அல்ல என்பதைக் கவனிக்க முடியும். 'தலித் இலக்கிய அலை' எழுப்பிய புரட்டுதல்களைத் தாண்டித் திரும்பவும் வாசிக்கின்ற பொழுது பாமாவின் 'கருக்கும்' 'சங்கதி'யும் எழுப்பும் உணர்வுகளை விட அவை காத்திரமான உணர்வுகளை எழுப்புகின்றன எனலாம். பாமாவின் கதையாடல்களோ, பொதுவாசகரைப் புறந்தள்ளிவிட்டு, பாதிக்கப்பட்ட பாத்திரங்களின் புலம்பல் என்ற அளவில் இரக்க உணர்வை மட்டுமே எழுப்ப முனைகின்றன.

தலித் இலக்கியத்தின் விரிந்த அழகியல் எல்லைக்குள் ரவிக்குமாரின் எழுத்துகள் முக்கியமான பங்களிப்பைச் செய்யக் கூடியனவாக உள்ளன. தலைப்பிடுதல், தொடங்குதல், திசை திரும்புதல், புள்ளி விவரங்களை அடுக்குதல், ஒப்பிடுதல், மேற்கோள்களைத் தருதல் என விரியும் அவரது எழுத்துகளை வெறும் 'கட்டுரை எழுத்து' எனத் தள்ளி விட முடியாது. படைப்பின் நுட்பங்களும் நோக்கங்களும் வெகு சாதாரணமாகத் தொடங்கப்படுகின்றன. ஒன்றில் பின்பற்றப்படும் உத்தி, வேறொன்றில் பிறிதொன்றாகி நிற்கும் நிலையில், அவற்றிற்கான வாசகர்களின் கூட்டமும் ஒருநிலைப் பட்டனவாக இல்லாமல் ஆகிவிடுகின்றன. அவைகளை ஒரு சேர வாசிக்கும்பொழுது (கொதிப்பு உயர்ந்து வரும்: காலச் சுவடு வெளியீடு) அதன் நோக்குநிலை தலித் வாசகர்கள் அல்ல; பொதுநிலை வாசகர்களே என்பதாகப்படுகிறது.

பொதுநிலை வாசகர்களைச் சுட்டிய - உள்ளடக்கிய - அழகியலுடன் தலித் கவிஞர்களும் சிறுகதையாளர்களும் திரும்பவும் எழுதுவார்களாக.

•

## சோதனை சிலுவை

அறைந்தாயிற்று
நிணம் நாற ரத்தம் வழிகிறது
மரணம் சம்பவிக்க தருணம்
ஒளி சரியும் வெள்ளை
வானம்
இருளில் பறிபோகும்
ஆணியின் ஒவ்வொரு
அறைவிலும்
முகங்கள் கொப்பளிக்க
கோட்டைபுரத்தில் மனிதம்
ஒடுங்கி உறங்கும்
வனங்களில் எப்போதும்
மௌனத்தின் மெல்லியகீற்று
ஓசை - உயிர் கரைய
அர்த்தங்கள் மேலும் இறுகும்
அர்த்தமற்றவைகளால் அறையப்
பெறும் போதெல்லாம்
தேம்பும் கணங்களின் வளைவில்
குருதி நிறைய
வழிதேடி
ஒழுகி வழியும் வேளை
வளை அடைத்து
சில்லுகள் சிதறும்
சாயலுறும்
பட்டறைகளில் வரிசையாய்
சிலுவைகள் காத்திருக்கின்றன.
வெளியேற
மூன்றாம் நாள்
இனி இல்லை ஒரு போதும்

-- ஹவி

•

## எச்சரிக்கை

வேனல் வெயிலோட
வேர்வக் கவிச்சம்
உரியுது என்னோட
உசுரு முழுக்க.

வெள்ளவேட்டி மினுக்கலில்
வேவுப்பாக்க வந்த
கருப்பசாமி நாயக்கனோடக்
காலுக,
வரப்பு மேட்டுல
வழிதேடி.



பூவரசு மரங்கிழ
பசியமர்த்த ஒதுங்கும் என்
கைப்பிடிச்சி இழுக்கிதாரு
பருத்திமாரு மூட்டுக்குள்ள
களப்பறிச்சி நிக்கும்
எம்புருசக்காரன் கையிலக்
களவாரி இருக்கிதுத் தெரியாம.

- அபிமானி



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:

# எண்ணெய்க்கிணறு

தெலுங்குமூலம்:
M.S. சூர்யநாராயண

தமிழில்:
சாந்தாதத்

இந்த வியாதி என்னை எப்படி பீடித்ததோ.. தெரியவில்லை காற்றை உள்ளிழுக்கும் போதெல்லாம் எண்ணெய் வாசனைதான்.

இந்த எண்ணெய்வாசனை இருக்கிறதே... மகாபயங்கரமானது. சுவாசிப்பதே பிரச்சனைக்குரிய விஷயமாகிவிட்டது. தூய்மையான சுவாசகோளங்களெங்கும் எண்ணெய் வாசனை பரவி பிராணவாயு கெட்டுப்போய்க்கொண்டிருக்கிறது. பசுமையான வாழ்க்கை விருட்சம் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து கொண்டிருக்கிறது.

எண்ணெய் நாற்றம் எப்படிப்பட்ட நாசத்தையும் உருவாக்கும் தன்மையுடையது. அதனால்தான் எண்ணெய் என்ற சொல் காதில் விழுந்த மாத்திரத்தில் ஒரு உதறல் வந்துவிடும் எனக்கு. சொல்லப்போனால் எண்ணெய் இல்லையென்றால் இவ்வுலகில் எதுவும் இல்லைதான். இந்த உண்மையை எந்தமடையனும் ஏற்றுக்கொள்வான். ஆனால் வெளிச்சம் தரும் எண்ணெய்யே இருளுக்கும் காரணமாகிறது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?

இந்த நோய் என்னை எப்படி தொற்றிக் கொண்டாலும்... நாளுக்குநாள் முற்றிக் கொண்டே போகிறது...!

அன்று மாலை அறைக்குள் உலவிக் கொண்டிருந்தபோது சட்டென கடிகாரத்தைப் பார்த்தேன். ஆறுமணி ஆகியிருந்தது. மேஜை உள்ளறையிலிருந்த திருமண அழைப்பிதழை எடுத்துப் பார்த்தேன்.

இரவு ஒன்பது மணிக்கு முகூர்த்தம்.

என் காதலி இந்துமதிக்குக் கல்யாணம்! போக வேண்டுமா...? அவசியமில்லையா...?

எனக்குள்ளான சிலகணங்கள் சர்ச்சைக்குப்பிறகு புறப்பட்டுவிட்டேன்.

துர்கா திருமணமண்டபம் அமர்க்களப் பட்டுக்கொண்டிருந்தது. உள்ளே அடி வைத்தேனோ இல்லையோ அந்த வாசனை ஆரம்பமாகிவிட்டது. சுற்றிலும் எண்ணெய் வீச்சம்...!

அந்த வீச்சத்தின் கனத்தில் நாசிச்சுவர்கள் புடைத்துக் கொண்டன. திரும்பிப்போய் விடலாமா என்றுகூட நினைத்தேன்.

பிரியமான இந்துமதியின் கல்யாணம்! காதலியை... என் இதய ஊர்வசியை கடைசியாய்ப்பார்த்து விட வேண்டுமென சமாளித்துக்கொண்டு முன்னேறினேன். மூக்கைச் சுற்றி கைக்குட்டையை அழுத்திக் கொண்டேன். இல்லையென்றால் ஏகமாய்ச்சிரமப்பட வேண்டியிருக்கும்.

பையில் காசில்லாமல் வெளியே சென்றாலும் செல்வேனே தவிர கைக் குட்டையின்றி வீட்டை விட்டு நகரவே மாட்டேன்.

எல்லோரும் பரபரப்புடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தனர். அத்தனை முகங்களிலும் உற்சாகம்... சந்தோசம். சிரிப்பும் வேடிக்கையுமாய் குதூகல அரட்டை மண்டபமெங்கும் நீக்கமற நிறைந்திருந்தது. ஆனால் யார் மூக்கின் மீதும் கைக்குட்டை மட்டும் இல்லை!

இவர்கள் மூக்கெல்லாம் மோப்ப சக்தியை இழந்துவிட்டதா?

''என்ன குரு... ஏன் மூக்கை மூடிட்டிருக்கே? உனக்கு மட்டும் என்னவாவது நாற்றமடிக்குதா? இல்ல, சளி பிடிச்சிருக்கா?'' நண்பன் ஒருவன் கேட்டான்.

''ஐய்ய.. சளி கிளி ஒண்ணுமில்ல. நாற்றம்தான். ஒரே எண்ணெய் வீச்சம். உனக்கு வரல...?''

என்னை ஒருமாதிரி பார்த்தவன் ஒரு வார்த்தைகூட பேசாமல் இடம் பெயர்ந்தான்.

இந்த எண்ணெயின் மகிமையே இதுதான். இந்த உலகில் இது ஒரு மகாசக்தி ஆயிற்றே?

எண்ணெய் என்பது இலேசுப்பட்ட சமாசாரமா என்ன? அதன் வடிவத்தை, தன்மையை வர்ணிப்பது சாத்தியமில்லை. எண்ணெய் என்றால் சாட்சாத் மிஸஸ் ஸ்ரீரங்க தாமேஸ்வரி. ஆனால் இப்போது தன் உருவத்தை மாற்றிக் கொண்டு விட்டது. எண்ணெய்க்கிணறாக மாறிவிட்டது. இந்தப் பெண்கள் எப்படியும் அதன் பிரதிநிதிகள்தாமே! அதனால்தான் அவர்களை வளைத்துக் கொண்டிருக்கிறது போலும்!

''டைம் என்ன சார்?''

ஒரு வழுக்கைத்தலை ஆசாமி கேட்டார்.

''என்னவோ, எத்தனை லிட்டரோ தெரியாது. ஆனால் எவ்வளவு நாற்றம் பார்த்தீர்களா?'' கைக்குட்டையை அழுத்திக்கொண்டேன்.

அந்த ஆள் இருந்த இடம் காலி.

'பாவம்... மூக்கு வேலைசெய்யல போலிருக்கு. அதனால்தான் எந்த வாசனையும் தெரியல. முக்கியமா எண்ணெய் நாற்றம். இந்த நாற்றம் தெரியலன்னா நல்லதுதான். ஆனால் எந்த வாசனையும் பிடிபடலன்னா.. கஷ்டம்தான் பாவம்...' இரக்கத்துடன் நினைத்தபடி மணி பார்த்தேன். ஒன்பது... சரியாக ஒன்பது...!

புரோகிதரின் குரல் உயர்ந்தது. மேள தாளங்கள் உச்சத்தைத் தொட்டன. இவை எல்லாவற்றையும் விட எண்ணெய் வாசனை இன்னும் இன்னும் உக்கிரமாகி...

முடியவில்லை... என்னால் முடியவில்லை... வயிற்றைப் புரட்டுகிறது.

எல்லாம் வழக்கப்படி முறையாக நடந்து கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் குளிர்பானம் வழங்கப்பட்டது. மெல்ல உறிஞ்சினேன். பாதி பாட்டில் கூட ஆகியிராது. வாந்தி வருவது போலிருந்தது. கைக்குட்டையால் வாயையும் பொத்தியபடி வாஷ்பேசினை நோக்கி ஓடினேன்.

எனக்குக் கொடுக்கப்பட்டது கூல் ட்ரிங்க்ஸ் இல்லை.

பாட்டில் நிறைய எண்ணெயில் ஸ்ட்ரா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்!

எனக்கு எந்த வாசனை ஒத்து வராதோ அதையே கொடுத்திருக்கிறார்கள் இந்தா குடிடான்னு.

இந்த வியாதி ஏன் என்னை இப்படிப் படுத்துகிறது? மனச்சாந்தியே இல்லாமலாகி விட்டதே? எங்கு சுவாசித்தாலும் ஒரே வாசனை... சகிக்க முடியாத எண்ணெய் வாசனை!

என் மூக்கை எத்தனை. இ.என்.டி. ஸ்பெஷலிஸ்டுகளிடம் காட்டியிருப்பேனோ கணக்கு வைக்கவில்லை.

''அப்பா... உன் மூக்கு நல்லாத்தான் இருக்கு. எந்த பிராப்ளமும் இல்ல. உன் மனசுதான் சரியில்லன்னு தோணுது. சரி பண்ணிக்க முயற்சி செய்...'' டாக்டர்களின் மேலான அறிவுரை..



படிப்பகம்

இவர்கள் ரிப்போர்ட்டுகளின் மீது எனக்கு நம்பிக்கையே கிடையாது. வெறும் பசப்பாளிகள்! எல்லாம் நாடகம்! காட்டமான வாசனையால் மனுஷன் மூச்சு திணறிக் கொண்டிருக்கிறேன். இவர்கள் என்னடாவென்றால் எல்லாம் நார்மலாக இருப்பதாக நடித்துக் கொண்டிருக் கிறார்கள். இவர்கள் மூளைக்கு தான் ரிப்பேர் அவசியம். அத்தனை மறைகளும் கழன்றுவிட்டன. கெட்டியாக முடுக்க வேண்டும். குறிப்பாக இவர்கள் மூக்கு! வாசனை வர்றது... வாசனை தெரியாதுன்னு அலறும் வரை மறைகளை இறுக்க வேண்டும்.

அட... எண்ணெய் வாசனையே தெரியாமல் வாழத்தான் முடியுமா என்ன...? எல்லாமே சதி... மோசடி! ஆத்ம வஞ்சனைக்கு மருந்து ஏது...?

''அதில்ல சார். எங்க வீடியோ பில்லையும் நீங்க கொடுகிறதுதான் சம்பிரதாயம். நடக்கிறது உங்க பொண்ணு கல்யாணம்கறது மறந்துபோச்சா... இந்த வழவழா கொழகொழா பேரமெல்லாம் எங்களிடம் வேண்டாம்...'' மேளகோஷ்த்தை மீறிக் கேட்டது பிள்ளை வீட்டுக்காரரின் கர்ஜனை.

வழவழா கொழகொழா... இங்கும், இதிலும் எண்ணெய் சமாசாரம்...?

விரக்தியுடன், ஆற்றாமையுடன், வெறியுடன், மண மக்கள் மீது அட்சதையை வீசியெறிந்தபடி இந்துமதியை வெறித்துப் பார்த்தேன்.

இந்துமதிபோலவே தெரியவில்லை. அவள் இடத்தில் ஒரு எண்ணெய்க் கிணறு...! எண்ணெய்க் கிணறே தான்...!

அக்கிணற்றில் கயிறுவிட்டு எண்ணெய் சேந்திக் கொண்டிருந்தான் மணமகன். எண்ணெய்க்கிணற்றுக்கும் சாதாரண கிணறு போன்றே கைப்படிச்சுவர் இருந்தது. அச்சுவருக்குக் கைகள் இருந்தன. கீழ்ப்பகுதியில் கால்கள். மணமகன் அதிகம்பிரமாய் எண்ணெய்க் கிணற்றின் கையைப் பிடித்துக் கொண்டு அக்னியை வலம் வந்து கொண்டிருந்தான்.

சாட்சாத் அக்னியைச்சுற்றி...!

என் இதயம் வேகமாய்த் துடித்தது.

புரோகிதர் அக்னிமந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். அக்னிக்கு நமஸ்காரம் செய்யச் சொன்னார். அவர்கள் அக்னியை வலம் வந்து கொண்டிருந்தனர். அக்னி யில் நெய் ஊற்றிக் கொண்டிருந்தனர். தீ நாக்குகள் கொழுந்து விட்டெரிந்தன.

இன்னும் என்ன விபரீதம் வேண்டும்...? நெருப்பு கொஞ்சம் தீண்டினாலும் போதுமே... எண்ணெய்க் கிணறு பக்கென பற்றிக்கொள்ளாதா?

''பொண்ணு மகாலட்சுமியாட்டம் இருக்கு..'' யாரோ சொல்ல...

''இல்லை... எண்ணெய்க்கிணறு போல் இருக்கா...'' உரக்கக்கத்தினேன். யாருக்கும் கேட்டதாய்த் தெரிய வில்லை. மெல்ல அறையை நோக்கி நடந்தேன்.

ஓராண்டு கழிந்தது.

அன்று விடிந்ததும் விடியாததுமாய் லைப்ரரிக்குக் கிளம்பினேன். அன்றைய செய்தித்தாள் தொப்பலாய் நனைந்து போயிருந்தது.


ஜூலை, 2002 முதல்
வெளிவருகிறது :

# ஏர்

சமூக ஆய்விதழ் ★ காலாண்டு

ஆசிரியர்: ராயன்

முதல் இதழில்,

தியோடோர்ஷானின், இர்ஃபான் அபிப், டாம் மெய்சனெல்டர், சமிர் அமின், திபங்கர் குப்தா, எரிக் ஃப்ராம், எர்னஸ்ட் மேன்டல், பார்பரா டெய்லர், கோபால் குரு, ஃபெங்ஸெஸன்வங், நித்தியானந் ஜெயராமன், லெஸர் ஆர். பிரௌன், டி.கே. ஓமன் ஆகியோரின் ஆய்வுகள் அடங்கிய இதழாக புதிய பரிமாணத்துடன் வெளிவருகிறது.

**தனி இதழ் ரூ 40**

***ஆண்டு சந்தா ரூ 160***

சந்தா மற்றும் எல்லா தொடர்புகளுக்கும்

**விழுதுகள் பதிப்பகம்**
18, திருநகர் முதல் தெரு, திருவொற்றியூர்,
சென்னை - 600 019.


பளீரென அறைந்தது எண்ணெய் வாசனை...!

எண்ணெயில் முக்கியெடுத்தாற் போலிருந்தது செய்தித்தாள்...

எண்ணெய்க்கிணறுகளைப் பற்ற வைத்துக் கொண்டிருக்கும் சதாம் ஷுசேன்.

செய்தியைப் படித்தேன்.

அதே பேப்பரில் மாவட்ட எடிஷனில் புகைப்படத்துடன் இன்னொரு செய்தி...

பரபரப்புடன் படித்தேன். பயத்துடன் படித்தேன்.

எனக்குத் தெரிந்த செய்திதான் அது.

ஆமாம்... நிச்சயமாய் சொல்ல முடிய வில்லையெனினும், ஓராண்டு காலத்துள் பேப்பரில் வரும் என நான் ஊகித் திருந்த செய்தி அது!

இந்துமதி என்ற எண்ணெய்க்கிணறு பற்றிக்கொண்டு விட்டது.

வேறொன்றுமில்லை...

சிகரெட்டை கொளுத்தி,

அந்நேரத்தில் ஆஷ்டிரே கண்ணில் படாததால் அவன், புகைந்து கொண்டி ருந்த சிகரெட்டை எண்ணெய்க் கிணற்றில் போட்டுவிட்டான்... அவ்வளவுதான்...'.

•



படிப்பகம்

www.padippakam.com



நிறுவப்பட்ட எல்லாவற்றிற்கும் எதிராக - புதிய வேகத்துடனும் வீரியத்துடனும்

# தமிழில் தலித் கவிதைகள்

அன்பாதவன்

''கறுப்புத் தோலை
உங்கள் உடம்பை மூடும்
ஒரு அங்கியைப் போல்
அணிந்து கொள்ளாதீர்கள்
அதை ஓர்
போர்க் கொடியைப் போல்
உயர்த்திப் பிடியுங்கள்''

- லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்

வெள்ளை கறுப்பு என்று
வேறுபட்ட நிறங்களில் நாம்
சதுரங்கத்தில் சரிசமமாய் இருப்பினும்
வெண்மை என்பதில் பெருமிதப்
பெருமையோ
கறுப்பாயிருப்பதில்
அவமானக் கேவலமோ
தேவையில்லை இருவருக்குமே
ஆனாலும் இது போர்க்களம்
வெள்ளைப் படையே வா
காலங்காலமான உன் தாக்குதலுக்குப்
பதிலாய்க்
காத்திருக்கிறது கறுப்புப்படை
எதிர்க்கத் துணிவுடன்
எமக்கு முண்டு வீரர்கள்
கறுப்பு மலை யரண்களாய்
காவல் யானைகள்
கட்டம் தாவிக் காற்றாய்த் தாக்க
கறுப்புக் குதிரைகள்
திட்டமிட திறமையாய்ச் செயலாற்ற
அமைச்சுமுண்டு
ஆணை மய்யமாய் அரசன்
அதிகார பலத்துடன் எப்பக்கமும்
போர்புரியும் இயல்பான
தைரியத்துடன் எங்கள் ராணி
எக்காள முழக்கத்தோடு
அதிர்கிறது பறையொலி
பேசித்தீர்ப்பதா மோதிப் பார்ப்பதா
பாயத் தயாராய் எமது படை
காலங்காலமான தாக்குதல்களுக்குப்
பதிலாய்
காத்திருக்கிறது கறுப்புப்படை''

அன்பாதனின் 'கறுப்புப்படை' -
புதிய கோடாங்கி - ஜூன் 2001

வரலாறு மிக மிகக் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கும் நூற்றாண்டு இது. இதுகாறும் நம்மிடையே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் புராணங்கள், புனைவுகள், இதிகாசங்கள் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டு, புதிய வெளிச்சம் பாய்ச்சி, அலசி, தரம் பார்க்கும்வேலை நடந்து கொண்டிருக்கிறது.

மொத்த ஆதிக்க நாடுகளுக்கும் எதிராக மூன்றாம் உலகப் படைப்புகள்... வெள்ளை வெறியர்களுக்கு எதிரான கறுப்பின மக்களின் எழுச்சி என்று தொடரும் இந்த நீண்ட பயணம். இங்கே 'தலித்' இலக்கியமாக, தலித் பண்பாட்டை உயர்த்திப் பிடிப்பதாக, தலித் அரசியலை முன்வைப்பதாக, பீடங்களுக்கு எதிரான கலகக் குரல்களாகப் பதிவு செய்யப் பட்டு வருகிறது.

இந்திய சமூகத்தின் மிகமுக்கியமான அம்சமாக, இங்கு கோலோச்சிக் கொண்டிருக்கும் சாதிய அமைப்பைக் கூறலாம்.

சாதிய அமைப்பின் வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கு, அன்று நிலவியிருந்த நிலைமைகளின் ஒரு பகுதியாகத் தான் சாதி இருந்ததாகக் கருத வேண்டுமேயன்றி அதை மதத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கக் கூடாது என்பதை உணர்ந்த டாக்டர் அம்பேத்கர், ''பிரசாரம் செய்வதாலேயே சாதிய அமைப்பை உருவாக்கி விடவோ அழித்து விடவோ இயலாது'' என்று குறிப்பிடுகிறார்.

அன்றைய சமூக அமைப்பின் மிக முக்கியமான அம்சமான நால்வருணம்- பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் - வேகமான வளர்ச்சி அடைந்ததை ஒட்டி, சாதிய அமைப்பும், பின் நாட்களில் வகுப்பு அமைப்பும் பார்ப்பனர்களாலும், இந்துமதக் கோட்பாடுகளாலும் மத அங்கீகாரம் பெற்றன.

இந்த வகுப்பு அமைப்பு என்பதே கடவுளால் உருவாக்கப்பட்டது, மனிதனால் அல்ல என்று இந்து மதக் கோட்பாடுகளடங்கிய புராண நூல்கள் வலியுறுத்தின.

''பிரம்மாவின் வாயிலிருந்து
பார்ப்பனர்களும்
தோளிலிருந்து சத்திரியர்களும்
தொடையிலிருந்து வைசியர்களும்
பாதத்திலிருந்து சூத்திரர்களும் -
பிறந்ததாகக்
கூறும் புனைகருத்தியலைப் பார்ப்பனர்கள் பரப்பினர்.''

- (தலித் இலக்கியம் - பக். 8)

மதமும் அரசும் கைகோர்த்து, சூத்திரர்கள் எனப்படும் கீழான வகுப்பை, உளப்பாங்கு ரீதியாகவும், பண்பாட்டு மற்றும் சமூக ரீதியாகவும் அடிமைத் தனத்திற்கு ஆட்படுத்தி, பிறகு தீண்டாமையில் கொண்டு அழுத்தி வைத்தன. (அதே நூல் - பக்.9)

இந்த அடிமை வாழ்வை, அடக்குமுறைகளை, உயிருள்ள மனிதர்களாகவே மதிக்காத அதிகாரபீடங்களை, 'மத ஆளுமையை - சட்டையைப் பிடித்து உலுக்கும் வகையாக பொங்கி எழுகின்ற தலித்துகளின் குரல் எப்படி இருக்க முடியும்? இப்படித்தானே!

''மனுசங்கடா நாங்க மனுசங்கடா!
ஒன்னப்போல அவனப்போல
எட்டு சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா! நாங்க மனுசங்கடா!
ஒங்க தலைவன் பொறந்த நாளு
போஸ்டர் ஒட்டவும் - ஒங்க
ஊர்வலத்துல தர்ம அடிய
வாங்கிக் கட்டவும் -
எங்க முதுகு நீங்க ஏறும் ஏணியாகவும்
நாங்க இருந்தபடியே
இருக்கணுமா காலம் பூராவும்''

(கவிஞர் இன்குலாப் - சூரியனை சுமப்பவர்கள்)

உழைத்து உழைத்து, ஒரு பிரிவு வசதிகளை அனுபவித்து வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து கொண்டே போக, உழைத்துக் கொடுத்த எம்மக்கள் காலம் பூராவும் அடிமைகளாக, ஏணிகளாகவே இருக்க முடியாது என அதிகாரத்தின் முகத்தில் ஆணித்தரமாக அறையும் வண்ணம் எழுதப்பட்ட பாடல் இது.

அது மட்டுமல்ல, தொகுப்பு வீடுகள், தீப்பிடிக்காத வீடுகள், மழைக்கால அரிசி, இலவச வேட்டி, இட ஒதுக்கீடு என சின்னச்சின்னச் சலுகைகளிலேயே, இந்தியாவின் பெரும்பான்மையாகத்



படிப்பகம்

www.padippakam.com

திகழும் ஒரு சமூகத்தை மவுனமாக்கி விட முடியும் என்று அதிகார மய்யங்கள் மனப்பால் குடிக்கிற நிலையில், மக்கள் கவிஞர் இன்குலாப் கேட்கிறார்:

''சதையும் எலும்பும்
நீங்க வச்ச தீயில் வேகுதே
ஒங்க சர்க்காரும் கோர்ட்டும்
அதுல எண்ணெய ஊத்துதே
எதை எதையோ, சலுகையின்னு
அறிவிக்கிறீங்க!
நாங்க எரியுறப்போ
எவன் மசுரைப் புடுங்கப் போனீங்க
டேய்!
மனுசங்கடா நாங்க மனுசங்கடா''

''தலித் என்பது மராத்திய வார்த்தை. தலித் இலக்கியம் முதலில் உருவானது மராத்தியில்தான். அம்பேத்கர், ஜோதிபாபூலே போன்ற சிந்தனையாளர்கள் தலித் இயக்கத்தின் எரிபொருளாக இருந்தார்கள்.

எடுத்த எடுப்பிலேயே தலித் இலக்கியத்தின் குரல் கலகம் நிறைந்ததாக இருந்ததால் மரபின் அடிப்படையில் வந்த மேல்தட்டு இலக்கியவாதிகள் அதிர்ந்து போனார்கள்'

- பாபு யோகேஸ்வரன், குமுதம் - 4.11.99

நூற்றாண்டுகளின் கோபம் ஒன்றிணைந்து கொப்பளிக்கும் கவிதை இது. காரணம் 'தீண்டத்தகாதவர்கள்' எனச் சொல்லப்படுபவர்களின் வாழ்நிலையும் சூழ்நிலையும் மிகவும் வெட்கத்திற்குரியதாக இருந்தன. அவர்களுக்கு உழுவதற்கு நிலமோ, செய்வதற்கு வேறு தொழிலோ இருந்ததில்லை.


கூரைக்குடிசைகள், உழைப்புக்கருவிகளாய் துணைநிற்கும் மாடு, ஆடு, பன்றி, நாய், கழுதை, ஓட்டை உடைசல் பாத்திரங்கள் ஒன்றிரண்டு, சுகாதாரமற்ற சூழல், நோய்க் கொடுமையால் பலர் இறந்த சோகம் சுத்தமான குடிநீர் வசதியின்மை, கழிவுநீர் அகற்றும் முறையின்மை, கல்வி வசதியின்மை - என இன்றைக்கும் தலித் மக்களின் குடியிருப்புச் சூழ்நிலை மாறாமலே உள்ளது.

ப்ரதிபா ஜெயச்சந்திரன் தன் நேர்காணலில் குறிப்பிடுவது போல ''இந்தியா போன்ற தேசத்தில் வாழும் ஒரு தலித், எங்கேயும் தன்னை ஒரு தலித் என்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்ள விருப்பப்பட மாட்டான். அது இரண்டு நிலைகளில் செயல்படுகிறது. தன் சாதி தெரிந்து விட்டது. இனி ஒன்றும் செய்வதிற்கில்லை - வருவது வரட்டும் என்ற ஒரு நிலை. தெரியாமல் இருக்கும் வரை இருக்கட்டுமே என்ற ஒரு நிலை. மதம் மாறலாம் என்பது போல, ஜாதி மாறிக் கொள்ளலாம் என்று இந்தியாவில் சட்டம் கொண்டு வந்தால் இங்கு ஒரு தலித்கூட தன் ஜாதியில் இருக்கப் பிரியப்பட மாட்டான்.''

(நவீன விருட்சம் - ஏப்ரல் - ஜூன் 2001)

தமிழில் தலித் இலக்கிய வளர்ச்சிக்கு ஆதாரமாகவும், நம்பிக்கை வளர்க்கும் விதையாகவும் இருந்தது கவிஞர் இந்திரனின் ஆப்பிரிக்க படைப்புகளின் தொகுப்பான, 'அறைக்குள்வந்த ஆப்பிரிக்க வானம்.'' அதன் இரண்டாம் பதிப்பிற்கான முன்னுரையில் கவிஞர் இந்திரன் குறிப்பிடுகிறார்: ''தலித் இலக்கியம் தமிழில் மலர்ச்சி அடையத் தொடங்கி இருக்கும் இக்கால கட்டத்தில் இதன் மறு வெளியீடு மிகவும் அர்த்தமுள்ள ஒன்று என்று நம்புகிறேன்.''

அதுமட்டுமல்ல, ஆப்பிரிக்க கறுப்பின மக்களின் துயரங்களுக்கும் இந்தியாவின் ''கறுப்பு மக்களுக்கும்'' சோக வாழ்வுச் சூழலில் மிகப் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரிவதில்லை. அதனால் தான் 'தலித்' மக்களுக்கு நம்பிக்கையும், தைர்யமும் ஊட்டும் விதமாக நூலின் மையக்கருத்து ஒலிக்கிறது.



காலனி ஆதிக்கத்தினால் ஏற்பட்ட பண்பாட்டு நாசங்களுடன் நம் தலித் மக்கள் விசாரணையற்று, வெந்து போன மீன்களைப் போல் வாழ்ந்து வருவது குறித்து வருந்தும் கவிஞர் இந்திரன் தன் கம்பீரக் குரலில் கட்டளையிடுகிறார். ''நாம் நமது ஜன்னல்களைத் திறந்து வைப்போம். வெளியிலுள்ள நறுமணங்களும், பறவைகளின்பாடல்களும், அவதிப்படுவோரின் அழுகுரலும், நம்மை யாரோ வெளியிலிருந்து அழைக்கிறார்கள் என்ற உண்மையும் புலப்படும். நாம் ஜன்னல்களைத் திறந்து வைப்போம்; புதிய காற்றும் வெளிச்சமும் உள்ளே வரட்டும்''

(ஆப்பிரிக்க வானம் முன்னுரையில் - இந்திரன்)

தாழ்த்தப்பட்ட மக்களைத் தனிமைப் படுத்துவதில் வெற்றி கண்ட வேதியத் தத்துவமும் காந்திய நடைமுறையும் கைகோர்த்த போது அதன் ஆவேசமான எதிர் வினையாக எழுந்தது தலித் அரசியல்.

தலித் அரசியலின் பின்புலத்தோடு தலித் அழகியல் உருவாக, தலித் படைப்புகள் புதிது புதிதாய் பிறந்து கொண்டிருக்கின்றன.

''எல்லா தலித் இலக்கியமும் மனிதநேய இலக்கியம்தான். ஆனால் எல்லா மனிதநேய இலக்கியமும் தலித் இலக்கியம் அல்ல. மேலும் பிறப்பால் தலித்தான ஒருவர் எழுதுவதாலேயே அது தலித் இலக்கியமென ஆகி விடாது. எது தலித் அரசியலைப் பேசுகிறதோ அதுவே தலித் இலக்கியம்'' என்று குறிப்பிடும் கவிஞர் - விமர்சகர் - இந்திரனின் கருத்துக்கு மாறாக இருக்கிறது தலித் படைப்புகளில் வளர்ந்து வரும் எழுத்தாளரான அபிமானியின் கருத்து:

''தலித் படைப்புகளை தலித்துகள் தவிர மற்றவர்களால் சிறப்பாக எழுத முடியாது என்பது யதார்த்தமே. தீண்டாமை, வறுமையின் கொடுமை பற்றி ஒரு தலித்துக்குத்தான் அதிகம் புரியும். ஏனெனில் அவன் பட்ட காயங்களின் வலியிலிருந்து வடியும் சீழும் ரத்தமும் தரும் நாற்றம் அவனுக்கே சாத்தியம். தூர நின்று இரக்கம் காட்டுபவர்களால் அல்லது



படிப்பகம்

www.padippakam.com

வேடிக்கை பார்ப்பவர்களால் அதன் சித்திரவதையை உணர முடியாது'' (கலை, அக். 2001)

அபிமானியின் வார்த்தைகளில் உண்மை இருந்தாலும், தலித் சமூகத்திற்கு, தலித் பண்பாட்டுக்கு, தலித் கலக அரசியலுக்கு ஆதரவு தருகின்ற நேசசக்திகளைதலித்துகள் நிராகரிக்கத்தான் வேண்டுமா...?

உதாரணத்திற்கு, கவிஞர் பழமலய், முனைவர் பத்மாவதி, மக்கள் கவிஞர் இன்குலாப், சூரியதீபன், பேராசிரியர் கல்யாணி, சுப்ரபாரதி மணியன், கோவை ஞானி, இரா.இராமமூர்த்தி, இரா.நடராசன், பஞ்சு, அஸ்வகோஷ் அ.மார்க்ஸ், டாக்டர் சண்முக சுந்தரம், பாவண்ணன் போன்றவர்கள் பிறப்பால் தலித் அல்ல என்றாலும், தலித்துகளின் விடுதலைக்காக குரல் கொடுப்பவர்கள்; தலித்துகளின் நலனில் அக்கறை கொண்டவர்கள் முற்றிலுமாக இவர்களைப் போன்றவர்களைப் புறக்கணித்து இவர்களைப் போன்ற நேச சக்திகளின் ஆதரவை, தலித்துகள் இழக்கத்தான் வேண்டுமா...?

தய். கந்தசாமி, குறிப்பிடுவது போல,

''நான் சேரி
நீ ஊர்
தூரமாய்ப்போனது மனிதம்.''

தலித் படைப்புலகம், சிந்தனையில் கொள்ள வேண்டிய முக்கியமான கேள்வி இது.

அதே நேரம் தலித் அரசியலின் இறுதி லட்சியம், சாதிகளற்ற சமூகத்தை உருவாக்குவதுதான். சக மனிதர்களிடையே உறவின் தூரம் அதிகமானதற்கு சாதியும் ஒரு காரணமாய்ப் போனதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

''அருகில் இருக்கும் தூரம் நீ
நான் உன் துருவம்
நான் உன்னிடமும்
நீ என்னிடமும்
வந்தடைவதற்கான
பயணம்
இந்த வாழ்க்கை''

எனும் அழகிய பெரியவன் மட்டுமல்ல, யாருக்குமே இந்த வாழ்க்கைப் பயணம் எளிதாக இருப்பதில்லை. சாதி, மத, பொருளாதார வேறுபாடுகளால் கரடு முரடான சாலையாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, சாதியச் சாலையில் தலித்துகளின் பயணம் நிராகரிக்கப்பட்டதை வரலாறு நன்கறியும்.

ழீன்பால் சார்த்தர், நீக்ரோவியம் குறித்து சொன்னார்:

''இது நிறவெறியை எதிர்க்கும் நிறவெறி.''

தலித் இலக்கியத்திற்கும் இது பொருந்தும்.

இந்திய சமூக அமைப்பின் உச்சகட்டக் கொடுமையான சாதி அமைப்பை ஒழிப்பதற்காகவே இங்கு சாதி பேசப்படுகிறது. இந்த அடிப்படையில், காலங்காலமாய்த் தொடர்ந்து வரும் கொடுமைகளுக்கு எதிராகவும், சமூக, பொருளாதார சுரண்டலுக்கு எதிராகவும், இந்து மத ஆதிக்கத்தை எதிர்த்து பண்பாட்டுக் கலகங்களாகவும் தலித் படைப்பாக்கங்கள் வேர்விடத் தொடங்கின. தலித் படைப்பாளிகள் பலரும், தம் வாழ்வியல் சோகங்களை, குமுறல்களை, ஆவேசங்களை, கோபங்களை படைப்புகளாக்கினர்.

'எழுத்துக் கலையின் செய்நேர்த்தி அதற்குச் சமதையான அளவுக்கான கருப்பொருள் கொண்டதாக இல்லாது போவது என்பது ஒரு மோசடி' என்பார் காஸ்டன்டின் ஃபீடின். இங்கே படைப்புக் கலை என்பது தலித் படைப்பாளிகள் அனுபவங்களின் ஆழ அகலங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திகைத்து நிற்கிறது.

தலித் படைப்புகள், வசதியாக சாய்வு நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு படிப்பவர்களின் உள் உலகங்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. அவர்களின் மனசாட்சியைத் தொட்டு, ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாக நியாயம் கேட்கின்றன. புரியாத கவிதைகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் கவிஞரும், விமர்சகருமான முத்துநிலவன் கூறும்போது,

''எல்லாம் புரிந்த பின்னாலும் சிந்தனையைத் தொட்டுச் சிலிர்ப்பது தான் கவிதை. ஆனால் எதுவுமே புரியாமல் இருப்பதுதான் கவிதை, எந்த அளவுக்குப் புரியவில்லையோ அது அந்த அளவிற்கு நல்லகவிதை என்பது போன்ற புரிதல் வியாக்கியானங்களும் இங்கே தரப்படுகின்றன. இது ஏதோ புதுக்கவிஞர்களின் புலம்பல் அல்ல. மரபுக்கும் இந்த மரபு உண்டு.''

(முத்து நிலவன் நேர்காணல் - தினமணிக்கதிர் - 29.4.2001.)

நிலைமை இவ்வாறாக இருக்க, புரிதலின்மை என்ற வகையில் தலித் கவிதைகளை அடக்க இயலாது. அவை தென்றல் காற்றைப் போல் எளிமையானவை. புயல் காற்றைப் போல வார்த்தைகளில் வலிமையானவை. புரியச் சிரமப் படுத்துகிற மொழி என ஒரு கோட்டுக்குக் கீழே கொண்டு வர விரும்பினால், நாஞ்சில் மொழியில் எழுதும் என்.டி. ராஜ்குமாரின் கவிதைகளைச் சிலர் கூறலாம். அதுவும், அந்த வட்டார மொழி சார்ந்து எழுதுவதால் இந்த விமர்சனத்தை வைக்கக் கூடும். அதே நேரம், ராஜ்குமாரின் எல்லாக் கவிதைகளும் இந்த வகையைச் சார்ந்தவை அல்ல!

''ஆடுகிற சாமியை இடுப்பினைப் பிடித்திழுத்து
என் பிள்ளைகளுக்கும் எனக்குமொரு நல்ல கெதியைச் சொல்லிப்போ
இல்லேன்னா ஒனக்கு இனிமே
சோறுதண்ணிபூசஒண்ணும்கிடையாது
உள்ள போட்டு கோவில் நடைய
இழுத்தடைச்சுப் போடுவேன் என்று
அதிகாரத்தோடு சொல்ல
என்ன நம்பு உனக்கு நானுண்டு
எனச்சொல்லி
திருநீர் இட்டுக் கொடுப்பான் சுடலை
எனது பாட்டிக்கு.
இப்படியாகத்தான் எங்கள் காட்டு
தெய்வங்களோடு
சண்டையிட்டுக் கொள்வோம்
அன்யோன்யமாய்''

(என்.டி.ராஜ்குமார் - ஒடக்கு)

வெறும் ஒற்றைப் பரிமாணக் குறியீடுகளை மாத்திரம் நம்பாமல் தலித்துகளோடு இரண்டறக் கலந்த வேறு பல ஆழமான பரிமாணங்களைத் தரக் கூடியவற்றைப் பயன்படுத்துவதாலேயே ஒரு படைப்பு பூரணத்துவம் பெறும் என்பதை தலித் படைப்பாளிகள் உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

மேகவண்ணனின் 'கடலுடல்' கவிதை இதை உறுதி செய்கிறது.

'அலைகள்
ஒருபோதும் ஓயாத அலைகள்
அடங்க மறுத்து
ஆர்ப்பரிக்கும் அலைகள்
பாய்மரம் செலுத்துகின்றன
கட்டுமரங்களில் புரள்கின்றன
வேறு வழியின்றி
விசைக்கலங்களின்
வழியகன்று நிற்கின்றன''

(புதிய விருட்சம் - ஏப். 2001)

புரிதல் தளத்தில் சிறிது கடினமாக இருப்பினும், பல்வேறு அர்த்தங்கள் பொதிந்து, வாசிப்பவரின் அனுபவங்களோடு சேர்ந்து, மறுவாசிப்பில் புதிய பரிமாணங்களைக் கிடைக்கச் செய்வதே நல்ல கவிதைகளாக இருக்கின்றன.

கவிஞர் இந்திரனின் 'தோற்றவன் குரல்' கவிதையை வாசிக்கும்போது இது நமக்குப் புரியவரும். இது 'தலித்'களுக்கான கவிதை மட்டுமல்ல; ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களுக்குமானது.



படிப்பகம்

www.padippakam.com

''நிராயுதபாணியாகப் போர்புரியும்
என்னை
நீங்கள் தோற்கடிக்க முடியாது
ஏனெனில்
நான் ஏற்கனவே தோற்றவன்
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே
என்னை நீங்கள் தோற்கடித்து
விட்டீர்கள்
கடவுளின் பெயரைச் சொல்லி
இதுவரையிலும்
என் நிழல் கூட
உங்களைத் தீண்டாதவாறு
கவனமாய் இருந்திருக்கறீர்கள்
இப்போதும் ஓர்
ஆயுதத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்
ஒட்டுச்சீட்டு
என் கையில் கொடுக்கப்பட்ட
எல்லா ஆயுதங்களையும்
நான் உங்களுக்கு எதிராகப்
பயன்படுத்தாததைப் போல்
இதையும் பயன்படுத்த மாட்டேன்
என்கிற நம்பிக்கையோடு

(இந்திரன் தொகுப்பு)

ஒரே நேரத்தில், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், போலீஸ் துணையுடன் தலித் மக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை, மிக அழகான செறிவான கவிதையால் சொல்லியிருக்கிறார் மு. மல்லன்.

உன் ஒவ்வொரு உறுப்பிலும்
ஒளிரும் நகைகளில்
ஏதோ ஒரு சில
எம் பெண்டிர்க்கு உரியதாய்
இருக்கலாம்.
முன்பொரு நாள் - நீ
கொடியங்குளத்தில் விளையாடிய
கள்ளாம் போலிசில்...
அரைஞான் கயிற்றோடு
என் குழந்தையின் அரசிலையும்
களவு போயிற்று.
அன்புச் சகோதரி
அந்த அரசிலையின்
அகலமும் வடிவமும்
உன் ஆலிலைக்குப்
போதுமானதாய் இருக்கிறதா?

- (குமுதம் - 4.11.99)

கவிதையின் கேள்வி முடிகிறபோது தலித்துகளின் விரோதி யார் என்ற பதில் கிடைத்து விடுகிறது. சரியான விகிதத்தில் எள்ளலும், கோபமும் கலந்து நெய்யப்பட்ட சிறந்த தலித் கவிதைகளில் இதுவும் ஒன்று.

இதுகாறும் நமக்குக் கிடைத்திருக்கிற தலித் கவிதைகள். ஒடுக்கப்படுகிற சமூகத்தின் விடிகுரலாக மட்டுமின்றி விரிவான தளத்தில் இயங்குவதைப் பார்க்க முடிகிறது.

'தலித் இலக்கியம் என்பது தலித் அரசியல் சம்பந்தப்பட்டது. தலித் வாழ்க்கையைப் பேசி இரக்கத்தை யாசிப்பதுடன் தலித் இலக்கியத்தின் வேலை முடிவடைந்து விடுவதில்லை.

நவீன இலக்கியங்களில், குறிப்பாக பின் நவீனத்துவப் பின்னணியில் இயங்கும் பல்வேறு இலக்கிய வகைகளும் தலித் அரசியலுக்கும், தலித் படைப்புகளுக்கும் வலு சேர்க்கின்றன. அதே நேரம், தலித் படைப்பாளி என்பவன் வெறும் படைப்பாளி என்ற வகையில் மட்டும் நின்று விடக்கூடாது. அடிப்படையான விஷயங்களில் தலித் படைப்பாளிகள் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

இலக்கியம், எழுத்து பற்றிய அறிவை தலித் மக்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும். சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் தலித் மக்களின் வாழ்க்கையையே சுரண்டிக் கொழுக்கும் ஆதிக்க பீடங்களிலிருந்து விடுதலைக்கான படைப்புகளை உருவாக்குவதில் தலித் படைப்பாளிகள் உத்வேகத்துடன் இயங்க வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

## ரிஷியின் குறுங்கவிதைகள்

### குற்றமும் தண்டனையும்

எலும்புகள் முறிய வன்புணர்ச்சிக் காளானதொரு
ஒன்பது வயதுக் குழந்தை
குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை - பதினான்கு வருடங்கள்.
உற்றமித்ர பந்துக்கள் சூழ திருமதியாக்கிக் கொண்ட
ஒன்பது வயதுக் குழந்தையைக் கூடினான் இன்னொருவன்.
குழந்தைக்கு ஆயுள் தண்டனை - வாழ்நாள் முச்சூடும்.



### தகிப்பு

வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது.
எட்டாக மடித்த உடலுடன் கிடத்தப்பட்டிருந்தான்.
குரல் மட்டும் விட்டு விட்டுப் பிச்சை யெடுத்தவாறு
தொடுவான மெட்டாப் பயணத்தில் எதையோ பிடிமானமாக்கி
தொட்டுச் செல்வதாய் காலனேகம் எட்டிப் போகும்
வற்ற மாட்டாது மிச்சமிருக்கும் துளி மனிதாபிமானம்
ஒரு கணம் நம்மைப் பற்றிக் கிடத்தும் அவ்விடத்தில்
கொளுத்திக் கொண்டிருக்கிறது வெய்யில்

### மேடு பள்ளங்கள்

தெருவெல்லாம் இறைந்து கிடந்தன தங்கக் கைக்குட்டைகள் -
திடீர் தானமாய்.
அரசியல்வாதியின் உறைவிடத்தில் அன்று வருமான வரிச் சோதனை.
நம்மைப் புரக்க வந்தவர் தம்மைப் புரந்து கொண்டதில்
அதிகரித்த தரித்திரர்கள்
மடித்துக் கோவணமாய் உடுத்தவும் காணாமல்....



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# கவிஞர் இன்குலாப்பின் அரசியல் ஈடுபாடுகள்

*அ.மார்க்ஸ்*

[இன்குலாப் அவர்களின் பேராசிரியர் பணிஓய்வு விழாவில் (சென்னை சூலை 14, 2002) 'இன்குலாப்பின் அரசியல்' என்னும் தலைப்பில் பேசியது.]

சுமார் முப்பதாண்டுகளாகத் தமிழக அரசியலில் தனக்கான தனித்துவத்துடன் இயங்கியவர் இன்குலாப். நக்சல்பாரி இயக்கத்தின்பால்எனக்குஈடுபாடு ஏற்படுவதற்கு இன்குலாப்பின் கவிதைகளும் ஒரு காரணமாக இருந்ததைப் பெருமையோடு நினைவு கூர்கிறேன். தி.மு.க. அரசியல், நக்சல்பாரி இயக்கம், தமிழ்த்தேசஅரசியல்என்பதாக அவரது ஈடுபாடுகள் அமைந்தது நமக்குத் தெரியும். இந்த அரசியல்களுக்குள் அவர் எவ்வாறு நுழைந்தார், எப்படி வெளிவந்தார், எங்கே நிற்கிறார் என அறிய அவரையே நேரில் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் உரையாடிக் குறிப்புகள் எடுத்துக் கொண்டேன். அவரது நிலைபாடுகளைப் புரிந்து கொள்ள அவரது கட்டுரைத் தொகுப்புகளும் உதவின.*

1940களின் மத்தியில் கீழக்கரையில் ஒரு எளிய இசுலாமிய-சித்த மருத்துவக் குடும்பத்தில் பிறந்தவர் இன்குலாப் என்கிற சாகுல் ஹமீது. அவருக்கு விவரம் தெரியவந்த பள்ளி நாட்கள் தி.மு.க. உருவாகி ஏறுமுகமாக வளர்ச்சி பெற்ற கால கட்டத்துடன் இணைகின்றன. தமிழ்ப் பற்று, பார்ப்பன எதிர்ப்பு (ஓரளவுக்கு), திராவிட நாடு பிரிவினை, பொதுமைச் சிந்தனைகள் என்பதாக அரசியல் சொல்லாடல்களை முன்வைத்து இளைஞர்களைப் பெருவாரியாகத் தன் பக்கம் தி.மு.க. ஈர்த்தகாலகட்டம்அது. இன்குலாப்பும்இந்தப்போக்கில் அடித்துச் செல்லப்படுகிறார். மதுரை தியாகராயர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது (1965) இந்தி எதிர்ப்புப் போராட்டம். போலீசிடம் அடி வாங்கும் அளவிற்கு இன்குலாப்பின் ஈடுபாடுகள்இப்போராட்டத்தில் அமைந்தன.

1966இல் பயிற்றுநராகப் புதுக் கல்லூரியில் சேர்ந்த போது பெரும்பாலும் இடதுசாரிகள் முன்னின்று செயல் பட்ட மக்கள் எழுத்தாளர் சங்கத்தில் ஈடுபாடு. நா.காமராசன், என்.ஆர்.தாசன், கார்க்கி சண்முகம், டி.செல்வராஜ், தி.க.சி என இன்குலாப்பின் தொடர்புகள் அமைந்தன. இக்கால கட்டத்திலும் அவருக்கு இலக்கிய வழியில் மார்க்சியத்துடன் நெருக்கம் ஏற்பட்டதாகவும் ரசிய, சீன இலக்கியங்களு டனும் பரிச்சயம் கொண்டதாகவும் இன்குலாப் கூறினார் (நேர்பேச்சில்). 1968இல் ஏற்பட்ட வெண்மணி நிகழ்வும் அதை அண்ணாவும் தி.மு.க அரசும் கையாண்ட விதமும் தன்னை தி.மு.க அரசியலிலிருந்து விடுவித்தது என்றும் அவர் கூறினார்.

1970களின் முற்பகுதியில் அவருக்கு ஏற்பட்ட இன்னொரு முக்கிய தொடர்பு இளவேனிலை ஆசிரியராகக் கொண்ட 'கார்க்கி' இதழ். 'விடியல்கீதங்கள்' என்னும்அவரது கவிதையை முதன்முதலில் 'இன்குலாப்' என்கிற பெயரில் 'கார்க்கி' இதழில் இளவேனில் வெளியிடுகிறார். மார்க்சிஸ்ட் கட்சி அரசியல் அவரை ஈர்க்கிறது. அக்கட்சியின் கூட்டங்கள், மாநாடுகளில் கலந்துகொள்கிறார், கோகலே ஹாலில் ஈ.எம்.எஸ். பேசிய கூட்டத்தில் கவிதை வாசிக்கிறார்.

1975இல் அவசர நிலைப் பிரகடனம். சனநாயகப் பறிப்பு, அடக்குமுறை, சிறைக்கொடுமைகள் ஆகியன சமூகச்சிந்தனை யுள்ள அன்றைய இளைஞர்கள் பலரையும் பாதித்தது போலவே இன்குலாப்பையும்பாதிக்கிறது. இக்காலகட்டத்தில் அவருக்கு ஏ.எம். கோதண்டராமன், பி.வி. சீனிவாசன் முதலான நக்சல்பாரி இயக்கத்தின் முக்கிய தோழர்களுடன் தொடர்பு ஏற்படுகிறது. கொஞ்சம் கொஞ்சமாக நக்சல்பாரி இயக்கத்தில் ஈடுபாடு அதிகரித்து வினோத் மிஸ்ரா தலைமை யிலான மார்க்சிய லெனினியக் குழுவில் இணைகிறார். மார்க்சிஸ்ட் கட்சியின் சட்ட மன்ற நுழைவுஅரசியலின்பால் ஏற்பட்ட வெறுப்பும் நக்சல்பாரிகள் முன் வைத்த அரசு முதலாளியம், அரைக் காலனிய-அரை நிலப்பிரபுத்துவம் முதலான கருத்துகளுடன் உடன்பட்டதும் தான் மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து விலகி மா.லெ. குழு ஒன்றில் இணைந்த தற்குக் காரணமாகிறது என்றும் இன்குலாப் குறிப்பிட்டார்.**

* அவரது முழுமையான கட்டுரைத் தொகுப்பு ஒன்று வெளிவர உள்ளது. இதுவரை நூலாக வெளிவந்த கட்டுரை கள் மட்டுமே அதில் தொகுக்கப்படு வதாகவும், அதிலும் கூட எந்த இதழ்களில், என்ன தேதிகளில் வெளிவந்தவை என்கிற குறிப்புகள் இல்லை எனவும் அறிகிறேன். இந்த விவரங்களோடு அவரது மற்றைய பேட்டிகள், தலையங் கங்கள், முன்னுரைகள் ஆகியவையும் சேர்த்துத் தொகுக்கப் படுதல் அவசியம்.

** மா.லெ குழுக்களில் வினோத் மிஸ்ரா குழுவைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தைக் கேட்டபோது இன்குலாப் இப்படிச் சொன்னார்: தன்னுடன் தொடர்பு கொண்டிருந்த வேறு சில குழுக்களின் தலைவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தம்மை வினோத் மிஸ்ரா குழுவின் பால் தள்ளியது என்றார். எடுத்துக்காட்டாகத் தி.மு.க தொழிற் சங்கத் தலைவர் ஒருவரின் கொலையுடன் தொடர்புபடுத்திப் பேசப்பட்ட தலைமறைவுத் தோழர் ஒருவர் அப்போது கோபாலபுரத்திற்கு அருகில் இருந்த இன்குலாப்பின் வீட்டிற்குத் தங்க (Shelter) வந்து கொண்டிருந்தார். சுற்றுப்புறத்திலிருந்த தி.மு.க. காரர்கள் இதைக் கவனித்து வெளிப்படையாகப் பேசவும் தொடங்கி விட்டனர். எனவே அந்தத் தோழரை இனி தங்குவதற்கு வீட்டிற்கு வர வேண்டாம் என இன்குலாப் வேண்டி யிருக்கிறார். அப்படியும் அவர் வருகை தொடர்ந்தது. ஒரு நாள் அவரை உள்ளே படுக்க வைத்துவிட்டு கையில் அரிவாளுடன் இன்குலாப் வெளியே படுக்க வேண்டிய தாயிற்று. இனி வரவேண்டாம் என உறுதியாகச் சொன்ன இன்குலாப்பை அந்தத் தோழர் ''குட்டி முதலாளி'' என விமர்சித்ததாகவும் 'கவிதை எழுதுவதும் குட்டி முதலாளியச் செயல்தான்' எனக் கூறியதாகவும் இன்குலாப் கூறினார். அத்தோடு அவரது தொடர்பும் அவரது இயக்கத்தின் தொடர்பும் இன்குலாப்பிற்கு முடிவுற்றது. தோழர் பி.வி. சீனிவாசனுடன் தொடர்பு அதிகரித்தது.



படிப்பகம்

www.padippakam.com

மா.லெ.குழுக்களில் வினோத் மிஸ்ரா குழுவைத் தேர்வு செய்தது தற்செயலானதுதான் என்றபோதிலும், அவ்வியக்கம் முன் வைத்த வர்க்க எதிரிகளின் அழித்தொழிப்பு என்கிற நடைமுறைப் பாதையில் (tactics) அவருக்கு நம்பிக்கை இருந்தது. மா.லெ.இயக்கத்தினர் மத்தியில் உணர்வூட்ட அன்று பெரிதும் பயன்பட்ட அவரது 'திருவிழா' கவிதை இதற்கொரு சான்று.

எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்கிற நெருக்கடி நிறைந்த காலம் அது. கோபாலபுரத்தில் ஒரு ஒண்டுக் குடித்தனம்; ஏழைக் குடும்பத்தில் பிறந்த மனைவியின் அச்சம்; அது குடும்பத்தில் ஏற்படுத்திய சலனங்கள், நெருக்கடிகள். இத்தனைக்கும் மத்தியில் மாவோவின் 'முரண்பாடுகள்,' சாருமஜூம்தாரின் பல முக்கிய கட்டுரைகள் ஆகியவற்றைக் கட்சிக்காக இன்குலாப் மொழிபெயர்க்கிறார். சாருவின் மொழிபெயர்ப்புக் கட்டுரை ஒன்றின் கையெழுத்துப்பிரதி ஒன்றுடன்கட்சிப் பொறுப்பாளர்ஒருவர் கைது செய்யப்படுகிறார். இன்குலாப் மொழிபெயர்த்த 'முரண்பாடுகள்' வெளியிட்ட நாகிரெட்டி குழுவைச் சேர்ந்த தோழர் ராதா கிருஷ்ணனும் கைது செய்யப்படுகிறார்.

தானும் கைது செய்யப்படலாம் என எதிர்பார்த்த இன்குலாப், கைது செய்யும் போது மனைவி அழுது புரளும் காட்சியைத் தவிர்க்க வேண்டி அவரை ஊருக்கு அனுப்புகிறார். கல்லூரியில் கைது செய்வதைத் தவிர்க்கும் போலீஸ் தன்னை வீட்டில் தான் கைது செய்யும் என எதிர்பார்த்து மனைவி இருக்கும் போதுகூட வெளியே சென்று நண்பர்கள், தோழர்கள் இல்லத்தில், லாட்ஜுகளில் தங்குகிறார். தங்குமிடங்களில் போலீஸ் வந்து தொல்லை செய்தது.

1980-81 காலகட்டத்தில் தோழர்கள் எஸ்.வி. ராசதுரை, தெய்வசுந்தரம் முதலானோர் கைதாகி விசாரிக்கப்பட்ட போது இன்குலாப்பையும் காவல்துறை அழைத்துச்சென்று விசாரித்தது. எழும்பூரில் உள்ள கமிஷனர் அலுவலகத்தில் மூன்று மணி நேர விசாரணை. இருநூறு கேள்விகளைக் கொடுத்து பதில் சொல்லச் சொல்லியுள்ளனர். ரேகையைப் பதிவு செய்தனர், புகைப்படம் பிடித்தனர்.★ வழக்கேதுமின்றி விடுதலை செய்தனர்.

எண்பதுகளின் பிற்பகுதியில் ராஜீவ் காந்தி சென்னை வரும் போதெல்லாம் மா.லெ. குழுக்களை சேர்ந்த முக்கிய தோழர்களைக்கைது செய்து பின்னர்ராஜீவ் சென்றவுடன் விடுதலை செய்வது என்கிற நடைமுறையை அன்றைய தமிழக அரசு மேற்கொண்டது. கவிஞர்கள் இன்குலாப், பழமலய், பொதியவெற்பன் ஆகியோரையும்கூட காவல்துறை விட்டு வைக்கவில்லை. அப்போதுஒரு முறை ராஜீவ் வருகையை ஒட்டி இன்குலாப்பை இரவு 3 மணி அளவில் காவல்துறை கைது செய்து அழைத்துச் சென்றது. கல்லூரிக்குச் செய்திபரவியவுடன் ஆசிரியர்கள் தேர்வுப் புறக்கணிப்புச் செய்தனர். கல்லூரி முதல்வர் ஆணையர் துரைக்கு 'போன்' செய்து இன்குலாப்பை விடுதலை செய்யாவிட்டால் கல்லூரியில் தேர்வு நடைபெறாது என்று கூறினார். பேராசிரியர்கள் தமிழன்பன், என்.டி. சுகாபுதின் ஆகியோரைக் காவல் நிலையத்திற்கும் அனுப்பினார். எழுதிக் கொடுத்தால் விடுதலை செய்வதாகக் காவல் துறை கூறியது. இன்குலாப் மறுத்தார். இறுதியில் பார்க்க வந்திருந்த பேராசிரியர்கள் எழுதிக் கொடுத்த பின்பு இன்குலாப் விடுதலை செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து இரண்டு நாட்கள் காவல் நிலையம் சென்று கையெழுத்துப் போடவும் நேர்ந்திருக்கிறது.❖

நெருக்கடி நிலை காலத்தில் (1976) தோழர்கள் அப்பு, சீராளன் முதலியோர் காவல் துறையால் படுகொலை செய்யப்பட்ட பின்னணியில் இன்குலாப்பை ஆசிரியராகக் கொண்டு 'மனிதன்' இதழ் இரண்டாம் முறை தொடங்கப்பட்டது.❇

இன்குலாப்பின் நடவடிக்கைகள் குறித்துக் காவல்துறை கல்லூரி முதல்வரிடம் எச்சரிக்கை செய்தது. அப்போது கல்லூரி முதல்வராக இருந்த டாக்டர் மொகிதீன் ஒரு நல்ல சனநாயகவாதி. இன்குலாப்பைக் கூப்பிட்டு விசாரித்த அவர் வேறெந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எண்பதுகளின் பிற்பகுதியில் ஷாபானு பிரச்சினையின் போது முஸ்லிம்களின் நிலைப்பாட்டை விமர்சித்து இன்குலாப் 'தராசில்' எழுதிய போது ஊர்க்காரர்கள் கல்லூரி நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளனர். அவரை கல்லூரியை விட்டு வெளியேற்ற வேண்டும் எனவும் கோரியுள்ளனர் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.

எனினும் நிர்வாகத்திற்கு எதிராக ஆசிரியர்களைத் திரட்டிப் போராடவும் இன்குலாப் தயங்கியதில்லை. முதல்வர் ஒருவரைப் பதவி நீக்கம் செய்து வேறொருவரை முறையற்ற வகையில் நியமனம் செய்தபோது நிர்வாகத்திற்கு எதிராக ஆசிரியர், ஊழியர், மாணவர் அடங்கிய கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்று தொடங்குவதற்கு இன்குலாப் காரணமாக இருந்துள்ளார். போராட்டத்தின் உச்ச கட்டத்தில் இக் குழு கல்லூரியைக் கைப்பற்றி நிர்வாகம் நியமித்த முதல்வரை 'நீக்கியது'. மூன்று ஆசிரியர்கள், மூன்றுஊழியர்கள், மூன்று மாணவர்கள் அடங்கிய ஒன்பதுபேர் கொண்ட குழு ஒன்றிடம் கல்லூரி ஒப்படைக்கப்பட்டது. இறுதியில் நிர்வாகம் பணிந்தது.✳

★ ''மற்றவர்களெல்லாம் தத்துவம் பேசினார்கள். நீங்கள் ஏன் பேசவில்லை?'' என விசாரணையின் போது ஒரு அதிகாரி கேட்டாராம். வெளியே அனுப்பப்படுமுன் ''இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று அதிகாரிகள் கேட்ட போது ''இதுவரை செய்ததை இரு மடங்கு அதிகமாகச் செய்யப் போகிறேன்,'' என விடையிறுத்திருக்கிறார் இன்குலாப்.

❖ இன்குலாப்புடன் கைது செய்யப்படிருந்த தோழர் நீண்ட பயணம் சுந்தரம் ''ஜெயிலுக்'கு வரத் தயங்கக் கூடாது'' என்று கூறினாராம். இது குறித்து இன்குலாப் சொன்னது: ''சிறைப்படுவது எனக்குப் பிடிக்காது சிறைப்படக்கூடிய நிலை ஏற்பட்டால், பிடிபடுவதைவிட தலைமறைவு வாழ்க்கையைத் தேர்வு செய்வேன்.'' சிறைப்படுவதைத் தவிர்க்க கவி சுப்பிரமணிய பாரதி பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்ததும், வெளியே வந்தவுடன் கைது செய்யப்பட்டுக் கடலூர் சிறையில் அடைக்கப்பட்ட போது எழுதிக் கொடுத்து விட்டு வெளியே வந்ததும் நினைவுக்கு வருகிறது.

❇ தோழர் கோவை ஈசுவரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1976 வாக்கில் 'மனிதன்' முதலில் தொடங்கப்பட்டது.

✳ இப்போராட்டத்தின் போது பழனிபாபா அவர்கள் நிர்வாகத்திற்கு ஆதரவாக ரவுடிகளை அழைத்து வந்து இன்குலாப்பையும் போராட்டக் குழுவினரையும் மிரட்டியிருக்கிறார். ரவுடிகளை உள்ளே வைத்து கல்லூரியைக் 'கெரோ' செய்தனர் போராட்டக் குழுவினர். விடுதித் தொழிலாளிகளும் உள்ளே மாட்டிக் கொண்டவர்களுக்கு உணவு சமைத்துத் தராத நிலையில் நிர்வாகம் பணிந்தது. பழனிபாபாவின் இன்னொரு முகம் இது. இதே காரணத்திற்காக இன்குலாப் இன்றுவரை பாபாவை மன்னிக்கத் தயாராக இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து ஆசிரியர் இயக்கத்தில் ஏன் தீவிரமாகச் செயல் படவில்லை என்று வினவியபோது இன்குலாப் சொன்ன பதில் பலருக்கு வியப்பை அளிக்கும். போராட்டத்தின் விளைவாக ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் சீரழிவு ஏற்பட்டது, கல்லூரியில் ஒழுக்கம் குறைந்தது என்றார் இன்குலாப்.

எண்பதுகளில் இன்குலாப்பின் கட்டுரைகள் 'தராசு' முதலான வெகுசன ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்தன. பின்னர் 'நக்கீரன்' 'உங்கள் விசிட்டர்', 'நாற்காலி' முதலான இதழ் களில்அவர் கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டன.

1983இல் வினோத் மிஸ்ரா குழுவின் சார்பாக மூன்றாம் முறையாக 'மனிதன்' தொடங்கப்பட்டபோது அதற்குப் 'புதிய மனிதன்' எனப் பெயரிடப்பட்டது. இன்குலாப் ஆசிரியர். தோழர் மதிவாணன் கட்சியின் பிரதிநிதியாக 'புதிய மனிதனில்' பங்கு பெற்றார். அப்போது சில நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன என்றார் இன்குலாப். ஆசிரியராக இருந்த போதிலும் தலையங்கம் எழுதுவதற்கு இன்குலாப் அனுமதிக்கப்படவில்லை. ஏன் எனக் கேட்ட போது கட்சி தான் தலையங்கம் எழுதும் எனப் பதில் வந்தது. 'அப்போது நான் கட்சியில்லையா?' என இன்குலாப் வினைவிய போது பிரச்சினை முற்றியது.

இதே நேரத்தில் வினோத் மிஸ்ரா தலைமையிலான மா.லெ. கட்சியின் பல நிலைப்பாடுகளில் இன்குலாப் கருத்து வேற்றுமை கொண்டார். தேர்தல் பங்கேற்பு என்கிற நிலைப் பாட்டைக் கட்சி மேற்கொண்டதும், காசுமீர் பிரச்சினையில் சுய நிர்ணய உரிமையைக்கட்சி ஏற்காததும் ஈழப்பிரச்சினையில் கட்சி மேற்கொண்ட நிலைப்பாடும் தனக்கு உடன்பாடில்லை என்கிறார் இன்குலாப். எல்லாவற்றிற்கும் மேலாக இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் போராட்டக்களத்தில் நின்ற உயர் சாதி மாணவர்கள் சிலரைக் கட்சியின் வேட்பாளர்களாகத் தேர்தலில் நிறுத்தியது இன்குலாப்பை வெகுவாகப் பாதித் தது. கட்சித் தலைவர்களில் ஒருவரான மறைந்த தோழர் நாக்பூஷன் பட்நாயக் அவர்கள் இட ஒதுக்கீடு கோரிக்கைக்கு மாற்றாக 'எல்லோருக்கும் வேலை' என்கிற முழக்கத்தை வைத்த போது. இன்குலாப் அதனை எதிர்த்தார். கட்சியில் விவாதித்தார். சரியான பதிலில்லை என்கிறார் இன்குலாப். இறுதியில் பீகார் மாதிரி 'மக்கள் பண்பாட்டு மையம்' ஏற்படுத்தி அதனை அரசியல் வேலைகளுக்குப் 'பயன்படுத்திக் கொள்ளுதல்' என்கிற நிலைப்பாட்டைக் கட்சி மேற்கொண்ட போது கட்சியிலிருந்து ஒதுங்கினேன் என்கிறார் இன்குலாப்★

அதிலிருந்து இன்று வரை எந்தக் கட்சி அமைப்பிலும் இணையாமல் சுயேச்சையாக இருந்து தலித் அரசியல், மனித உரிமைகள், சுற்றுச் சூழல், ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய இனப் பிரச்சினை, புலிகள் ஆதரவு என்கிற நிலைப்பாடு களுக்கு ஆதரவளித்து தனது எழுத்து மற்றும் இயக்கப் பணிகளை மேற்கொண்டு வருவது நம் எல்லோருக்கும் தெரியும்.

எண்பதுக்குப் பின்னர் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரை களிலும் அவர் மேற்குறித்த கருத்தாக்கங்களை ஒட்டியே கட்டுரை எழுதியுள்ளார். இவை தவிர முஸ்லிம் சமுதாயத்தில் விமர்சிக்கப்பட வேண்டியவை எனத் தான் கருதுபவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து விமர்சனங்கள் செய்து அதனால் கடும் எதிர்ப்புக்குள்ளாகியிருக்கிறார். தமிழ்த் தேசிய சக்தி களுடன் இணைந்து புலிகள் ஆதரவிற்கு முதன்மை கொடுத்துச் செயற்பட்டிருக்கின்றார்.

## 2

பல்வேறு அரசியல் நிலைபாடுகளில் நின்றிருந்தபோதும் பொதுமைச் சிந்தனைகளுக்கு ஆதரவு, ஒடுக்கப்பட்டவர் களின் பால் சாய்வு, ஆதிக்க எதிர்ப்பு என்கிற வகையில் இந்த முப்பதாண்டுகளில் அவரது எழுத்து ஒரே சீராக அமைந்து உள்ளது. 'இக் கவிதை அல்லது கட்டுரை நக்சல்பாரி இயக்கத்தில் இருந்தபோது எழுதியது, இது அதிலிருந்து விலகி வந்த பின்பு எழுதியது' என்றெல்லாம் எளிதில் அடையாளம் காணமுடியாதபடி இன்குலாப்பின் எழுத்து அமைகிறது. அவரது ஏகாதிபத்திய எதிர்ப்புப் பார்வை அல்லது தலித் ஆதரவு நோக்கு என்பவற்றிற்கு அவர் கட்சியில் இருந்தாரா இல்லையா என்பது ஆதாரமாக அமையவில்லை.✳

அதேபோல அவரது தலித் ஆதரவு நிலைப்பாடுகள் என்பதும் ஏதோ தலித்தியம் மேலுக்கு வந்த பின்பாக எடுக்கப்பட்டவை அல்ல.

மிக்க எளிய குடும்பத்தில் பிறந்த இன்குலாப் இன்றுவரை அந்த எளிமையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று. தன்னைச் சுற்றி எந்த அதிகாரத்தையும் அவர் கட்டமைத்துக் கொண்டதில்லை. எந்த ஒரு நிறுவனத் தையும் தனது அதிகாரச் செயற்பாடுகளுக்காக வளைத்துப் போட்டுக் கொண்டது இல்லை. மனித உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள், இலக்கிய அமைப்புகள் உள்ளிட்ட இணை அதிகார அமைப்புகள் எதிலும் தலைமை தாங்கி அதிகாரம் செலுத்தியதில்லை. எந்த ஒரு 'இசம்' அல்லது இலக்கியப் போக்கிற்கும் தன்னை 'அத்தாரிட்டி'-யாகக் கட்டமைத்துக் கொண்டதும் இல்லை. முஸ்லிம்கள் பெரிதும் வசிக்கும் ஜானிஜான் கான் தெருவில் ஒரு எளிய வீட்டி லேயே கடந்த பல ஆண்டுகளாக நான் அவரைச் சந்தித்து வருகின்றேன். அவரது புதல்வர்கள் இருவரும் சொல்லிக் கொள்ளும்படியாகப் பெரிய பதவிகளிலும் கூட இல்லை. இணை அதிகார அமைப்புகளில் உள்ளவர்கள் மைய அதிகார அமைப்பிலுள்ளவர்களுக்குத் தாம் சளைத்தவர் களில்லை என நிறுவுகிற புதிய தலைமுறையை சேர்ந்தவரல்ல இன்குலாப். இன்றும் அவர் பழைய நக்சல்பாரிக்காரர்தான்.✝

★ நக்சல்பாரி அரசியலிலிருந்து விலக வேண்டும் என அரசும் காவல்துறையும் முஸ்லிம் மதவாதிகள் சிலரும் மிரட்டிய போதெல்லாம் அவற்றை அஞ்சாது எதிர் கொண்டவர் இன்குலாப். 'இன்குலாப்பை Liquidate பண்ணப் போகிறோம்' எனக் காவல்துறை அதிகாரி ஒருவர் சொன்னபோதும்கூட அதற்காக அவர் கலங்கவில்லை. முரசொலி அடியாருக்குப் பதில் சொல்லும்போது ''நக்சல்பாரியாகும் எனது உரிமையை எந்தக் கொம்பனாலும் பறிக்க முடியாது'' என்று எழுதினார். அவர் இறுதியில் கட்சியிலிருந்து விலகிய கதையை அறியும் போது ''நக்சல்பாரிக் கட்சியிலிருந்து இன்குலாப்பை விலகச் செய்ய வேறு எந்தக் கொம்பர்களாலும் முடியாது. நக்சல்பாரிகளால் மட்டும்தான் முடியும்'' என்று சொல்லத் தோன்றுகிறது.

✳ ஒரு சிலரது எழுத்துகளை மட்டுமே வைத்துக்கொண்டு எந்தக் கட்டுரை எந்தக் குழுவில் இருந்தபோது எழுதியது எனச் சொல்லிவிடலாம். அத்தகைய குறுகிய பார்வைகள் இன்குலாப்பிடம் இல்லை.

✝ தன்னார்வக் குழுக்களின் மேடைகளைப் பயன்படுத்தினார், எம்.எஸ்.எஸ். ஆர். பவுண்டேஷன் முதலான பெரிய அமைப்புகளுடன் இணைந்து செயல்படுகிறார் என்பது பற்றி இன்குலாப் மீது விமர்சனங்கள் உண்டு. விரிவாகப் பின்னர் பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

புலிகள் ஆதரவு என்கிற நிலைப்பாட்டிலும்கூட அவரை மற்ற புலி ஆதரவாளர்களிடமிருந்து சற்றே வேறுபடுத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. அவர் கனடாவிற்குச் சென்ற போது நடந்த ஒரு நிகழ்ச்சி. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் புலிகள் எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் முஸ்லிம்களை நாட்டை விட்டு வெளியேற்றி வைத்துள்ள கொடுமை பற்றி யாரோ கேட்டிருக்கிறார்கள். 'இரண்டு பக்கமும் தவறு நடந்திருக்கிறது. இசுலாமியர்கள் தமிழர்கள் அல்ல எனச் சொல்லவில்லை. நீங்கள் அவர்களை ஒதுக்கி விட்டீர்கள்' என்று இன்குலாப் பதிலளித்துள்ளார். *

புலம் பெயர்ந்த உயர் சாதித் தமிழர்கள் மத்தியில் வெளிப் படும் சாதியம், சைவ மேன்மைக் கருத்துகளையும் விமர்சித் திருக்கிறார். புலிகள் ஆதரவாளர்கள் இன்குலாப்பின் சில கருத்துகளைக் கடுமையாக எதிர்த்துள்ளனர். கனடாவில் வெளிவரும் 'நக்கீரன்' என்னும் புலிகள் ஆதரவு இதழ் 'இன்குலாப் தீன்' என இவரைக் குறிப்பிட்டு சைவரைக் குறைத்துப் பேசும் இசுலாமியராக இவரைச் சித்தரித்தது. இன்குலாப்புக்கு கருப்புக் கொடி காட்டக்கூட முயற்சி செய்யப்பட்டது எனவும் அறிகிறோம். எப்படியோ, தமிழகத் திலுள்ள மற்ற புலி ஆதரவாளர்களைப் போல இன்குலாப் மீண்டும் அய்ரோப்பிய நாடுகளுக்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வெகுசன இதழ்களில் தொடர்கட்டுரை எழுத அனுமதிக்கப் பட்டாலும் கூட ஜுனியர் விகடன், இந்தியா டுடே முதலான இதழ்கள் 'பத்தி' (Column) எழுதுவதற்கு இன்குலாப்பை அணுகியதில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. துக்ளக், நக்கீரன், ஜுனியர் விகடன் முதலான 'புலனாய்வு(!)' இதழ்கள் வந்து குவியத் தொடங்கியபோது என்ன மாதிரியான இதழ்கள் என்ன மாதிரியானவர்களை வளைத்துப் போட்டன என்பது சிந்திக்கத் தக்கது. தராசு, நாற்காலி, நக்கீரன், உங்கள் விசிட்டர் முதலான இதழ்கள் மட்டுமே இன்குலாப்பிற்கு வாய்ப்பளித்தன. பார்ப்பனிய அதிகாரம் கோலோச்சுகிற சென்னைப் பத்திரிகைச் சூழலில் இன்குலாப்பிற்கு வாய்ப்பளித்த இதழ்களில் 'உங்கள் விசிட்டர்' தவிர மற்றவை இச் சூழலிலிருந்து விலகி நின்றவை என்பதும் இங்கே பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.

### 3

இசுலாமிய சமுதாயத்தை முதன் முதலில் விமர்சித்தவர் இன்குலாப் என இங்கே எனக்கு முன் பேசியவர்கள் பெருமை யோடு குறிப்பிட்டனர். இங்கு கூடியுள்ள பார்வையாளர் களும் இந்தப் பாராட்டை வெகுவாக அங்கீகரித்தார்கள்.

இன்குலாப், அஸ்கர் அலி என்ஜினியர், ஷாபனா ஆஸ்மி போன்று இசுலாமியச் சமூகத்தில் பிறந்தவர்கள் அச்சமூகத் தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் இவர்கள்தான் முதன் முதலில் முஸ்லிம் மக்களை விமர்சித்தனர் எனச் சொல்வது அபத்தம். முஸ்லிம் சமுதாயத்தை விமர்சிப்பதற்கு அதன் மீது வெறுப்பைக் கக்குவதற்கு, அவர்களை இந்த நாட்டை விட்டே விரட்டுவதற்கென கடந்த 75 ஆண்டுகளாக மிக வலுவான பாசிச இயக்கங்கள் செயல்படுகிற நாடு நம்முடையது. இதற்கெனவே பல இதழ்கள், எழுத்தாளர்கள் உள்ளனர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.


இந்துத்துவ இதழ்கள் முஸ்லிம்களை வெளிப்படையாகவே தாக்குகின்றன. வெகுசன இதழ்கள் இப்படி நேரடியாக எழுத முடியாது. தங்கள் ''மதச்சார்பற்ற'' அடையாளத்தை அவர்கள் காப்பாற்றியாக வேண்டும். இந்தச் சூழலில் யாராவது முஸ்லிம் கிடைத்தால் அவர்கள் மூலமாக முஸ்லிம்களைத் தாக்கவது என்பது அவர்களுக்கு லட்டு சாப்பிடுவது மாதிரி. சென்ற ஆண்டு எச்.ஜி. ரசூல் எழுதிய 'மைலாஞ்சி' கவிதைத் தொகுப்பிற்கு இசுலாமிய சமுதாயத்தில் எதிர்ப்பு என்றவுடன் இதுவரை ரசூலைக் கண்டு கொள்ளாத 'இந்தியா டுடே' போன்ற இதழ்கள் இந்தப் பிரச்சினையை என்ன மாதிரி தூக்கிப் பிடித்தன? சல்மான் ருஷ்டிக்கு ஃபட்வா கொடுத்ததற்கு ஒப்பாக இந்தப் பிரச்சினையை இவர்கள் முன்வைத்தனர். தக்கலை ஜமா அத்தைக் கொமேனிக்கு ஒப்பாகச் சித்தரித்தனர். 'இந்தியா டுடே' இதை ஒட்டி ஒரு சிறப்புச் செய்தித் தொகுப்பையும் வெளியிட்டது. அதற்கென 'இந்தியா டுடே' தேர்வு செய்த பத்திரிக்கையாளர் யார் தெரியுமா? பீர் முகம்மது!

(அடுத்த இதழில் நிறைவுறும்)

★ இரு தரப்பிலும் தவறுகள் உண்டு எனப் பொதுவாகச் சொல்வதை நாம் ஏற்க இயலாது.

என்
சொற்களின் நிறங்கள்
பறிமுதல் செய்யப்பட்டபின்
வெறிச்சோடிக் கிடக்கும்
மௌன வெளிகளில்
உயரப்
படபடத்துக் கொண்டிருக்கும்
நீ சிலாகிக்கும்
நிறமற்ற கொடிகள்!

வெள்ளையாய்த் தோன்றும்
எந்தச் சொல்லும்
வெள்ளையாய் இல்லாததால்



வெள்ளையாய் இல்லை
எனது சொல்லும்.

கட்டப்பட்ட
வீடெதுவும் இன்மையால்
மூக்கில் ஒரு கீற்றுடன்
தூக்கணாங் குருவியாய்
மெழுகு கசியும்
இறகுள்ள தேனீயாய்
வாயில் எச்சிலுடன்
தாவும் சிலந்தியாய்
நானும் திரிகிறேன்
முன் வரைவுகளுடன்

**- இன்குலாப்**



படிப்பகம்

www.padippakam.com



# புலம் பெயர்ந்தோர் கவிதைகள்

***(58 கவிஞர்களின் கவிதைகள்)***

**தொகுப்பு: ப. திருநாவுக்கரசு,**
**31/48, இராணி அண்ணா நகர்,**
**சென்னை-78;**

பக்கம்: 192 விலை ரூ.75

இடம் விட்டு இடம் பெயர்தல் பன்னெடுங் காலமாக இனக்குழு மக்களிடையே வழக்கிலிருக்கிறது. மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களை மாற்றிக் கொண்டேயிருக்கின்றனர். அரசியலதிகாரம், சாதி, சமயம், உணவு காரணமாக ஊர் விட்டு ஊர் பெயர்ந்து வாழ்தல் இயல்பானதாகும். எனினும் இந்தியா ஆங்கிலேய குடியேற்ற நாடாகியபோது, தமிழர்களில் அடித்தட்டு மக்கள், வாழ வழியற்று உலகமெங்கும் 'கூலி'களாகப் பயணமாயினர். ஈழத்தில் எண்பதுகளின் பின்னர். தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாத அரசின் அடக்குமுறை, விடுதலை இயக்கங்களின் அராஜகச் செயற்பாடு, போராளிக் குழுக்களிடையே சகோதர மோதுதல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்கள் உலக மெங்கும் பரவியுள்ளனர். புகலிடத்தில் அகதிகளாக வாழ்ந்திடும் தமிழர்களின் படைப்புகள் பல்வேறு இதழ்களில் உலக மெங்கும் வெளிவருகின்றன. இத்தகைய இதழ்கள் முறையாகத் தொகுத்து வைக்கப் படுகின்றனவா என்பது தெரியவில்லை. எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களின் புலம் பெயர் வாழ்க்கை குறித்த சமூக ஆவணங் களாக இதழ்கள் விளங்குகின்றன. பொதுவாக 'சமூகப் பதிவு' குறித்து அக்கறையற்ற தமிழரிடையே, ஈழத் தமிழர்கள் எழுதியுள்ள கவிதைகளைத் தொகுத்துப் புத்தகமாக்கியுள்ள ப.திருநாவுக் கரசின் அ[illegible] முயற்சி, வரலாற்றில் என்றும் [illegible]லத்திருக்கும். சங்க இலக்கியகால[illegible]லிருந்தே கவிதைகளைத் தொகுத்திடும் தமிழ் மரபில் புலம் பெயர்ந்தோர் [illegible]தைகள் புத்தகமும் இடம் பெறுகின்ற[illegible] அரசியல் நெருக்கடி காரணமாகப் பு[illegible] பெயர்ந்துள்ள தமிழரின் குரல் [illegible]ன் முகத்தன்மை யுடையதாய் தமி[illegible]நப் புதியதாக உள்ளளது.

தமிழ்மொழி வழியே [illegible]ட்டையும் அன்றாட வாழ்க்கையினை [illegible]அடையாளப் படுத்த வேண்டிய நிர்ப[illegible] ஈழத் தமிழர் உள்ளனர். ஜெர்ம[illegible]தில் ஈழத் வளரும் தமிழ்க் குழந்தைக[illegible] பிறந்து மொழியைக் கற்பதனால் எத்தமிழ் புதியதலைமுறையின் வேரான[illegible]யன்? தில்தான் உள்ளது. ஈழத்துத் தமிட[illegible]ப நிலை, பழக்கவழக்கம் முற்றிலும் அறியாத இளந்தலை முறையினர் உலகமெங்கும் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில், ஈழத்தை விட்டுப் பிரிந்து வந்தவர் களுக்கு ஆதங்கப்பட விஷயமுண்டு. ஊருக்குப் புறத்திலுள்ள பனைமரம், வயல்வெளி, கடல், இன்னும் பிற குறித்து ஏக்கமுண்டாகலாம். அந்நிய நாட்டில் முகமிழந்து அடையாளமற்றுப் போகும் சூழலில் மனிதமனம் சலித்தெடுக்கும் உணர்வுகளின் குவிமையமாக, புலம் பெயர்ந்தோரின் கவிதைகள் உள்ளன.

நிர்பந்தம் காரணமாக வேறு நாட்டிற்குப் புலம் பெயர்ந்திடும் நிலையில், புதிய வாழ்க்கை முறையானது உணர்வில் உறுத்துகின்றது. இருத்தலின் வெக்கை யானது முகத்தைச்சிதைக்கிறது. சாதிரீதியில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சைவ வேளாளர் மரபில் வந்த ஈழத் தமிழர்கள் புகலிடத் தில் இனவேறுபாடு காரணமாக ஒதுக்கப் படுவது வாழ்வின் விசித்திரமாகும். சிவந்ததோல், வரதட்சணை, சாதிய உறவு என்று திருமணத்தை அடையாளப் படுத்தும் ஈழத்தமிழரை நோக்கி வெள்ளைய ரால் வீசப்படும் பார்வை துளைத் தெடுக்கிறது.

*''எட்டிநில் கறுப்பனே!*
*வெண்முகங்கள்*
*விட்டெறியும்*
*ஏளனப் பார்வையில்*
*தலை குனியும் மௌனமாய்.''*

நிருபா படும் வேதனையை எப்படி சமாதானப் படுத்தவியலும், நவீன அறிவியலின் மூலவர்கள் என்று பிரகடனப்படுத்தும் மேற்கத்திய நாட்ட வரின் இன ஒதுக்கல் பார்வை, அகதியின் வாழ்வில் ஏற்படுத்தும் கேவல உணர்வு முக்கியமானது.

முற்றிலும் மாறுபட்ட தட்ப-வெப்ப நிலை, பெயர் தெரியாத மரங்கள், பறவை களுடன் வாழ நேர்ந்திடும் அகதியின் அன்றாட வாழ்வில் எதுவும் நிகழக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. ஏதாவது ஒரு நாட்டில் குடியுரிமை பெற்றிடுவதற் காக சட்ட விரோதமான முறையில் நுழைந்திடும்போது அகதி எதிர்கொள்ளும் மரணம் வாழ்வின் பேரவலம். இடை வழியில் வழிந்திடும் உயிரின் மூச்சு. ஈழத்தில் சிங்கள அரசை எதிர்த்து துணிந்து போராடி சாவின் விளிம்பி லிருந்து மீண்ட 'அக்கறைப் பற்று வினாயமூர்த்தி' ஹங்கேரி நெடுஞ்சாலை யில் கண்டெய்னருக்குள் மூச்சு முட்டி மாண்டதும், கிரேக்கக் கடலில் மூழ்கி குளிரில் விறைத்த முகிலின் கோரச்சாவும்.அகதி வாழ்வில் சாதாரண சம்பவங்கள். இருத்தலே அர்த்தமற்ற அகதிக்கு எல்லா விநாடிகளிலும் மரணம் துரத்திக் கொண்டேயிருக்கிறது. ஒரு புறம் தாய்நாடு குறித்த ஏக்கமும், புகலிடத் தில் வளமான வாழ்வு குறித்த கற்பனையும் அலைக்கழிக்கும் வேளையில், பல்லா யிரக்கணக்கில் பணத்தைத் தந்துவிட்டு கோரமான முறையில் சாவை எதிர் கொள்ளும் அகதி வாழ்க்கையின் அவலத்தைகி.பி. அரவிந்தன்நுணுக்கமாகப் பதிவாக்கியுள்ளார். 'இருத்தலிற்காய்' குரல் கொடுக்கும் சுகனின் வலிகளும் மரணத்திற்கும் அகதிக்குமான உறவைப் புலப்படுத்துகின்றன.

பல்வேறு நாடுகளில் அகதிகளாக ஈழத் தமிழர் எதிர்கொண்ட பிரச்சினைகள் நுட்பமான கவிதை வரிகளாக விரிந் துள்ளன. வீரயுக காலத்தை முன்னிறுத்திய சங்ககால கவிதைகளைப் போல புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் கவிதைகளும் எளிமையுடன் மனத்தடைகளற்று வாசகருடன் நெருங்கி உறவாடுகின்றன. தமிழுக்குப் புதிய இலக்கியப்போக்கைத் தந்துள்ளன. புலம் பெயர்ந்தோர் இதழ் களில் வெளியான கவிதைகளைத் தனித்தனியே வாசிக்கும்போது கிடைத்த அனுபவத்திற்கும் ஒட்டுமொத்தமாகத் தொகுப்பில் வாசிக்கும்போது கிடைக்கும் அனுபவத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. புலம் பெயரும் அனுபவத் திற்குத் தரப்பட்ட முக்கியத்துவம், பல கவிதைகளில் கவித்துவத்திற்குத் தரப்படவில்லை.

*''காற்றுக் குதிரைகளில்*
*குளிர்*
*சாட்டை சொடுக்கி வரும்''*

என்ற அழகிய கவிதை வரிகளைத் தந்திட்ட வ.ஐ.ச. ஜெயபாலன்,

*''பிறருடைய பேச்சுச் சுதந்திரத்தை*
*என்றேனும்*
*ரசித்ததுண்டா நீங்கள்''*

என்று வெறும் வசனத்தில் சிக்கிக் கொள்கிறார். ஏதோ ஒரு நாட்டில் கோப்பை கழுவியும், குற்றவேல் புரிந்தும் வயிறு வளர்க்க வேண்டிய சூழலில் தள்ளப்பட்ட சராசரி ஈழத் தமிழர்கள் வாழ்க்கையில் கவிதை எழுத நினைப்பதே பெரிய விஷயம். கருத்து ரீதியில் மன உணர்வுகளைச் சொல்லும் வடிகாலாக் கவிதை உள்ளது. எனவே தான் நவீன கவிதை, மொழி குறித்த அக்கறை புலம் பெயர்ந்தோருக்கில்லை. எண்பதுகளில் வெளியான ஈழத்துப் போராட்டக் கவிதைகளிலிருந்த உக்கிர மானது தொன்னூறுகளில் வெளியாகி யுள்ள புலம் பெயர்ந்தோர் கவிதைகளில் இல்லை.

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழரின் பல்வேறு வாழ்வியல் காட்சிகளை முன்னிறுத்தும் கவிதைகள் தமிழில் புதிய சவாலை முன்வைத்துள்ளன அவ்வகையில் இத்தொகுப்பு அகதி களாக வாழ நேர்ந்திட்ட ஈழத்தமிழரின் ஆன்மாவாக விளங்குகின்றன.

***ந. முருகேச பாண்டியன்***



படிப்பகம்

www.padippakam.com

## இழைஇழையாய்

இரைச்சலினூடாக தொடர்ந்து
நெய்யப்படுகிறது மனசின் ஓரம்.
குழைத்த வண்ணங்களின் கூடுகையில்
பசுமை போர்த்தவும்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மொட்டாகி விரிந்து
காட்சிகளின் பிம்பங்கள்
கண்கள் வழி வெளியேறும் மாறி
மாறி உருவாகும் ஒவ்வொன்றாய்
இரத்தப் பிசுக்கேறி நனைந்த பள்ளத்தில்
பிணங்களின் குவியல் நிரப்பும்
கரைந்த வண்ணங்களில் நிழல் விழுந்து
பரவும் அசலும் வடிவமைவு
ஒத்திசையும் மறுதலிக்கும்
கறுப்புப் பிசிறாகி அடர்மேகமென
மதங்கொண்ட யானையொன்று
பிளிறும் தும்பிக்கை சிலிர்த்துயர்த்தி
தப்பித்தலின் வெளிப்போதலென
பிரிக்கும் இழையிழையாய்

**– தமிழ் மணவாளன்**

## சிதைவுகள்! கனவுகள்!

இங்குமங்கும்
ஏனிறங்கிக் கொண்டிருக்கிறார்கள் எல்லோரும்?
அதுவும்
அவரசம் அவசரமாக.

ஏறுதலைவிட இறங்குதல் எளிதுதான்
சரிவு
எறிந்துவிட்டு வந்த ஆயுதங்கள்
இறைந்து கிடக்கின்றன
குப்பைகளாய் பள்ளத்தாக்குகளில்.
'இங்கு'
வந்தடைவதற்காக
நம் தந்தையர்
இறக்கி வைத்த சுமைகளல்லவா
அவைகள்.
இங்கிருந்து
புறப்பட்டுச் சென்ற
எந்த நதியினாலும்
கழுவி விட முடிந்ததில்லையே
அவைகளின்
இரத்தக் கறைகளை.
அறிந்தும்
ஏன் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லோரும்?
இங்கேயே இருந்திருந்தால்
தொட்டு விடலாமென்ற
நம்பிக்கையோடு
கண்ணில் பட்டுக் கொண்டிருக்கலாம்
சில சிகரங்கள்

**– வே. எழிலரசு**

## கேள்விகள்

தெலுங்கில்: **யாகூப்**
தமிழில்: **சாந்தாதத்**

இரும்புக் கவசங்களுள் இறுகும்
மனிதச் சமூகங்கள்
நீர்நிலைகளில் தாகம் தணியாது
திக்கித்திணறும் திக்கற்ற காலமிது
நிரந்தரமாய் நீடிக்கும் பரிமாணத்துள்
உறையும் நிகழ்வுகள்
எங்கோ உடைந்து உதிரும்
அனுபவச்சமூகம்
இங்கு மனிதனைச் சுத்தகரிப்பது யார்?

இம்மானுடச்சாரத்தின்று
விதைகளையும் துகள்களையும்
வேறுபடுத்தும் காற்று எது?

நெல்லிக்குவியலாய் நகரும் சமூகத்திடை
கரைபடிந்த ஜீவக்கதிர்களிடை
புயலாய்ப்புறப்படும் இவ்வினாக்கள் எங்கிருந்து?

சமூகங்களிடை முளைவிடும் நவநாகரிக
அளுமைத்தும்பைகள்
இல்லங்களிடை வளரும் நேசவிருட்சங்களில்
சஞ்சரிக்கும் விஷஜந்துக்கள்
இங்கு காகிதப்பூச்சுகந்தத்தை உருவாக்கும்
படைப்பாளி யார்?
சந்தேகங்களிடைகரையும் வாழ்க்கைகளத்தனையும்
பிளாஸ்டிக் பதிவுகளின் பதில்கள்!

தூரம் ...தூரம்
மனிதன் மனிதனுக்கிடை வரும்
இணைக்கவியலத் தூரம்
ஷட்டர்களாய்த் திறந்துகொள்ளும் நாட்களுக்குள்
இறக்குமதியாகின்ற மனிதன்
வண்டிகளில் தேநீர் விடுதிகளில் கா..களில்
தொழிற்சாலைகளில் வ..ல்களில்
வரப்புகட்டி இறுகிய வியர்வைத்..களிடை
கரைந்துபோகு..மனிதனை
சிறுமைப்படுத்தும் இச்சஞ்சலக்கால..ங்கிருந்து?

கம்ப்யூட்டர் திரைகள் மீது குவியும் ..ம்க்கைகளை
கட்டமைக்..கலாசாரத்துள்
கதவு திறக்கும் அ..னிதர்கள் யார்?

குரல்வளையை நெறிக்..மத ஆதிக்கங்கள்
பூமியை எல்லைக்கோடுக..டச் சிறைப்படுத்தி
..தியாக்கும் அரசுகள்
மனிதனை ..தலைவிட கொல்வது
சுவ..ரிதாகிவிட்ட கொடூரம்
..னைச் சுற்றிப்பின்னிய
இப்போது இம்..ந்த இயந்திரக்கூடு எது?

..லத்திற்கு முகவரி இல்லை
இது கேள்விகளினின்..ள்விக்குள் பயணித்தபடி...



படிப்பகம்

www.padippakam.com

## விழி. பா. இதயவேந்தன் கவிதைகள்

### 1.உனக்கே தெரியாமல்...

ஒருமுறை அல்ல
இருமுறை அல்ல
பலமுறை சொல்லியிருக்கிறேன்
உன்னிடம்

உனக்கே தெரியாமல்
உன் எண்ணங்கள்
சிதைக்கப்படுவதை
உனக்கே தெரியாமல்
உன் உணர்வுகள்
மழுங்கடிக்கப்படுவதை
உனக்கே தெரியாமல்
வாழும் உரிமைகள்
பறிக்கப்பட்டு வருவதை
உனக்கே தெரியாமல்
ஒரு நிச நாடகம்
உன்னைச்சுற்றி
நடக்கிற தென்பதை

உனக்கே தெரியாமல்
எல்லாம்
இனிதாய் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

இம்முறையும்
சொல்கிறேன்.
உனக்கே தெரியாமல்
இன்றோ
இப்பொழுதோ
இன்னமும் எதுவும் துவங்கலாம்
நடந்தும் முடியலாம்.
உன்னையும்
உன் ஒவ்வொருவனையும்
நீ
திரும்பிப் பார்க்காதவரை
உனக்குள்
ஒரு பிரளயம் உருவாகாதவரை
உனக்கே தெரியாமல்
இன்னும் கொஞ்சநாளில்
நீ
காணாமல் போயிருப்பாய்
உன் சந்ததியோடு

•

### 2. எனவேதான்

...
எனவேதான்
நான்
எல்லாவற்றையும் சொல்ல வேண்டியிருக்கிறது.
எனக்கு முன்பான
தலைமுறைகள் யாவும்
சுவடுகள் ஏதுமின்றி
திசைக்கொன்றாய்க் காணாமல் போய்விட்டன.
இருக்கிற
கொஞ்ச நஞ்ச சதைப்பிண்டத்திற்குள்
உயிரென்று
ஏதோ ஒட்டிக்கொண்டு
வாழ்வின்
திசைநோக்கி
வெறித்துக் கிடக்கிறது.

மானுடம் தேடும்
மனிதக் கூட்டத்தில்
ஒதுங்கி ஒதுக்கி
வீழ்த்தப்பட்ட
என் சனங்களின் வாழ்வினை
சற்றேனும் நிமிர்த்த
நேரம் எதிர்பார்த்துக் கிடக்கின்றேன்.

உன் ஆளுமையின் இரகசியத்தை
ஒவ்வொரு முறையும் வெளிச்சமிட்டிருக்கிறேன்.

எனக்கான நிகர் நீயில்லை;
நீயும் அறியாததல்ல.

தலைமுறை சோகங்கள்
காலைப் பின்னுக்கு இழுக்க
இலட்சியவெளி
இலக்கிற்காய்த் தொடங்குகிறது.
தோற்றுவிட்டேன் என எண்ணாதே
தொடர்கிறேன் இன்னமும்.

என்னதான்
நான் தாழ்ந்ததாய் நீ நினைத்தாலும்
உயர்ந்திருக்கிறேன் உன்னைவிட

இரத்தக்கறை படிந்த
என் வரலாறுகள் இன்னமும் நிறைய...

எனவேதான்
நான்
எல்லாவற்றையும் சொல்லவேண்டியிருக்கிறது

•

### பயணம்

மரத்தக் கண்ட எடம் எதோ
கால
தூக்கன கதையா
வந்தாச்சி
காசுப்பணம் கெடைக்குமுன்னு
மூச்சுப்புடிச்சி
நகத்தித்தான் ஆவனும் மூனுவருசம்
கடன ஒடன அடைக்க!

கூட்டம்
கோசமுன்னு சுத்தனவனுக்கு
இன்னும் கொஞ்சம் செரமம்தான்.
வாயக்காட்டி... வவுத்தக்காட்டி
மிரட்ட ஆளா இல்ல
அடக்கிதான் வாசிச்சாவனும் வந்த எடத்துல.
அப்பறம்
பொட்டிகட்ட காசுப்பணம் சேத்து
விமானச் சீட்டுக்காக
அங்க இங்க நின்னு
உறுதிப்படனும்
ஊர் திரும்பரத்திட்டம்.

இதுல மொதலாளி கொடுத்த மூனுமாசம்
விடுப்பாச்சும்
சந்தோசமா கழியுமாங்கற கவலதான்
எனக்கு
ஒவ்வொரு பயணத்தின் போதும்!

**- இ. இசாக்**



படிப்பகம்

www.padippakam.com



# தொ.மு.சி. ரகுநாதன் என்றொரு இலக்கிய வழிகாட்டி

*எ.எம். சாலன்*

தமிழ் இலக்கிய ஜாம்பவான்களில் ஒருவரான தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் நம் மீசைக்காரக் கவிஞன் பாரதி பிறந்த மண்ணில் தோன்றியவரல்லவா. தமிழ் இலக்கியத்தில் சிறுகதை, நாவல், கவிதை, மொழி பெயர்ப்பு, இலக்கியத் திறனாய்வு, ஒப்பியல் இலக்கியம், பத்திரிகைத்துறை என இவர் கைபடாத துறையே இல்லை யெனலாம்.

பாரதியைப் பற்றி இவரைப் போல சமூகவியல் நோக்கில் ஆராய்ந்தவர்கள் வேறு எவராவது இருக்கிறார்களா என்பது சந்தேகம்தான். பாரதியைப் பற்றி நம் தமிழ் இலக்கியவுலகில் வித்துவான்கள் சிலர் பொத்தாம் பொதுவாக சில ஆய்வுகள் நடத்தியிருந்தாலும் கூட, இவரது ஆய்வுக்கு நிகர் இவர் மட்டுமே!

இதே மாதிரிதான் இளங்கோவடிகளைப் பற்றி இவர் செய்த ஆய்வும்! கிட்டத்தட்ட புதுமைப் பித்தனைப் பற்றி இவர் நடத்திக் காட்டிய ஆய்வுகளையும் கூட இதே மாதிரி வகைப்படுத்தலாம்.

நம் கலை இலக்கியவுலகில் படைப்பிலக்கியவாதியாகவும் ஆய்வாளராகவும் திகழ்பவர்கள் ஒரு சிலரே. இந்த அபூர்வ மனிதர்களில் தொ.மு.சி. முதன்மையானவர்.

பல தமிழ்ப்பத்திரிகைகளின் ஆசிரியராகவும் உதவி ஆசிரிய ராகவும், சிலவற்றின் நிறுவனராகவும் விளங்கியவர்.

இவரால் 1954இல் தொடங்கப்பட்ட ''சாந்தி' பத்திரிகையானது பிற்காலத்தில் தோன்றிய பல சிறந்த இலக்கியத்தரம் வாய்ந்த பத்திரிகைகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்ததை நம்மால் மறுக்க முடியாது. தமிழ்ச் சமூகத்தில் தோன்றிய புதிய மாறுதல் களை மையமாகக் கொண்டு பல சிறந்த படைப்புகளை நமக்குத் தந்து விட்டுச் சென்றவர். அவற்றுள் ஒன்றுதான் இவரால் நமக்குப் படைத்தளிக்கப்பட்ட ''பஞ்சும் பசியும்' நாவல்.

இது நம் தமிழ் இலக்கியவுலகில் தோன்றிய முதல் சோசலிஸ எதார்த்தவாத நாவல் என்று தமிழ் அறிஞர்களால் பாராட்டப் பட்டது. தமிழில் தோன்றிய மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று இது என இன்றும் கூட தரம்வாய்ந்த இலக்கிய மாணாக்கர் களால் குறிப்பிடப்பட்டு வருகிறது.

குலோத்துங்கன் என்ற பெயரில் இவர் பல சிறந்த மரபுக் கவிதைகளைத் தமிழ் இலக்கியவுலகிற்குத் தந்தவர். இப்போது நாம் அனைவரும் 'ஆஹா! ஓஹோ...!' வெனப் பாராட்டிக் கொண்டிருக்கும் பொத்தாம் பொதுவாகப் பேசிச் செல்லும் பல புதுக்கவிதைகளை விட ஆக்கபூர்வமானவை இவரது மரபுக் கவிதைகள். மொழிபெயர்ப்புத் துறைக்கு இவர் ஆற்றிவிட்டுச் சென்றுள்ள தொண்டும் இங்கே முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொழிலாளி வர்க்க வீர இளைஞன் ஒருவனின் தாய், எவ்வாறு படிப்படியாக ஒரு புரட்சிக்காரியாக பரிணமிக்கிறாள் என்பதைச் சித்தரிக்கும் மாக்சிம் கார்க்கியினுடைய ரஷ்ய நாவலும், கிட்டத்தட்ட இரண்டாயிரம் பக்கங்களுக்கு மேல் வரும் ரஷ்ய எழுத்தாளரான அலெக்ஸிடால்ஸ்டாயினுடைய பிரபல நாவலான 'அக்கினிப்பரீட்சை'யும், 'லெனினுக்கு கவிதாஞ்சலி' என்ற (மாயா வோஸ்கியின் கவிதைகள் மூலக்கவிதைக்கு ஈடாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட) கவிதைத் தொகுதியும், இவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதை எடுத்துக் காட்டின.

இவரது மொழிபெயர்ப்பு நூல்கள் அனைத்தும், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வந்த சாதாரணமான மொழிபெயர்ப்புகளி லிருந்து அடிப்படையிலேயே வித்தியாசமாக அமைந்தவை. குறிப்பாக நம்முடைய தமிழ் அறிஞர்கள் பலரும் மூலநூல் களை அப்படியே வாந்தியெடுத்துத் தருவதுதான் இயல்பு. அங்கே மூல நூல்களிலுள்ள வார்த்தைகள்தான் தமிழாக உருமாறி இருக்குமே தவிர தமிழில் தோன்றிய நூல்களைப் படிப்பது போல சுவையாக தமிழ்மயப்படுத்தப்பட்டிருக்காது.

மேற்கண்ட முறையில் மொழிபெயர்க்கப்படும் நல்ல இலக்கியப் படைப்புகள் கூட வாசகர்களுக்கு அவற்றின் மீது வெறுப்பை ஏற்படுத்திவிடும். பின்னர் வாசகர்கள் அம்மாதிரி புத்தகங்கள் இருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். இந்தப் பாவத்தை நம் தொ.மு.சி. அவர்களின் எந்தவொரு மொழி பெயர்ப்பு நூலும் செய்தது கிடையாது.

இன்னொரு முக்கியமான விஷயம், பிற நூல்களை மொழி பெயர்ப்பது போல படைப்பிலக்கியத்தை மொழிபெயர்ப்ப தென்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை என்பதை இந்த இடத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். காரணம், இங்கே 'சுவை'யுடன் கூடிய உயிரோட்டம் ரொம்ப முக்கியம்.

இதே போன்று ஒப்பியல் இலக்கியத்திலும் இவர் பல சாதனை களைப் புரிந்திருக்கிறார். உதாரணத்திற்கு, இவருடைய 'பாரதியும் ஷெல்லியும்' என்ற நூலைக் குறிப்பிடலாம். ஷெல்லியின் கருத்தாழத்தையும், அழகான கவிதைகளையும் பாரதியின் கவிதை களுடன் ஒப்பிட்டு எழுதிய புத்தகம் இது. ஷெல்லியின் கவிதை களை இவ்வளவு அழகாகத் தமிழில் அறிமுகப்படுத்திய முதல் நூலும்கூட இதுவென்றே தோன்றுகிறது.

இலக்கியத்தில் மட்டுமல்ல! அரசியல், தத்துவம், சமூகவியல், பண்பாட்டியல் போன்ற துறைகளிலும் இவர் நிபுணராகத் திகழ்ந்தவர்.

இவர் ஒரு சிறந்த இலக்கியத்திறனாய்வாளர் என்பதற்கு 'இளங்கோவடிகள் யார்?' 'பாரதிகாலமும் கருத்தும்', புதுமைப் பித்தனைப்பற்றித்திறனாய்வு செய்து அவர்சமீபத்தில் வெளியிட்ட நூல், பாரதியைப் பற்றிய அவரது ஆய்வுகள் போன்ற நூல்களே சான்றுகளாகும்.

சிறுகதைத் தொகுப்பில் 'நீயும் நானும்' (மிகப்பெரிய விவாதத் தைக்கிளப்பிய நூல் எனப் பேசப்படுகிறது), நாவலில் 'பஞ்சும் பசியும்', நாடகத்தில் 'வேலு-நாச்சியார்' (ஆங்கிலேயர் ஆட்சி, இந்திய மக்களிடையே நிலவும் சிறிய முரண்பாட்டையும் பயன்படுத்திப்பிளவுபடுத்தும்சூழ்ச்சியை அம்பலப்படுத்தும்சிறந்த வரலாற்றுநாடகம்), வாழ்க்கை வரலாற்று நூலில்'புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாறு' (ஒரு இலக்கியவாதியின் வாழ்க்கையை இவ்வளவு சிறப்பாக எழுத முடியுமா? என நம்மை பிரம்மிக்கச் செய்யும் நூல்) போன்ற நூல்களுக்குச் சொந்தக்காரர் அவர்.

தத்துவத்தைப் பொறுத்தவரையில் அது பேசும் விஷயத்தை விட்டுவிட்டு வெறும் அடையாளத்திற்காக வேண்டி அதைத் தம் தோளின் மேலேற்றிச் சுமந்து கொண்டு திரிபவர்களே நம் சிந்தையாளர்களில் பலரும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இவரோ, 'உலகெங்கும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காண வேண்டி, அதை ஒரு வாகனமாக்கிக் கொண்டு அதன் மீதேறி வலம் வர வேண்டியது தத்துவம்' எனத் தத்துவத்திற்கு ஒரு புதுமையான விளக்கத்தைத் தந்தவர். தத்துவம் எவ்வாறு மனிதனின் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தவர் இவர்.

ஆங்கிலத்திலும் தமிழிலுமாக எண்ணற்ற நூல்களைப் படித்தவர். எந்தவொரு விஷயத்தை யும் அரைகுறையாகத் தெரிந்து வைத்துக்கொண்டு பேசுபவரல்ல! மறுக்கப்பட வேண்டியவைகளாக இருந்தால்கூட முழு ஆதாரங்களைக் காட்டியே மறுப்பவர்.

இவர் ஒரு சிறந்த கலை இயலக்கியத் தேரோட்டியும் கூட! காரணம் பல ஆண்டுக்காலமாக தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் தலைவராக இருந்து அதை வழி நடத்தியவர்.

தமிழ்ச் சிறுகதை வடிவத்தில் எதார்த்த இயல்போடு கூடிய சிறந்த படைப்புகளைத் தமிழுக்குத் தந்த புதுமைப்பித்தனோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். அரசியலிலும் இலக்கியத்திலும் அமரர் ஜீவா அவர்களோடு இணைந்து நின்றவர்.

தமிழகக் கலை இலக்கியத் துறையில் இப்போது ஜொலித்து நிற்கும் பல சிறந்த கலை இலக்கியவாதிகளுக்கும், வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கும் ஓர் சிறந்த இலக்கிய வழி காட்டியாக வாழ்ந்த இவர், 31.12.2001இல் நம்மை விட்டு மறைந்து விட்டார்.

அவரது இலக்கியத் தொண்டும், தமிழ்ச்சிந்தனைப் பரப்பில் அவர் ஏற்படுத்திவிட்டுச் சென்ற தடங்களும், வரும் தலைமுறையினர் பின்பற்றிச் செல்ல வேண்டிய சிறந்த பாதைகளாய்த் திகழ வேண்டும்.

## ஏதோ கோளாறாகி விட்டது

ஏதோ கோளாறாகி விட்டது
என் வாழ்க்கையில்-
முதுமை நெருங்கிக்
கொண்டிருப்பது
காரணமாயிருக்கலாம்
ஏற்கனவே
நான்
நாட்களைக் கணக்கிடுவதை
விட்டு விட்டேன்-

அடிக்கடி
கவனமற்று
வெறித்துப் பார்க்கிறேன்.
இப்படியொரு குழப்ப மூட்டத்தில்
நான் மூழ்கக் கூடாது.

வாழவேண்டிய வகையில்
நான்
வாழவில்லை
உண்மையிலேயே
வாழ்க்கை
என்னைச்
சிதைத்து விட்டதாக
எண்ணிக் குடிக்கிறேன்.

தேவைக்கும்
அதிகமாகவே
குடிக்கிறேன்-
மனைவியைத்தவிர
மற்ற பெண்களையும்
நேசிக்கிறேன்-
இருந்த போதிலும்
என் வாழ்க்கை
பரிதாபகரமாகவும்
வறட்சியாகவும்தான் இருக்கிறது.



என்
வாழ்க்கை
தொனியிழந்து விட்டது-
எப்போதும்
எங்கேயும்
காரணமின்றித்
திரிகிறேன்.

ஒரு
காயலான் கடைச்சரக்கு போல
மதிப்பிழந்தும்
தேய்ந்து போயும்
வாழ்கிறேன்-
தணலற்றும்
தளர்ந்தும்.

ஏதோ கோளாறாகி விட்டது
என்
வாழ்க்கையில்.

பதுங்கிப் பதுங்கி
நடக்கிறேன்
பழைய நண்பர்களின்
பார்வையிலிருந்து
தப்பித்தவாறும்-
பொறுக்கிகளின்
சகவாசத்திலும்.
இது
ஆபத்தானதும்
முட்டாள்தனமானதும்
அல்லவா?

*மூலம்:* ***Juozas Mace Vicius (1928) Lithuania.***

*தமிழாக்கம் :*
**புதுவை ஞானம்**



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# மட்ட வெள்ளி

பாரதி வசந்தன்

**வா**சலுக்கு எதிர்த்தாப்ல பெருசா முருங்க மரம். கீரயெல்லாம் பூச்சி புடிச்சிப் போயி பழுத்துக் கெடந்தது. யாரோ கொத்தா மூக்குச் சளிய சிந்தி மரத்து மேலெல்லாம் தடவி விட்டது மாதிரி அங்கங்க செகப்பு கலர்ல முருங்க பிசுனு கொள கொளன்னு மரம் பூராவும் பிதுக்கிக்கிட்டு இருந்தது. மரத்தோட சைடு கௌய பழனியப்பா என்னைக்கோ வெட்டியிருக்கணும். அது உள்ளார கொடஞ்சி கொடஞ்சி எல்லாம் செரிச்சிப் போயி கௌக்கி உள்ளேயே தூசும் துப்புமா அப்பிக்கிட்டு இருந்தது. அதுல இருந்து மொசு மொசுன்னு புள்ளையார் எறும்புங்க ஏர்றதும் எறங்கிறதுமா வரிசையா போய்க்கிட்டு இருக்கிறத அந்த நெலமையிலும் அன்பழகன் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தான்.

''செல்லஞ்சேரியில இருந்து நம்ம குசுவுட்டான் தாத்தா எடுத்துகினு வந்து நட்ட முருங்க கௌதாம்பா... இப்பிடி தாம்பு தாம்பா வளர்ந்து மரமாயிடுச்சி...''

புட்லாய் அம்மா எப்பல்லாம் சாப்பிடறதுக்கு முருங்க கீரய பறிக்கிறாங்களோ அப்பல்லாம் குசுவுட்டான தாத்தாவையும் இந்த முருங்க மரத்த பத்தியும் பேசாம இருக்கிறது இல்ல. அதப்பத்தி நெனைச் சதுமே அன்பழகனுக்கு சிரிக்கணும்போல தோணுச்சி. ஆனா பக்கத்திலேயே புட்லாய் அம்மா நின்னுகிட்டு அழுது கிட்டு இருக்கிறத பார்த்தப்போ அவனுக்கு 'பொசுக்...'னு அழுக வந்துட்டுது.

''எம்மாவு... எம்மாவு. வலிக்குதும்மா. அப்பாகிட்ட சொல்லி அவுத்து வுடச் சொல்லும்மா...''

அன்பழகன் கத்திகிட்டே தன்னோட ரெண்டு கைகளையும் பலங்கொண்ட மட்டும் அசைச்சி பார்த்தான். ம்ஹூம்... முடியல. பழனியப்பா அவன குத்துக் காலிட்டு உட்கார வச்சி ரெண்டு கைகளையும் தொடைக்குக் கீழா கொண்டாந்து முட்டி கால்கிட்ட சேர்த்து கயித்தால கட்டிட்டாரு. அது போதாதுன்னு வீட்டுக்குள்ளார இருந்து பன வெல்லத்த எடுத்துகினு வந்து ஒரு சட்டியில போட்டு கரைச்சி அதையும் அன்பழகன் தல மேல ஊத்திட்டாரு. அந்தப் பன வெல்லம் புளிய கரைச்சி மேல ஊத்தினது மாதிரி வெயில்ல பிசுபிசுன்னு மேலெல்லாம் ஓட்டிகிட்டு ஒரே ஈயும் எறும்புமா மொய்க்க ஆரம்பிச்சிட்டுது. வெயிலு ஏற ஏற அன்பழகனுக்குத் தாங்க முடியல. எல்லாத்துக்கும் மேல அவங்க வீட்டு பக்கமா போறவர்ற பெரியவங்க சின்னவங்க எல்லாம் அவனப்பார்த்து கிண்டலா சிரிக்கிறது ஒரு பக்கம் இருக்க... அவன்கூட குண்டு வெளயாடற நடுபாப்பா கிட்டவந்து நின்னுகிட்டு சிரிச்சது அன்பழகனுக்கு ரொம்ப அவமானமாப் போயிட்டுது. நாளைக்கி அவகூட வெளயாடப் போனா கண்டிப்பா இதப் பத்திதான் கேட்பான்னு நெனைச் சதுமே அவள நிமிர்ந்து பார்க்க அவனுக்குக் கூச்சமாயிட்டுது.

அன்பழகனுக்கு கரி புடிச்சிப்போன ஒடுக்கு வுழுந்த தேக்சா மாதிரி மொகம். நல்லா அகலமான நெத்தி. சின்னதா யானைக்கி இருக்கிற மாதிரி கண்ணு. சப்பையா தடிச்சுப் போன தொள்ள மூக்கு. எப்பவும் அந்த மூக்குல இருந்து ஒழுகுற சளி. அதத் தொடைக்காம கொள்ளாம எப்பப் பாரு மூக்கு ஊறிஞ்சி கிட்டு இருக்கறவனோட கீழ் ஒதடு பெருத்து முன் பல்லு ரெண்டும் வெளியே துருத்திகிட்டு பார்க்கிறதுக்கு ஒரு மாதிரியா இருக்கும்.

அனபழகன் காடாத் துணியில தைச்ச அரக்கால் சட்டைய போட்டுகிட்டு இருந்தான். அது பின்பக்கமா நெறய எடத்தில ஒட்டுப் போட்டு ஒட்டுப் போட்டு தைச்சிருந்தது. இந்தக் காடாத் துணி கால்சட்டைய பழனியப்பாஅவரோட வூட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற ராமகிருஷ்ணா மில்லுல இருந்து எப்பவாச்சும்தான் வாங்கித் தருவாரு. மத்தப்படி மேல்சட்டை எல்லாம் நெல்லித்தோப்பு மோட்சராக்கினி மாதாக்கோயிலு எதிர்க்க இருக்கிற நடுப்பள்ளிக்கூடத்துக்கு அவன் படிக்கப் போறப்ப போட்டுக்கறதோட சரி. அப்ப நெல்லித்தோப்பு தச்சர் வீதியில இருந்த பள்ளிக் கூடத்த சின்னப்பள்ளிக் கூடம்னும் மேரிகிட்ட இருந்த பள்ளிக் கூடத்த பெரிய பள்ளிக்கூடம்னும் மாதாக் கோயிலு எதிர இருந்த பள்ளிக் கூடத்த நடுப்பள்ளிக்கூடம்னும் அங்க படிக்கிற பசங்க சொல்லிக்குவானுங்க. அப்படியான நடுப்பள்ளிக்கூடத்தில தான் அன்பழகனும் அஞ்சாங்கிளாஸ் படிச்சிகிட்டு இருந்தான்.

அன்பழகனோட அப்பாவ பழனியப்பான்னு முழுசா பேர சொல்லத் தேவையில்ல. பால்காரர் பழனின்னு சொன்னாலே போதும். சுத்து வட்டாரத்தில நெல்லித் தோப்பு, தோட்டக்கால், காராமணிக்குப்பம், கீரப்பாளையம், மரப்பாலம், தேங்காத் திட்டுன்னு இப்படி எல்லா எடத்திலயும் அவர நல்லா தெரியும். பழனியப்பாவுக்கு மாடுங்களுக்கு பால் கறக்கிற வேல. அதனால இந்த எடம்தான்னு இல்லாம எநதெந்த எடங்கள்ல கறவ மாடுங்க இருக்கோ அங்கெல்லாம் அவருக்கு நல்லா பழக்கம் உண்டு. அத பழனியப்பா கூட அன்பழகன் போறப்போ நெறய தடவ பார்த்திருக்கான். அந்த சமயத்துல எங்கயாச்சும் எதுக்காவது வேலைக்குப் போனா தூரத்தில வீடுகள்ல இருந்து கறவ மாடுங்க அவரு வர்றத பார்த்திட்டுக் கத்துங்க பாரு. அன்பழகன் வாயில்லாத அந்த ஜீவன்களோட பாசத்தப்பார்த்து கலங்கிப் போவான். பழனியப்பாவும் பதிலுக்கு அதுங்களப்பார்த்து ஒரு மாதிரியா குரல் கொடுத்துகிட்டே கிட்டபோயி அதுங்க முதுக ரொம்பப் பாசமா தடவிக் கொடுப்பாரு. அதுங்களும் அவர பார்க்கிற சந்தோஷத்தில 'புஸ்... புஸ்...'ன்னு மூச்சு வுட்டுகிட்டு தலைய இப்படியும் அப்படியுமா ஆட்டிகிட்டே அவர அன்பா தங்களோட நாக்கால நக்கும். அப்ப பழனியப்பா மாடுகள புள்ளைங்கள பார்க்கிறது மாதிரியே பார்ப்பாரு. அப்படி ஒரு பாசம் அவருக்கு கறவ மாடுங்க மேல.

பழனியப்பா அஞ்சு வயசுலேயே கரிக்கலாம்பாக்கத்துகிட்ட இருக்கிற செல்லஞ்சேரியில இருந்து பிச்சேரிக்கு ஓடியாந்திட்டவரு. அவருகூட பொறந்தவங்கன்னு யாருமே இல்ல. பெரியப்பா புள்ளைங்க சித்தப்பா புள்ளைங்கன்னு கொஞ்சம் பேரு இருந்தாங்க. அவ்ளோதான். அப்பாவும் அம்மாவும் எப்பவோ செத்துப் போயிட்டாங்க. பழனியப்பாவுக்குத்



படிப்பகம்

www.padippakam.com

தன்னோட அப்பா இரிசன ரொம்பவும் புடிக்கும். அதனாலயே அவரோட சோத்துக்கை முண்டாவில இ. பழனின்னு பச்ச குத்தியிருப்பாரு. அத அப்பப்ப அன்பழகன்கிட்ட காட்டிகிட்டு 'எங்கப்பன் பேரு இரிசண்டா...'னு பெருமையா சொல்லிக்குவாரு. அதுக்கு ஏத்த மாதிரி அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாட்டியும் இ. பழனின்னு மாத்திரம் தட்டுத் தடுமாறி கிறுக்கி கிறுக்கி கையெழுத்துப் போடுவாரு.

''நான் செல்லஞ்சேரியில இருந்து அஞ்சு வயசுல இந்த ஊருக்கு ஓடியாந்திட்டம்பா. அப்ப கீரப்பாளையம் ஒயிண்டேரியில குடித்தனக்காரங்க மாடுங்கள மேய்ச்சி கிட்டு மாடுங்கள கழுவிகிட்டு இருந் தப்போஅங்க கெடந்த பேப்பர்கள எடுத்து கூட இருந்தவங்க உதவியால ஒவ்வொரு எழுத்தா கூட்டிப் படிக்கக் கத்துகிட்டு இப்ப இ. பழனின்னு மட்டும் கையெழுத்துப் போடறேம்பா. மத்தபடி நான் ஒரு வானா மூனா தம்பி...''

அப்பப்ப அன்பழகன்கிட்ட பழனியப்பா இப்படிச் சொல்றப்போ அவன் திருப்பிக் கேட்பான்.

''வானா மூனான்னா என்னாப்பா?''.

''அதுவா... வடிகட்டின முண்டம்.''

சொல்லிட்டு ரொம்பக் கேலியா சிரிப்பாரு.

''நான் அடங்காததால தாத்தாவும் ஆயாவும் என்ன படிக்க வைக்காம மாடு மேய்க்க வுட்டுட்டாங்கப்பா. அதான் வானா மூனாவா ஆயிட்டேன். நீயும் என்ன மாதிரி ஆகக்கூடாதுன்னுதான் உன்ன படிக்க வைக்கிறேன்...''

பழனியப்பா இத சொல்றப்ப எல்லாம் 'நாம நாலு எழுத்துப் படிக்காமப் போயிட்டோமே...' ன்னு அவரு மொகம் வருத்தத்தில மாறிப் போயிடும்.

பழனியப்பாவுக்குப் பெருசாவும் இல்லாம மெலிசாவும் இல்லாம திட்டமான ஒடம்பு. மேல தூக்கி வாருன பம்பையான தலமுடி. கருப்பா ஆனா களையான மொகம். காத்தடிச்சாலும் மழ பேய்ஞ் சாலும் மேல சட்ட போடாத ஒடம்புல மூனு மடிப்பா கோடு வுழுந்த வயிறு. மாடுங்களுக்குப் பால் கறந்து கறந்து மரத்துப் போன தடிப்பான கை வெரலு. அதால ஒரு அடி வாங்கினா போதும். 'கிர்ர்...ன்னு மயக்கம் வந்துடும். அவரு கல்றசேரிக்குப் பக்கத்தில இருக்கிற கீரப்பாளையத்தில் பொங்கித் திண்னு கிட்டு இருக்கிற அப்பதான், கல்றசேரிக்கு மேற்கால இருக்கிற பூமியான்சேரியில இருந்த சீட்ட ஆயாவும் அவரு புருஷன் கொழுப்பரு தாத்தாவுமா சேர்ந்து புட்லாய் அம்மாவ அவருக்குக் கல்யாணம் செஞ்சு வச்சாங்க.

புட்லாய் அம்மா வூடு பிச்சேரிக்கு மேற்கால விழுப்புரத்துக்குப் போற வழியில கண்டமங்கலத்துக்கு பக்கத்தில நவமால் மருதூர் காலனியில இருந்தது. புட்லாய் அம்மா நல்லா கடைஞ்செடுத்த பம்பரம் மாதிரி லட்சணமா இருப்பாங்க. எரியற நெருப்பு மாதிரி அங்களுக்கு நெறம். அவங்கள பார்க்கிற யாரும் பறச்சேரி வூட்டுப் பொண்ணுன்னு சொல்லமாட்டாங்க. அவ்ளோ அழகு. பழனியப்பாவ கட்டிக்கிட்டு இந்தக் கல்றசேரிக்கு வந்தப்போ அவங்களுக்கு பதிமூணு வயசு. அப்ப கல்றசேரி முழுக்க ஒரேசப்பாத்திக்காடா இருந்தது. கள்ளிச் செடியும் காட்டாமணிச் செடியும் எருக்கஞ்செடியும் எலந்த மரமுமா ஒரு நாதி இல்லாம வெறும் சாலடி மோடா கெடந்தது. பழனியப்பாவும் புட்லாய் அம்மாவும் இங்க வந்த பிறகுதான் அவங்க எல்லாத்தையும் வெட்டி செதுக்கிக் கல்றசேரியே ஒரு ஊரா மாறிச்சு. அவங்கதான் இந்த கல்றசேரிக்கு மொதமொதல்ல குடிவந்தவங்க. மத்தவங்கள்லாம் அவங்களுக்குப் பிறகுதான்.

பழனியப்பாவோட வூடு சேரியிலயும் இல்லாம ஊருலயும் இல்லாம ரெண்டுக்கும் நடுவுல மாட்டிக்கிச்சி. பிச்சேரியில நெல்லித்தோப்புன்னு சொன்னா 'பெத்தி பரி...' ன்னு சொல்லு வாங்க. 'சின்ன பாரீஸ்' அதாவது 'சின்ன பிரான்ஸ்'ன்னு அதுக்கு அர்த்தம். அதுக்குத் தெற்கால கல்றசேரி. அதுவும் நெல்லித்தோப்ப சேர்ந்ததுதான். ஆனா 'யாரும் நெல்லித்தோப்புன்னு சொல்ற தில்ல. ஏன்னா அங்க எல்லாருமே பற கிருஸ்தவங்களா இருந்தாங்க. அவங்க வீடுகளுக்கும் பக்கத்தில பற கிருஸ்தவங்க கல்ற ஒண்ணும் மேல் ஜாதி கிருஸ்தவங்க கல்ற ஒண்ணும் இருந்தது. இப்பவும் அந்தக் கல்றைங்க இருக்குது. அந்தக் கல்றைங்க மதில சுத்தி பற கிருஸ்தவங்களா இருந்ததால அத கல்றசேரி இல்லாட்டி கல்றபேட்டுன்னுதான் குறிப்பிடுவாங்க. இப்ப அந்தப் பேரு அவ்வளவா இல்ல. பொத்தாம் பொதுவுல நெல்லித் தோப்புன்னு சொன்னாலும் கூட பழைய ஆசாமிங்க யாராச்சும் நெல்லித்தோப்புல இருந்தா, இங்கிருந்து போற அன்பழகன ஏற எறங்கப் பார்த்திட்டு, 'நீ யாரு? எங்கிருந்து வர்ற? ஒங்கப்பன் பேரு என்னா?' ன்னு கேட்டு அவன் பதில் சொன்னதும், 'அட, நீ கல்றசேரியா?'ன்னு எகத்தாளமா கேட்பாங்க. அப்பல்லாம் அன்பழகனுக்கு அவமானத்தால ஒடம்பு கூசிப்போகும். 'பிச்சேரிய நாகரிகத்தில ஒஸ்தியான பிரெஞ்சுக்காரங்க ஊருன்னு சொல்றானுங்க. ஓத்தா... இன்னமும் இங்க ஜாதிப் புத்தியுள்ள நாய்ங்க இருக்குது பாரு...' ன்னு அவன் படிச்சி பெரியவனானதுக்கு அப்புறமா பலதடவ கோபப்பட்டிருக்கான்.

அப்படிபட்ட கல்றசேரியில உள்ளாரயும் இல்லாம, கவுண்டர்களும் நாய்க்கர்களும் முதலியார்களுமா நெறய இருக்கிற காராமணிக்குப்பத்திலயும் இல்லாம கடைசியா ரெண்டு ஊருக்கும் பொதுவா இருக்கிறது மாதிரி பழனியப்பா வூடு இருந்தது. அவரு இந்துப் பறயரா இருந்ததால கல்றசேரி பற கிருஸ்த வங்களும் சேர்த்துக்கிறது இல்ல. காராமணிக்குப்பத்து மேல்சாதிகாரங் களும் கண்டுக்கிறது இல்ல. ஒதுக்கியே வச்சிருந்தாங்க.

பழனியப்பா எப்பவுமே ரொம்ப நல்லவரு. ஆனா அவருக்குக் கோபம்னு வந்துட்டாப் போதும். கண்ணுமண்ணு தெரியாம போட்டு அடிப்பாரு. அப்பல்லாம் வூட்ல அதிகமா ஒத வாங்கறது அன்பழ கனாத்தான் இருக்கும். சில சமயத்தில அவன் ஏதாவது பெருசா தப்புப் பண்ணிடுவான். அப்ப அன்பழகன் வாங்கற அடி இம்மேலு அம்மேலு இல்ல. அதுவும் பால் கறக்குறப்போ மாடுங்க ஒதைக்காம இருக்கறதுக்காக ரெண்டு பின்னங்கால்களையும் சேர்த்து இறுக்கிக் கட்ற அணக்கயித்தால கொடுப்பாரு பாரு. சும்மா அடி 'சுளீர்... சுளீர்...' னு விழும். அந்த அணைக்கயிறு பழனியப்பா கறக்கிற பால் அழுக்கு ஏறி ஏறிக் கசகசன்னு நல்லா மொத்தமா இருக்குமா... அதால அடி வாங்கனா எங்க அடி விழுதோ அங்கெல்லாம் பட்டை பட்டையா வீங்கித் தழும்பாயிடும். இப்பவும் அன்பழகனுக்கு ஒடம்பெல்லாம் கோடு கோடா ரத்தம் கசிஞ்சி தடிச்சிப் போயிருந்தது. அதப் பார்த்துப் பார்த்து அவன் அழுதுகிட்டே இருந்தான்.

இதுக்காகவே இருக்கிறது மாதிரி பழனியப்பாதோள்ல எப்பவும் அணக்கயிறு ரெண்டா மடிச்சி கெடக்கும். வெத்து ஒடம்புல அழுக்கு வேட்டி இல்லாட்டி அழுக்கு கைலிய கட்டிகிட்டு பழனியப்பா செருப்பில்லாத வெறும் காலோட நடந்து போனா பார்க்கறதுக்கு ஒரு தனி அழகா இருக்கும். ஆனா அதுவே மேல்சாதிக்காரப் பசங்களுக்கு எளக்காரமா இருக்கும். வேணும்னே அவரு போறப்போ 'என்னடா பழனி... எங்க கௌம் பிட்ட...?' ன்னு மரியாத கொறவா பேசுவானுங்க. பழனியப்பாவுக்கு அது



படிப்பகம்

www.padippakam.com

தெரிஞ்சிருந்தும் எதையும் வெளி காட்டிக்காம அவனுங்களுக்கும் பதில் சொல்லாம அவரு பாட்டுக்குப் போய்க்கிட்டு இருப்பாரு. அப்பல்லாம் பழனியப்பாவோட பால் கறக்கறதுக்கு கூட போற அன்பழகனுக்கு மட்டும் ஆத்திரம் தாங்காது.

**'ஜாதித் திமிர்ல வளர்ந்திட்ட சங்கமாங்கிங்கதான் இப்படிப் பேசுறானுங்கன்னா மொளச்சி மூணு எல வுடாத சின்னச் சின்ன புழுக்கைங்கள்லாம் தன் அப்பாவ பேரு சொல்லிக் கூப்பிடறானுங்களே...' ன்னு அவனுக்கு கோபம் கோபமா வரும்.**

பதிலுக்கு நாம அந்தப் பசங்களோட அப்பாவ பேரு சொல்லிக் கூப்பிட்டா அவனுங்க சும்மா இருப்பானுங் களான்னு கேட்கனும்னு தோணும். அந்த மாதிரி சமயங்கள்ல பழனியப்பா எதுக்கும் கவலப்பட மாட்டாரு. ஆனா புட்லாய் அம்மாகிட்ட மட்டும் எப்பவாவது பேசறத அன்பழகன் கேட்டிருக்கான்.

''புட்லாயி... நம்மள சுத்தி மனப் புழுக்கக்காரங்களா இருக்கானுங்க. பொட்டப்பசங்க முன்ன விட்டுப் பின்ன கேவலமா பேசறானுங்க. எனக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா கூட மாட இருந்து ஒத்தாச பண்றதுக்கு அண்ணன் தம்பிங்கன்னு ஒருத்தனும் கெடயாது. அதான் பார்க்கிறேன். இல்லாட்டி இந்த பேமானி பசங்கள என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது.''

அப்ப புட்லாய் அம்மா அவர சமாதானப் படுத்தறது மாதிரி பேசுவாங்க.

''சரி வுடு அன்பு அப்பா, அவங்கள்லாம் குடித்தனக் காரங்களா இருக்காங்க. எல்லாம் ஒண்ணு சேர்ந்துக்கிட்டு சண்டைக்கு வருவாங்க. நாம் ஒண்டி என்னா பண்ண முடியும். நமக்கும் புள்ள குட்டிங்களா ஆயிடிச்சி. அவங்கள கரை சேர்க்கனும்னா குடித்தனக்காரங்கள நத்திப் பொழைச்சிக்கிட்டுப் போக வேண்டியதுதான்.''

இப்படி அவங்க சொல்றதுதான் தாமசம். பழனியப்பாவுக்கு 'சுருக்கு'னு கோபம் பொத்துகிட்டு வந்திடும்.

''என்னடி மசுரு பேச்சு பேசுற...? நான் ஜாதியில பறயன்தான்டி. ஆனா குணத்தில பச்சை துலுக்கன். கத்தி எடுத்தன்னா வெட்டாமகீழ போடமாட்டன். அவனுங்கள நத்திப் பொழைக்கனுமாம் இல்ல. பெருசா பேச வந்துட்டா. நத்திப் பொழைக் கிறதுக்கு நான் ஒண்ணும் நாய் இல்லடி. சுத்தப் பறயன்...''

இந்த மாதிரி பழனியப்பா பேசுறத கேட்க அன்பழகனுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். அந்த சமயத்தில பழனியப்பா வோட மொகத்தில தெரியற ரோஷத்த பார்க்கனுமே... அன்பழகனுக்கு பெரும புடிபடாது.

அது ஒரு ராத்திரி நேரம். சேரி ஜனங்களுக்கு எப்பவாச்சும் சோறு கெடைக்கிறது மாதிரி நிலா அன்னைக்கி மாத்திரம் ரொம்ப வெளிச்சமா இருந்தது. அந்த வெளிச்சத்திலசுத்தி இருக்கிற மரங்களோட நெழல் தரையில பட்டு காத்து அடிக்கிறப்பல்லாம் கண்ணாமூச்சி காட்டிகிட்டு இருந்தது. பழனியப்பா கீத்து ஓலையால கட்டப்பட்ட தன்னோட வீட்டு வாசல்ல இருக்கிற முருங்க மரத்துக்கு கீழ ஈச்சம் பாயில சப்ளாங்கோயில் போட்டு உட்கார்ந்து கிட்டு இருந்தார். அவரு மடியில ஒரு பழைய பான. அதனோட வாய்ப் பகுதி பழனியப்பா வயித்தோட வயிறா ஒட்டி கிட்டு இருந்தது. பக்கத்தில மந்தாரம். மந்தாரமும் பழனியப்பா மாதிரிதான். அவருகூடத்தான் இவரும் மாடுங்களுக்குப் பால் கறக்கப் போவாரு. ரெண்டு பேருங் களுக்கும் என்னா ஒறவு முறைன்னு தெரியாது. ஆனா பழனியப்பாவ மந்தாரம் 'அண்ணே...' ன்னு தான் கூப்பிடுவாரு. அதனால அன்பழகன் மந்தாரத்த எப்பவும் சித்தப்பான்னுதான் கூப்பிடுவான்.

பழனியப்பாவும் மந்தாரம் சித்தப்பாவும் செமத்தியா குடிச்சிட்டு இருந்தாங்க. மேல சட்ட எதுவும் போடாத அழுக்கான அவங்க ஒடம்புல இருந்து பால் கவுச்சியும் வேர்வையும் புளிச்ச கள்ளுமா ஒண்ணா சேர்ந்து ஒரு விதமா வாசனை அடிச்சிகிட்டு இருந்தது. அன்பழகன் அவங்க பக்கத்தில போயி பாயில உட்கார்ந்தான். மந்தாரம் சித்தப்பா அவன ஆசையா கிட்ட இழுத்து அணைச்சி கிட்டாரு. அப்பதான் அன்பழகன் பார்த்தான். ஏற்கனவே குடிச்சது போதாதுன்னு ஒரு லீத்தர் பாட்டில் நெறயா வெள்ள வெளேர்னு கஞ்சித் தண்ணிய ஊத்தி வச்சது மாதிரி கள்ளு இருந்தது. அந்தக் கள்ளு பாட்டலின் சின்னதான வாய்ப் பகுதியில நுரையா பொங்கிகிட்டு இருந்தது. அத எடுத்துப் பார்க்கிறதுன்னா அன்பழகனுக்கு ரொம்பவும் புடிக்கும். பழனியப்பா அடிக்கடி சொல்வாரு: 'நல்ல சுத்தமான கள்ளுன்னா பாட்டல்ல இருக்கிறப்போ காத வச்சிகேட்டா 'சொய்ங்...ன்னு ஒரே எரைச்சலா கேட்கனும்டா. அப்பதான் அது நல்ல கள்ளு. இல்லாட்டி அது தண்ணி வுட்ட கள்ளு...'

அன்பழகனுக்கு அது இப்ப ஞாபகத்துக்கு வந்திடவே ஆர்வமா பாட்டல்ல இருந்த கள்ள எடுக்கப் போனான். பழனியப்பாகிட்ட இருந்து கண்டிக்கிற மாதிரி குரல் வந்தது.

''தம்பி அன்பு, அதெல்லாம் நீ எடுத்துப் பார்க்கக்கூடாது. ரொம்ப கெட்ட பழக்கம் இது. நானதான் ஏதோ படிக்காதவன். லகை நாட்டு. மாடு கறக்கிற ஒடம்பு வலிய மறக்கிறதுக்காக ஏதோ கொஞ்சம் கள்ளு தண்ணிய அப்பப்ப இப்படி வாயில ஊத்திக்கிறேன். நீ படிக்கிற புள்ள. என்ன மாதிரி நீயும் குடிகாரனா ஆயிடக் கூடாது. என் புத்தி என்னோட போகட்டும். நீயாவது நல்லா படிச்சி ஒழுங்கா இருக்கனும். அதுக்குத்தாம்பா நான் இவ்ளோ தூரம் கஷ்டப்படுறேன்...''

அவரு சொல்லிகிட்டே பால் அழுக்கு ஊறிப்போயி இடுப்பில கட்டியிருக்கிற தன்னோட கைலியில மறைச்சி வச்சிருந்த சடைப் பயிர கை நெறய எடுத்து அன்பழகன்கிட்ட கொடுத்தாரு. அவரு கள்ளு குடிக்கப் போனப்போ கடைல வாங்கிட்டு வந்தது. அன்பழகன் அத ஆவலா வாங்கி ஒரே வாயாய்க் கொட்டிகிட்டே பழனியப்பாவைப் பார்த்தான். அவரு தன்கிட்ட இருந்த பானையில ரொம்ப உற்சாகமா தாளம் போட்டுகிட்டே பாட ஆரம்பிச்சாரு. அதே சமயம் மந்தாரம் சித்தப்பாவுக்கு சந்தோஷம் தாங்கல. பழனியப்பா தாளத்துக்கு சமமா அவரும் அவரோட கூட சேர்ந்துகிட்டு ஜோரா கை தட்டினாரு.

*'செல்லஞ்சேரி பறயண்டா*
*பழனி செத்துப் பொழச்ச பறயண்டா*
*கல்றசேரி பறயண்டா*
*பழனி கஷ்டப்பட்ட பறயண்டா*

*நாலு வூடு பால கறந்து*
*நாய போல உழைச்சேன்*
*இப்ப நடுத்தெருவுல கிடக்கேன்*
*காலக் கழுவிக் குடிச்ச பசங்க*
*காசு பணத்த சேர்த்து*
*சும்மா காட்றானுங்க காட்டு*
*பிச்சேரி சரக்கு போட்டா*
*பிரமாதமா பாட்டு*
*என்ன பேச வுட்டுக் காட்டு*



படிப்பகம்

www.padippakam.com

*நம்ம கச்சேரி கலகலக்கும்*
*நீ கள்ளுத் தண்ணிய ஊத்து*
*மொளகா கடிச்சிகினே ஏத்து*

*கன்னுக் குட்டிக் கறிய கொண்டா*
*கமகமக்குது ஜோரா*
*ஒரு கை பார்ப்போம் வாடா*
*சின்னக் குட்டி எதிர வந்தா*
*ஜினுக்கு ஜிக்கான் தாண்டா*
*எழுந்து ஜில்லான்ஜிப்பான் போட்றா*

*கொடுக்கறாண்டா பழனி யாண்டி*
*துன்றாண்டா சுன்னி யாண்டி*
*கோமணத்த அவுத்துப் பாரு போண்டி*
*நீ எடுத்துகிட்டா பொழுச்சிப் போவ*
*எடக்கு மடக்கு பன்னாதடா தூம*
*நான் எட்டுவூரு பறச்சேரிக்கு மாமன்*

*காடு வெட்டி முள்ள செதுக்கி*
*நான் கல்றசேரிய மாத்தினது பாரு*
*புழுத்திக்காட்டுதடா பொறம்போக்கு வூரு*
*மாடு கழுவி வயிறு வளர்த்தேன்*
*மானந்தாண்டா எனக்கென்றும் உசுரு*
*மத்ததெல்லாம் என் காலு மசுரு...'*

கும்மாளமும் கொண்டாட்டமுமாய் கச்சேரி நல்லா கள கட்டிகிட்டு இருக்கிறப்போ திடீர்னு பெருமாள் நாயக்கரோட குரல் கேட்டது.

''ஏண்டா பழனி... இதென்னடா கூத்து. இந்த ராத்திரி நேரத்தில இப்படி அட்டகாசம் பண்றீங்களே...?''

பழனியப்பாவுக்கு கச்சேரி பாதியிலேயே நின்னுடுச்சேன்னு கோபமாயிடுச்சி. ஆனாலும் அத வெளிக்காட்டிக்காம பேசாம இருந்தாரு. மந்தாரம்சித்தப்பாவுக்கு ஒண்ணும் புரியல. அன்பழகன் மெரண்டு போயி பேச்சு வந்த பக்கமா திரும்பிப் பார்த்தான். அவன் வூட்டுக்கும் பக்கத்தில இருந்த விழல் போட்ட பெரிய வூட்டு வாசல்ல பெருமாள் நாயக்கரு கோபமா நின்னுகிட்டு இருந்தாரு.

பெருமாள் நாயக்கரு நல்ல தொப்பையும் தொந்தியுமா இருந்தாரு. அவருக்கு கருப்பான நெறம். லேசா வழுக்கையான தல. நெத்தியில எப்போதும் ஒத்த நாமம். ஒடம்புல சட்ட எதுவும் போடாம ஒரு கைத்தறி துண்ட கோமணமா கட்டிக்கிட்டு ஈஸி சேர்ல சாய்ஞ்சபடியே எதிர்ல இருக்கும் புளிய மரத்தையே பார்த்துகிட்டு இருப்பாரு. அதுக்குக் காரணம் இருக்கு. அந்தப் புளிய மரத்திலதான் புறாக் கூண்ட வச்சிருக்காங்க மரகதம் அம்மா. அவங்க எங்கயோ போயி கேஸ் பொட்டிய வாங்கிகிட்டு வந்து ஆசாரிய வச்சி செஞ்சது அந்தப் புறாக்கூண்டு. அதுக்கு வேண்டிய பணத்தக் கொடுத்தது பெருமாள் நாயக்கருதான். ஏன்னா... அவருக்கு ஞாயித்துக் கெழம ஆனா புறாக்கறி வேணும். பெருமாள் நாயக்கரு முதலியார் பேட்டையில இருக்கிற புது ஆலையில வேல பார்க்கிறவரு. அவருக்குப்பாரிசவியாதி வந்திடுமோன்னு பயம். அதனால வாராவாரம் ஒரு புறாவ அறுத்து அதோட ரத்தத்தில கொஞ்சம் ஒடம்பெல்லாம் நல்லா தேய்ச்சி மீதி ரத்தத்த பிராந்தியில ஊத்திக் கலக்கிக் குடிச்சிடுவாரு. அப்படி செஞ்சா பாரிச வியாதி வராதுன்னு அவருக்கு யாரோ சொல்லியிருக்காங்க. அதோட எத்தன புறா அறுத்தாலும் அத்தன கறியையும் ஒரே ஆளா சாப்பிட்டிடனும். அப்பதான் வியாதி குணமாகும்னு வேற சொல்லியிருக்காங்க. அதனால ஞாயித்துக் கெழம ஆனா போதும். பெருமாள் நாயக்கரு எண்ண தேய்ச்சி தல குளிப்பாரு. அதுக்காகவே செப்புப் பாய்லர புளிய மரத்து நெழல்ல வச்சி அடுப்புக் கரிய போட்டுத் தண்ணி சுட வைப்பாங்க மரகதம் அம்மா. அந்த அடுப்புக் கரிய அன்பழகன்தான் சாரம் இல்லாட்டி புள்ள தோட்டத்துக்கு நடந்து போயி வாங்கிகிட்டு வருவான். அது மட்டும் இல்ல. பெருமாள் நாயக்கருக்கு சுருட்டுன்னா ரொம்ப இஷ்டம். அதுவும் கரும்பு மார்க் சுருட்டுதான் வேணும். அத வாங்குற துக்கும் பக்கத்தில இருக்கிற அன்பழகனத் தான் கூப்பிடுவாரு பெருமாள் நாயக்கரு.

அவரு வூடு பழனியப்பா வூட்டுக்கும் பக்கத்தில கல்ற மதில ஒட்டி இருந்தது. பழனியப்பா வூட்ட விடவும் பெரிய வூடு. நாலு பக்கமும் கருங்கல் தூண் வச்சி ரொம்ப விசாலமா கட்டியிருந்த வூடு. எதிர்ல இருந்த புளிய மரத்துக்கும் பக்கத்தில வரிசையா சப்பாத்தி கள்ளிங்க மானாவரியா நீட்டு நீட்டா வளர்ந்து கெடந்தது. மஞ்ச நெறத்தில பார்க்கிறதுக்கு ரொம்ப அழகா இருக்கிற அதனோட பூவுங்களுக்கு ஆசைப்பட்டு பறிக்கிறதுக்காக அன்பழகன் அந்த பக்கம் போனா மரகதம் அம்மா பார்த்திட்டு கத்துவாங்க.

''ஏன்டா... உன்ன இந்தப் பக்கம் வரக் கூடாதுன்னு எத்தன தடவ சொல்லியிருக்கேன். கேட்கமாட்ட...? இரு... இரு... ஒங்கப்பன் பழனி வரட்டும். அவன்கிட்ட சொல்லி... அவன் பால் கறக்கற அணக்கயித்தாலயே ரெண்டு போடச் சொல்றன். அப்பதான் நீ அடங்குவ...''

அன்பழகன் அதுக்கெல்லாம் அசர்றவன் இல்ல. காலைல தூங்கி எழுந்திருச்சதுமே கடகடன்னு போயி அவனுக்குப் புடிச்ச அந்த சப்பாத்திப் பூவுங்களுக்கும், அங்க கெடக்கிற புளியம்பழங்களுக்கும் ஆசப்பட்டு மரகதம் அம்மாவுக்குத் தெரியாம எடுத்துகினு வந்திடுவான்.

பெருமாள் நாயக்கரு வூட்டுக்கு வழி பழனியப்பா வூட்டு வாசல் வழியாத்தான் போகனும். வேற வழி கெடையாது. 'எப்படி ஒரு நாயக்கரு பறயன் வூட்டு வாசலத் தோன்டி போறார் வர்றார்...' னு அன்பழகனுக்கு ஆச்சர்யமா இருக்கும். இப்ப அந்த வாசல்லயே உட்கார்ந்துகிட்டு பழனியப்பாவும் மந்தாரம் சித்தப்பாவும் கள்ளு குடிச்சா பெருமாள் நாயக்கருக்கு கோபம் வராதா என்ன...? அதான் வந்துட்டது. 'நம்ம வூட்டுக்கு வர்ற வழி அது. அதுல போயி அவனுங்க உட்கார்ந்து இருக்கிறதா' ன்னு அவருக்கு நெனப்பு இருந்திருக்கு. அது அவரோட வார்த்தயிலேயே அப்பட்டமா வெளிப்பட்டது.

''இதென்ன உங்க அப்பன் வூட்டு ரோடா...? உங்க இஷ்டத்துக்கு குடிச்சிட்டு இருக்கிறதுக்கு. நாங்க அந்தப் பக்கமா போக வரத் தேவையில்ல...''

பழனியப்பாவுக்கு பெருமாள் நாயக்கரோட பேச்சில் குதர்க்கம் இருக்கிறது உடனே தெரிஞ்சிப் போச்சி.

''அண்ணே... கொஞ்சம் நிதானமா பேசுங்க. இது எங்க வூட்டு வாசலு. உங்க வூட்டு வாசல்லயா வந்து குடிக்கிறோம்...?''

''என்னடா பழனி. வாய் ரொம்ப நீளுது?''

''பின்ன என்னாங்கண்ணே... நீங்க பேசுறது கொஞ்சம் கூட ஞாயமே இல்லாம...''

''சரிதான்டா... மட்ட வெள்ளி நீ. நீ எனக்கு ஞாய அநியாயம் பத்திச் சொல்லித் தர்றியா...? தோல உரிச்சிப் புடுவேன்... ஜாக்கிரத...''

''எங்க வந்து உரிங்க பார்ப்போம். நீங்க என் தோல உரிக்கிற வரைக்கும் என் கை என்னா பூப்பறிச்சிகிட்டா இருக்கும். உங்ககிட்ட காசு மெதமிஞ்சி கெடக்கு. நல்லா ஒஸ்தியான சரக்கா சாராயம் பிராந்தின்னு வூட்ல வாங்கி வச்சிகிட்டு குடிக்கிறீங்க. எங்கள சொல்லுங்க. நாலு மாடு பால் கறந்து... நாலு மாடு தரவு வித்து ஏதோ கெடைக்கிற பிச்சக் காசுல குடும்பத்தையும் பார்த்துகினு இந்தக் கள்ளுத் தண்ணிய வாங்கி வாயில ஊத்திக்கிறோம். இது பொறுக்கல உங்களுக்கு. பேச வந்துட்டீங்க...''

பழனியப்பா இப்படி பேசினதும் பெருமாள் நாயக்கருக்கு என்ன தோணுச்சோ.

''டேய் பழனி... நீ இப்ப குடிச்சிட்டு இருக்கிற. விடியட்டும் உன்ன பேசிக்கிறேன்...''

சொல்லிட்டு வேற எதுவும் பேசாம உடனே தன்னோட வூட்டுக்குள்ளே போயிட்டாரு.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மாசம் போயிருக்கும். பழனியப் பாவும் பெருமாள் நாயக்கரும் மேற்படி விஷயத்த மறந்தே போயிருந்தாங்க. பெருமாள்நாயக்கருக்கு வாரம் தவறாம புறாக்கறியும் பிராந்தியும் சாராயமும் அதுக்குத் தொட்டுக்கறதுக்கு மரகதம் அம்மாவும் கூட இருந்தாங்க. பழனியப்பாவுக்கு நெலம அப்படி இல்ல. பொழுது விடிஞ்சதும் விடியாததுமா விடியக் காலயில எழுந்து பால் கறக்கப் போனாருன்னா மத்தியானம் ரெண்டு ரெண்டரை மணிக்குதான் வூட்டுக்கு வருவாரு. அப்படி வந்ததும் வராததுமா அவதி பவதியா கை கால நல்லா தேய்ச்சிக் கழுவிட்டு உட்கார்ந்தா புட்லாய் அம்மா ஒரு அலுமினிய தட்ல பழையத போடுவாங்க. அரக்கப் பரக்க அத சாப்பிட்டதும் சாப்பிடாததுமா மறுபடியும் அணக்கயித்த எடுத்துத் தோள்ல போட்டுகிட்டு லொங்கு லொங்குன்னு ஓடனும். நெறய சமயத்தில இநதப் பழைய சோறுகூட பழனியப்பாவுக்குக் கெடைக்காம பட்டினியாவே அவரு ஓடறத பார்த்து அன்பழகன் நெறய தடவ யாருக்கும் தெரியாம அழுதிருக்கான். பழனியப்பா நல்லா சாப்பிட்டு நிம்மதியா தூங்கி நாலு பேரப் போல கவுரவமா வாழ்ந்து சந்தோஷமா இருந்தத அன்பழகன் ஒரு நாளு கூட பார்த்ததில்ல. அவனுக்கு நெனவு தெரியறதுக்கு முன்னாடி இருந்தே பழனியப்பாவுக்கு இந்த மாதிரி நெலமதான். இந்த மாதிரி பொழப்புதான்.

எப்பவும் வாற ஞாயித்துக் கெழமதான் அப்பவும் வந்தது. காலங்காத்தால பெருமாள் நாயக்கரு வூட்லதான் இருந்தாரு. அன்பழகன் புளிய மரத்துக் கீழ பழங்க கெடக்குதான்னு பார்த்துப் பொறுக்கிக்கிட்டு இருந்தான். பாய்லர்ல சுட தண்ணி போட்டு குளிச்சி முடிச்சி ருந்தாரு பெருமாள் நாயக்கரு. கீழ பாய்லர் அடுப்புக்கரி அணைஞ்சி போயி எறைஞ்சி கெடந்தது. மரகதம் அம்மா பெருமாள் நாயக்கரு வூட்டுக்குள்ள போறதும் வர்றதுமா இருந்தாங்க. அன்பழகன் புளிய மரத்த நிமிர்ந்து பார்த்தான். மேல புறாக் கூண்டுல புறாங்க கொறஞ்சிகிட்டே வர்றது நல்லா தெரிஞ்சது. கூண்டுலயும் மரத்துக்கு கீழயும் நெறய புறாப் பீ.

மரகதம் அம்மாவுக்கு வயது அம்பது கிட்ட இருக்கும். அவங்க பெருமாள் நாயக்கரு வூட்டுக்கு சோத்துக் கை பக்கமா இட்லி சுட்டு வித்துகினு இருக்கிறவங்க. பார்க்கிறதுக்கு மா நெறத்தில குண்டா இட்லி மாதிரியே மொகத்த வச்சிகிட்டு சுமாரா இருந் தாங்க. எப்பவும் அன்பழகன வெரட்டி வெரட்டி அடிக்கிறவங்க எதுக்கோ ஜாடை காட்டி அவன நைசா கூப்பிட் டதும் அவன் புளியம்பழம் பொறுக்கறத வுட்டுட்டு வேகவேகமா கிட்ட ஓடினான்.

''பெரியம்மா... கூப்பிட்டீங்களா...?''.

''ஆமாம்பா அன்பு. போயி...''

மரகதம் அம்மா ஏதோ ரகசியம் போல அன்பழகன் கிட்ட மெதுவா சொன்னதும் அவன் தயங்கித் தயங்கி அவங்களையே பார்த்தான்.

''அப்பாவுக்கு தெரிஞ்சா அடிப்பாரு பெரியம்மா...''

''பழனிதானே... அவன் வந்து கேட்டா நான் பேசிக்கிறேன். நீதான் நல்ல புள்ளயாச்சே. உங்கப்பன் வர்றதுக்குள்ள சீக்கிரமா ஓடிப்போயி வாங்கியாந்திடு...''

''வேணாம் பெரிம்மா...''

''தோ பாரு... இதுல மீர்ற காசு உனக்குத் தான். நீ போய்ட்டு வந்தினா சாப்பிடற துக்கு உனக்கு இட்லியும் மீன் கொழம்பும் தருவேன்...''

**அன்பழகன் மனசுல சில்ற காசும் இட்லியும் மீன் கொழம்பும் வந்து சிரிச் சிருக்கனும். அவனும் உடனே சிரிச்சி கிட்டு மரகதம் அம்மாகிட்ட ரூபாயை வாங்கிகிட்டு ரொம்ப உற்சாகமா 'போம்... போம்... கி... கீ...' ன்னு வாயாலேயே கார ஓட்டிகிட்டு சட்டுனு மறைஞ்சி போனான்.**

பெருமாள் நாயக்கரு வூடு. அது பகல்லேயே ராத்திரி மாதிரி இருட்டா இருக்கும். உள்ள இருக்கறவங்க என்னா செய்றாங்கன்னே தெரியாது. வெளிக் கதவு தாப்பாள் போடாம ஒருக்களிச்சி இருந்தது. அன்பழகன் போன வேகத் திலேயே மூச்சு வாங்க ஓடியாந்தான். அவன் மொகத்தில யாரும் செய்யாத ஒரு பெரிய காரியத்த செஞ்ச பெருமை தெரிஞ்சது. அத உடனடியா மரகதம் அம்மாகிட்ட சொல்லனும். அதான் அன்பழகனோட நோக்கமா இருந்தது. எங்கயும் நிக்காம நேரா பெருமாள் நாயக்கரு வூட்டு வாசல்ல வந்து நின்னான். தயங்கித் தயங்கி அவரு வூட்டு வாசப்படியேறி கதவுகிட்டே போனப்போ உள்ள பெருமாள் நாயக்கரும் மரகதம் அம்மாளும் பேசிக்கிட்டு இருக்கிறது நல்லா காதுல வுழும்படியா கேட்டது.

''ஏண்டி மரகதம்... இந்த பெருமாள் நாயக்கன பத்தி என்னதாண்டி நெனைச்சி கிட்டு இருக்கிற...?''

''நான் நெனைக்கிறது இருக்கட்டும்யா. நீ நெனைக்கிற அப்பல்லாம் நாய் மதிரி மேலே ஏர்றதுக்கு வருவ. அவ்ளோதான். அத்த வுட்டா வேற என்னய்யா தெரியும் உனக்கு...?''

''அடிப் போடி இவளே... மனுஷனா பொறந்தா ஒண்ணு சண்டையில சாவனும்... இல்லாட்டி...''

''ஆமாமா... இந்த வெட்டி வீராப்புக்கு ஒண்ணும் கொறச்சல் இல்ல. சண்டயில சாவறமூஞ்சியப்பாரு. யோவ்சண்டையில சாகனும்னா அதுக்கெல்லாம் ஒரு வீரம் வேணும்யா. உனக்கு ஏதுயா வீரம்...?''

''ஏய் மரகதம்... நான் யாரு... வீரப் பரம்பரைல வந்த நாயக்கண்டி...''

''அதனாலதான்யா சொல்றேன். நீ வேணும்னா பார்த்துகினே இரு. நீ சண்டையில சாகப் போறது இல்ல... என்னோட...''

மரகதம் அம்மா முழுசா வார்த்தைய முடிக்கல. பெருமாள் நாயக்கர கீழ்க் கண்ணால ஒரு மாதிரியாப் பார்த்துகிட்டே அரையும் குறையுமாதான் பேசினாங்க. அதோட அர்த்தம் பெருமாள் நாயக்கருக்கு உடனே புரிஞ்சி போயிருக்கனும். அதனால மரகதம் அம்மா ரொம்ப உரிமையா கேலி செஞ்சிகிட்டே பெருசா சிரிச்சப்போ அவரும் கூட சேர்ந்துகிட்டு சிரிச்சாரு. இப்படிப்பட்ட சமாச்சாரமெல்லாம் அவங்களுக்குள்ள அடிக்கடி நடக்கிறது தான். அத அன்பழகனும் பல தடவ பார்த்திருக்கான். சரி. சரி இப்ப நடக்கிற தையும் பார்த்திடலாம்னு அவன் நெனச்சப்ப மறுபடியும் பெருமாள் நாயக்கரும் மரகதம் அம்மாளும் பேசற சத்தம் கேட்டது.

''ஏன் மரகதம்... இப்படி நேரத்த வளர்த்திற... இந்நேரம் பேசற நேரம் ஆயிருக்குமா...?''

''ஆமாயா... உனக்கென்ன நெக்க பிராந்திய குடிச்சிட்டு இருக்கிற... எனக்கு ஊத்திகிறதுக்கு கொஞ்சம் சாராயமாச்சும் வேணாம்...''

''அதான் அந்த பையன் பழனி மவன அனுப்பியிருந்தியா...?''

''ஆமாயா... இந்நேரம் வந்துகினு இருப்பான்...''

மரகதம் அம்மா சொல்லி முடிக்கிற சமயம். இத எல்லாத்தையும் கேட்டுகிட்டு



படிப்பகம்

www.padippakam.com

இருந்த அன்பழகன் பெருமாள் நாயக்கரு வூட்டுக் கதவு மேல பைய வச்சி லேசா தள்ளினதும் சட்டுனு வெளிச்சம் அந்த அறை முழுக்கப் பரவுச்சி. உள்ள பார்த்தா பெருமாள் நாயக்கரு கோமணம் கூட இல்லாம மரகதம் அம்மா மேல ஏற்றதுக்கு முயற்சி பண்ணிகிட்டு இருந்தாரு. மரகதம் அம்மா பெருமாள் நாயக்கரு வழிச்சிவிட்ட பொடவையையும் பாவாடையையும் ஒரு கையால தள்ளி வுட்டுகிட்டே அதுக்கு எடம் கொடுக்காம அவருகிட்ட வம்படிச்சிகிட்டு இருக்கிறது தெரிஞ்சது. எல்லாத்தையும் கொஞ்ச நேரத்துக்குள்ள பார்த்திட்ட அன்பழகன் என்ன செய்யறதுன்னு புரியாம வாசப் படியிலேயே நின்னு எதுவும் தெரியாத மாதிரி குரல் கொடுத்தான்.

''பெரிம்மா...''

அவ்ளோதான். பெருமாள் நாயக்கருக்கு சொல்ல முடியாத கோபம் வந்திட்டது. மரகதம் அம்மா மேல இருந்து சடார்னு எழுந்தவரு அந்த அரகொற வெளிச்சத் திலயும் தன்னோட கோமணம் எங்க கெடக்குதுன்னு அவசரம் அவசரமா தேடிகிட்டு இருந்தாரு. மரகதம் அம்மாளும் அரக்கப் பரக்க எழுந்து பொடவைய சரி செஞ்சிகிட்டே வந்து அன்பழகன்கிட்ட சாராய பாட்டல வாங்கினதும் பெருமாள் நாயக்கரு கோமணத்த எடுத்துக் கட்டிகிட்டே வேகமா வந்துசரமாரியா பேசஆரம்பிச்சாரு.

''எலே... மட்ட வெள்ளி... உன் பறப் புத்திய காட்டிட்டியே. கதவு சாத்திதானே இருந்தது. வெளியவே நின்னு கூப்பிடாம எதுக்குடா கதவ தொறந்து எட்டிப்பார்த்த...?''

அன்பழகனுக்கு என்ன சொல்றதுன்னே புரியல. பெருமாள் நாயக்கர பரிதாபமா பார்த்தான். அவரு கோபமா இருக்கிற தால என்ன செஞ்சிடுவாரோன்னு வேற அவனுக்குப் பயமா இருந்தது. அதனால தட்டுத் தடுமாறி ஒவ்வொரு வார்த்தையா பேசினான்.

''இல்லங்க.. பெரியப்பா.. நான் கையதான் வச்சேன். கதவு தானா தொறந்துகிச்சு...''

''ஆமான்டா பொறம்போக்கு... தொறந்த வூட்லநாய்நொழைஞ்சமாதிரிவேணும்னே நொழைஞ்சிட்டு வியாகியானமாப் பேசுற...? ஜாதிக்கேத்த புத்தி கொலத்துக் கேத்த ஆச்சாரம்னு பெரியவங்க சொன்னது சரியாத்தான்டா இருக்கு...''

அன்பழகனுக்குத் 'திக்'குனு ஆயிடுச்சி. வேணும்னே கதவ தொறந்ததா பெருமாள் நாயக்கரு சொல்றாரேன்னு அவனுக்குப் பயத்தில மனசு நடுங்க ஆரம்பிச்சிட்டது. 'நாம தப்புதான் செஞ்சிட்டோம் போல இருக்கு'ன்னு பெருமாள் நாயக்கரையே அலங்க மலங்க பார்த்துகிட்டு இருந்தான்.

''அப்பறம் ஏன்டா மட்ட வெள்ளிப் பயலே பார்த்துகினே நிக்கற. இன்னும் கொஞ்ச நேரம் என் எதிர்க்க நின்னேன்னு வச்சிக்க... என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. ஓட்றா நாயே...''

பெருமாள் நாயக்கரு கண்ணு செவக்க உதடு துடிக்க படபடன்னு சத்தமா சொன்னதுதான் தாமசம். அன்பழகன் கல்லால் அடிச்ச காக்கா பறந்தது மாதிரி 'சடார்...' னு அந்த எடத்த வுட்டு எப்படியோ ஓடிப் போனான்.

* * *

மத்தியான நேரம். வெயில் மண்டைய பொளக்கிற மாதிரி 'சுளீர்'னு அடிச்சி கிட்டு இருந்தது. தெருவுல ஒருத்தர் நடமாட்டமும் கெடையாது. எல்லா எடத்திலயும்நெருப்பை அள்ளி கொட்டுன மாதிரி இருந்தது. அந்தஉக்கிரத்திலயும் பழனியப்பா மாத்திரம் 'வரட்டும் அவன்'னு வூட்டு வாசல்ல முருங்க மரத்துக்குக் கீழயே நின்னுகிட்டு இருந்தாரு. அவரு ஒடம்புல இருந்து வேர்வ அதுபாட்டுக்கு வழிஞ்சிகிட்டே இருக்க அத ஒரு கையால வழிச்சி வுட்டுகிட்டே இன்னொரு கையில அணக் கயித்த வச்சிகிட்டு இருந்தாரு. கருத்த ஈச்சம்பழம் மாதிரி இருக்கிற அவரு ஒடம்பு கோபத்துல துடிச்சிகிட்டு இருந்தது. எப்பவும் களையா இருக்கிற அவரு மொகம் இப்ப கடுகடுப்பா மாறிப் போயிருந்தது. பழனியப்பா அமைதி யில்லாம தவிக்கிறார்னு பார்த்த உடனேயே தெரிஞ்சிக்கிற அளவுக்கு இருந்தது அவரோட நெலம. வாசப்படி யிலயே புட்லாய் அம்மாவும் நின்னுகிட்டு என்ன ஏதுன்னு புரியாம தவிச்சிகிட்டு இருந்தாங்க. பழனியப்பாவுக்கு அவங்கள திரும்பிப் பார்த்ததுமே கோபம் 'சர்ர்...'னு தலைக்கு ஏறிட்டது.

''புட்லாய் எங்கடி அவன்?''

புட்லாய் அம்மாவுக்கு மனசு நடுங்க ஆரம்பிச்சிட்டது. எதுவும் பேசாம தன் புருஷன் பழனியப்பாவையே பார்த்துகிட்டு இருந்தாங்க.

''என்னடி, நான் கேட்கறேன் இல்ல? எங்கிருக்கிறான் அவன்?''

''யாருங்க?''

''அதான்டி உன் அருமப் புள்ள.''

புட்லாய் அம்மாவுக்குப் புரிஞ்சிட்டது. நம்ம புள்ள அன்பழகன் ஏதோ தப்பு செஞ்சிட்டு இவருகிட்ட மாட்டிகிட்டு இருக்கான்னு தெரிஞ்சதும், உடனே பழனியப்பாவ சமாதானப் படுத்தற மாதிரி பேச ஆரம்பிச்சுட்டாங்க.

''ஏன் அன்பு அப்பா கோபமா பேசற. தம்பி இப்பதான் பக்கத்து வூட்டு மரகதம் அக்கா ஏதோ வேல வுட்டாங்கன்னு போச்சி''

''அதனாலதான்டி அவன தேடறேன்.''

''எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லு அன்பு அப்பா... நான் என்ன ஏதுன்னு கேக்கிறேன்.''

''என்னாடி கேப்ப? காய்ற வெயிலும் பேய்ற மழையும் எல்லாம் என் தல மேலதாண்டி காயுது பேயுது. அப்படி யெல்லாம் நான் வவுத்த தூக்கிகினு போயி கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சா உம்புள்ளக்கி தின்ற கொழுப்புடி''

''புள்ள என்னா செஞ்சான் அன்பு அப்பா?''

புட்லாய் அம்மா பழனியப்பாவ ஆயக்கட்ற மாதிரி இப்படி கேட்டதுமே அவருக்கு இன்னும் கோபம் அதிகமா யிட்டது. பல்ல நறநறன்னு கடிச்சி கிட்டே அணக் கயித்தால ஓங்கி முருங்க மரத்த ஒரு அடி அடிச்சாரு. அப்பவும் அவருக்குக் கோபம் தணியல.

''எங்கடி போவான் உம்புள்ள. எப்படியா இருந்தாலும் வூட்டுக்கு வந்துதானே ஆவனும். வரட்டும் அவன நான் என்ன செய்யிறேன்னு பாரு.''

'இந்த சமயத்தில நம்ம புள்ள இவருகிட்ட மாட்டக்கூடாதேன்னு புட்லாய் அம்மா மனசுக்குள்ளயே அவங்க இஷ்ட தெய்வமான கொசப்பாளையத்து வெள்ளந்தாங்கி அய்யனாரப்பன வேண்டிகிட்டு இருக்கிறப்பதான் அன்பழகன் மரகதம் அம்மாவுக்கு வேல செஞ்சிட்டு பெருமாள் நாயக்கரு கிட்ட கேழி வாங்கிகினு ஒடியாந்தான். வந்தவன் நேரா பழனியப்பா கையிலயா மாட்டனும்? அவரு வெறிபுடிச்ச மனுஷ னாட்டம் இவன் எப்ப வருவான்னு காத்துகினு இருக்க சந்தர்ப்பம் சரியா அமைஞ்சி போச்சி. அவ்ளோதான். பழனியப்பா அன்பழகன அவரு கோபம் தீர்ற வரைக்கும் அணக்கயித்தால அடிச்சி வெளுத்து வாங்கிட்டாரு. அன்பழகன் வலி தாங்காம... 'எப்பா... எப்பா... அடிக்காதப்பா... என்ன வுட்டுடுப்பா...' ன்னு எவ்ளவோ கத்திப் பார்த்தான். ம்ஹூம்... அவரு கேட்கறதா இல்ல. புட்லாய் அம்மா மாத்திரம் ஓடியாந்து அன்பழகனை கட்டிப் புடிச்சிகிட்டாங்க. அவன் பயத்தில ஓடிப்போயி புட்லாய் அம்மாவோட கால கட்டிகிட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

''அன்பு அப்பா... அடி தாங்காம புள்ள துடிக்குது. போனாப் போவட்டும். புள்ளய வுட்டுடு.''

''ஏண்டி... உம்புள்ளய அடிக்கக் கூடாதுன்னு சொல்றியே, அவன் என்னா காரியம் செஞ்சிட்டு வந்திருக்கான்னு தெரியுமா?''

''நீ சொன்னாதானே தெரியும்.''

''தோ... நிக்கிதேடி தரங்கெட்ட தருதல அவன் இந்த வயசில எச்சக்காசுக்கும் பீக் கொடலுக்குமா ஈன வேல செஞ் சிருக்குடி...''

புட்லாய் அம்மாவுக்குப் பழனியப்பா சொன்னது ஒண்ணும் புரியல. அவரு மொகத்தயே பார்த்துகிட்டு இருந்தாங்க.

''உனக்குத் தெரியாது புட்லாயி... செத்த நேரத்துக்கு முன்ன நான் கள்ளுக் கடையில குடிச்சிட்டு இருந்தப்ப... இந்த கம்மினாட்டி பெத்த புள்ள பக்கத்து சாராயக் கடைல பாட்டல்ல சாராயம் வாங் கிகினு இருந்தத நான் என் கண் ணால பார்த்துட்டு அப்படியே ஆடிப் போயிட் டேண்டி. மவன... அவன் மட்டும் அங்கயே என் கைல கெடச்சி இருந்தான்னா... தோல உரிச்சி உப்புக் கண்டம் போட்டிருப்பேன்''

புட்லாய் அம் மாவுக்கு விஷயம் கொஞ்சம் கொஞ்சமா புரியத் தொடங் கியது. எல்லாத்தயும் 'சடக்கு'னு உணர்ந்து கிட்டது மாதிரி பேசத் தொடங்கினாங்க.


''ஆமாம்... அன்பு அப்பா... பக்கத் தில நாயக்கரு அண்ணன் வூட்டுகிட்டதான் புள்ள வெளையா டிகிட்டு இருந் துச்சி. அப்பதான் மரகதம் அக்கா ஏதோ வேல வுட்டுதுன்னு தெரிஞ்சது. ஆனா என்னா எதுன்னு நான் சரியா கவனிக்காம போயிட்டேனே.''

''என்னாடி... நீ புள்ள வளர்க்கிற லட்சணம். அந்தப் பொம்பள நம்ம புள்ளகிட்ட காசு தர்றேன்... இட்லி தர்றேன்னு ஆச காட்டி சாராயம் வாங்கியாரச் சொல்லி அனுப்பி யிருக்கிறா. அவளப் போயி மரகதம் அக்கான்னு சொல்றியே...''

''நேத்து இன்னிக்கா கூப்பிடறேன் அன்பு அப்பா? நாம கல்யாணம் கட்டிகினு வந்த நாளாத்தான் மரகதம் அக்கா... நாயக்கரு அண்ணன்னு கூப்பிட்டுகிட்டு வந்தேன். என்ன மாதிரியேதான் நீயும் அவங்கள ஆச பாசையா கூப்பிட்டுகிட்டு வர்ற. ஆனா அவங்க இது மாதிரி தரங்கெட்டு நடந்துகிட்டா அதுக்கு நாம என்னா பண்ண முடியும்...?''

''நீ சொல்றது வாஸ்தவமான பேச்சு தாண்டி. அவங்கதான் அந்த மாதிரி வேல வுட்டாங்கன்னா நம்ம புள்ளக்கி எங்கடி புத்தி போச்சி?''

''போனாப் போகுது வுடு அன்பு அப்பா. அந்த மரகதம் அக்காவைப் பத்தி உனக்குத் தெரியுமில்ல. அவங்க மயிர எண்ணினாலும் எண்ணலாம் அவங்க வச்சிகிட்ட புருஷன் மாருங்கள எண்ண



முடியாது. வாய் செத்த மனுஷன் பட்டப்பா முதலியாரு. அவருக்குப் பொண்டாட்டியா இருந்துகினே கோழி ரைட்டர வச்சிகிச்சு. அப்புறம் மாப்ளைய வச்சிகிச்சி. அதுக்கப்பறம் ஒருத்த னையும் வுட்டு வைக்காம ஊரெல்லாம் மேய்ஞ்சிட்டு... இப்ப பெருமாள் நாயக்கரு அண்ணன்கிட்ட அவரு பணத்துக்காகப் போயி படுக்குது. அந்த மனுஷன்தான் இருக்கட்டுமே. என்னதான் அவரு பொண்டாட்டி கொளத்து வேல செய்யிர மீசக்காரரோட ஓடிப்போயிட்டாலும் இப்படியா கொஞ்சம்கூட மானமில்லாம வெட்கங்கெட்டு நடந்துக்கிறது...?''

''அதான் புட்லாயி... எனக்கு இப்போ இவ்ளோ கோபம் வருது. நம்மகிட்ட இருக்கிற கஞ்சியோ கூழோ குடிச்சிட்டுப் பேசாம 'வூட்ல அடங்கி கெடக்க வேண்டியதுதான. இவன் எதுக்கு ஈன வேலயெல்லாம் செய்யப்போகனும்...?''

''சின்னப் புள்ளையாச்சேன்னு ஆசையா பெருமாள் நாயக்கரு அண்ணன்தான் அப்பப்ப கூப்பிட்டு வேல வுடுவாறு. அப்ப... எதாச்சும் மீர்ற காச நம்ம புள்ளைக்கி கொடுப்பாரு. அவ்ளோதான்...''

''நீ நெனச்சிகிட்டு இருக்கிறது ரொம்ப தப்பு புட்லாயி.

அந்த பெருமாள் நாயக்கனாகட்டும்... இல்ல... அந்த மரகதம் பொம்பளயா கட்டும் நம்ம புள்ளய ஆசையா கூப்பிடல. அடிமை வேல செய்யத்தான் கூப்பிடறாங்க.

இப்பகூட நான் கடையில இருந்து வந்ததும் இவன அடிக்கிறதுக்காகத் தேடிகிட்டு இருந்தப்போ... அந்த பெருமாள் நாயக்கன் குடிச்சிட்டு அந்த மர கதம் சிறுக் கியோட சேர்ந்து கிட்டு நம்ம புள்ளய மட்ட வெள்ளி ன்னு மட்டு மரியாதை இல்லாம திட்னத என் காதால கேட்டேன் புட்லாயி. இந்தத் திரு ட்டுராஸ்கல் நம்ம வூட் டோட இருந்திருந்தா அந்தத் தேவடியாப் பையன் அப்படிப் பேசியிருப்பானா...?''

எல்லாத்தையும் நிதானமா பேசிக்கிட்டு வந்த பழனியப்பாவுக்கு 'சடார்...'னு ரத்தம் மண்டைக்கு ஏறிட்டது போல கோபம் பொத்துகிட்டு வந்தது. மதுர வீரனுக்கு சாமி வந்திட்டது மாதிரி நாக்க கடிச்சிகிட்டு ஓடினவரு புட்லாய் அம்மா பின்னாடி ஒளிஞ்சிக் கிட்டிருந்த அன்பழகன் முதுகில... கையில... காலல... எல் லாம் அணக் கயித்தால அடிச்சி விளாச... விளாச... அவன் 'அய் யோ... எம் மாவு... எம் மாவு'ன்னு கத்திகிட்டே புட்லாய் அம்மாவை யே சுத்தி சுத்தி வந் தான். அப்பவும் பழனியப்பாவுக்குக் கோபம் அடங்கல. அன்பழகன தரதரன்னு இழுத்துகினு



படிப்பகம்

www.padippakam.com

வந்து கைய ரெண்டையும் தொடைக் குள்ளார வுட்டு கட்டி குத்துக் காலிட்டு உட்காரவச்சி... பனவெல்லத்தகரச்சி மேல ஊத்திட்டு... 'புட்லாய் நான் வர்ற வரைக்கும் இவன் இப்படியேதான் இருக்கனும். இவனை அவுத்து வுட்ட, உன் தோல உரிச்சிப்புடுவேன். ஜாக் கிரத'ன்னு சொல்லிகிட்டே அணக் கயித்த தன் தோள்ல போட்டுகிட்டு எங்கேயோ வேகவேகமா போயிட்டாரு.

அன்பழகன் எவ்ளோ நேரம் அப்படியே இருந்திருப்பான்னு அவனுக்கே தெரியாது. பின்னங்கால் நரம்பெல்லாம் இழுத்துகிட்டு சொல்லமுடியாத சித்ர வதையாக இருந்தது. உட்காரவும் முடியாம எழுந்திருக்கவும் முடியாம நரக வேதனையா இருந்தது. ரொம்ப நேரமா குதிங்கால தரையிலேயே ஊணிகிட்டு இருந்ததால 'விண்ணு விண்ணு...'ன்னு பொறுக்க முடியாத அளவுக்கு வலி. 'எப்படா அப்பா வந்துகட்ட அவுத்து வுடுவாரு'ன்னு அன்பழகன் அப்பப்ப தன்னோட அம்மா புட்லாய் அம்மாவ பார்க்கிறதும், தன்னோட அப்பா பழனியப்பா வர்ற வழிய பார்க்கிறதுமா இருந்தான்.

சாயந்திர நேரம். இப்ப வெயிலு அவ்வளவா இல்ல. கொஞ்சம் கொஞ்சமா பூமி குளிர்ந்துகிட்டே வந்தது நல்லா தெரிஞ்சது. பழனியப்பா அலுத்துபோயி வந்திருந் தாரு. அவரு மொகம் சரியா இல்ல. எதையோ பறிகொடுத்தவரு மாதிரி கண்ணு மூஞ்செல்லாம் 'ஓ...ன்னு இருந்தது. சட்ட போடாத அவரு ஒடம்பு மேல ஒரு செகப்புத் துண்டு. அதுல ஏதோ ஒரு பொருள வச்சி முடிச்சிப் போட்டு கழுத்துல சுத்தி அத மொகத்துக்கு நேரா பொட்டலமா தொங்கவிட்டுகிட்டு இருந்தாரு. அணக் கயித்த இடுப்புல சுத்தி கைலி மேல இறுக்கமா கட்டியிருந்தவரு நேரா அன்பழகன்கிட்ட வந்து அவன அன்பாவும் ஆசையாவும் பார்த்தாரு. என்ன நெனச்சாரோ திடீர்னு கண்ண தாழ்த்திகிட்டு கொஞ்ச நேரம் நின்னவரு அன்பழகன் கட்டல்லாம் அவுத்து வுட்டுட்டு தன் கைலியால அவன் மேலே இருந்த பன வெல்லத்த சுத்தமா தொடைச்சிட்டு அவன தூக்கி நிறுத்தினாரு. அன்பழகனுக்குப் போன உசுரு திரும்பி வந்தது மாதிரி இருந்தது. பெரிய கண்டத்தில இருந்து தப்பிச்சிட்ட மாதிரியும் தோணுச்சி. 'அப்பாடா...' ன்னு நிம்மதியா பெருமூச்சு விட்டப்பதான் பார்த்தான். பழனியப்பா அழுதுகிட்டு இருந்தாரு. அவரு கண்ணுல இருந்து மாலை மாலையா கண்ணீரு.

''தம்பி அன்பு அந்த பெருமாள் நாயக்கன் முன்ன ஒரு தடவ சண்டைல என்ன மட்ட வெள்ளின்னு திட்டிட்டான். அப்பகூட எனக்கு வருத்தமில்ல. ஏன்னா எனக்கு வசவும் திட்டும் அவமரியா தையும் அசிங்கமும் பழகிப் பழகி மரத்துப்போச்சி. ஆனா நீ அப்படி இல்ல. வளர்ற புள்ள. அவன் வப்பாட்டிக்கு நீ சாராயம் வாங்கிகினு வந்து கொடுத்தத கூட மறந்துட்டு உன்னமட்ட வெள்ளின்னு திட்றானே... அவனுக்கு என்னாப்பா தெரியும் புள்ளைங்களோட அரும? அந்தஅவுசாரி மரகதத்தோட ஆட்டம் போடறான். பத்தாக் கொறைக்கு பாவம் அந்தப் புறாங்க. அதுங்கள வேற துடிக்கத் துடிக்க அடிச்சி சாப்பிடறான். இந்த லட்சணத்தில இவன் ஒசந்தஜாதி... நாம தாழ்ந்த ஜாதி. தூத்தெரின்னா... ஈயத்த பார்த்து இளிச்சதாம் பித்தளைங்கற கதையா... மட்டமானவன் இவன். இவன் சொல்றான் நம்மல பார்த்து மட்ட வெள்ளின்னு...''

பழனியப்பா பேசுறத நிறுத்திட்டு புட்லாய் அம்மாவையும் அன்பழகனையும் மாறி மாறிப் பார்த்தாரு. அவரு குரல் முன்னவிடவும் கொஞ்சம் அதிகபடியாக ஒசந்து இருக்கிறது போல அன்பழகனுக்குத் தோணுச்சி.

''உங்கம்மா புட்லாயிக்குத் தெரியும். நான் குடிகாரன்தாம்பா. ஆனா கூத்திக் கள்ளன் இல்ல. அந்த பெருமாள் நாயக்கன் சொல்றது மாதிரி நான் வேணும்னா மட்ட வெள்ளியா இருக்கலாம். ஆனா, எனக்குப் பொறந்த நீ மட்ட வெள்ளியில்ல. உன்னை நான் மட்ட வெள்ளியாவும் வளர்க்கல. நீ மக்க மனுஷங்க மத்தியில மாசற்ற தங்கமா இருக்கனும். அதுக்காகத்தான் உன்ன இவ்வளவு கஷ்டபட்டு வளர்க்கிறேன். படிக்கவைக்கிறேன். எந்த ஈன வேலயா இருந்தாலும் அது என் தலமுறையோட போவட்டும். உனக்கு வேணாம்பா அது. நீ கஷ்டப்பட்டு நல்லா படிச்சி பெரிய ஆளா வரனும். அதுதான் தம்பி என்னோட ஆச. பெத்த தகப்பன் நான். நானே உன்ன கள்ளு வாங்கிறதுக்கு கடைக்கு அனுப்பாதப்போ அந்த பெருமாள் நாயக்கன் என்னா பெரிய மசுரு... அவன் வச்சிகிட்டு இருக்கிற அந்த மரகதம் பொம்பளதான் என்னா பெரிய மசுரு. அவங்க எப்படி உன்ன சாராயம் வாங்கியாரச் சொல்லிக் கடைக்கு அனுப்பலாம். இந்தப் பிச்சேரியில எல்லாப் பசங்களுமே குடிக்கிறானுங்க. ஆனா குடிகாரனான பழனியோட மவன் மட்டும் குடிக்க மாட்டான்னு ஊரு உலகம் சொல்லனும்பா. இப்படியே வுட்டா எங்க நீயும் குடிகாரனா மாறிடுவியோன்னு பயந்து போயி அந்தக் கோபத்துலதாம்பா உன்ன அடிச்சிட்டேன். இனிமே அந்த நாயக்கன் இல்ல... வேற எவனுக்கும்... எந்த மசுரானுக்கும் நீ ஈன வேல செய்யக்கூடாது. தெரிஞ்சுதா?''

பழனியப்பா அழுதுகிட்டே துண்டுல தன்னோட கழுத்துல சுத்தி வச்சிருந்த அவிச்ச மய்யக் கெழங்க எடுத்து அன்பழகன்கிட்ட நீட்டிகிட்டே புட்லாய் அம்மாவ பார்த்துப் பேசினாரு.

''புட்லாயி... புள்ளய ரொம்பவும் அடிச்சிட்டேன். பாவம்... புள்ள பயந்து போயிட்டது. சீக்கிரமா சுட தண்ணி போடு குளிச்சிட்டு சாப்பிடட்டும்.''

அன்பழகன் பழனியப்பா கொடுத்த மய்யக் கெழங்க கூட வாங்கல.

**அவனுக்கு சாராயம் வாங்கியார்றதுக்காக மரகதம் அம்மா கொடுத்த எட்டணா காசு மேலதான் கவனமா இருந்தது. அந்தக் காசு அன்பழகன பார்த்து காறித் துப்புறது போலவும் கைய தட்டி சிரிக்கிறது போலவும் தெரிஞ்சது.**

அவசர அவசரமா அவன் தன்னோட கால்சட்ட ஜோபிக் குள்ள கைய வுட்டுத் தேடிப்பார்த்தான். எட்டணா காசு தட்டுப் பட்டுது. அத எடுத்து த்தூ... த்தூ...ன்னு அது மேல அவன் காறித் துப்பிட்டுத் தன்னோட தலைக்கிமேல மூணு சுத்தா சுத்தித் தூக்கியெறிஞ்சான். அந்தக் காசு 'சளக்...'னு சத்தத்தோட பெருமாள் நாயக்கரு வூட்டுச் சாக்கடையில போயி வுழுந்தது. அத பார்த்த திருப்தியில அன்பழகன் பழனியப்பா கிட்ட போனான். என்ன தோணுச்சோ 'பொதார்..'னு கீழ வுழுந்து அவரு கால கெட்டியா புடிச்சிகிட்டான்.

''எப்பா... எப்பா... என்ன மன்னிச்சிடுப்பா. இனிமே என் உசுரு போற வரைக்கும் யாருக்கும் ஈன வேல செய்யமாட்டேம்பா... சத்தியமா செய்யமாட்டேம்பா... ஒங்க மேல சத்தியமா செய்யமாட்டேம்பா...''

அன்பழகன் இதுவரைக்கும் மனசுல போட்டு அடைச்சி வச்சிருந்த வேதனைய எல்லாம் வார்த்தையால கொட்டிக் குலுங்கி குலுங்கி அழுதான். தன் புள்ள அழறத பொறுக்க முடியாம அங்க இருந்த புட்லாய் அம்மாவும் சேர்ந்துகிட்டு அழ, அந்த ரெண்டு பேரோட அழுக சத்தமும் கல்ற சேரி முழுக்கப் பெரும் சத்தமா கேட்டது.



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

# அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள்

**வீ. அரசு**

நவம்பர் 18, 19, 2000 ஆம் ஆண்டில் தருமபுரியில் பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் குறித்த கலந்துரையாடல் ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டு, அந்நிகழ்வின் பதிவாக ''அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள்'' என்ற தொகுப்பாக வெளி வந்துள்ளது. மருதா பதிப்பகம் வெளியிட்டுள்ள இத்தொகுப்பை பிரம்மராஜனும் ஆர்.சிவகுமாரும் தொகுத்துள்ளனர்.

பெண் எழுத்தாளர்களின் கவிதைகளுக்குள் செயல்படும் பெண் மொழி மற்றும் அவர்களது நாவல்களில் குடும்பம் ஆகியவற்றோடு மூன்று எழுத்தாளர்களின் தன்வரலாற்றுக் குறிப்பும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. பெண் எழுத்தாளர்களின் சந்திப்பைப் பதிவு செய்திருப்பதற்கு மேற்கொண்டுள்ள முறை சிறப்பாக உள்ளது. இதற்காகத் தொகுப்பாளர்களைப் பாராட்ட வேண்டும்.

பெண்படைப்பாளிகளின் கவிதைகளில் பெண்மொழி என்பது குறித்து பா.வெங்கடேசன், சிபிச் செல்வன், க.மோகனரங்கன் என்ற மூன்று ஆண்களும் அ.வெண்ணிலாவும் பேசியுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட உடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு ஆகியன உள்ளிட்ட அக நிகழ்வுகள் சார்ந்து பெண்மொழி உருவாவதாகக் கூறுகிறார் பா.வெங்கடேசன். மேற்குறிப்பிட்ட உணர்வுகள் குறியீடுகளாய் இடம் பெற்று, வாசிக்க இடம் தருமானால் அக்கவிதையை பெண்மொழி இடம் பெற்றுள்ள கவிதையாகக் கொள்ளலாம் என்கிறார். பெண்ணியச் சிந்தனைகள், கவிதை அழகியல் சார்ந்து பெண் உணர்வாக மாற்றம் பெறும்போது கவிதைக்குள் பெண்மொழி சாத்தியப்படுகிறது என்றும்பெண்குரலிலிருந்து பெண்ணியக் குரலை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்றெல்லாம்இக்கட்டுரை விவரிக்கிறது.

இவ் விளக்கங்களுக்கு பா.வெங்கடேசன் காட்டும் முதல் எடுத்துக்காட்டு, பாரதியின் ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்ற கும்மிப்பாட்டு. பாரதியின் கும்மி வடிவம் - பெண் மொழியாக வெளிப்பட்டிருப்பதாக வாதிடுகிறார். இவரின் முதல் வரையறை சிக்கலாக அமைகிறது. கும்மி பெண்களுக்கு மட்டுமே உரிய வடிவம் என்ற கருதுகோளில் விவரிக்கிறார். தனிப்பட்ட குடும்பச் சூழலில் மறுக்கப்படும் உணர்வுகளை கூட்டமாக வெளிப்படுத்தும் வெளிப்பாடாக கும்மி அமைகிறது என்றும் கும்மியின் உடல்மொழி மிகவும் தனித்து அமைந்திருப்பதாகவும் சிலாகித்துப் பேசுகிறார். இதன் மூலம் பட்டங்கள், சட்டங்கள், என்ற நிலைக்குச் செல்வதாகப் பாரதி கூறுவதை விட, அதனைக் கும்மியாகச் சொன்னதன்மூலம் பெண்ணியக் குரலாக இல்லாமல் பெண் குரலாக கும்மி ஒலிக்கிறது என்று பேசுகிறார்.

இவ்விவாதத்தில் அடிப்படையாக ஒரு தவறான தரவு பயன்பட்டிருப்பதாகக் கருதலாம். பெண்கள் மட்டுமே கும்மி அடிப்பதாகக் கருதுவது தவறான புரிதல், நடுத்தர மனநிலை மற்றும் ஆதிக்க சாதி சார்ந்த, உழைப்போடு நேரடி உறவு பற்றி அறியாமல் நிகழ்ந்த அறியாமையாகக் கருதலாம்; ஏனெனில் கிராமங்களில் ஆண்கள் கும்மி அடிப்பதும் இயல்பான நிகழ்வு ஆகும். இவ்வகைஆண்களின்கும்மிவடிவங்களே ஒயிலாட்டம், தேவராட்டம் போன்றவைகளாக உள்ளன. இவ்வடிவங்களில் பால் அடையாளம் இருப்பதாகக் கருதுவது, உழைப்புச் சூழலிருந்து, விழாச்சூழலிலிருந்து அவ்வடிவங்களைத் தனித்துப் பார்ப்பதில் ஏற்பட்ட சிக்கலாகக் கருதலாம். இவ்வகையில் கும்மியைப் 'பெண் மொழி'யாகக் காணப் புறப்பட்டதன் மூலம், பெண்களின் புறவெளி அசைவியக்கத்தை மறுக்கும் கண்ணோட்டம் முதன்மைப் படுத்தப்படுகிறது. இத்தொகுப்பு பெண் சார்ந்த இயல்பான புறவெளி இயக்கம் முழுவதையும் மறுதலிப்பதாக அமைந்துள்ளது. எனவே உழைக்கும் உடலின் மொழியாக கும்மி அமைந்திருப்பதன் பரிமாணத்தை வசதிக்காக நாம் மறந்து விட இயலாது.

பெண்களின் கவிதைகளுக்குள் செயல்படும் தன்னிலை பற்றிய விரிவான விவாதத்தை இக்கட்டுரை சிறப்பாகவே வெளிப்படுத்துகின்றது. பெண் 'தன்னிலை' வெளிப்பாட்டுப் பெண்மொழி என்பது, தங்களை அறியாமல், தங்களையே அடிமையாக வெளிப்படுத்தும் ஆபத்தும் பெண்கள் கவிதைகளில் இடம் பெறுவதை இக்கட்டுரை சுட்டுகிறது. கனிமொழியின் கவிதை ஒன்றில் இத்தன்மையின் செயல்பாடு நிகழ்ந்திருப்பதை வெளிப்படுத்தியுள்ளார். ஆணை விமர்சிப்பதாகக் கருதிக்கொண்டு, ஆணை முதன்மைப் படுத்தும் அபாயம் பெண்கள் கவிதைகளில் உருவாவது குறித்து பிருந்தா அவர்களின் கவிதைவழி விவாதிக்கிறது கட்டுரை. இவ்வகையில் பெண் படைப்பாளர்களின் 'தன்னிலை' கவிதையில் பெண்மொழியாக வெளிப்படும் போது நிகழும் ஆபத்துகள் குறித்துக் கவனம் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

மரபான பார்வைகளிலிருந்து, பெண் கவிஞர்களின் கவிதைகளில் பல உடைப்புகள் உருப்பெற்றிருப்பதையும் இக்கட்டுரை சுட்டுகிறது. சமையல் அறையையும் படிப்பறையையும் சம மனநிலையில் வெளிப்படுத்தும் பிருந்தா அவர்களின் கவிதை குறித்துப் பேசுகிற பெண்கள் கவிதைகளில், அவர்கள் பயன்படுத்தும் ஆபரணங்களின் தொழிற்பாடு குறித்து விவாதிப்பது அவசியமான ஒன்றாகும். பெங்களூர் மாலதி அவர்களின் 'கால் கொலுசு' கவிதைக்கும் மரபார்ந்த கற்பு என்ற படிமத்துக்குமான உறவு குறித்துப் பேசுவது சுவையாக இருக்கிறது. இக்கவிதை மூலம் சரித்திரச் சுமைகள் கழற்றி எறியப்படுவதாகப் பேசுகிறார். இவ்வகைச் செயல்பாடு, கனிமொழி கவிதைகளில் மரபுசார் நனவிலி மனதில் உடைப்பை ஏற்படுத்துவதாகவும்கட்டுரை பேசுகிறது. புராணியக் கதைகள் மற்றும் சொல்லாடல்சார் கவிதைகளில் பெண்மொழியாக எவ்வகையில் வெளிப்படுகிறது என்பதைப் பெருந்தேவி கவிதைகள் வழி வெங்கடேசன் பேசுகிறார். இவ்வகையில் மரபுசார்ந்த பல்வேறு கூறுகள் பெண் கவிதையில் பெண்மொழியாக வெளிப்படுவது தொடர்பான விவாதத்தை இக்கட்டுரை சிறப்பாகச் செய்தி



படிப்பகம்

www.padippakam.com

இருப்பதாகக் கருதுகிறேன். இதன் தொடர்ச்சியாக க்ருஷாங்கினி அவர்களின் கவிதைகளில் உள்ள வண்ணங்கள் பற்றிக் கட்டுரை பேசுகிறது. 'ஆண் உடலைச் சுமந்து திரிவதாகவே பெண்களின் வண்ணங்கள்' வெளிப்படுவதாகக் குறிப்பிடுகிறார்.

மேற்குறிப்பிட்ட பெண்களின் ஆபரணங்கள், வண்ணங்கள் போன்றவை குறித்து ஓர் ஆண் பார்வை என்பது அவை பாலியல் கிளர்ச்சி சார்ந்த குறியீடுகளாகவே அமைகின்றன. இத்தன்மை ஆணின் அகம்சார்ந்த வெளிப்பாடாகக் கூடுதலாக அமைகிறது. அதனையே பெண்ணின் மீது சுமத்தும்போது, பெண்தன்னிலை மறுக்கப்படுவதாகவே கருத வேண்டியுள்ளது. பாரதியின் 'கும்மியைத் தனித்துப் பார்த்ததைப் போல், பெண் தொடர்பான வண்ணங்களையும் தனித்துப் பார்க்கும் அல்லது ஆண்நிலை சார்ந்து பார்க்கும் பார்வையோ என்று சந்தேகப்பட வைக்கிறது. பழங்குடி நனவிலி மனத்தின் கொண்டாட்டங்களாக இன்றும் வண்ணங்கள் இருக்கின்றன. அவை அடிப்படையில் மனித மனத்தின் கொண்டாட்ட உணர்வு சார்ந்தது. கொண்டாட்டத்தை மறுப்பது ஒருவகையில் தன்னிலை மறுப்பாகவும் அமையக்கூடும். பெண்ணின் புறவய வெளிப்பாட்டை குதூகலிப்பாகக் காண மறுப்பது எவ்வகை நியாயம்? மாறாக அக்குதூகலிப்பைப் பாலின அடையாளமாக, பால் இச்சைக் குறியீடாக மட்டும் கட்டமைக்கப்பட்டுள்ள ஆணியப் பார்வையாகக் கருத வேண்டியுள்ளது.

கவிதையில் குறியீடுகளுக்கும், வண்ணங்களுக்கும் பெண்மொழி வெளிப்பாட்டிற்கும் உள்ள உறவை புனைவுத் திறனாகக் (Artistic Skill) காணலாம். ஆனால் இதனையே பெண்ணின் 'தன்னிலை' மறுப்பாகக் கட்டமைப்பது குறித்து விவாதிப்பது அவசியம். வெங்கடேசன் கட்டுரை, 'தன்னிலை' மறுப்பாக அமைந்து ஆணின் பார்வையாக அமைந்து விட்டது.

மாலதி மைத்ரி அவர்களின் கவிதை ஒன்றில், பெண் மொழியாக வெளிப்படும் 'கவித்துவச் சொல்' பற்றிய வெங்கடேசன் விளக்கம் சிறப்பாக உள்ளது.

''கவித்துவச் சொல்லென்பது கவிதையின் அழகியல் சாராம்சத்தை உள்ளடக்கிய சொல்லல்ல. கவிதைப் பரப்பில் கண்டடையப்படும் பல்வேறு அர்த்த இணைவுகளின் திரட்சியாக, இறுதியில் சிந்தனைத் தளத்திற்கு மிதந்து வரும் பொருள். கவிதையின் செயல்பாட்டை முன்னிருத்தி படைப்பாளி திரட்டி எடுக்கும் தன்னிலை சார்ந்த ஒற்றைச் சொல்லே இங்கு கவித்துவச் சொல் என்பதாகக் குறிக்கப் பெறுகிறது'' என்ற விளக்கம் மாலதி மைத்ரி கவிதை வழி புலப்படுவதைக் கட்டுரை பேசுகிறது.

வெங்கடேசன் கட்டுரை, கவிதைகளில் பெண்மொழியை முன்னிருத்தி சமூகச் சிந்தனை, சமூக உணர்வு, தன்னிலை, தன்னுணர்வு ஆகிய தளங்களில் விவாதித்திருப்பதைக் காண்கிறோம். கவிதைகளைப் புரிந்து கொள்ள உதவும் இக்கட்டுரை, அதே நேரத்தில் தரவுகளைத் தவறாகப் பயன்படுத்தல் மூலம், அதன் மூலத்தைச் சிதைத்தல் என்பதற்கும் வாய்ப்பைத் தருகிறது.

கவிஞர் உமா மகேஸ்வரி அவர்களின் தனிக்குரல், தேவதைக் கதை படித்து முடித்த உணர்வைத் தருவதாகக் கூறுவதும், புகார்கள் அற்ற மொழியாக அது அமைந்திருப்பதை வெளிப்படுத்துவதும் இக்கட்டுரையின் சிறப்புகளில் ஒன்று.

வெங்கடேசன் பெண்மொழியைப் பார்ப்பதிலிருந்து, சிபிச்செல்வன் வேறு வடிவத்தில் பார்க்கிறார்.

''பெண் உடல், பெண் பாலியல் உறவு, தாய்மை இவைகளை வெளிப்படுத்தும் மொழி - பெண் மொழி என்கிற கருத்தைப் பொதுவாக பெண்ணிய ஆய்வுகள் பேசுகின்றன. உடல், பாலியல் உறவு, தாய்மை இந்த அனுபவங்களை ஆண்களை விடப் பெண்கள் சிறப்பாக எழுத முடியும்'' என்று பேசும் இவர், இவ்வகையில் உள்ள பெண்கள் கவிதைகள் என்று வரிசைக்கு ஒன்றாகப் படித்துக் காட்டியுள்ளார். இதில் விளக்கம் சொல்வது இவர் நோக்கமல்ல என்றும் சொல்லிக் கொள்கிறார். இக்கட்டுரை கவிதை வாசிப்புக்கு உகந்தது. கவிதையின் பெண் மொழிப் புரிதலுக்கு உதவும் என்று கூற முடியவில்லை.

''பெண்கள் மிக அதிக நேரங்கள் தனிமையில் உள்ளவர்கள். அவர்களுக்கு கனவுகளும் அதிகம். இப்படி பல நல்ல விஷயங்களை தங்களிடம் கொண்டுள்ள பெண்கள் எதிர்காலத்தில் இன்னும் பல நல்ல பெண்மொழி கவிதைகளை எழுதுவார்கள்'' என்று ஆசீர்வதித்து கட்டுரையை முடிக்கிறார். பெண்களை நோக்கி ஆசீர்வதிப்பவர்கள் பற்றி, கட்டுரை வடிவத்தில் மன ரீதியாக அழுத்தமான ஆண் தன்னிலை மிக்கவர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். சக உயிரை மேலிருந்து பார்க்கும், சநாதன மற்றும் மடாதிபதிகளின் பார்வை இது - என்பதை மட்டும் இங்கு பதிவு செய்யலாம்.

சிபிச்செல்வன், உடல், பாலியல் உறவு, தாய்மை என்ற பௌதிகச் சொல்கள் மட்டத்திலேயே பெண் மொழியை எளிய வாய்பாடுகளாக வெளிப்படுத்துகிறார் எனில், தர்க்க விவாதங்கள், அவ்விவாதங்கள் வழி உருப்பெறும் புள்ளிகள் போன்றவை குறித்த மேலோட்ட அணுகுமுறையை அ.வெண்ணிலா மேற்கொண்டு உள்ளார். இதனால் 'சுயம்' என்றொரு சரக்கைக் கண்டுபிடித்துள்ளார். புறம் x அகம் என்ற எளிய வாய்பாடுகள், எந்திரகதியில் விவாதிக்கப்படுகின்றன. ஒரே செய்தியை / கருத்தை பலவிதமாகப் பட்டியல் போடுகிறார். முறையியலுக்காகக் கட்டுரை எழுதும் பரிதாபகரமான பல்கலைக்கழக மாணவனின் கட்டுரையாக இருக்கிறது. மேலுக்குப் போலியாகவும், அடியில் கரடு தட்டிப் போன விழுமியங்களை விசாரணைக்கு உட்படுத்தாமலும், அதே நேரத்தில் உட்படுத்துவது போன்ற தோரணையிலும் இவரது வெளிப்பாடு அமைகிறது. அரசியல் கட்சி, சிறு பத்திரிகைக் குழு மனநிலை போன்றவற்றில் பெண்களுக்கு அளிக்கப்படும் டோக்கனைப் பயன்படுத்துகிறார் இவர். இவரது பெண்ணியப் பார்வை என்பது மரபான விழுமியங்களைக் கேள்விக்கு உட்படுத்தாத பாதுகாப்பானதாக இருக்கிறது. கலகம் செய்யும் பெண்ணை, எதிர்மறையில் பார்க்கும் மரபான ஆணைப் போலவே இவரும் இருக்கிறார்.

''குடும்பம் உடைத்து, உறவு உதறி, தலை கத்தரித்து, அழுக்கு ஜீன்ஸ் போட்டு, கூட்டங்களில் தனித்து உட்கார்ந்து, கூட்டம் முடிந்து எங்கு போவது எனத் தெரியாமல் விழித்துக் கொண்டு... நள்ளிரவு சாலைகளில் தனித்து நின்று கொண்டிருக்கின்றனர் பல பெண்கள்'' என்று எழுதுகிறார். இவ்வகைப் பார்வை கலகம் குறித்த மரபுப் பார்வை. விழுமியம் பற்றிய விசாரணைக்கு உட்படுத்தாத பார்வை. இது வெகுசன ஊடகத்தில் 'பெண்



படிப்பகம்

www.padippakam.com

என்ற அடையாளத்தை வணிகப் படுத்த முயலும்' எளிய அணுகுமுறை. இது மிகவும் ஆபத்தானது.

இத்தொகுதியில், பெண் கவிஞர்களின் கவிதைகளில்பாலிய ல்அடையாளத்தை-எதிர்கொள்வது என்றொரு கட்டுரையை மோகனரங்கன் என்பவர் எழுதியுள்ளார். கவிஞர்களின் பெயர்ப்பட்டியலும், பல கவிதைகளும் அச்சாகியுள்ளன. வேறொன்றுமில்லை. இவருக்கு நமது அநுதாபங்கள். பிரம்மராஜன்கள் இப்படியான கட்டுரைகளையும் தொகுக்கிறார்கள்! என்ன செய்வது? ஆனால் இக்கட்டுரையை வெளியிட்டதின் மூலம், நமக்கு வேறொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஓர் ஆணைக் கண்டு பிடிக்க முடிந்தது.

'பாவம் பெண்கள்....' என்ற இந்த ஆணின் - பரிதாபம் வெண்ணிலாவின் ஜீன்ஸ் பெண்கள் பற்றிய விழுமியப் பார்வையோடு ஒரு வகையில் இணைத்துப் பார்க்கலாம். இன்னொரு வகையில், "A typical Male" என்பதைப் புரிந்து கொள்ளலாம். இவர்கள் பெண் மொழி தேடுவது, ... மிகச் சுவையான நிகழ்வு.

பெண்களின் நாவல்களில் குடும்பம் குறித்தான விவாதத்தை சூத்ரதாரி, பெருமாள் முருகன் மற்றும் பல பெண்களும் இத்தொகுப்பில் செய்து உள்ளனர். சமூகமே ஆணாதிக்க சமூகம். குடும்பம் அதில் ஒரு பகுதி. எனவே விமர்சனம் செய்வதற்கே வாய்ப்பில்லாமல் போகிறது. மீறிச் செய்யும் விமர்சனங்கள், 'குடும்பம்' என்ற அமைப்புக்கு வெளியே நின்று விடுகிறது. எனவே விமர்சனமே சாத்தியப்படவில்லை என்கிறார் சூத்ரதாரி. குடும்பத்தில் ஆணாதிக்கத்தின் வலிமையைச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைந்து உள்ளது.

அம்பை, கிருத்திகா படைப்புலகமும் சிவகாமியின் படைப்புலகமும் அதன் அடிப்படையில் முரண்படுவதைச் சுட்டுகிறார். இப்பார்வை வேறுபட்ட சமூகப் பின்புலத்திற்கும் படைப்பிற்கு மான உறவைச் சுட்டுவதை இவர் விவாதிக்கப் பயன்படுத்தியிருக்கலாம். அதைச் செய்யவில்லை.

வரலாற்று பூர்வமாக குடும்பம் உருவான நிலை, அதில் பெண்களின் இருப்பு என்ற போக்கில் இடதுசாரிக் கண்ணோட்டத்தில் (மார்க்சியக் கலைச்சொல் மற்றும் மார்க்சிய மூலவர்களின் மேற்கோள்) எழுதப்பட்டுள்ள நல்ல கட்டுரை அமரந்தா கட்டுரை. தமிழ் நாவல்களில் குடும்பம் பற்றிய ஒற்றைச் சொல் கூட இக் கட்டுரையில் இல்லை. குடும்பம் பற்றிய மார்க்சிய வரையறை சார்பாக இக்கட்டுரை எதற்காக இதில் இணைக்கப்பட்டுள்ளது? புரியவில்லை. ஒருக்கால் குடும்பம் பற்றிய புரிதலின் அடிப்படையைச் சொல்வதற்காக இருக்கலாம். அப்படிப் புரிந்து கொள்ள வேண்டும். ஒளி வட்டங்கள் இப்படியும் கட்டலாம். After all தமிழ் நாவல், இதில் குடும்பம் பற்றி நானா பேசுவது! என்ற ஜெயகாந்த மனநிலையாகக் கூட இருக்கலாம். எதுவாக இருந்தால், நமக்கென்ன? நமது நேரம் விணடிக்கப் படுகிறது என்ற கோபத்தைத் தவிர வேறென்ன?

வச்ஸலா அவர்கள், ''அவர்கள்'' குடும்பத்தை உலகக் குடும்பமாக வெளிப்படுத்தும் மனித நேயத்தோடு கட்டுரை எழுதியுள்ளார்.

''பின் என்ன செய்வது? குடும்பத்தை உடைக்க வேண்டுமா? என்றெல்லாம் நாம் குழப்பிக் கொள்ள வேண்டாம். இப்படியே போனால் ஒரு நாள் வலுவற்றவரின் மேல் ஏற்படும் சுமை தாங்காமல் கலகம் ஏற்பட்டு குடும்பம் உட்பட பல அமைப்புகள்தானே உடையலாம். மாற்று அமைப்புகள் ஏற்படலாம். அல்லது நாம் சற்று சிந்தித்துச் செயல்படுவோமானால், குடும்பத்தை ஒரு ஜனநாயக அமைப்பாக மாற்றலாம்''.

'இவ்வகையான பாதுகாப்புப் பார்வையை நாம்கற்றுக்கொள்வோமாக!

பாமா நாவல்களைக்குறித்த இருகட்டுரைகளும் ஒடுக்கப்பட்ட குரலின் வெளிப்பாடாக பாமா நாவல்கள் அமைந்திருப்பதைப் பேசுகின்றன.

தலித்துக்களுக்கு அதிகாரமில்லை. அதனைப் பெற வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தில் பாமாவின் படைப்புகள் செயல்படுகின்றன என்ற விளக்கம் அரங்க.மல்லிகாவால் கொடுக்கப் படுகிறது. அதிகாரம் செயல்படும் சூழல்களோடு அதிகாரத்தின் பரிமாணங்களையும் இக்கட்டுரை பேசுகிறது. பாமா பற்றிய புரிதலுக்கு, ஒடுக்கப்பட்ட குடும்பம்பற்றிய புரிதலுக்கு இக்கட்டுரை உதவுகிறது.

பெருமாள் முருகன் தலித்திய படைப்புகள் உருவாகும் முன்பே, தலித்திய படைப்பு வரையறைகள் - பேசப்படுவது குறித்து அச்சம் கொள்கிறார். பல்வேறு பரிமாணங்களில் தலித் இலக்கியம் பெரும் வீச்சாக வளருவதற்கு இவ்வகை 'விமர்சன வரையறைகள்' தடையாக அமைவதாகக் கருதுகிறார். இது குறித்த விவாதம் இன்றைய சூழலில் தேவைப்படுகிறது. பாமாவின் நாவல்களில் பயன்படுத்தும் 'கதை சொல்லும் முறை' பிரசங்கமாகச் செயல்படுவதாகப் பெருமாள் முருகன் குறிப்பிடுகிறார். இவ்வகை பிரசங்கபாணி, கருத்து சார்ந்து மேலோட்டமாகச் செயல்படும் சொல்முறை என்று குறிப்பிடுகிறார். இது படைப்புக்கு உகந்தது அல்ல என்றும் எழுதுகிறார்.

தலித்திய கண்ணோட்டப் படைப்புகளின் அரசியல் குறித்த விவாதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. பாமாவை முன் வைத்து இவர் இதைச் செய்துள்ளார். இதனை முழுதும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. கீதாஞ்சலி பிரியதர்சினி, ஜ.பிரேமலதா என்பவர்களின் கட்டுரைகள் திலகவதி மற்றும் சிவகாமி நாவல்களின் 'விளக்க விவரணங்களாக' இருக்கின்றன. அவர்களின் நாவல்களைப் படிக்காமல் கட்டுரை எழுதும் எங்களைப் போன்றவர்களுக்கு உதவும் 'கோனார் உரைகள்'. அதற்கு அவர்கள் இருவருக்கும் எனது மனதார்ந்த நன்றி பல.

இத்தொகுப்பின் இறுதியில் வத்ஸலா, மாலதி, க்ருஷாங்கினி என்ற படைப்பாளர்களின் எழுத்துலகம் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை முக்கியமாகவிவாதிக்கப்பட வேண்டிய துறையாகும். இப்பதிவுகள், இவர்களைப் பற்றி அறிய உதவுகிறது. இப்படைப்பாளிகள், அறிந்த உலகத்தின்பதிவுகளாகக்கிடைக்கவில்லை. விரிவாக விவாதிப்பதற்கான வெளிகளை இப்படைப்பாளர்களின் பதிவுகள் வெளிப்படுத்தவில்லை. 'பெண்' என்ற நிலை கருத்துலகம் சார்ந்து விவாதிக்கப்படாமல், தங்கள் 'சுயம்' சார்ந்து பெண்ணைப் பார்க்கும் பார்வை உள்ளது. இதனைச் சரியில்லை என்று குற்றம் சாட்ட முடியாது.... பல்வேறு பயணங்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது.

•

நூல் பற்றிய குறிப்பு :

**ஔவை மண்ணில்**
**பெண் எழுத்தாளர்கள்**

**பக்கங்கள்: 14 விலை: ரூ. 70**

**மருதா பதிப்பகம்**
**202, பாரதிசாலை,**
**சென்னை- 14**

•



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# வெலி

அபிமானி

மாணிக்கத்தின் வீட்டுக்கு அந்தக் கிடா வந்ததிலிருந்து மாணிக்கத்துக்கும் அந்த ஊர்க்காரர்களுக்கும் ஒரே 'தகராறாகவே' இருந்தது. ஊர் இளசுகள் எல்லாம் 'மொசமொச'வென்று திரண்டு வந்து அவனோடு மல்லுக்கு நின்றார்கள். அடஞ்சாலும் ஒடஞ்சாலும் சதாப் பொழுதும் அவனின் வீட்டுக்கு முன் கூடி நின்று சண்டைக்குக் கதி கட்டினார்கள்.

மாணிக்கமும் சளைத்தவனாய் இல்லை. 'எலே.. அப்படித்தாமிலே செய்வேன். ஒங்களால முடிஞ்சதப் பாத்துக்கங்கலே' என்று முண்டக் கட்டிக் கொண்டு நின்றான். அவனின் பொஞ்சாதிக்காரியும் ஊரில் சில பெரிசுகளும் அவ்வப்போது ஆபத்பாந்தமாய் ஓடிவந்து தடுத்துக் கொண்டதால் பெரிய கலவரம் வெடிக்காமல் போயிருந்தது அங்கே.

அவனின் பொஞ்சாதிக்காரி பேச்சியம்மை கூட சில சமயம் அவனிடம் நைச்சியமாச் சொல்லிப் பார்த்தாள்.

''நமக்கெதுக்கய்யா ஊர் வம்பு. எல்லாத்தயும் பகச்சிக்கிட்டு நடக்கிது நல்லதா சொல்லுங்க?''

மாணிக்கம் தன் முடிவில் உறுதியா யிருப்பது புரிந்தது அவளுக்கு.

''அடிப்போடி பொட்டக்கழுத. இந்தப் பொசமுட்னப் பயலுவ சண்டைக்கு வரானுவங்கிறதுக்காவப் பயந்துகிட்டுக் கெடக்கச் சொல்லுதியா? எந்தச் செருக்கி மவன் எம்முன்னே வந்து நிக்கிதான்னுப் பாக்கிதேன். கொடல உருவிப் புட மாட்டேன்? நீ ஒம்பாட்டுக்கு வாயப் பொத்திக்கிட்டுக் கெட. ஒனக்கு ஒன்னும் தெரியாது.''

பொஞ்சாதிக்காரியை அடக்கி விடுவான். இனி அவனிடம் எது சொன்னாலும் ஏட்டிக்குப் போட்டிப் பேசுவான் என்று தோன்றும் அவளுக்கு. அத்தனை இளசுகளும் ஒன்னு சேர்ந்தால் தன் புருசக்காரனின் கதி என்னாகும் என்று மனசுக்குள்ளே நினைத்து நொம்பலப் படுவாள் பேச்சியம்மாள். இரண்டு மூன்று பேரை ஒரே நேரத்தில் எதிர்த்து அடிக்கக் கூடிய அளவுக்குத் தாட்டியமான தேகம் இல்லை அவனுக்கு. ஆடு பத்த அவன் கையில் பிடித்திருக்கும் வேப்பங்குச்சியைப் போல ஒடிசலான தேகம். உள் வளைந்த உடம்பு. ஒட்டிய கன்னங்கள். முப்பது வயசுக்குரிய மூர்க்கத்தனமில்லை அவனின் தேகத்தில், வாய்தான் இருந்தது. யாரையும் சட்டை செய்யாத வறட்டுத்தனமான தைரியமிருந்தது வார்த்தைகளில். எப்போதும் அவனின் கன்னத்தில் ஒரு வார மயிர்க் கற்றைகள் புல்தரையாய் சடைத்துக் கிடப்பது போலவே தோற்றமளிப்பான். கடைத் தெருவில் உள்ள சலூன் கடைக்குச் சென்று அடிக்கடி சவரம் செய்து கொள்ள வேண்டுமே என்ற அக்கிசியெல்லாம் அவனுக்கு இருந்ததில்லை. மயிர்கள் பெருகி வளர்ந்து எப்போது கசகசக்கிறதோ அப்போதுதான் கடைக்குச் சென்று மழுங்கச் சிரைத்துவிட்டு வருவான். அவனின் பிரதானக் கவலை எல்லாம் ஆடுகளைப் பற்றியே ஆலவட்டம் போடும். நாளைக்கு எந்தக் காட்டுப் பக்கம் பத்திக்கொண்டுபோய் மேய்ப்பது.. எந்த இடத்தில் தண்ணீர்க் காட்டுவது..

ஆடும் மறிகளுமாய் அவனிடம் இருபத் தஞ்சுக்கு மேலிருந்தன. அவனின் அய்யா வளர்த்துப் பெருக்கிவிட்டிருந்தார் ஆடுகளை. அத்தனையும் கருப்பு நிறத்து வெள்ளாடுகள்! அய்யா மண்டையைப் போட்டதும், ஒத்தைக்கொரு வாரிசாயிருந்த அவனுக்கு அவை பாத்தியப்பட்டுப் போயின. அவையே அவனின் வாழ்க் கைக்கும் ஆதாரங்களாயிருந்தன. அந்த ஆடுகளை அக்கரையோடு வளர்த்து, ஆத்திர அவசரத்திற்கு ஒவ்வொன்றாக விற்றுக் கொண்டாலே அவனின் குடும்பப் பொழைப்பு அலப்பரவு இல்லாமல் ஓடுவது போலிருந்தது.

தின்றே தீர்த்துவிடும் அளவுக்கு அவனின் குடும்பமொன்றும் ரொம்பப் பெரிசானதும் அல்ல. அவனும், அவனின் பொஞ்சாதியும், அஞ்சாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் மகன்காரன் சுதாகருமாய் - மொத்தம் மூன்றே உறுப்பினர்களைக் கொண்ட சிறிய குடும்பம். அவனுக்கு நோய்நொடி யென்று முடையாகிப் போகிற நாட்களில் அவனின் பொஞ்சாதிக்காரி ஆடுகளைப் பத்திக்கொண்டு காட்டுக்கு மேய்க்கப் போனாள். பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் சுதாகரும் அந்த ஆடுகளுக்குப் பின்னே செல்வதுண்டு. அநேக நாட்களில் அந்தத் தெரு பொம்பளைகள் போலவே பேச்சியம்மையும் மேப்பொறந்த மனுசர்களின் காடுகரைகளுக்கு வேலை சோலிகளுக்குப் போய் கூலி வாங்கிக் கொண்டு வந்து வீட்டுச் செலவைச் சரிக்கட்டிக் கொண்டதுண்டு.

அப்படி அவள் பதிவாகச் சோலிக்குப் போய் பழக்கப்பட்டிருந்த ரத்தினசாமிக் கோனார்தான் ஒரு வாரத்திற்கு முன் அந்தக் கிடாவை இழுத்து வந்து அவளின் கையில் பிடித்துத் தந்திருந்தார். இன்னும் இரண்டு நாட்களில் நடக்கவிருக்கும் அவளின் தெருக்கோயில் கொடை விழாவில் கிடாவை வெலி கொடுக்கச் சொல்லி உத்தரவுப் போட்டிருந்தார். அந்தக் கோயிலுக்கு அவரின் நேர்ச்சை அது. அவரே நேர்வந்து சேரிக்கோயிலுக்குள் நின்று தன் நேர்ச்சையை நிறைவேற்றுவது அவருக்குக் கவுரவக் குறைச்சலாகப் போயிருக்க வேண்டும்.

அவரின் நேர்ச்சைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஒருநாள் மதியம் அவரின் மூத்தமகள் பழநியம்மாள் பள்ளிக்கூடத்துக்குப் போகிற வழியில் எதிர்ப்பட்ட அந்தக் கோயிலுக்குள் நின்றிருந்த சாமிச் சிலையைப் பார்த்து அரண்டுப் போயிருந்தாள். அன்றிலிருந்து இரவுத் தூக்கம் கெட்டது அவளுக்கு. வெட்டுப்பட்டப் பிராணியைப் போல திடீர்திடீரென்றுக் கதறிக்கொண்டு எழுந்தாள். 'என்னயக் கொல்லாதிங்க, என்னையக் கொல்லாதிங்க' என்று சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் அரற்றினாள்; பதறினாள். ஒரு வருடமாய் இந்த ரோதனையிலே அவதிப்பட்டார் ரத்தினசாமிக் கோனார். போகாத ஆசுபத்திரியில்லை; பார்க்காத வைத்தியமில்லை. ஊரில் பட்ட சாமியார்களிடமும் ஜோஸ்யர்களிடமும் அவளைக் கூட்டிக் கொண்டு போய்க் காண்பித்தார். அதிலொரு ஜோஸ்யர் தான் அவரிடம் எல்லா விவரத்தையும் விலாவரியாய் எடுத்து வைத்து, கடைசியில் சேரிக் கோயிலுக்குக் கிடா ஒன்று நேர்ந்துவிடச் சொல்லியிருந்தார். அதுவே ரத்தினசாமிக் கோனார் பண்ண வேண்டிய பரிகாரமாய்த் தோன்றியிருக்க வேண்டும் ஜோசியருக்கு.

விதியே என்று மாணிக்கத்திடம் ஓடிவர வேண்டியதாயிற்று அவருக்கு. அவருக்குத் தெரிந்த அளவில் அந்த ஊரில் மாணிக்கத்திடம்தான் நிறைய ஆடுகள் நின்றுக் கொண்டிருந்தன. காசு தந்து, புது ஈத்துக் குட்டியொன்று வாங்கிச் சென்றார். ஒருவருடம் வரை தன் வீட்டிலே கட்டிப் போட்டு இலை, தழை, கிளை என்று பறித்து வைத்துப் பாடு பார்க்க வேண்டியதாயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

கொடைவிழாவுக்கு ஒருவாரக் காலம் அவகாசமிருந்த போதுதான் பேச்சியம்மை யிடம் கிடாவைப் பிடித்துத் தந்தார் அவர். சாமக் கொடையின் போது மற்ற ஊர்க் கிடாக்களைப் போல இதையும் வெலித் தந்துவிட வேண்டும் பேச்சியம் மையும் அவளின் புருசக்காரனும். அந்தக் கிடாவின் சின்ன எலும்புத் துண்டு கூட தன் வீட்டு வாசற்படிக்கு வந்து விடக்கூடாது என்றும் பேச்சியம்மை யிடம் எச்சரிந்திருந்தார். சேரிக் கோயில் வெலியைத் தன் வீட்டுக்குக் கொண்டு வருவதில் செத்தமும் சம்மதமில்லை அவருக்கு.

மாணிக்கத்துக்குச் சந்தோசம் தாள முடியவில்லை. லாட்டரிச்சீட்டில் முதல் பரிசு விழுந்தது போலச் சந்தோசம். ஒரு முழுக் கிடாவின் கறியையும் தன் ஒரு குடும்பம் மட்டுமே சாப்பிட்டுக் கொள்ளப்போவது என்பது சாதாரணமா? தெவிட்டத் தெவிட்டத் தின்று தீர்க்கலாம். மிச்சப்படும் கறியைத் துண்டம் துண்டமாய் அரிந்து உப்புக் கண்டம் போட்டுத் தின்னலாம். நாக்கு சப்புக் கொட்டியது அவனுக்கு. மனசுக்குள் கொந்தளிப்பு மூண்டது. கிடாவின் தோலை உரித்து விற்றாலும் காசு நிறையக் கிடைக்கும்.

எத்தனைப் பெரிசாய், கம்பீரமாய் வளர்ந்திருந்தது கிடா! அதைக் கிடா என்று சொல்லக் கூட அவனுக்கு நாக்கு எழுவில்லை என்பதே உண்மையா யிருந்தது. குதிரை மாதிரி தளதளவென்று வளர்ந்து நின்றிருந்தது அது! விசேச இடங்களில் கட்டும் தோரண முகப்பைப் போல ஒன்றையொன்று எதிர்கொண்டு வளைந்து நிற்கும் கொம்புகள், தவிட்டு நிறத்தில். ஒரு ஜல்லிக்கட்டுக் காளையைப் போல எப்போதும் திமிறிக்கொண்டும், எதிர்ப்படுவோரை முட்டி மோத எத்தனிப் பதுபோலப் பாய்ந்து கொண்டும் கிருசித்தனம் பண்ணியது. மாணிக்கத்துக்கு அலப்பரவாகத்தான் இருந்தது என்றாலும் இன்னும் இரண்டு நாள்களில் நாக்குச் சொட்டச் சொட்ட கறி தின்னலாமே என்ற மிகையான எண்ணத்தில் சமாதான மாகிக் கொண்டான். ஆனால், தன் பெருமிசமான நினைப்பில் தெரு இளசுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து மண்ணள்ளிப் போட்டு விடுவார்கள் போல என்பதை நினைத்த போதுதான் மனசுக்குள் வேசடை பொங்கியது அவனுக்கு. கையில் பிடித்து ஒண்ணுக் கிருக்கத் தெரியாத சின்னப் பயல்கள் எல்லாம் மல்லுக்கு வருகிறார்களே என்று கொந்தளிப்பாய் இருந்தது.

''சாம்பாக்கமார் கோயிலு மட்டும் வேணும்... அதுக்கு உள்ள வந்து வெலிக் குடுத்தா மட்டும் கோனானோட கவுரவம் கொறஞ்சிரும்? என்னவே நியாயம் இது? மருவாதியா கோனாரையே வந்து அவரோட உசுப்புராணிய வெலி குடுக்கச் சொல்லு நீ வந்து நின்னு வெலி குடுத்தா, பொல்லாப்பாப் போயிரும் பாத்துக்க''.

''அதயுந்தான் பாத்திருவோமேல. அந்தப் பூச்சாண்டி எல்லாம் இங்கனக் காட்டாண்டாம். நானுந்தான் உங்களக் கெணக்க என் தலக்கட்டுக்கு வரி குடுக்கிறேன். ஒங்களுக்குள்ள பாத்தியத எனக்கு மட்டும் இல்லியா என்ன? யாரோடக் கிடாவ நா வந்து குடுத்தா ஒங்களுக்கு என்னல?''

''அந்த மசிரெல்லாம் இங்கப் பேச வேண்டாம். கோயிலுக்கு உள்ளக் கிடாவக் கொண்டு வந்த, உன் கிடாவும் இருக்காது, நீயும் இருக்க மாட்ட. வேணுமின்னா கோயிலுக்கு வெளியில வச்சி வெலி குடுத்துக்க. உள்ள வந்திர முடியாது பாத்துக்க.''

துள்ளத் துடிப்பாக நின்றார்கள் இளசுகள். பூனை மயிர்போல மீசைகள் அரும்பி நிற்கும் இளசுகள். அவர்களில் அநேகம் பேர் மேப்பொறந்தவர்களின் காடுகரைகளுக்குத்தான் வேலை சோலி களுக்குப் போகிறவர்கள் என்றாலும், தாங்கள் செய்த வேலைகளுக்கு உரிய கூலியை வாங்கிக் கொண்டு வெளியேறு வதோடு சரி. முதலாளி மார்களின் குற்றே வல்களுக்கு வளைந்து கொடுக்கிறவர்களாய் இல்லை. மேப்பொறந்தவர்கள் வேலை மறுத்தால், அவர்களுக்கு இருக்கவே இருக் கிறது, காடுகளும் மலையும், விறகுப் பொறுக்கி வந்து கடைத்தெருவில் விற்று உலையேற்ற.

இளசுகள் கடைசியாகச் சொன்ன உபாயமே ஊர்ப் பெரிசுகளுக்குச் சரியான தாகப் பட்டிருக்க வேண்டும். அதையே மாணிக்கத்திடமும் சிபாரிசு செய்ய முற்பட்டனர் அவர்கள்.

''பின்ன என்னப்பா, அவனுவதான் கோயிலுக்கு வெளியப் போட்டுக் கிடாவ வெலி குடுக்கச் சொல்லிட்டானுவல்ல. அத மாதிரியே செஞ்சிரு. அதுவும் சாமிப் பார்வவுள்ள எடந்தான? கோயிலுக்கு உள்ள பண்ணுனாத்தான் வெலியா? வெளிய வச்சிப் பண்ணுனா வெலி இல்லியா?''

மாணிக்கம் கிறங்காமல் நின்றிருந்தான். அவன் ரோசிப்பது போலத் தெரிந்தது.

சரியாக இரண்டு நாட்கள் கழித்து வியாழக்கிழமை சாயந்தரத்திலிருந்தே கொடைவிழா களைகட்டத் துவங்கியது. கோவில் முன் கோபுரமாய் உயர்த்தித் தூக்கிக் கட்டியிருந்த ஓலைப் பந்தலின் உச்சியிலிருந்து முழங்கிய ஒலிப்பெருக்கி யின் அலறலில் அந்தத் தெருவே உயிர் பெற்று ஓடுவதாகத் தோன்றியது. அசலூர்களிலிருந்து ஏகப்பட்ட சொந்த பந்தங்கள் வந்து குவிந்திருந்தனர். ஒவ்வொருவர் மேனியிலும் புதுப்புது உடுப்புகள். முகங்களில் உற்சாகக் களை. இன்றிரவு வில்லுப்பாட்டுக் கச்சேரியோடு விழா துவங்கும். வெள்ளிக்கிழமை யாகிய நாளைச்சாமத்தில் கிடா வெட்டுகள் நடக்கும். சாமிகள் மயானம் போகும்.

ஊர்க்கிடாக்களை எல்லாம் கோவிலுக்குள் இழுத்து வந்து சாமிக்கு முன் நிறுத்தி வெலி குடுத்தனர்.

வெட்டிய கிடாக்களை செந்தூக்காய்த் தூக்கிக் கவிழ்க்க, அவற்றின் கழுத்துகளிலிருந்து கொட்டிய ரத்தத்தை வரிசைக்கிரமமாய் சாமிகள் உறிஞ்சிக் குடித்தனர். மயான அமைதி. தேகம் புல்லரித்துப் போகும் நிகழ்ச்சி அது. பக்திப் பரவசம் மேலிட்டு நிக்கும் பக்தர்கள்.

மாணிக்கத்துக்கு அந்தப் பாக்கியம் கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டமே. கோவிலுக்கு வெளியே வாசல்முன் கிடாவை நிறுத்தி தானே அரிவாள் வீசி வெலிக் குடுத்தான். சற்றைக்கெல்லாம் தரையில் சரிந்து 'விசுக் விசுக்' கெனக் கால்களை உதறித் துடிப்படங்கி விரைத்துப் போனது கிடா. சிறிது நேரத்தில் தன் பெஞ்சாதியுடன் சேர்ந்து ஆத்தலாய் கிடாவைத் தூக்கித் தோள் மேல் போட்டுக்கொண்டு ரத்தம் வடிய வீடுபோய்ச் சேர்ந்தான். பெருஞ்சுமை யாய்க் கனத்தது கிடா. கணிசமான அளவு கறி கிடைக்கும் என்பது அவனின் உள் மனதில் உறுதியாயிற்று. எப்படியோ தன் கடமை முடிந்தது என்பதை அச்சலாத்தி யாய் நினைத்துப் பார்த்தான். ஆறுதலே மேலிட்டது அவனுக்கு. இரவோடு இரவாகக் கிடாவை உரித்துப் போட்டால் நல்லது என்று உணர்வு திட்டியது இப்போது. காலைவரை உரிக்காமல் காயப் போட்டால் கறி விக்கிப் போய் விடும். துர்நாற்றம் அடிக்கும்.

மளமளவென்று காரியத்தில் இறங் கினான். அவனின் பெஞ்சாதிக்காரி ஒத்தாசை பண்ணினாள்.

எப்படித்தான் ரத்தினசாமிக் கோனாருக்கு மூக்கில் வேர்த்ததோ, வெள்ளானங்காட்டியே மாணிக்கத்தின் வீட்டுக்கு முன்வந்து நின்றார் அவர். அவரின் நிழலைத் தொடர்ந்து ஈடுதடியன்களாய் இரண்டு இளைஞர்கள். பலமுறை அந்த இளைஞர் களைக் கோனாரின் வீட்டில் பார்த்தி ருக்கிறான் மாணிக்கம். வாட்டசாட்டமாய்,



படிப்பகம்

www.padippakam.com

அதே நேரம் கரடுமுரடாய்த் தெரிந்தார்கள் அவர்கள். அவர்கள் அணிந்திருந்த லுங்கியும், முழங்கைக்கு மேலே சுருட்டி விட்டிருந்த முழுக்கைச் சட்டையும் அவர்களின் மூர்க்கத் தனத்தை முன்மொழிவதாகக் காட்டின.

''ஏய்.. எல மாணிக்கம்.''

சற்று முன்புதான் கிடாவை உரித்து, உப்புக் கண்டம் போட்டு முடித்து தன் கட்டையை லேசாகச் சாய்த்திருந்தான் அவன். அவனின் கால்மாட்டில் அவனின் பொஞ்சாதியும் புள்ளையும்.

குரல் கேட்டதும் பொறி தட்டியவனாய்ப் பதறி எழுந்தான். அவனோடு அவனின் குடும்பமும் விழித்துக் கொண்டது.

வாசலுக்கு வந்து நின்றான். நன்றாக விடிந்திருந்தது தெரிந்தது. கிணற்றுக்குத் தண்ணீர்க் கோரப்போன பெண்களின் இடுப்புகளில் குடங்கள் இருந்தன. சில எவர்சில்வர் குடங்கள். சில பிளாஸ்டிக் குடங்கள். கோயிலிலிருந்து உச்சக் குரலில் சாமிப்பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது கேட்டது.

முகத்தை விகாரமாக வைத்துக் கொண்டு நின்றிருந்த ரத்தினசாமிக் கோனாரைப் பார்த்ததும் மாணிக்கம் கதிகலங்கிப் போனான். சேரித் தெருவில் காலடி எடுத்து வைப்பதே தனக்குக் கவுரவக் குறைச்சல் என்று நினைக்கிற இவர் எப்படி இங்கே வந்து விட்டார் என்றிருந்தது அவனுக்கு. இரவு முழுக்கக் கிடா உரித்திருந்ததன் கவிச்சை நாற்றம் அவனின் உடல் முழுக்கப் பரவியிருந்ததை உணர்ந்து கொண்டான்.

''என்னங்கய்யா இவ்ளவ் நேரத்ல இங்கன?''

''எங் கிடாவ எங்கன வச்சில வெலிக் குடுத்த?'' அதட்டலான கேள்வி. ஆத்திரம் முழுவதையும் உள்ளடக்கி நின்றிருந்தார் அவர்.

மாணிக்கம் சற்று பசையடிப்பது போல நின்றான். பதில் சொல்லத் தயக்கமாயிருந்தது. ஆயினும் உண்மையைச்சொல்லி விட்டால் பாதகமில்லை என்றும் உறுத்தியது.

''கோயிலுக்கு முன்ன... வாசல்ல வச்சி அய்யா.''

கோனாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவரின் தாட்டியமான தேகத்துக்கு முன் அவன் ஒரு அற்பமான பொருளாகத் தெரிந்தான். அவரின் உப்புசமானக் கன்னத்தையும், உறுத்திக் கொண்டிருந்த கண்களையும், தடித்த உதடுகளையும் பார்க்க, அவனுக்கு அகோந்திரமாய் நடுங்கியது.

''ஒங்கிட்ட என்ன சொல்லி என் கிடாவப் பத்திக் குடுத்தேன்? நீ என்னப் பண்ணித் தொலச்சிருக்க?''

''அய்யா... ஊர்க்காரங்கள்லாம் சேர்ந்துக்கிட்டுக் கிடாவ கோயிலுக்கு உள்ளவச்சி வெலி குடுக்கக் கூடாதுன்னுட்டாங்க. நீங்க வந்தாதா கோயிலுக்கு உள்ள விடுவோமின்னுட்டாவ. வேற வழி தெரியலங்கய்யா. அதான் வெளிய வச்சி வெலி குடுத்திட்டேன்.''

''அதெல்லாம் வெலி ஆவுமால? அவனுவ தடுத்தா நீ எங்கிட்ட வர வேண்டியதான? ஒன் இஷ்டம்போல செஞ்சிறதா, எரப்பாளி நாய? இப்படிப் பண்ணுனா எம்பொண்ணுக்கு எப்படில நேர்ச்சை நிறைவேறும்?''

மாணிக்கம் மறுபேச்சுப் பேசாமல் நின்றிருந்தான், பேந்தப் பேந்த வெறித்துக் கொண்டு. அவனின் பொஞ்சாதியும் புள்ளையும் கிலி பிடித்துப் போயிருந்தனர். அவர்களின் கண்களில் தெவக்கம் முண்டி நின்றன.

சற்றைக்கெல்லாம் மாணிக்கம் வீட்டுக்கு முன்னே தெருச் சனங்கள் சன்னஞ் சன்னமாய்க் கூடி விட்டது தெரிந்தது. இரவு முழுதும் விழித்திருந்து சாமியாட்டம் பார்த்த கிறக்கமும் எரிச்சலும் அவர்களின் கண்களில் கனன்று கொண்டிருந்தன.

''மருவாதியா என் கிடாவுக்குரிய கெரயத்தக் குடுத்துப் புடு. இல்லாட்டி என் கிடாவுக்குப் பதிலா ஒரு கிடாவையோ ஆட்டையோ உன்கிட்டயிருந்து தூக்கிட்டுப் போயிருவேன் தெரிஞ்சிக்க''.

அவரின் நிபந்தனைக் குரலுக்கு மறுப்புச் சொல்லியோ என்னவோ அவனின் வீட்டுப் புறக்கடையில் கிடந்திருந்த ஆடுகளில் சில அடிவயிற்றிலிருந்து குரலெடுத்து 'ம்மே...' போட்டன.

மாணிக்கத்துக்கு மறுகலாக இருந்தது. இதென்ன வங்கொடுமை என்று மனம் குமுறியது.

''இப்படி திடுதிப்புன்னு வந்து கேட்டா நா என்ன செய்வேங்க?''

அவனுக்கு ஆற்றாமையாய் இருந்தது. தொண்டை கரகரத்தது. குரல் தளுதளுத்தது.

அதையெல்லாம் அவர் சட்டைச் செய்ததாகத் தோன்றவில்லை. தன் பக்கத்தில் நின்றிருந்த இளவட்டங்களை ஏறிட்டார்.

''என்னல பாத்துக்கிட்டு நிக்கிறிய? அவன் ஆட்ல ஒண்ணத் தூக்கிக்கிட்டு வாங்கல. நம்மக் கிடா என்ன சும்மாவா வந்திச்சி?''

விறுவிறென்று மாணிக்கத்தின் புறக்கடைக்கு ஓடினார்கள் அவர்கள். வெட்டவெளி கட்டாந்தரையில் கால் சுருட்டிப் படுத்துக் கிடந்தன ஆடுகளும் சில மறிகளும். அவர்களைக் கண்டதும் கலச்சல் எடுத்துச் சிதறத் துவங்கின. அவர்களின் பின்னாலே ஓடி வந்திருந்த பேச்சியம்மை கண்ணீர் வடித்துக் கொண்டே அவர்களின் முன்னுக்குப் பாய்ந்து பாய்ந்து மறுக்காட்டத் துவங்கினாள். மன்னித்து விடும்படிக் கெஞ்சினாள். அவர்களின் காரியத்தில் அவர்கள் கணக்காய் செயல்பட்டனர். நல்ல மதர்ப்பாய், மடி அகன்று தொங்கிக் கிடந்த ஆடொன்றை ஆவி சேர்த்துப் பிடித்து நிறுத்தி தோளில் தூக்கிப் போட்டான் ஒருவன். மளமளவென்று வெளியேறினார்கள் அவர்கள்.

''அய்யா வேண்டாங்கய்யா. ஆட்ட வுட்டுருங்கய்யா. ஒங்களுக்குப் புண்ணியமாப் போகும்ங்கய்யா...''

பேச்சியம்மையின் கெஞ்சுதலுக்கும் கெரவலுக்கும் அவர்கள் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. இறுமாப்புடன் நின்றிருந்தார் ரத்தினசாமிக் கோனார்.

''தூக்கிக்கொண்டு போங்கல நம்ம வூட்டுக்கு.. வித்துக் காசாக்கிக்கிடுவோம்.''

ஆடு கதறிக் கொண்டிருந்தது. அதன் கழுத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டே அவர்கள் ஆவேசமாய் நடந்து போனார்கள்.

திரண்டு நின்றிருந்த சனங்களின் மனசுகளில் தீப்பொறி கனன்றது போலிருந்தது. சூழ்நிலையின் விபரீதத்தில் தேகங்கள் தகித்தது போலாயிற்று. ஒரு முதியவர் சத்தம் போட்டார்:

''இதென்னங்க நியாயம். சாம்பாக்கமாரோட கோயிலுக்குள்ள வந்து நின்னு வெலி குடுத்தா கவுரம் கொறஞ்சிருமாம். சாம்பாக்கமாரு வூட்ல நின்ன ஆட்ட மட்டும் தோள்லப் போட்டுத் தூக்கிட்டுப் போனா கவுரம் கூடிருமாக்கும்? நல்ல ஆளுங்கய்யா...'' - விரக்தியிருந்தது வார்த்தைகளில்.

ரத்தினசாமிக் கோனாரின் காதுகளில் அந்த வார்த்தைகள் மோதித் தெறித்திருக்க வேண்டும். சட்டென்று ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தார். மீண்டும் அதே வேகத்தில் முன் திரும்பி அவர்களுடனே நடைபோட்டுப் போனார்.

தொண்டைகிழிய கதறிக்கொண்டு போன ஆட்டின் குரல் மட்டும் மீண்டும் மீண்டும் காற்றில் பறந்து வந்து மாணிக்கத்தின் காதுகளைக் காயப் படுத்திக் கொண்டிருந்தது ''...ம்மே...ம்மே...''

●



படிப்பகம்

www.padippakam.com

புத்தக மதிப்புரை

# உணர்வுகள் ஒருங்கிணையும்போது....

(மங்கையின் 'பெண் - அரங்கம் - தமிழ்ச்சூழல்' கட்டுரைத் தொகுப்பு குறித்து)

அருணன்

தமிழில் சாதியம் சார்ந்த எழுத்துகள், அரசியல் கருத்தியல் சார்ந்த எழுத்துகள், நிலவியல் சார்ந்த எழுத்துகளைப் போல பெண்ணிய எழுத்துகள் அதிகம் எழுதப் படுவதுமில்லை; வாசகர்களால் அங்கீகரிக் கப்படுவதுமில்லை.

இந்தச் சூழலில் தமிழ் அரங்க, இலக் கியச் செயல்பாடுகளில் பரவலாக அறியப் பட்ட அ.மங்கை பல்வேறு தருணங் களில் எழுதிய கட்டுரைகள், பேச்சுக்கான உரைகள் ஆகியவற்றின் தொகுப்புதான் 'பெண் - அரங்கம் - தமிழ்ச்சூழல்!' இலக் கியத் தளத்தில் பெண் மையப் பேச்சின் வீச்சு எப்படி இருக்கிறது, அது எப்படி வளர வேண்டும் என்ற அக்கறையுடன் கூடிய மங்கையின், இன்றைய கவனப் புள்ளியாக தமிழ்ப்பண்பாட்டின் பின்னணி யில் பெண்மைய அரங்கை உருவாக்கு வதாக இருக்கிறது. அரங்கம் குறித்து எழுதப்பட்டுள்ள கட்டுரைகள், பொதுவான நாடகச் செயல்பாடுகள் குறித்த கட்டுரை களாகவும், பெண் மைய அரங்கு பற்றிய தாகவும் இரு பிரிவாக விளங்குகின்றன.

தமிழ் நாடகக் களத்தில், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தீவிரமாக இயங்கி வருபவர் மங்கை. இடதுசாரி அரசியல் சார்பு கொண்ட 'பல்கலை அரங்கம்', 'சக்தி' ஆகிய குழுக் களில் முக்கிய அங்கம் வகித்த மங்கை, இப்பொழுது எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளையான 'மவுனக்குரல்' அரங்கத்திட்டத்தில் பணியாற்றி வருகிறார்.

பொதுவாக தமிழ் நாடக உலகின் நிலை, அதில் இயங்கி வருபவர்களின் போக்குகள், நாடகங்கள், நாடக விழாக்கள் எனப் பல பொருட்கள் குறித்து அவ்வப்போது எழுதப் பட்ட கட்டுரைகளாக, பாதல் சர்க்கார் பற்றிய கட்டுரை, தமிழில் நாடக மொழி பெயர்ப்பு, சிறீராம் சிட்பண்ட்ஸ் ஆதரவில் கோமல் சுவாமிநாதன் நடத்திய சென்னை நாடகவிழா, சங்கீத நாடக அகாடமியின் இயக்குநர் பயிற்சிப் பட்டறை, தமிழ் அரங்கின் சமகால செல்நெறி ஆகிய கட்டுரைகளைக் காணலாம்.

'பெண் மையம்' கொண்ட நாடகங்களை உருவாக்க வேண்டும் என தொடங்கப் பட்ட 'மவுனக்குரல்' அரங்கத்திட்டத்தில் அ.மங்கை முக்கியப் பங்களிப்பாளராக இருந்து வருகிறார். இத்திட்டத்தின் கீழ், பேரா.ராமானுஜத்தின் இயக்கத்தில் 'மவுனக்குரம்', 'சுவடுகள்' கே.ஏ. குணசேகரனின் இயக்கத்தில் 'பவளக் கொடி அல்லது குடும்ப வழக்கு', மங்கை இயக்கத்தில் இன்குலாப் எழுதிய 'அவ்வை', 'மணிமேகலை' ஆகிய நாடகங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இந்த நாடகங்களை பெண் மையமாக உருவாக்குவதில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை கட்டுரைகளாக இங்கே மங்கை பகிர்ந்து கொள்கிறார்.

அண்மையில் அரங்கேற்றப்பட்ட 'மணி மேகலை', எந்த அளவில் பெண் மைய அரசியலைப் பார்வையாளர்கள் இடையே கொண்டு சென்றது என்ற கேள்வி எழுந்தவாறு உள்ளது. இரு பெரும் மதக் கருத்தாடல்களுக்கிடையில், மணிமேகலை என்ற பெண்ணின் இயங்கு தளம் நசுங்கி, சிறுத்துப் போய் விடுகிறது. வர்ணாசிரம தர்மத்திற்கு எதிரான போராட்ட உத்திகளாக பவுத்தம் முன்னி றுத்தும் புலால் உண்ணாமை, வறியோர்க்கு பசியாற்றுதல் ஆகியவற்றை நாடகம் முன்னிறுத்துகிறது. ஆபுத்திரன் கதையின் எதிர்விளைவாக, வர்ணாசிரம தர்மத்தை சிரமேற்போர் புலால் உண்ணாமை என்ற கருத்தாக்கத்தை உள்விழுங்கி, அப்போராட்ட உத்தியை முனைமழுங்கச் செய்து பல யுகங்கள் ஓடிவிட்டன. பசி யாற்றுதல் என்ற உத்தியை உள்செரிக்க இந்த பசுமைப்புரட்சி காலத்தில் எவ்வளவு நாள் பிடிக்கும் என 'மணிமேகலை' நிகழ்வைப் பற்றிப் பேசும்போது மங்கை யிடம் கேட்டேன். கோயில்களில் இப்பொழுது அன்னதானம் வழங்கு கிறார்கள். இன்றைய மதவெறிச் சூழலுக்கு எதிர் வினையாற்றுதல், தமிழ்ப் பண்பாட்டு வேர்ப்பிடிப்பை அரங்க நிகழ்வெளியில் மறு உருவாக்கம் செய்ய முனைதல் ஆகியவற்றினிடையே பெண்மையச் சொல்லாடல் நிறமிழந்து போகுமோ என்பது கேள்வி.

தமிழ் அரங்கச் சூழலில், நாடகப் பிரதிகளின் பற்றாக்குறை, தொடர்ச்சி யாக குழுக்களாக இயங்க முடியாத புறச்சூழல், நாடகக் குழுக்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் தனிமனித முறுகல் பிரச்சினைகள், எவ்வளவுதான் பூசி மெழுகினாலும், வெளித்தோன்றிவிடும் தோழமையற்ற தன்மை, ஒவ்வொரு நிகழ்வின் போதும் ஓயாமல் மிரட்டும் நிதிப்பிரச்னை, நாடகக் குழுக்களின் அரசியல் சார்பற்ற, தத்துவார்த்த பார்வையற்ற தன்மை, ஏதேனும் ஒரு நிறுவனம் சார்ந்து இயங்க வேண்டிய நெருக்குதல் போன்ற பல காரணங்களால் காத்திரமான நாடக நிகழ்வுகளோ, நாடகம் சார்ந்த கலைஞர் களோ நிலைத்திருக்க முடிவதில்லை.

இச்சூழலில், நிறுவனம் சார்ந்தாவது தமிழ், பெண்மைய அரங்கு நோக்கிய தனது பங்களிப்பை மங்கை தொடர்ந்து கொடுத்து வருவது ஆச்சரியத்தையும், அவரது அரங்க முயற்சிகள் தொடர வேண்டும் என்ற ஆதங்கத்தையும் என்னுள் ஏற்படுத்துகிறது. பெண்கள் - பண்பாடு என்ற உள்தலைப்பின் கீழ் வரும் 'இலக்கியம், வெகுசன ஊடகங்கள், மதம்' கட்டுரை இலக்கியத்தில் பெண் எழுதப்பட்ட விதம், கிரேக்க நாட்டு சாஃபோவின் கவிதைகள் பெண் குரலை பதிவு செய்தது, ஜேன் ஆஸ்டினுக்கு ஆண் எழுத்தாளர் ஸ்காட்டை விட குறைவான மதிப்பூதியம்வழங்கப்பட்டது, பெண்கள் மட்டுமே படிக்க வேண்டிய, 'வீட்டுக்குத் தூரமான நாட்களில்' படிக்க வேண்டிய புத்தகங்கள் வெளியானது, வாய்மொழி இலக்கியங்களில் பெண்ணின் சமூகக் கீழ்நிலை வெளிப்பாடு, சங்க இலக்கியங்களில் பெண் பாத்திரங்கள் ஓரளவு தன் ஆளுமையுடன் விளங்குவது, அறநூல்களில் பெண்ணுக்கான கடமைகள் வரையறுக்கப்பட்டது, கம்பராமாயணம் முன்னிறுத்தும் சீதையின் கற்பிலக் கணம், சிற்றிலக்கியங்களில், பெண்ணை அழகுப்பதுமையாகவும், ஆணுக்காக ஏங்கும் பாவையாகவும் முன்மொழியப் பட்டது ஆகியவற்றைச் சொல்கிறது. தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களாக அவ்வையார், வெள்ளி வீதியார், நச்செள்ளையார், ஆண்டாள், வை.மு.கோதைநாயகி, மூவாலூர் ராமாமிர்தத்தம்மாள், ஆர். சூடாமணி, ராஜம் கிருஷ்ணன், லட்சுமி, அம்பை, சிவகாமி, பாமா ஆகியோரை குறிப்பிடும் மங்கை தொடர்பு ஊடகங்களில், பெண் குறித்த பிம்பம் எதிர்மறையானதாகவும், சிறுமைக்கு உரியதாகவும் இருக்கிறது என்று எழுது கிறார். விளம்பரங்களில் இதே நிலை நீடித்தாலும், சானிடரி நாப்கின் விளம் பரங்கள் பெண்ணின் உடலியல் பிரச்சினை குறித்த சமூகத்தின் அழுத்தமான மவுனத்தின் மீதான உடைப்பாக இருப் பதால், அந்த விளம்பரங்களை நேர்மறை யாகப் பார்க்கிறார். பத்திரிகைகளில் பெண்களுக்கான பகுதிகளும், பெண்களுக் கென்று தனித்த இதழ்களும் பெருகி வந்த போதிலும், பெண் குறித்த பார்வை மாறவில்லை. நகைச்சுவைத் துணுக்கு களிலும், திரைப்படங்களிலும், அகலிகை, நளாயினி, சூர்ப்பணகை, தாடகை போன்றோரின் நவீன வார்ப்புகளாகவே பெண்கள் சித்திரிக்கப்படுகின்றனர்.

ஊடகத்துறையின் அறிவைப் பெண்கள் கைக்கொண்டு தார்மீக நியாயங்களை முன்னெடுக்க அனைவரையும் ஊக்கு விப்பதே இன்றைய தேவை என்று சொல்லும் மங்கை, ஊடகங்களில் பெண்



படிப்பகம்

www.padippakam.com

களின் பங்கேற்பு மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதா எனக் கேள்வி எழுப்புகிறார்.

ஒட்டுமொத்தமாக மதத்தால் சிறுமைப் படுத்தப்படும் பெண்கள், தத்தம் அடையாளத்திற்காக ஒன்றிணைய முடியா மல் போகிறது எனக் கருதும் மங்கை, சுயமரியாதைக் கல்வி பெண் விடுதலைக்கு அவசியம் எனக் கூறுகிறார். ஆனால், அதே வேளையில், 'மதம் என்னும் நம்பிக்கையில் உள்ள மனிதத்துவத்தை அடிக்கோடிடுதல்', 'வேதநூல்களில் பெண்கள் சகஉயிரிகளாக அங்கீகரிக்கப் பட்டனர்' 'ஆதி இந்து மதத்தில் பெண் சமத்துவம் நிலவியது' என்ற கருத்துக்கள், இன்று நிலவும் காலனியத்திற்கு பிற் பட்ட வெள்ளை ஆதிக்க, ஆண் மையப் பண்பாட்டுச் சூழலில், மதத்திற்குள் பெண் விடுதலையைத் தேட முடியுமா? என்ற கேள்வியை மங்கை எதிர்கொள்ள வைக்கின்றன. மாரியம்மன் போன்ற சிறுதெய்வங்களும் சமஸ்கிருதமய மாக்கப்பட்ட சூழலில், இந்தத் திசை யிலான தேடல் முடிவடையுமா என்பது மிகப்பெரிய கேள்வி.

'திராவிடக்கலை இலக்கியம்' கட்டு ரையில், பெரியாரியத்தில் மைய இடத்தில் இருந்த பெண் சிந்தனை திராவிட கலை இலக்கியத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டதை, திமுக தலைவர் சி.என்.அண்ணாத்துரையின் 'ஓர் இரவு', 'நீதி தேவன் மயக்கம்' நாடகங்கள் வாயிலாக விமர்சிக்கிறார்.

இந்தக் கட்டுரையில் 'நிறப்பிரிகை' பெண்ணிய விவாதம் பற்றிப் பேசுகையில், 'இன்றைய உச்சரிப்புகளில் உள்ள இறக்குமதி சரக்குகள் காலில் வேர் பாவாமல் உதிர்ந்து விழும் மேதாவித் தனங்கள், சராசரித் தன்மைக்கு அப்பாற் பட்டோர் எனக் காட்டிக் கொள்ள விழையும் தன்முனைப்புகள், ஜனநாய கத்தைப் பேசிக்கொண்டே பிறரது குரலைக் காது கொடுத்துக் கேட்க மறுக்கும் மிதப்புகள்' என உணர்ச்சி வசப்படுகிறார் மங்கை. கவனத்தை ஈர்ப்பதற்காக ஆர்ப்பாட்ட அலட்டல் வாதங்களை எந்தவிதமான ஆழ்ந்த ஈடுபாடு இல்லாமல் ஒரு சிலர், 'நிறப்பிரிகை' கூட்டங்களில் வெளிப்படுத் தியதே மங்கை எரிச்சலடையக் காரணம் எனக் கருதுகிறேன். இவர்களது ஆர்ப் பாட்டத்தை முன்னிறுத்தி, 'நிறப்பிரிகை', தமிழ்க் கருத்துலகில் ஆற்றியுள்ள குறிப்பிடத்தக்க இடையீட்டை குறைத்து மதிப்பிடக் கூடாது. மேலும், சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், பெண் விடுதலை போன்ற கருத்தாடல்கள் மேற்கிலிருந்துதான் இறக்குமதி செய்யப் பட்டவை என்பதை மறுக்க முடியுமா? இந்தக் கருத்தாக்கங்களுக்கு இணையான கருத்தாக்கங்கள் நமது வரலாற்றில் இருந்தனவா?

ஆனால், இதே கட்டுரையில் பெரியாரின் சிந்தனைகள்தான் தமிழில் கலை இலக்கிய மரபு ஆழமாக முகிழ்க்காத தற்கு காரணம் என வறட்டு வாதம் பேசும் தமிழவனை சரியாகவே அடை யாளம் காண்கிறார் மங்கை.

சூடாமணி, ராஜம் கிருஷ்ணன், ஜோதிர் லதா கிரிஜா, அம்பை ஆகியோரை ஆக்கபூர்வமான சிந்தனையுடைய பெண் மைய எழுத்தாளர்களாகக் கருதுகிறார், 'பெண் இலக்கிய வரலாறு' கட்டுரையில். அம்பையின் 'அணில்' சிறுகதை பற்றிய கட்டுரை சிறிதெனினும், பெண்ணியத் தமிழ் எழுத்துக்களில் அக்கதையின் முக்கிய இடத்தையும், அம்பையின் படைப்புலகம் பற்றிய புரிதலையும் முன்வைக்கிறது.

பெண்ணிய எழுத்து என்பது நேற்று முன்தினம் தொடங்கியதல்ல, அதற்கும் ஒரு வரலாறு உள்ளது என்ற கருத்தை, அணில் போல கொறித்துக் கொண்டிருக்கும் ஒரு மறத்தமிழ் வாசகனுக்குச் சொல்லாமல் சொல்லும் இச்சிறுகதையை, அம்பை யின் கதைகள் அனைத்திற்கும் ஓர் அடையாளமாய் எடுத்துக் கொண்டி ருக்கிறார் மங்கை. தனிமனித முயற்சி களைக் கடந்து, பெண்கள் ஒரு இயக்கமாக ஒன்றிணைந்து போராடினால்தான் விடுதலையின் ஒளிச் சிதறல்களாவது கசியக்கூடும் என்பதை அற்புதமாகப் பேசும் 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' சிறுகதை அம்பையின் வேறு ஒரு பரிமாணத்தைக் காட்டும். மேலும், மஞ்சள் மீன், வாமனன் போன்ற கதைகளை சேர்த்து விரிவானதொரு வாசிப்பாக வந்திருக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும், ஏனோ சுருக்கமாக முடிந்து போகிறது.

ஆங்கில எழுத்துலகில் டி.எச்.லாரன்ஸ் போன்ற பல முக்கிய எழுத்தாளர்களின் எழுத்துகள், பெண்ணிய வாசிப்பில் புனைவு நீக்கம் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தமிழிலும் செய்யப்பட வேண்டும் எனச் சொல்லும் மங்கை யிடமிருந்து, இந்த அணுகுமுறையில் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய தீவிரமான வாசிப்பை எதிர்பார்க் கிறேன். பல கட்டுரைகளில், கேள்வி களையே வாசகர்களுக்கு விட்டுச் செல்கிறார். விடைகளை நோக்கிய திசை களுக்காவது வாசகர்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

'இக்காலத் தமிழ் இலக்கியம்' கட்டுரையில், கடந்த நூறு வருடங்களில் பெண்கள் எழுதிய, பெண்கள் குறித்து எழுதப்பட்ட எழுத்துகளைத் தொகுத்துச் சொல்கிறார் மங்கை. முத்துப்பழனி தெலுங்கில் எழுதிய 'ராதிகா சாந்தி வனம்' நூல் ஆபாசம் எனக் குற்றம் சாட்டி 1910இல் தடை செய்யப்பட்ட செய்தி, மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 'சுகுண சுந்தரி'யில் பால்ய விவாகம் குறித்து கிறித்து மதப் பிரச்சாரத்தால் ஏற்பட்ட சீர்திருத்தம் பற்றியும், தேவ தாசி முறையை எதிர்த்து மூவாலூர் ராமாமிருதத்தம்மாள் எழுதிய ''தாசிகளின் மோச வலை'' புனைகதையிலிருந்து, பாமாவின் 'கருக்கு' வரை பெண்நிலை சார்ந்த எழுத்துகளைப் பற்றிச் சொல்கிறார் மங்கை.

''நாடாளுமன்ற உறுப்பினராகும் தகுதி, ஆணுறுப்புடன் தொடர்புடையதா?'' என்ற ஃபிரெஞ்ச் பெண்ணிய எதிர் வினை ஒன்றை குறிப்பிடும் மங்கை, மட்டையடி வாதப்பிரதிவாதம்தான் விவாதம் என்றாகி விட்டால் மல்லுக் கட்ட தயார் என்கிறார். தமிழில் பெண்ணிய சிந்தனை குறித்த எழுத்து களும், ஆணாதிக்க, மேலாதிக்க மனப் போக்கு, சமூகத்தில் நாள்தோறும் எதிர் கொள்ளும் மனிதர்களால் அசைபோடப் படும்போது, எரிச்சலடைவது தவிர்க்க முடியாதது. அதன் பிறகும், மங்கை எட்டடிக்கு நாலடி பின்னே சரியப் பயணம் மேற்கொள்வது வரவேற்புக் குரியது. உணர்வு ரீதியுடனான எழுச்சியுடன் ஒருங்கிணைந்தால்தான் விடுதலை சாத்தியம்; உணர்வுபூர்வமான இணைதல் பெண்களின் இயல்பிலேயே உள்ளது. அறிவுத் திரட்டலுடன் கூடிய இத்தகைய ஒருங்கிணைதலை பல பெண்ணிய வாதிகள் வலியுறுத்து கின்றனர்.

இந்தத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் யாவும், எழுதப்படும் பொருளிலிருந்து விலகி நின்று, ஓர் ஆய்வாளர் நோக்கில் எழுதப்பட்டுள்ளன. ஈழத்து பெண் கவிஞர் அவ்வையோடு ஒரு உரையாடல் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கடிதம், மற்ற கட்டுரைகளிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. அவ்வையின் கவிதை வரிகளால் நிரம்பியிருக்கும் இக்கடிதம், ஒரு தோழி, தனக்கு நெருக்கமான பெண்ணிடம் உணர்வுகள் கொப் பளிக்கும் ஒரு குரலில் பேசுவதைப் போல இருக்கிறது. தனிப்பட்ட தோழிகளுக்கு இடையிலான உரையாடலாகத் தொடங்கி, ஈழ இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றி இருக்கும் பெண் கவிஞர்கள் பற்றி சொல்லிச் செல்கிறது.

அவ்வையின் கவிதை வரிகள் நமக்குத்தரும் உக்கிரத்தையும், நெகிழ்ச்சியையும் விடவும், மங்கையின் தோழமை கொப்பளிக்கும் உரையாடல் பாங்கு, இந்தத் தொகுப்பில் இந்தப் பிரதியை சிறப்பானதாக எனக்குக் காட்டுகிறது.

•

<u>நூல் பற்றிய குறிப்பு:</u>

**பெண் - அரங்கம் - தமிழ்ச்சூழல்**
**(கட்டுரைகள்)**

**ஆசிரியர்: மங்கை, விலை : ரூ. 90**
**ஸ்நேகா, சென்னை - 14.**



படிப்பகம்

www.padippakam.com



## குஜராத்தில் தேர்தல், அயோத்தியில் கோயில்:

# கவனியுங்கள் இந்துத்துவத்தின் மொழியை

அ. மார்க்ஸ்

குஜராத்தில் வடிந்த குருதி காயுமுன்னே சட்டசபையைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்த வேண்டும் எனக் கோரியுள்ளார் நரேந்திரமோடி. முன்னாள் ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகரும் இந்நாள் குஜராத் ஆளுநருமான சுந்தர் சிங் பண்டாரி இதை ஏற்றுப் பரிந்துரை செய்துள்ளார். இடைக்கால அரசுப் பொறுப்பு மோடியிடமே கையளிக்கப்பட்டுள்ளது. உள்துறை அமைச்சரும் துணைப் பிரதமருமான அத்வானி இம் முடிவைத் தீவிரமாக ஆதரித்துள்ளார்.

இடதுசாரிகள், காங்கிரஸ், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேயே சில கட்சிகள் தவிர அனைத்து ஜனநாயக சக்திகளும், மனித உரிமை ஆர்வலர்களும், ஏன் தேர்தல் ஆணையமும் கூட இது தேர்தலுக்கு உகந்த வேளையல்ல என்பதை வலியுறுத்தியுள்ளன.

தேர்தல் ஆணையம் மறுத்தால் என்ன, அரசியல் சட்டத்தின் 174(1) ஆவது பிரிவின்படி சட்டமன்றத் தொடர் ஒன்றின் கடைசி அமர்வுக்கும் அடுத்த தொடரின் முதல் அமர்வுக்கு மிடையே இடைவெளி ஆறு மாதத்தைத் தாண்டக் கூடாதல்லவா; அதனால் அக்டோபருக்குள் தேர்தலை நடத்துவது ஆணையத்தின் கடமை எனப் புன்முறுவல் காட்டுகின்றன இந்துத்துவ சக்திகள். இதே போன்ற ஒரு பிரச்சினை சென்ற ஆண்டு உத்திரப் பிரதேசத்தில் ஏற்பட்டபோது ராஜ்நாத் சிங்கின் பா.ஜ.க. அரசு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரே சட்டமன்றத்திற்குத்தான் இந்த விதி பொருந்துமே ஒழிய கலைக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு இது பொருந்தாது. இரு வேறு சட்ட மன்றங்களுக்கும் இடையில் ஆறு மாதத்திற்கு மேலும் இடைவெளி இருக்கலாம் என வாதிட்டதை நம்மால் மறக்க இயலவில்லை. ஆனால் அவ் வழக்கில் உச்ச நீதி மன்றத்தில் பா.ஜ.க. அரசுக்காக ஆஜரான அட்டர்னி ஜெனரல் சோலி சோரப்ஜி, சொலிசிட்டர் ஜெனரல் அரிஷ் சால்வே முதலியோர் இதை மறந்து விட்டனர். பார்த்தீர்களா இந்துத்துவத்தின் இரட்டை நாக்கை என ஒரு சிற்றிதழில் கட்டுரை எழுதிவிட்டு, இரண்டு அறைக் கூட்டங்களில் முழங்கிவிட்டு நாமும் ஓயப் போகிறோம்.

குஜராத்தில் தேர்தல் நடக்கப் போகிறது.



அமைதி திரும்பிவிட்டது, தேர்தல் நடத்தினாலென்ன என்பது இந்துத்துவத்தின் வாதம். நீங்கள் மோடியை மட்டும்தானே பதவி விலகச் சொன்னீர்கள், பாருங்கள் நாங்கள் சட்டசபையையே கலைத்து விட்டோம் எனச் சாமர்த்தியம் பேசுகிறார் அத்வானி. வெறியூட்டப்பட்டுக் கொழுந்து விட்டெரியும் இந்து உணர்வு, அச்சத்தில் ஒடுங்கிக் கிடக்கும் இசுலாமிய மக்கள், தேர்தல் நடத்தி வெற்றி குவிக்க இதைவிடச் சிறந்த தருணம் எப்போது வாய்க்கும் என எச்சில் வழியக் கணக்குப் போடுகிறது இந்துத்துவம். அமைதி திரும்பியதற்கு அவர்கள் முன் வைக்கும் ஆதாரங்கள் என்ன?

1. அகதி முகாம்களில் இருந்த இசுலாமியர் வீடுதிரும்பி விட்டனர். முகாம்கள் பல மூடப்பட்டுவிட்டன. இருக்கிற சிலவற்றையும் விரைவில் மூடி விடுவோம்.

2. ஜகன்னாதர் கோயில் தேர்த் திருவிழா எவ்வளவு அமைதியாக, அசம்பாவிதங்கள் ஏதுமின்றி நடந்தேறியது பார்த்தீர்களா? ஜூலை 12ஆம் தேதி அகமதாபாத் வீதிகளில் தேரோடியது. 20ஆம் தேதி சட்ட மன்றத்தைக் கலைத்துவிட்டோம், சரிதானே?

★ ★ ★



படிப்பகம்

www.padippakam.com

ஜகன்னாதர் கோயில் யாத்திரை எப்படி நடந்தது? தமிழ்ப்பத்திரிகைகள் எதிலும் (முஸ்லிம் இதழ்கள் தவிர) இது குறித்து எந்தத் தகவலையும் நீங்கள் திரட்டிவிட முடியாது. ஜூலை 'இந்து' இதழில் மானஸ்தாஸ் குப்தாவின் கட்டுரையையும் 'ப்ரன்ட் லைன்' ஆகஸ்டு 2 இதழையும் புரட்டிப் பாருங்கள், அதிர்ச்சியூட்டும் செய்திகள் பல கிடைக்கும்.

முன்னாள் முதல்வர் கேஷுபாய் படேல், இந்நாள் முதல்வர் மோடி மற்றும் அவரது அமைச்சரவைப் பரிவாரங்கள் கழுத்தில் காவித் துண்டுடன் அணிவகுக்க, அகமதாபாத் வீதிகளில் குறிப்பாக முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளினூடாக ''இந்து தேசபக்தர்கள்'' (ஆம் Hindu Patriots என்றுதான் இம்முறை காவித் தடியர்களுக்குப் பெயர் சூட்டப்பட்டது) புடை சூழ கோலாகலமாக ஓடியது தேர். ஏராளமாகக் குவிக்கப்பட்ட அரை ராணுவப் படையினர், திரிசூலம்/தடிகள் சகிதம் 'தேசபக்தர்கள்', முஸ்லிம்களுக்கு எதிராகக் கொலை வெறி முழக்கங்கள் - இவற்றின் நடுவே நடந்த யாத்திரை சிலருக்குக் கொண்டாட்டம்தான். ஆனால் வேறு பலருக்கு?

அகமதாபாத் ஜும்மா மசூதியின் தலைமை இமாம் எல்லா முஸ்லிம்களையும் வீட்டுக்குள் முடங்க உத்தரவிடுகிறார். 'ஜனதா ஊரடங்குச்சட்டம்' ஒன்றை நீங்களே விதித்துக்கொண்டு வீட்டுக்குள் ஒடுங்குங்கள் என இமாமும் காவல்துறையும் முஸ்லிம்களுக்கு அறிவுரை சொல்கின்றனர், ஆணையிடுகின்றனர். ஊர்வலம் வரும் வழியெங்குமுள்ள முஸ்லீம்கள் நகரை விட்டு, முடிந்தால் மாநிலத்தை விட்டே ஓடுகின்றனர். வாசிம்கான் தனது குடும்பத்தைக் கர்நாடகத்திற்கு இடம்பெயர்க்கிறார், நசீர் தனது குழந்தைகளையும் மனைவியையும் ஆனந் நகருக்கு அனுப்புகிறார் (இந்து, ஜூலை 6). தாரியாபூர், கலுப்பூர் பகுதிகளிலுள்ள முஸ்லிம் வீடுகள் அனைத்தும் வெறிச்சோடிக் கிடந்தன.

அகதிகள் முகாம்கள் மூடப்பட்டு வெளியேறிய மக்களில் சிலர் கிடைத்த சொற்ப இழப்பீட்டுத் தொகையின் உதவியோடு பண்ட பாத்திரங்கள் வாங்கி வாழ்க்கையை மறுபடியும் தொடங்க யத்தனித்தபோது மீண்டும் இப்படி ஓட வேண்டிய நிர்பந்தம். பதினைந்து நாட்களுக்கு முன்பு சரஸ்பூரிலுள்ள தனது அழிந்த வீட்டிற்குத் திரும்பிய சயீதா ரபீக்கும் அவரது குடும்பத்தினரும் அச்சத்தால் துரத்தப்பட்டு கலுப்பூரிலுள்ள ஹஜ் முகாமில் தஞ்சம் புகுந்துள்ளனர் (ப்ரன்ட் லைன், ஆக 2). இப்படி நிறையக் கதைகள்.

அகதிகள் முகாம்கள் மட்டும் பாதுகாப்பானவையா என்ன? அச்சம் அங்கிருந்தும் முஸ்லிம் மக்களை விரட்டியடித்தது. அகதிகள் மத்தியில் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ''குடிமக்கள் முனைவமைப்பு'' (Citizens Initiative) அய்ச் சேர்ந்த அருள்திரு விக்டர் மோசஸின் கணக்குப்படி கிட்டத்தட்ட 7000 முஸ்லிம்கள் தேரோட்டத்திற்கு அஞ்சி முகாம்களிலிருந்து ஓடியுள்ளனர். எங்கு? எங்கெங்கோ.

(சற்றே நினைவு கூருங்கள் இந்துத்துவத்தின் மொழியை. அகமதாபாத் அகதிகள் முகாம்களைப் பார்வையிட்ட இரண்டு மூன்று நாட்களுக்குள் கோவாவில் வாஜ்பேயி என்ன சொன்னார்? ''முஸ்லீம்கள் அமைதியாக வாழ விரும்புவதில்லை. பிற சமூகங்களுடன் இணைந்து வாழ அவர்கள் தயாராக இல்லை.'')

தேரோட்டத்தை நிறுத்துமாறு சட்ட ஒழுங்குத்துறை அறிவுறுத்தியும் பிடிவாதமாக மோடி நடத்திய தேரோட்டத்தின் பின்னணி இதுதான். ஏப்ரல் மாதத்தில் நடைபெற வேண்டிய முஸ்லிம்களின் மொகரம் ஊர்வலத்தைத் தடை செய்தது இதே மோடி அரசுதான் என்பதும் நினைவுக்கு வந்து தொலைக்கிறது.

★★★

குஜராத் படுகொலைகள் குறித்து ஒரு முழுமையான ஆவணத்தொகுப்பைச் செய்துள்ள 'கம்யூனலிசம் காம்பட்' இதழின் ஆய்வுப்படி சென்ற மார்ச் மாதத்தில் குஜராத் முகாம்களில் வாழ்ந்த இசுலாமியர்களின் எண்ணிக்கை 1,20,000. அரசு அறிவித்த எண்ணிக்கை 66,000. பெரும்பாலான முகாம்கள் அரசு உதவிகளின்றி இசுலாமிய அமைப்புகளாலும் அரசு சாரா நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்பட்டன. கொடுக்கப்பட்ட உதவிகளும் மிக மிகச் சொற்பம். முகாம்களில் அடிப்படை வசதிகள், குடிநீர், கழிப்பிடம் ஏதுமற்ற கொடுமைகள் பற்றிப் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆரம்பத்திலிருந்தே இம் முகாம்களை மூடுவதே குறியாக இருந்தது மோடி அரசு. ஏப்ரல் 4ஆம் தேதியன்று வாஜ்பேயி அகமதாபாத் வரு முன்பாகவே முகாம்களைக் காலி செய்யச் சொல்லிக் கூப்பாடு போட்டார் மோடி. மோடியும் பாரத் பரோட் போன்ற அமைச்சர்களும் ''தேச விரோத சக்திகள்'' முகாம்களில் ஊடுருவி விட்டதாக மீண்டும் மீண்டும் முழங்கினார்கள். கலவரத்தில் நேரடியாகப் பங்கு பெற்றவர் எனப் பலராலும் குற்றம் சாட்டப்பட்டுள்ள உள்துறை துணை அமைச்சர் கோர்தான் சடாஃபியாவும் முகாம்களை மூடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இதற்கிடையில் 'நீதிக்கும் அமைதிக்குமான குடிமக்கள் அமைப்பு'ம் 'கம்யூனலிசம் காம்பட்'டும் இணைந்து தொடுத்த பொதுநல வழக்கொன்றில், ''உரிய மறுவாழ்வு வசதிகளின்றி முகாம்களை மூடுமாறு அரசு வற்புறுத்தக் கூடாது'' என உத்தரவிட்டது குஜராத் உயர் நீதி மன்றம் (ஜூன் 4).

நீதிமன்ற உத்தரவுகளுக்கெல்லாம் மதிப்புக் கொடுப்பவர்களா இந்துத்துவவாதிகள். மோடி அரசு தொடர்ந்து முகாம்களை மூடி வந்தது (பார்க்க: Communalism Combat, July 2002). ஜூன் 26 ஆம் தேதியன்று குஜராத் உயர் நீதி மன்றத்தில் முகாம் நிர்வாகிகள் மற்றும் அகதிகளால் தாக்கல் செய்யப்பட்ட 24க்கும் மேற்பட்ட வாக்கு மூலங்கள் எவ்வாறெல்லாம் முகாம்கள் கட்டாயமாக மூடப்பட்டன என்பதைத் தெரிவிக்கின்றன. மூடாவிட்டால் முகாம் நிர்வாகிகளைப் 'பொடா' சட்டத்தில் போடுவோம் என்று கூட அரசு மிரட்டியுள்ளது. இந்த மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் இன்னும்கூடப் பைசல் செய்யப்படாத நிலையில்தான் முகாம்களிலுள்ளவர்கள் ''தானாகவே'' ''வீடு திரும்பி'' விட்டதாக முழங்குகிறார் மோடி. தலையசைக்கிறார் அத்வானி. 'கம்யூனலிசம் காம்பட்' இதழின் கணக்குப்படி இன்னும்கூட 20,000 பேர் அகமதாபாத்திற்குள்ளும் மேலும் 2000 பேர் மாநிலத்தின் வேறு பகுதிகளிலும் முகாம்களில் வதிகின்றனர். குஜராத் அரசின் முதன்மைச் செயலாளர் கோஷியின் கூற்றுப்படி 11 முகாம்களில் 13,482 பேர் வாழ்கின்றனர்.

ஒரு லட்சத்து இருபதாயிரம் அகதிகள் என்பது இருபதாயிரமாகக் குறைந்ததென்பது இவ்வாறு முகாம்கள் கட்டாயமாக மூடப்பட்டதாலும், தொடர்ந்த அச்சத்தின் விளைவான இடப் பெயர்வுகளாலும், போலீஸ் மிரட்டல்களாலும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முஸ்லீம்கள் புறக்கணிக்கப்படும் நிலை அகமதாபாத், பரோடா போன்ற பகுதிகளில் தொடர்கிறது. முகாம்களிலிருந்து வீடு திரும்புபவர்கள் வீட்டில் மாமிசம்



படிப்பகம்

www.padippakam.com

சமைக்கக் கூடாது, தாடி வைத்துக்கொள்ளக் கூடாது, பெண்கள் பர்தா அணியக்கூடாது என்றெல்லாம் இந்துத்துவ அமைப்புகள் நிபந்தனைகள் விதிப்பது பற்றியும் பத்திரிகை களில் செய்திகள் வருகின்றன.

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்துத்தான் அகதிகள் வீடு திரும்பிவிட்டனர், தேரோட்டம் அமைதியாக நடைபெற்றது, முஸ்லிம்களே புரிந்து கொள்ளுங்கள் - வழக்கமான நிலை திரும்பி விட்டது என்று கொக்கரிக்கிறார் மோடி. தேர்தல் நாடகம் நடத்தத் துணிந்து விட்டனர் இந்துத்துவவாதிகள்.

இப்போது இந்துத்துவத்தின் மொழிகளைக் கவனிப்போம்: விசுவ இந்துபரிசத் தலைவர் ***அசோக் சிங்கால்:*** ''குஜராத் நமது பெருமையின் சின்னம். இந்து விழிப்பு என்பது இசுலாமியப் பயங்கரவாதத்திற்கு இறுதி அடி கொடுத்துவிட்டது. குஜராத்தின் செய்தி நாட்டின் பிற பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படும். குஜராத் நமக்கு வழிகாட்டி விட்டது. நமது பயணம் அதே வழியில் தொடர்ந்து முடியும்''. (லக்னோ பேச்சு; எக்ஸ்பிரஸ், மே 28). ''குஜராத் கலவரங்கள் என்பது இந்து வீரத்தின் அடையாளம். ஆயிரம் ஆண்டுகளில் முதல் முறையாக இந்துக்கள், தங்களைத் தாக்கியவர்களுக்குச் சரியான பதிலடி கொடுத்துள்ளனர் (டெக்கான் ஹெரால்டு, மே 6).

*நரேந்திர மோடி:* ''விடுதலைப் போராட்டத்தின் போது தண்டி யாத்திரை ஒருதிருப்பு முனையாக இருந்தது. அதேபோல குஜராத் நிகழ்வுகள் மதச்சார்பு (?) சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில்ஒருதிருப்பு முனையாக இருக்கிறது.''(டைம்ஸ் ஆப் இந்தியா, ஏப்ரல் 22). கவனியுங்கள் முஸ்லிம்கள் எல்லோரும் Non Secular Force என்கிறார் மோடி. அதாவது இந்துக்கள் இந்துக்களாக இருப்பதாலேயே மதச்சார்பற்ற வர்கள், முஸ்லிம்கள் முஸ்லிம்களாக இருப்பதாலேயே மதவாதிகள்.

மீண்டும் ***அசோக் சிங்கால்:*** ''தேசத்தைப் பிரிவினையை நோக்கிக் கொண்டு செல்வதை முஸ்லிம்கள் தொடர்வார்களே யானால் குஜராத்தைப் போல அகதிகள் முகாம்களில் வாழ வேண்டியதுதான்'' (PTI, ஜூன் 22).

'குஜராத் சமாச்சார்', 'சந்தேஷ்' என்கிற இரு குஜராத்தி மொழி இதழ்கள் முஸ்லிம்களுக்கெதிரான கொலை வெறியைப் பரப்புவதில் முக்கிய பங்காற்றின. கோத்ரா சம்பவத்தை ஒட்டி ''ரத்தத்தை ரத்தத்தால் பழி தீர்ப்போம்'' எனத் தலைப்புச் செய்தி வெளியிட்டது சந்தேஷ் (பிப்ரவரி 28). ''இந்துக்களே ஜாக்கிரதை. ஹஜ் யாத்ரீகர்கள் சதித்திட்டங்களோடு திரும்பி வருகின்றனர்'' என்பது 'சந்தேஷ்' இதழின் இன்னொரு தலைப்புச் செய்தி. இந்துப் பெண்களின் மார்பகங்கள் வெட்டப்படுகின்றன என்றெல்லாம் செய்தி வெளியிட்டதும் இந்த இதழ்தான். கலவரங்கள் பற்றிய உண்மை அறியும் குழு ஒன்றிடம் இந்த இதழின் ஆசிரியரும் நிர்வாக இயக்குன ருமான பல்குன் படேல் சொன்னார்: ''Sandesh Editorialises the news செய்திகளோடு எங்கள் பார்வையையும் சேர்த்து சமனப்படுத்தி வெளியிடுகிறோம். கலவரங்களை ஒட்டி எங்கள் இதழ் விற்பனை 1.5 லட்சம் கூடியுள்ளது'' (பிரன்ட்லைன், ஆகஸ்டு 2, 2002). மோடி தேர்தல் நடத்துவதற்கும் இதே 'லாஜிக்' தான்: ''கலவரங்களை ஒட்டி எங்களுக்கு ஆதரவு கூடிவிட்டது.''

தேர்தல் வந்தால் விசுவ இந்து பரிசத், பா.ஜ.க.விற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யுமா என ***ப்ரவீன் டொகாடியா*** விடம் கேட்டபோது அவர் சொன்னார்: ''தேர்தல் பிரச்சாரத்தில் நாங்கள் பங்கேற்க மாட்டோம். விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான் எங்கள் வேலை. பல்வேறு வழிகளில் எங்கள் வேலை முடிந்துவிட்டது''. (அவுட்லுக், ஜூலை 8).

ஆக, தேர்தல் வந்துவிட்டால் இந்துத்துவ சக்திகள் பா.ஜ.க.வை மட்டும் முன்னிறுத்திச் செயல்படத் தொடங்கும். மற்ற அமைப்புகள் குஜராத் செய்தியை ''நாடெங்கும் கொண்டு செல்வதற்கு'' முன்னுரிமை கொடுக்கும். விசுவ இந்து பரிசத் அந்த வேலைக்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கி விட்டது என்பது ஹரித்துவாரில் ஜூன் 21, 22 தேதிகளில் நடைபெற்ற 'கேந்த்ரீய மார்க தர்ஷ மண்டல' மாநாட்டில் வெளிப்பட்டது. ''அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பான நீதி மன்றத் தீர்ப்பை ஏற்க மாட்டோம். இது தொடர்பாக நாங்கள் முன்பு அளித்த வாக்குறுதியைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம். வாக்குறுதிக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட காஞ்சி சங்கராச்சாரி அதைத் திருப்பிப் பெற்றுத்தர வேண்டும்'' என்று அம்மாநாட்டில் வெளிப்படையாகத் தீர்மானம் இயற்றப்பட்டது. ''ஆயிரம் ஆண்டுகால இசுலாமிய அடிப்படை வாதத்திற்கு எதிரான சரியான பதிலடி'' என குஜராத் கலவரம் பற்றி பரிஷத் பெருமை கொண்டதும் இம் மாநாட்டில்தான் (இந்து, ஜூன் 23). மதரசாக்களைத் தடை செய்ய வேண்டும் எனவும் காஷ்மீர் மாநிலத்தை இந்துக்கள், முஸ்லீம்கள், பவுத்தர்கள் எனத் தனித்தனி மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் எனவும் இந்துத்துவம் மொழிந்ததும் இந்த மாநாட்டில்தான். கவனியுங்கள் இந்துத்துவத்தின்மொழிகளை: பாசிசம் மொழியில் தொடங்குகிறது என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

**Tail Piece:** குஜராத் கலவரங்களில் பெண்ணுடல்களும் குழந்தைகளின் உடல்களும் எவ்வாறு இந்துத்துவ வெறியர் களின் வன்முறைக் களமாக மாற்றப்பட்டன என்பதையும் அதன் குறியீட்டு முக்கியத்துவத்தின் பல்வேறு தளங்களையும் விளக்கி எழுதப்பட்டுள்ள *தானிகா சர்க்காரின் கட்டுரை* முக்கியமானது (EPN, July 13, 2002). குஜராத் மாநில விசுவ இந்து பரிசத்தின் தலைவர் **சினுபாய் படேலின்** பெயர் தாங்கி வெளியிடப்பட்ட துண்டறிக்கை வாசகம் ஒன்றை தானிகா குறிப்பிடுகிறார். அதன் மொழி பெயர்ப்பு:

*''நாம் அவர்களை வெட்டுவோம்.*
*அவர்களின் ரத்தம் ஆறாக ஓடட்டும்.*
*பாப்ரி மசூதியை அழித்தது போல முஸ்லிம்களை நாம் கொல்வோம்.*
*செயலற்றிருந்த எரிமலை சீறத் தொடங்கி விட்டது.*
*மியான்களின் சூத்தை எரித்து அவர்களை அம்மணமாக ஆட வைத்து விட்டது.*
*இதுவரை கட்டுண்டு கிடந்த (நமது) தடிகளை இப்போது அவிழ்த்துவிட்டோம்.*
*பீவிகளின் இறுக்கமான கருவாய்களை விரித்து விட்டோம்.''*

*Printed by Mrs. Kavithaasaran, at Allwell Press, Chennai - 600 019. Publisher and Editor Kavithaasaran. No.31, T.K.S. Nagar, Chennai - 600 019. Phone : 044 - 573 44 99.*



படிப்பகம்

www.padippakam.com

**வாசகர்கள் கவனத்திற்கு:**

# கவிதா சரண்

**இதழாய் ஓர் எழுத்தியக்கம்**

**கவிதாசரண் இதழுக்கு வாழ்நாள் கொடை செலுத்தியோர் பட்டியல் - தொடர்ச்சி**

13. **சிற்பி பால சுப்ரமணியம்**, பொள்ளாச்சி ரூ. 1000/-
14. N. **அப்துல் ரஹ்மான்**, ஹாங்காங் ரூ. 1450/-
15. M.R. **முருகன்**, பீர்க்கன்காரணை ரூ. 1000/-

எங்கள் நன்றிக்குரியவர்களின் இப்பட்டியல் தொடரும்; தொடரவேண்டும்.

●

## இதழின் திசைப்பரவல் பற்றி ஒரு சொல்

1995 ஆம் ஆண்டில் ஒரு நாள். சிற்றிதழ் ஆசிரிய நண்பர் ஒருவர் இப்படிச் சொன்னார்: ''என்னோட அப்பன் சுத்த லோலாயனா இருந்திருப்பான் போல்ருக்கு. ஊர் ஊரா மேய்ஞ்சிருக்கணும்.''

அதிர்ந்து போனேன். படித்தவர்தான். பழக இனியவர் தான். ஆனால் அந்தப் பேச்சு குமட்டியது.

''பின்ன பாருங்க. இதழை விற்றுக் கொடுக்கிறதா 10 படிகள், 20 படிகள்னு அங்கங்க வாங்குறாங்க. முழுசா வித்திடவும் செய்யிறாங்க. ஆனா, ஒன்றிரண்டு பேரைத்தவிர, ஒருத்தரும் பணம் அனுப்புறதில்ல. கடிதம்போட்டாலும்கண்டுக்கிறதில்லை. அவுங்கள்லாம் சொத்துல பங்கு கேட்கிற என் உடன் பிறப்புகள் மாதிரி. இதழ்க் கடன் எனக்கு. விற்றுமுதல் அவுங்களுக்கு.''

இப்போதுகூட அவரையும் அவரது அவமதிப்பான விமர்சனத்தையும் என்னால் செறித்துக் கொள்ள முடியவில்லைதான். ஆனால் அந்தக் கசப்பு உண்மை யானது; ஆழமானது, கடும் காயப்படுத்தக்கூடியது.

கவிதாசரண் நிலையும் அதுதான். இதுவரை அதைப் பெரிதுபடுத்தவில்லை. இப்போது அதைப் பேசியாக வேண்யுள்ளது.

இந்நிலையிலிருந்து மீள வேண்டுமானால் நெகிழ்வுத் தன்மையற்ற வணிக உத்திகளை வகுத்துக் கொள்ள வேண்டும். நிறுவனமாகச் செயல்படும் அமைப்பு முறைக்கு மாறவேண்டும். கூடவே நிறுவன மாதலுக்கு எதிரான இதழ் சுதந்திரத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.

எங்களுக்கு அந்த மனத்தயாரிப்பு இல்லை. இனி கற்றுக் கொள்வதும் சாத்தியமில்லை.

ஆகவே வாசகர்கள் எங்களுக்கோர் உதவி செய்ய வேண்டும். சிற்றிதழ்கலாச்சாரம் பேணும் விரிந்த நட்பு வட்டமுள்ள வாசகர்கள் செய்யக்கூடிய உதவி இது.

உங்கள் பொறுப்பில் உங்கள் நண்பர்களுக்கு இதழ்ப் படிகள் வாங்கித் தாருங்கள். அதற்கான செலவையும் கழிவையும் நாங்கள் ஏற்கிறோம். தனி இதழ் வேண்டு வோர் இதழ் வெளிவரும் (ஏப்ரல், ஜூன், ஆகஸ்ட், அக்டோபர், டிசம்பர், பிப்ரவரி) மாதங்களில் அதற்கான பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

கீழ்க்காணும் விதத்தில் இதைச் செய்யலாம்.

| நாங்கள் அனுப்பும் படிகள் | நீங்கள் அனுப்ப வேண்டிய தொகை ரூபாயில் |
|---|---|
| 2 | 25 |
| 3 | 36 |
| 4 | 48 |
| 5 | 60 |
| 10 | 120 |

இது ஒன்றும் இலாபம் பார்க்கும் வணிகமில்லை. எங்களைத் தொய்வின்றி இயக்குவதற்கான வழிமுறை.

மேலும் இந்த நண்பர்கள் அங்கங்கே வாசகர் வட்டத்தை உருவாக்கிச் செயல்படலாம். கலை, இலக்கிய, சமூக கருத்தரங்க நிகழ்வுகளின் பதிவுகளை அனுப்பலாம். கவிதாசரண் அவற்றை செய்திகளாக வெளியிடும்.

வாசக நண்பர்கள் இதுபற்றி சாதகமாப் பரிசீலிக்க வேண்டுகிறோம்.

சந்தாவுக்கான எங்கள் விண்ணப்பத்தை வெளியிட் டுதவிய இதழ்களின் பெயர்களை ஏப்ரல் இதழில் வெளியிட்டோம். அதன்பின்னும் *கதைசொல்லி*, *நாளை விடியும்*, *மணிமுத்தாறு* ஆகிய இதழ்கள் வெளியிட்டுள்ளன. அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. இந்த வகையில் சிற்றிதழ்கள் எங்களுக்களித்த ஆதரவு மகத்தானது; மறக்க முடியாதது. ஆனால் உரிய வாசகர்களைச் சென்றடைய இது உதவியிருக்கிறதா என்றால், அவசரபடாமல் இதை ஆராய வேண்டியுள்ளது.

**கவிதா சரண்**

www.padippakam.com

## அப்துல் என்றால் ——

அப்துல் என்றால் அடிமை
ஆள்பவருக்கல்ல ஆண்டவனுக்கு
மரம் வெட்டும் கோடரிக்கு
மரத்தால் கைப்பிடியாகக் கூடாது இவர்
வளரவிடாமல் வெட்டுபவர்கள்
முடியை வெட்டச் சொல்கிறார்கள்
முடியாட்சி குடியாட்சியாகி
குடுமியாட்சியானது
இது மதச்சார்ப்பின்மைக்கு வெற்றியல்ல
மடச்சார்புக்கு பரிசு (எனச் சிலர்)
விகிதாசாரத்தால் வந்த அரியாசனமல்ல
கீதாசாரத்திற்குக் கிடைத்த பலன்
பிணந்தின்னும் பேயியின்
பிராயச்சித்தமுமல்ல
வாக்குக் குறிவைத்து செலுத்தப்பட்ட
ஏவுகணை
அயோத்தீயை இனி
அக்னிச்சிறகுகளால் விசிறிவிடலாம்
குசராத் குட்டையைக் குழப்பி
மீன் பிடிக்கப் போட்ட தூண்டிலில்
ஒரு விண்வெளி மீன் சிக்கியது
அணுஅணுவாய் சித்திரவதை
அமைதிப் புறாவின் கால்களில் மனித மாமிசம்
அணுவிஞ்ஞானிக்குத் தெரியவில்லை
அகதிமுகாம்களில் சிறுபான்மை
வடுக்கள் ஆறும் முன் கிடைத்த நாற்காலி
ஆறுதலல்ல
தேர்தலுக்கான மாறுதல்
இனி இந்த முகத்தோடு வெளிநாடு செல்லலாம்
உள்நாட்டைப் பற்றி என்ன கவலை
ஜகத் குரு ஆதிகளின் ஆசிபெறாத
நாராயணங்களின் இரண்டாம் வரவை
மறுக்க நடந்த குலுக்கலில்
விழுந்த துருப்புச் சீட்டு
கருவிகள் தயார். காரணங்களை
உற்பத்தி செய்து சவப்பெட்டிகளை
வரவழைக்கலாம்.
எல்லைக்கு இப்பாலும் இனி கார்கில்கள்
கர்பலாக்கள் பிறக்காமல் இருக்க
கர்ப்பிணி வயிறுகளைக் கிழித்தாயிற்று
இனி தீவிரவாதம் இருக்காது
இராமலீலாவில் எரிக்க தில்லியில்
வேஷ்டி கட்டிய பத்து தலைகள்
நடுவில் ராமநாதத்தோடு தஞ்சாவூர் பொம்மை
இந்தியனாக இருந்தால் கண்டம் விட்டு
கண்டம் பாயும்
கன்னடம் விட்டுப் பாயாது காவிரி
தமிழனாய் இருந்தால் உறவு போர்வாளானாலும்
உறையிலிருக்காது சிறையிலிருக்கும்
காசிநகர் நதியின் ஊளை ஒலி
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவியாவார்
நடந்ததெல்லாம் நன்றாக நடந்தது
அயோத்தியிலா
நடப்பதெல்லாம் நன்றாக நடப்பது
அகமதாபாத்திலா
நாடு விற்பனைக்கு
கடை விரித்தாயிற்று
கல்லாப் பெட்டிக்கு
அவாளுக்கு விசுவாசமான ஆள் தேவை
சிக்கந்த பக்தர்கள் போல்
நம்மாளு
நாற்காலியில் யாரிருந்தால்
என்ன செருப்பை வைத்து
ஆளவில்லையா இதிகாசங்களில்
தலையில் யாரிருந்தாலும் கழுத்தில்
தலையிருக்காது மேலவளவுகளில்
தின்னக் கொடுப்பார்கள் திண்ணியங்களில்
பசையுள்ள இடங்களில்
ஒட்டிக் கொள்ளுங்கள்
வினைக்கு எதிர்வினை
நர இந்திர மோடிபிகேசன்
அன்று ஆங்கிலோ முகம்மதனாக
இருக்க மறுத்த போது
கிலாபத், திப்பு, மாப்ளா, Wagon tragedy
இன்று இந்தோ முகம்மதனாக இருக்க மறுத்தால்
தடா, பொடா, அகதிமுகாம் தான் முகவரி
இருந்தால் முதல் குடிமகன்
அன்று போர்த்துகீசியனுக்குத் தேவைப்பட்டது
குஞ்ஞாலி மரைக்காயரின் தலை
இன்று முண்டமாக்கத் தேவைப்படுகிறது
இந்த மரைக்காயர் தலை
புத்தர் அழுகிறார் பொக்ரானில்
போர்பந்தரில் அகிம்சையை கோட்சே வென்றான்
வெற்றிகரமாக
மண்ணில் செலுத்தப்பட்டது காந்தியம்
அமாவாசைக்கும் அப்துல் கலாமிற்கும்
சம்பந்தம்
பகவத்கீதை வள்ளுவனை வாசிக்கிறது
ஏய்ப்பவர்களுக்கு "J" போடும் கூட்டம்
என்றும் உண்டு
அப்துல் கலாம் நல்லபிள்ளை
அம்மாவுக்கும் பிடிக்கும்
அய்யாவுக்கும் பிடிக்கும்
அண்ணாவின் தம்பிக்கும் பிடிக்கும்
இந்திய தாலி கட்டிய இத்தாலி அன்னைக்கும்
பிடிக்கும்
இந்த பத்மவியூகத்திலிருந்து
அபிமன்யுவை எப்படி மீட்கப் போகிறோம்
அலிகாரை அழிக்க ஒரு நூருல்ஹசன்
மிசாவுக்கு ஒரு ஃபக்ருதீன் அலி அகமது
சரி அத்தை விமர்சிக்க ஆரிப் முகமதுகான்
ஸ்பெயின் வீழ்ந்தது இப்படித்தான்
இன்னும் இருபது ஆண்டுகளில்
நாடு வல்லரசாகும்
ராமராஜ்யம் வரும்.
பதரும் உஹதும் ஹந்தக்கும் ஹுனைனும்
வரலாறல்ல படிப்பினைகள்

— மு. அப்துல் ரசாக்